64805

## உள்ளே...


1. ஆகாயப் பந்தலிலே... 5
2. முத்தமிட ஆசை! 113
3. உயிரே... உருகாதே! 223


★ ★ ★

# ஆகாயப் பந்தலிலே...

**1**

ஆதவன், கிழக்கு வானில் 'பளிச்'சென்று உதயமாகிப் பூமித் தாய்க்கு வணக்கம் சொன்னான். சிறகுகள் படபடக்க பணிக்குப் புறப்பட்டன, பறவைகள்.

இயற்கை வளம் மிகுந்த தோப்புத் துறையின் அழகுக்கு அழகூட்டின, கதிரவனின் இளங்காலைக் கதிர்கள்.

அகன்று உயர்ந்திருந்த அந்தப் பெரிய வீட்டின் முன்னே அழகாய்க் கோலம் போட்டு, அதன் நடுவில் பூசணிப் பூ வைக்கப்பட்டிருந்தது, மங்களகரமாய் இருந்தது.

வீட்டினுள்ளே யிருந்து ஒலி நாடாவில் கந்த சஷ்டி கவசம் கசிந்து கொண்டிருந்தது.

வீடு நவநாகரீகமாய் இல்லாவிட்டாலும், சுத்தமாய் அழகாய் அத்தியாவசியமான பொருட்களுடன் பாந்தமாய் இருந்தது.



பூக்காரி கொடுத்து விட்டுப் போன பூப்பந்துடன் மாமியாரைத் தேடிப் போனாள், பத்மா.

அந்த வீட்டின் மருமகள், இரு பெண் குழந்தைகளின் தாய்.

முகத்தில் மஞ்சள் மினுமினுக்க, நெற்றியில் குங்குமம் பளிச்சிட்டது. இருபத்தைந்து வயதில் செழிப்பான உடலைப் பெற்றிருந்தாள்.

''அட... பூ வந்திடுச்சா!'' என்றபடி, எதிரே வந்தாள், அம்பிகை. அந்த வீட்டின் குடும்பத் தலைவி. பத்மாவின் மாமியார்.

''ஆமாம், அத்தை! பூக்காரி இப்பதான் வந்து கொடுத்துட்டுப் போனா!''

''வெறும் சாமந்தியும், துளசியுமாதான் இருக்கு. உனக்கு வச்சுக்க மல்லி வாங்கிக்கலையா, பத்மா?''

''இல்லே, அத்தை! நேத்தே வாங்கி ஃபிரிட்ஜ்ல வச்சிட்டேன். உங்களுக்கும், நளினிக்கும் சேர்த்தே வாங்கியிருக்கேன்! இந்தாங்க...'' பூப்பந்தை மாமியாரிடம் நீட்டினாள்.

''நீயே சாமி படங்களுக்குப் போட்டுடு, பத்மா! உங்க மாமா தயாராகி வர்றதுக்குள்ளே... இடியாப்பமும், பொங்கலும் செய்து முடிக்கணும். நளினி எந்திரிச்சுட்டாளா, பத்மா?''

''இல்லே!''

''பாரேன்... வயசுக்கு வந்த பொண்ணு... வெள்ளிக் கிழமையும் அதுவுமா பொழுது விடிஞ்சு இவ்வளவு நேரமான பிறகும் தூங்கலாமா? அவளை...'' என்று நளினி இருந்த அறைப் பக்கம் நகர முற்பட்டாள், அம்பிகை.



''நான் எழுப்பிடுறேன்... நீங்க போங்க, அத்தை!''

''சீக்கிரம் எழுப்பி விட்டுரும்மா!''

சமையலறைப் பக்கம் நடந்து சென்றாள், அம்பிகை.

வரிசையாய் எல்லா சாமிப் படங்களும் மாட்டப்பட்டு வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது, பூஜையறை.

பிரமாண்ட குத்து விளக்குகள் இரண்டு அழகுக்கு அழகு சேர்த்தன. அவை பத்மா இந்த வீட்டிற்கு வரும்போது சீதனமாய்க் கொண்டு வந்தவை.

எந்தப் பெண்ணிற்குமே பிறந்தகத்திலிருந்து கொண்டு வந்தது குண்டூசியாய் இருந்தாலும் தனி வாஞ்சை இருக்கும். குத்து விளக்காயிற்றே! அதனால் அதை எப்போதுமே சுத்தப்படுத்தி, பளபளவெனத் துடைத்து, பஞ்ச முகத்திலும் திரி போட்டு விளக்கேற்றி வைப்பாள். அது ஜெகஜோதியாய் இருக்கும்.

பூக்களைச் சரம் சரமாய்ப் படங்களுக்கு அணிவித்தாள்.

திருப்தியுடன் வெளியே வந்தவள், நளினியின் அறை நோக்கிப் போனாள்.

உள் தாழிடப்படாத கதவு கை வைத்ததும் திறந்து கொண்டது.

ஒரு குழந்தையைப் போல் வலக்கையைத் தலைக்கு வைத்து ஒருக்களித்து நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தாள், நளினி.

முகத்தில் குழந்தைத்தனம் மாறவில்லை என்றாலும், உடலில் பருவத்தின் செழுமைக்குக் குறைவில்லை.

கோவில் சிற்பமொன்றை எடுத்து வந்து ... வைத்திருப்பது போலிருந்தது, அந்தக் காட்சி.

பத்மாவுக்குத் தன் இளைய நாத்தனார் நளினி மீது ... கடந்த பாசம்.

நளினியும் அப்படித்தான். அண்ணி, அண்ணி என்று ... பின்னேயே சுற்றிக் கொண்டிருப்பாள்.

பதினாறு முடிந்து பதினேழு வயதில் அடியெடுத்து வைத்திருந்த நளினிக்குக் குளிப்பதைத் தவிர, தனக்கென வேறெதையும் செய்து கொள்ளத் தெரியாது. அவளுக்குத் தலைசீவிப் பின்னலிடுவது கூட பத்மாவின் வேலைதான்.

பத்மாவிற்கு மூன்று வயதிலும், ஒன்றரை வயதிலுமாய் இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. பள்ளிக்குப் போகும் நேரம் தவிர நளினி கொஞ்சிக் கொண்டிருப்பது அவர்களிடம்தான்.

நளினி பிளஸ்-2 படித்துக் கொண்டிருக்கும் நளினமான அழகி. லெட்சுமணன் - அம்பிகை தம்பதியின் கடைக்குட்டிப் பெண். அதனால், எல்லோருக்கும் அவள் செல்லப் பெண்.

தோப்புத் துறையில் இறால் பண்ணை வைத்து வியாபாரம் நடத்துபவர்கள்தான் அதிகம். பணமழை கொட்டும் வியாபாரம். லெட்சுமணனும், பாஸ்கரும் வியாபாரம் சம்பந்தமாக அடிக்கடி கேரளா போய் வருவதுண்டு. பாஸ்கர் அந்த வீட்டின் மூத்த பிள்ளை. பி.ஏ. வரை படித்திருந்தாலும், அப்பாவுக்கு உதவியாக வியாபாரத்தில் இறங்கி விட்டான். அவனுக்கடுத்துப் பிறந்தவர்கள்தான் சுபா, ஜோதி, நளினி.

சுபா, இப்போது உயிரோடில்லை. ஜோதி கோடியக்கரையில் கணவனுடன் வசிக்கிறாள்.



நளினி நல்ல நிறம். கருண்ட கூந்தல். மூக்கும் முழியுமாகப் ... லட்சணமாக இருப்பாள்.

உறங்குபவளையே பார்த்துக் கொண்டிருந்த பத்மாவிற்கு அவளை எழுப்ப மனசு வரவில்லை.

'பள்ளி செல்ல நேரமிருக்கிறதே! இன்னும் ஒரு மணிநேரம் தூங்கட்டும்!' என்றெண்ணியபடி நகர்ந்து விட்டாள்.

பொங்கலுக்கு மிளகும், முந்திரியும் தாளித்துக் கொட்டியதில் வீடு முழுக்க நெய் மணம் கமகமத்தது.

"என்னதான் சொல்லுங்க, அத்தை! உங்க கை மணத்துக்கு ஈடாகாது. நானும் இதே மாதிரிதான் சமைக்கிறேன். இந்த அருமையான மணமும் சுவையும் வரவே மாட்டேங்குது!" செல்லமாய் அலுத்துக் கொண்டாள், பத்மா.

அம்பிகை சிரித்துக் கொண்டாள்.

"அப்படி யெல்லாம் ஒன்னுமில்லை. உன் சமையலும் அருமையாத்தானே இருக்கு! நீ செய்யுற கோழி கிரேவிக்கும், இறால் பிரியாணிக்கும் உங்க மாமா ஒரு பிடி அதிகமா சாப்பிடுவாரே! பாஸ்கர் எந்திரிச்சிட்டானா?"

"ம்... குளிக்கிறார்."

"ஆமா... நளினியோட சத்தத்தையே காணோமே? குளிச்சிட்டாளா?"

"இன்னும் எந்திரிக்கலே இல்லை!" துருவிய தேங்காயில் பால் எடுத்தபடி கூறினாள்.

"என்னது... இன்னுமா தூங்குறா? நீ எழுப்பலே...?"

"இல்லை!"



## 2

"ஏன் பத்மா? 'நானே எழுப்பிக்கிறேன் நீங்க போங்கத்தே,'ன்னு அனுப்பினியே...!"

"எழுப்பத்தான் போனேன். நல்லா தூங்கிட்டிருந்தா... மனசு வரலே... பள்ளிக்கூடத்துக்குப் போக இன்னும் நேரமிருக்கு... தூங்கட்டுமே..."

"என்னம்மா பேசுறே? வயசுக்கு வந்த பொண்ணு இப்படி தூங்கக் கூடாது!"

"பிறந்த வீட்லே இருக்கிறவரைக்கும்தான் இந்தச் சுகமெல்லாம். கல்யாணமாகிப் போயிட்டா இப்படித் தூங்க முடியுமா?"

"இது ரொம்ப தப்பும்மா! நான் பார்த்து வளர்ந்த பொண்ணு நீ...! வசதியான வீட்லே பிறந்தவதான். ஆனாலும் கோழி கூவுறதுக்கு முன்னே விழிக்க வேலை செய்லே. உங்கம்மா உன்னை ஒழுங்கா வளர்த்திருக்காங்க. அதனால மாமியார் வாயாலேயே நல்ல மருமகள்னு பேர் எடுத்துட்டே. என் பொண்ணும் உன்னைப் போல நல்ல பெயர் வாங்க வேணாமா?"

"அதுக்கில்லே, அத்தே... எல்லா வேலையும் கிட்டத்தட்ட முடிச்சாச்சு. அவ எந்திரிச்சு என்ன பண்ணப் போறா...? அதனாலதான்..."

"வேலை செய்யவும், சமைக்கவும் இப்பவே கத்துக் கொடுத்தாதான் நல்லது. படிப்பை முடிச்சதும் கல்யாணம் பண்ணி வச்சிட்டா... என் கடமை தீர்ந்தது." என்றபடியே சமையலறையை விட்டு வெளியே வந்த அம்பிகை, நளினியின் அறையை நோக்கி நடந்தாள்.

பத்மாவும் அவள் பின் சென்றாள்.



"...பாரேன்... தூங்குறதை? பாத்திரம் உருளுற சத்தத்தைக் ...டாவது விழிக்கிறாளா?"

"சின்னப் பொண்ணுதானே! போகப் போகச் சரியாப் ...யிடும்."

"சின்னப்பொண்ணா? ஒரேயடியா உன் நாத்தனாருக்காக ...காலத்து வாங்காதே! ஆறு மாசத்துல படிப்பு முடியப் போகுது. கல்யாணமாகப் போற பொண்ணு... சின்னப் பொண்ணா?"

"நளினி பட்டப் படிப்பு படிக்க ஆசைப்படுது. நீங்க என்னடான்னா... இப்பவே கல்யாணம் பண்ணி வைக்கனும்னு நினைக்கிறீங்க."

"நம்ம குடும்பத்துலே பெரிய படிப்பெல்லாம் யாரும் படிச்சதில்லே... இவள் மட்டுமென்ன விதி விலக்கு? இப்பவே நிறைய வரன் வந்துகிட்டிருக்கு. இது படிச்சதே அதிகம். இந்தப் படிப்போட நிறுத்த வேண்டியதுதான். ஜோதிகூட எட்டாவது வரைக்கும்தானே படிச்சா! இவ நாலு வகுப்பு அதிகமாகவே படிச்சிட்டாளே. பொட்டைப் புள்ளைக்கு எதுக்குப் பெரிய படிப்பெல்லாம்?"

தலையைத் துவட்டியபடி அங்கு வந்து சேர்ந்தார், லெட்சுமணன்.

"காலையிலே என்ன வம்படிச்சிட்டிருக்கே!" மனைவியைப் பார்த்து முறைத்தார்.

"இல்லீங்க... பொழுது விடிஞ்சு இத்தனை நேரமாயிடுச்சு. இன்னும் இந்த நளினி..."

"போதும்... போதும்... எல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். உன் பேச்சைக் கேட்டு ரெண்டு பொண்ணுங்

களையும் அரைகுறையா படிக்க வச்சு, வாழ்க்கை[illegible] கெடுத்தது போதாதா? நளினியோட வாழ்க்கையை[illegible] கெடுக்கச் சொல்றியா? நடந்ததெல்லாம் மறந்து போ[illegible] உனக்கு?"

கோபத்தில் வார்த்தைகளைத் துப்பிய லெட்சுமணனின் கண்கள் சிவந்து போயின.

பாஸ்கருக்கு அடுத்துப் பிறந்தவள், சுபா. அந்தக் குடும்பத்தில் பிறந்த முதல் பெண் என்பதால் எல்லோரும் அவள் மீது அன்பைக் கொட்டினார்கள். அதுவும் பார்க்க 'கொழுக் மொழுக்' என்றிருப்பாள் என்பதால், பார்க்கிற யாருமே அவளைத் தூக்கி வைத்துக் கொஞ்சாமல் விடுவதில்லை. வயதுக்கு மீறிய வளர்த்தி. அவள் பெரியவளான போது ஊரையே அழைத்து விருந்து போட்டார், லெட்சுமணன்.

அந்த ஊரின் பெரிய தனவந்தர்களில் லெட்சுமணனும் ஒருவர் என்பதால், சமைந்த கையோடு சுபாவுக்கு ஏகப்பட்ட வரன்கள் வீடு தேடிக் குவிய... பெற்றவர்களுக்குப் பெருமை பிடிபடவில்லை. அதைத் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காகவே ஒரே ஆண்டில் சுபாவிற்குத் திருமணத்தையும் நடத்தி வைத்தனர்.

மாப்பிள்ளையும் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்தான். இவரைப் போலவே அந்தக் குடும்பமும் பெரிய இறால் பண்ணை வைத்திருந்தது. தொடக்கத்தில் சுபா இந்தத் திருமணத்திற்கு உடன்படாமல் முரண்டு பிடித்தாள்.

'நான் படிக்கணும். இப்ப கல்யாணம் வேணாம். என்கூடப் படிச்சவங்கள்லாம் கிண்டல் பண்ணுவாங்க!' என்றாள்.

அம்பிகைதான் அதட்டினாள்.



'வாயை மூடுடி.. கழுதை! படிக்கப் போறாளாம். படிச்சு [illegible]க்குப் போய்ச் சம்பாதிக்கப் போறியா? யாருக்கு வரும் [illegible]டி பொரு போகம்? எத்தனை வரன்கள்! ஒவ்வொண்ணும் [illegible]டு மாதிரி. ஒவ்வொருத்திக்குச் சமைஞ்சு பத்து ஆண்டு [illegible]னாலும் வரன் அமையுறதில்லே. ஆனா... நீ அதிருஷ்டக் [illegible]... ஊரே வாய் மூடுது. வேணாம், கீணாம்னு அபசகுனமா [illegible] வாயைப் பொத்திக்கிட்டுக் கழுத்தை நீட்டு... அது போதும்!' என்றாள்.

'ஏண்டி குழந்தையை இந்த அதட்டு அதட்டுறே? ஒழுங்கா எடுத்துச் சொன்னா கேட்கப்போறா. அதை விட்டுட்டு... இங்கே பாரு சுபாம்மா... எவ்வளவுக்கிருந்தாலும் உன்னை ஒருத்தனுக்கு கட்டிக் கொடுத்து புகுந்த வீட்டுக்கு அனுப்பத்தான் போறோம். இப்ப நல்ல நல்ல வரனெல்லாம் வரும்போது புத்திசாலித் தனமா முடிவெடுக்கிறதுதானே நல்லது. அப்பா சொன்னா கேட்டுப்போயில்லே?'

இதமாய்ப் பேசினார், லெட்சுமணன்.

'ச... சரிப்பா!' - அரை மனதாய்த் தலையாட்டினாள், சுபா.

கெட்டி மேளம் கொட்ட திருமணம் நடந்தது.

நிறைவான சம்பந்தம்தான். நல்ல கணவன், குடும்பம். எந்தக் குறையுமில்லை. மகிழ்ச்சியாய்த்தான் வாழ்ந்தாள், சுபா திருமணமான மூன்றாவது மாதமே கர்ப்பமானாள். பதினைந்து வயதிலேயே தாய்மை யடைந்ததுதான் அவளுக்கு எமனாயிற்று.

அவளே சிறு பெண், அவளுக்கொரு சிசு என்றால்...?

உடல் வலிமை இழந்தது. பிரசவ வேதனையைத் தாங்கிக் கொள்ளும் திடமின்றித் தாயும் சேயும் இறந்து போயினர்.



தாங்கிக் கொள்ள முடியாத பேரிழப்புதானே! பெரு[illegible] சிறுவயதிலேயே திருமணம் செய்து வைத்தது... [illegible] சிறுமையல்லவா?

அடுத்தவள் ஜோதி. முதல் மகள் இறந்த காரணத்தினாலோ என்னவோ, ஜோதியைப் பொத்திப் பொத்தி வளர்த்தனர். சிறு தலைவலி என்றாலும், பள்ளிக்கு அனுப்ப மாட்டார்கள். ஊட்டமான உணவைக் கொடுத்து, ஜோதியின் உடம்பு பெருத்துப் போயிற்று.

இந்தக் காரணங்களால் ஜோதிக்குப் படிப்பு ஏறவில்லை. எட்டாம் வகுப்பில் விழுந்தாள். அதோடு படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டனர். ஆனால், அவசரப்படாமல் ஜோதிக்குப் பதினெட்டு வயதில்தான் திருமணம் செய்தனர்.

முதலில் எந்தப் பிரச்சினையுமில்லை. மாப்பிள்ளை வேணு கொஞ்சம் ஆடம்பரப் பிரியர். வேணுவின் பெற்றோர், மற்ற பிள்ளைகளைப் போலவே, இவர்களையும் தனிக்குடித்தனம் வைத்தனர். இரண்டு குழந்தைகள் பிறந்தாயிற்று.

வேணுவைத் தேடிக்கொண்டு நவநாகரிகப் பெண்கள் வீட்டிற்கே வருவதுண்டு. தஸ்புஸ்சென்று ஆங்கிலத்தில் பேசுவதும், கிளுகிளுப்பாய்ச் சிரிப்பதுமாய்... அது இயல்பான நட்பாய்த் தெரியவில்லை. ஜோதிக்குத் தமிழைத் தவிர வேறு மொழி தெரியாது.

வேணு கோபக்காரன். இவள் சந்தேகப்பட்டு ஒரு வார்த்தை கேட்டாலும் நையப் புடைத்து விடுவான். அவள் வாழ்க்கை இப்படித்தான் சண்டையும், உதையுமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

"இதுவரை நாம் செய்த தவறெல்லாம் போதும். ஒரு பொண்ணு போய்ச் சேர்ந்துட்டா. இன்னொருத்தி தினம் தினம்



[illegible]த்துக்கிட்டிருக்கா. இதெல்லாம் எதனால? படிக்க [illegible]தனால்தானே? பெண்களுக்குப் படிப்பும், தைரியமும், [illegible]ம்பிக்கையும் அவசியம். நீ என்ன சொன்னாலும் சரி. [illegible]யை நல்லா படிக்க வைக்கப் போகிறேன்," என்றார் [illegible]மானமாக, லெட்சுமணன்.

## 3

"சரி... சரி... நேரமாகுது... கோவிலுக்குப் போகணும் பத்மா... கால பூஜை சாமான் எல்லாம் எடுத்துத் தயாரா வச்சிடும்மா... நான் துணி மாத்திட்டு வந்திடுறேன்," என்றார் லெட்சுமணன்.

"இதோ... எல்லாத்தையும் எடுத்து வச்சிடுறேன், மாமா!" சமையலறையில் அங்கிருந்து அகன்றாள், பத்மா.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், லெட்சுமணன் சிவன் கோவிலுக்குச் சென்று வழிபடுவார்.

"ஏங்க... வயசுக்கு வந்த பொண்ணு இன்னும் தூங்கிட்டு இருக்கா... அவளை எழுப்பி நல்ல விதமா நாலு வார்த்தை சொல்லணும்னு தோணலையா உங்களுக்கு?"

"அது குழந்தை... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டுமே... என் நைநைன்னு நச்சரிக்கிறே?" எரிச்சலுடன் கூறிவிட்டு நகர்ந்து விட்டார்.

நல்ல அப்பா... நல்ல பொண்ணு! இப்படியிருந்தா வீடு எப்படி உருப்படும்? அப்புறம் என்னைக் கேப்பாங்க... அம்மாக்காரி ஒழுங்கா வளர்த்தாளா பாருன்னு. நாளைக்குப் புகுந்த வீட்டிலேருந்து ஏதாவது பிரச்சினைன்னு கண்ணைக் கசக்கிட்டு வந்து அவ நிக்கதான் போறா. அப்ப என்ன சொல்லுவார் இவர்?

'ஏன்டி, நான் ஆம்பளை... எந்நேரமும் வெளியே அலைஞ்சிட்டிருக்கிற வேலை. நீயென்ன செய்தே? ஆபீஸ் நிர்வாகம் பார்த்துக் களைச்சுப் போயிட்டியா? இருக்கிற ஒரே பொண்ணைப் பார்த்து, கவனமா, நல்லது கெட்டது எடுத்துச் சொல்லி வளர்க்கத் தெரியாதான்னு இதே நாக்கு அப்ப மாதிரிப் பேசும். ச்சே... இந்த வீட்டுலே என் பேச்சை யாரும் காது கொடுத்துக் கேட்கிறதேயில்லே!' அலுத்தபடி அம்பிகை நகர முற்பட...

அவளின் முந்தானை இழுக்கப்பட்டது. திரும்பிப் பார்த்தாள்.

அரைகுறையாய்க் கண்களை மூடிக் கொண்டிருந்த நளினி அம்மாவின் சேலைத் தலைப்பை ஒரு கையால் பிடித்திருந்தாள்.

''என்னம்மா... காலங்காத்தாலே தூக்கத்தைக் கெடுத்துக் கிட்டிருக்கே?''

''அடிப்பாவி... முழிச்சுதான் இருக்கியா? சூரியன் உச்சிக்கு வந்துட்டான். உனக்கு மட்டும் இன்னும் விடியலியா? எந்திரி...''

''அப்பாவே தூங்கட்டும்னு சொல்லிட்டுப் போயிட்டாரே... அப்புறம் உனக்கேன் வயிறு எரியுது?''

''அப்ப... நீ இவ்வளவு நேரமும் முழிச்சுக்கிட்டுதான் தூங்கிற மாதிரி நடிச்சியா? மரியாதையா எந்திரி...''

''தூங்குறவங்களை எழுப்பலாம். தூங்குற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்ப முடியாது...''

''திமிருடி உனக்கு... எல்லாம் உங்கப்பா கொடுக்கிற இடம்!''



''ஆமா... நான் படிக்கிறதனால உனக்கென்ன கஷ்டம்! என்னமோ ஆஸ்தியே அழிஞ்சு போற மாதிரி ஆடுறே... நீ என்னதான் சதி பண்ணினாலும் நான் படிக்கிறதைத் தடுக்க முடியாது. இப்ப உன்னால என்ன செய்ய முடியும், அம்பிகை?'' எகத்தாளமாய்ச் சிரித்தபடியே கேட்டாள், நளினி.

''உம்... உன் தலையிலே தண்ணியை ஊற்ற முடியும்!'' என்றபடி சொம்புத் தண்ணீரை எடுத்து அப்படியே மகள் மீது கொட்டினாள்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தமர்ந்தாள், நளினி.

அதுவரை நளினியிடம் குடி கொண்டிருந்த உற்சாகமும், குறும்பும் காணாமல் போக... அம்மாவை உர்ரென்று முறைத்துப் பார்த்தபடி எழுந்து வெளியே போய்விட்டாள்.

அம்பிகைக்கு மகளைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், 'இருக்கட்டும்... இருக்கட்டும்... மத்தவங்க செல்லம் கொடுத்துக் கெடுத்தாலும், நானாவது இழுத்துப் பிடிக்க வேண்டாமா?' என நினைத்தாள்.

''கோவிலுக்குப் போன அப்பா வந்துட்டாராம்மா?'' சாப்பாட்டு மேஜையின் முன் அமர்ந்த பாஸ்கர், அம்மாவிடம் விசாரித்தான்.

''இன்னும் இல்லே, பாஸ்கர். உங்கப்பாவுக்குப் பெருமாள் கடவுள் இல்லே. நண்பர். அவர்கிட்டே நாட்டு நடப்புல இருந்து இன்னைக்கு வீட்டுல நளினியை எழுப்பி விட்ட கதை வரைக்கும் பேசிட்டுதான் வருவார்! நீ சாப்பிடு!''

''வரவர நீயும் சினிமாவுல வர்ற காமெடி நடிகருங்க மாதிரி பேசத் தொடங்கிட்டே!'' என்று வாய்விட்டுச் சிரித்தபாஸ்கர், ''இருக்கட்டும்மா... அப்பா வந்த பிறகே சாப்பிட்டுக்கிறேன்,'' என்றான்.





''அவர் வரத் தாமதமாகும், பாஸ்கர். எல்லாம் அ... இருக்கு. ஆறிப் போறதுக்குள்ளே சாப்பிட்டுக்கப்பா.''

''வேண்டாம்மா! எப்படி இருந்தாலும் நாலும் அப்பாவும் ஒரே கார்ல ஒண்ணா சேர்ந்துதான் பண்ணைக்குப் போக போறோம். ரெண்டு பேரும் சேர்ந்தே சாப்பிட்டுக்கிறோம். அதோ... நளினி வர்றா... அவளுக்குக் கொடுங்க!''

பள்ளிச் சீருடையில் அழகிய பொம்மை போல் நளினி பாஸ்கரின் எதிரே வந்தமர்ந்தாள். அவளின் முகத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும் புன்னகை முழுக்கவே காணாமல் போய்ப் பார்வை வாடியிருந்தது.

பாஸ்கர் துணுக்குற்றான்.

''நளினி... ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே! உடம்புக்கு ஏதும் சரியில்லையா? டாக்டர்கிட்டே போகலாமா?''

''அவசரப்படாதீங்கண்ணா! எனக்கொன்னுமில்லே. நான் நல்லாதான் இருக்கேன்.''

''அப்புறம்... ஏன் முகம் ஒரு மாதிரியா தெரியுது?''

''ப்ச்... ஒண்ணுமில்லேண்ணா...''

அம்பிகை அங்கு வந்தாள்.

''அம்மா... நளினியைக் கவனி. ஒரு மாதிரி டல்லாயிருக்கா. கேட்டா... ஒண்ணுமில்லேங்கிறா. நீயே கேளு.''

அம்பிகை மகளின் முன் தட்டை எடுத்து வைத்தாள்.

''ஏன்டி உம்முன்னு இருக்கே?''

'' ''



''சரி... சாப்பிடு!''

''எனக்கொன்னும் வேண்டாம். மதியத்துக்கு எனக்குச் சாப்பாடு கொடுத்தனுப்ப வேண்டாம். சொல்லிட்டேன்,'' என்றாள், கோபமாக.

''என் மேலே இருக்கிற கோபத்தையெல்லாம், சாப்பாட்டுல காட்டாதே. ஒழுங்கா சாப்பிடு.''

''வேணாங்கிறேன்ல...''

தங்கையை வியப்புடன் பார்த்தான், பாஸ்கர்.

''என்னம்மா ஆச்சு இவளுக்கு?''

''அவளுக்கு என் மேலே கோபம்!'' என்றவள், சற்று முன் நடந்த சம்பவங்களை விளக்கினாள்.

''என்ன இருந்தாலும் நளினி மேலே நீங்க தண்ணீரை ஊத்தினது தப்புதான்.''

''இந்த வீட்டுலே யாருதான் எனக்குப் பரிஞ்சு பேசி இருக்கீங்க? இவளை நீங்க எல்லோரும் தலை மேலே தூக்கி வச்சு ஆடுறதாலதான், இவளோட பிடிவாதம் எல்லை மீறிக்கிட்டே போகுது.''

''நிறையப் படிக்கணும்னு நினைக்கிறதுல என்னம்மா தப்பு? நம்ம குடும்பத்துல இவளாவது அந்தக் குறையைத் தீர்க்கட்டுமே!''

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லைன்னா நினைக்கிறே, பாஸ்கர்? இருக்கு. ஆனா, அதைவிட அதிகமா பயமும் இருக்கு. நம்ம குடும்பத்துப் பொண்ணுங்க எல்லாரும் அழகுதான்!

"ஆனா, எல்லாரையும் தூக்கிச் சாப்பிட்டு விடுகிற அழகு நளினிக்கு. தங்க விக்ரகம் மாதிரி இருக்கா. இவளைப் பொறுப்பா ஒருத்தன் கையிலே ஒப்படைக்கிற வரைக்கும் அடிவயித்துல நெருப்பைக் கட்டியிருக்கிற அவஸ்தைதான் எனக்கு. அதிகமா படிச்சிட்டா அதுக்கேத்த மாதிரி மாப்பிள்ளை தேடணுமே, பாஸ்கர்!" வார்த்தையில் கவலை வெளிப்பட்டது.

"குண்டுச் சட்டியிலேயே ஏன் குதிரை ஓட்டணும்? வெளியூர்ல, அசல்ல மாப்பிள்ளை பார்த்துட்டா போச்சு. நான் எதுக்கு இருக்கிறேன்? என் தங்கைக்கு ராஜகுமாரன் மாதிரி ஒரு மாப்பிள்ளை பார்க்க மாட்டேனா? அந்தப் பொறுப்பு என்னோடது. நீ முதல்ல கவலைப்படுறதை விடும்மா.

"நளினி... உனக்கு அண்ணன் நான் இருக்கேன்டா. நீ எவ்வளவு வேணும்னாலும் படி! முதல்ல சாப்பிடு. நானே பரிமாறுறேன்."

தங்கையின் தலையை வருடிக் கொடுத்துவிட்டுச் சிற்றுண்டி பரிமாறினான்.

நளினியின் முகம் பிரகாசமானது. அம்பிகையை ஏறிட்டு உதட்டைச் சுழித்து ஒழுங்கு காட்டியவள், பாஸ்கரைப் பார்த்துச் சிரித்து, "நன்றிண்ணா!" என்றாள்.

## 4

சரஸ்வதி, கோணிப் பையை எடுத்துக் கொண்டு, மளிகைக் கடைக்குச் சென்று கொண்டிருந்தாள். ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்த வயது. ஆனால், அறுபதுக்கு மேல் மதிப்பிடும் தோற்றம்.



ஏழ்மை, கவலை, அயராத உழைப்பு அந்தப் பெண்மணியின் வயோதிகத்தை அதிகப்படுத்தியிருந்தன. நடையில் சமீபகாலமாய்த் தள்ளாட்டமும் சேர்ந்திருந்தது. அவளின் ஒரு கண்ணில் பார்வையே இல்லை. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் என்று ஏகப்பட்ட உடல் உபாதைகளும் இருந்தன.

காலையில் இட்லி விற்றும், பகலில் சாப்பாட்டுக் கடை வைத்தும் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தாள்.

தனி ஆளாய் அவளே சமைத்து, எடுத்து விற்று, கழுவி... நாள் முழுக்க அவளுக்கு ஓய்வே இருக்காது.

அவளுக்கு ஒரே மகன் முருகேசன்.

ஊரிலுள்ள அத்தனை கெட்ட பழக்கங்களும் குடி கொண்டுள்ள இருபத்து நாலு வயது இளைஞன். வேலை வெட்டி கிடையாது. அம்மாவின் வியர்வையில், நிழலில் வாழ்ந்து கொண்டிருப்பவன்.

இரண்டு நாளாய் ஆளே காணோம். ஏற்கெனவே இதுபோல் இரண்டு மூன்று முறை வீட்டிற்கு வராமல் இருந்திருக்கிறான். சொல்லாமல் கொள்ளாமல் நண்பர்களுடன் சுற்றுலா சென்று விடுவான். அல்லது குடித்துவிட்டு யாருடனாவது தகராறு செய்து போலீஸ் நிலையத்தில் உதை வாங்கிக் கொண்டிருப்பான்.

சரஸ்வதி தவித்துப் போனாள். பிள்ளை மனம் கல்லுதான். ஆனால், பெற்ற மனம்தானே பித்துப் பிடிக்கும்?

பத்துப் பைசாவிற்குப் பயன் இல்லாத பிள்ளை என்றாலும் முந்நூறு நாள் கருவறையில் சுமந்து... வலிக்க வலிக்கப் பெற்ற ஒரே மகன் அல்லவா?



பிழைப்பையும் பார்த்துக் கொண்டு, பிள்ளையையும் தேடிக் கொண்டு... களைத்துப் போனாள், சரஸ்வதி. முருகேசனின் நண்பர்களிடமும் விசாரித்துப் பார்த்துவிட்டாள்.

'இரண்டு நாளாய்ப் பார்க்கவில்லை!' என்று கூறிவிட்டனர்.

'பாவிப்பய... பெத்தவளுக்கு உழைச்சி ஒருவேளை கஞ்சி ஊத்தத்தான் மனசு வரலே... வயசான காலத்துல அவனை அலைய விடாம, இங்கிட்டுப் போறேன், அங்கிட்டுப் போறேன்னு சொல்லிவிட்டாவது போகலாமில்லே! இன்னும் எங்கே போய்த் தேடுவேன்? எப்பதான் இவனுக்குப் பொறுப்பு வருமோ?

'வேதனைப் படுத்தறதுக்குன்னே என் வயித்துல வந்து பொறந்தானோ? செத்துத் தொலைஞ்சாலாவது வாரிப் போட்டு தலை முழுகிட்டு அக்கடான்னு உக்காந்துடுவேன்!' தகிக்கிற வெயிலில் குடையைக் கூட எடுத்து வர மறந்து புலம்பியபடி நடந்து கொண்டிருந்தாள்.

"என்ன சரசு, பித்துப் பிடிச்சவ மாதிரி தனியே பேசிக்கிட்டுப் போறே?" அடுத்த தெருவைச் சேர்ந்த, அவள் வயதொத்த கண்ணகியம்மாள் கேட்டாள்.

"ஒண்ணுமில்லே, கண்ணகி. என் வயித்தெரிச்சல் எனக்கு."

"வேறென்ன இருக்கப் போகுது? உன் பிள்ளை காணாமப் போயிருப்பான்."

சட்டெனக் கண்கள் கலங்கிவிட்டன, சரஸ்வதிக்கு.

"ஆமாம், கண்ணகி. ரெண்டு நாளாய் அவனைக் காணோம்."



"சே... இந்த வயசுல உன்னை இப்படி கஷ்டப்படுத்திப் பார்க்கிறானே... என்ன பிள்ளை அவன்! பேசாம ஒரு கல்யாணத்தைப் பண்ணி வை, சரசு. வீட்டோட கிடப்பான். பொண்டாட்டின்னு ஒருத்தி வந்த பிறகாவது பொறுப்பு வராதா?"

"வேலை வெட்டி இல்லாத பயலுக்கு யாரு பொண்ணு தருவா? அப்படியே தந்தாலும் எனக்கும் மனச்சாட்சின்னு ஒண்ணு இருக்கே! பெத்தவளுக்கே ஒரு வேளை சாப்பாடு போடணுங்கிற எண்ணம் இல்லாதவன், தன்னை நம்பி வந்தவளுக்கு மட்டும் போடுவானா என்ன? நான் பொண்ணைப் பெத்துக்கலேன்னாலும், எல்லாப் பொண்ணுங்களையும் என் குழந்தைங்களாதான் நினைக்கிறேன். தெரிஞ்சே ஒரு குழந்தையோட வாழ்க்கையைப் பலி கொடுக்க நான் விரும்ப மாட்டேன்."

"என்னமோ போ! உன் நல்லதுக்காகச் சொன்னேன். இந்தக் காலத்துல பாவம் புண்ணியமெல்லாம் பார்த்துக்கிட்டிருந்தா வாழ முடியாது. நான் வர்றேன்," என்று அவளைக் கடந்து போனாள், கண்ணகி.

"எல்லாம் என் தலையெழுத்து... ஹூம்..." என்று பெருமூச்சு விட்டபடி கடையை நோக்கி நடந்தாள்.

மளிகைக் கடையில் கூட்டம் அதிகமில்லை. பையைக் கடைப் பையனிடம் நீட்டினாள்.

"கொஞ்சம் சீக்கிரம் போட்டுக் கொடுப்பா..."

"சரசு..."

திரும்பினாள்.

முகுந்தனின் நண்பன் பாண்டியனின் அம்மா பார்வதி!

"என்ன பார்வதி?"

"காலையிலே உன்னை போலீஸ் நிலையம் பக்கம் பார்த்தேனே... என்ன விஷயம்? உன் பிள்ளையைப் பிடிச்சிட்டு போயிட்டாங்களா?"

"இல்லே, பார்வதி... நானே உன்னை வந்து பார்க்கணும்னு நினைச்சிட்டிருந்தேன்."

64805

"என்ன விஷயம்?"

"பாண்டியன் வீட்டுலே இருக்கிறானா?"

"இருக்கான். ஏன் கேட்கிறே?"

"முகுந்தனை ரெண்டு நாளா காணோம். அது விஷயமா தான்... சண்டை கிண்டை போட்டு லாக்கப்புல வச்சிருப்பாங்களோன்னுதான் போலீஸ் நிலையத்துக்குப் போய்ப் பார்த்துட்டு வந்தேன். அங்கேயும் இல்லே. பாண்டியனுக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம்... அதான் கேட்டேன்!"

"அப்படியா? பாண்டியனுக்கு நாலு நாளா கண்ணைக் கூட திறக்க முடியாத அளவிற்குக் காய்ச்சல். வீட்டை விட்டு எங்கேயும் போகலே. முகுந்தனும் வரலே. அவனுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லே. என்ன பிள்ளை இவன்? இங்கே போறேன்... அங்கே போறேன்னு சொல்லிட்டாவது போகலாமில்லே!"

"இன்னும் எங்கேயெல்லாம் போய்த் தேடுவேன்?"



"கறிவேப்பிலைக் கொத்து மாதிரி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரேயொரு பிள்ளை மட்டும் கொடுத்துட்டு கடவுள் உன்னை இவ்வளவு அவஸ்தைப் படுத்தக் கூடாது. கவலைப்படாதே! வந்துடுவான். இதுக்கு முன்னேயும் இதே மாதிரி எத்தனையோ முறை காணாமப் போய் வந்திடலியா?"

"நானும் அந்த நம்பிக்கையிலேதான் நடமாடிக் கிட்டிருக்கேன்."

64805

"இந்தாம்மா... சாமானெல்லாம் போட்டாச்சு. சரியா இருக்கான்னு பார்த்துக்க!" கடைக்காரப் பையன் பையைத் தூக்கிக் கொடுத்தான்.

காசு எதையும் சரி பார்க்கவும் தோணாமல், பணத்தைக் கொடுத்துவிட்டுப் பையோடு நடக்க...

"உன்னை எங்கெல்லாம் தேடுறது?" என்றபடி சைக்கிளில் எதிரே வந்தார், காவலர்.

"என்னங்கய்யா?" பதைபதைப்புடன் கேட்டாள்.

"இன்ஸ்பெக்டர் ஐயா உன்னைக் கையோடு கூட்டிட்டு வரச் சொன்னார்."

"எ... எதுக்குங்க?"

"முந்திரிக் காட்டுல ஒரு பிணம் கிடக்குதாம். அது உன் பிள்ளைதானான்னு பார்த்துச் சொல்லுவியாம்!"

"ஐயோ... என் ராசா!" வீரிட்டலறியபடி பையைப் போட்டுவிட்டு, நெஞ்சில் அடித்துக் கொண்டு ஓடினாள், சரஸ்வதி.



5

'ஆண்டவனே... இந்த வயதில் எனக்கு இப்படியொரு சோதனையா! இருக்காது. இருக்கக் கூடாது. அது என் பிள்ளையா இருக்கக் கூடாது. 'செத்துத் தொலைஞ்சாலாவது வாரிப் போட்டுட்டு நிம்மதியா இருப்பேன்னு' இந்தப் பாவி புலம்பினேனே... அதுக்காக இந்த தண்டனையா? வேண்டாம். என் பிள்ளையை வாரிக் கொடுத்துட்டு நான் மட்டும் உயிரோடு இருந்து என்ன பண்ணப்போறேன்? மகமாயி... உனக்குக் கடா வெட்டிப் பொங்கல் வைக்கிறேன். என் பிள்ளைக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது.'

வாய்விட்டு அழுதபடி கொளுத்தும் வெயிலில் ஓட்டமும் நடையுமாய்க் காவலரின் பின்னால் சென்றாள்.

விபரம் அறிந்து அவளுடன் பத்துப் பதினைந்து பேர் ஆவலோடு வந்து கொண்டிருந்தனர்.

"பாவம், சரசு. அவ வாழ்க்கையில நிம்மதிங்கிற வார்த்தைக்கே அர்த்தமில்லாம போயிடுச்சு!"

"எப்படிச் செத்திருப்பான்? யாராவது கொலை பண்ணிட் டாங்களா?"

"இருக்கலாம். அவனுக்கு வேண்டாத பழக்கங்கள் நிறைய இருக்கே! கோஷ்டித்தகராறுல எவனாவது போட்டுத் தள்ளிட்டுப் போயிருப்பான்!"

ஆளாளுக்குத் தங்கள் அனுமானங்களைக் கூறிக் கொண்டனர்.

"ஐயா... அது என் பிள்ளையா இருக்காது. கடவுள் அப்படியெல்லாம் என்னைத் தண்டிக்க மாட்டான். எனக்குக்



கொள்ளி போடவாவது விட்டு வைப்பான்!" காவலரிடம் பரிதாபமாய்ச் சொன்னாள்.

"அழாம வாம்மா... இதோ நெருங்கிட்டோம்!"

முந்திரித் தோப்பிற்குள் ஏற்கெனவே ஒரு பெரும் கும்பல் சூழ்ந்திருந்தது. நடுவே காக்கிச் சட்டைகள் கும்பலை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தனர்.

"முகுந்தா...!" அந்தக் கும்பலை நோக்கி அலறியபடி ஓடினாள், சரஸ்வதி.

"யாருப்பா இது?" போலீஸ் உயர் அதிகாரி அதட்டலுடன் கேட்டார்.

"உடலை அடையாளம் காட்ட வரச் சொன்ன சரஸ்வதி இவங்கதான் சார்!"

"இப்படி இந்தப் பக்கமா வாம்மா!"

"கடவுளே... இது என் பிள்ளையா இருக்கக் கூடாது... இருக்கக்கூடாது..." நெஞ்சுக்கூடு வேகமாய் அடித்துக் கொள்ள, அந்தப் பிணத்தின் அருகே சென்றாள்.

ஒருக்களித்துப் படுத்தவாக்கில் இருந்த அவனின் உடல் முழுக்க ரத்தக் காயங்கள். மணல் ஒட்டிக் கொண்டு அடையாளம் காண முடியாமல் இருந்தது.

தலைமுடி மட்டும் சுருள் சுருளாய் முகுந்தனைப் போலவே.

நெஞ்சடைப்பது போலிருந்தது. மயக்கம் வரும்போல் கண்கள் செருகின.

"உடலை மல்லாத்திப் போடுய்யா..." காவலருக்கு உத்தரவு பறந்தது.

உடல் அவ்வாறு போடப்பட்டது.

உற்றுப் பார்த்த சரசுவின் விழிகள் விரிந்தன.

கருப்பாய்... பிளந்திருந்த வாயின் வழியே நீட்டிக் கொண்டிருந்த நீண்ட பற்களோடு...

இது யாரோ!

''அப்பாடா!'' என்று நிம்மதியாய் மூச்சு விட்டாள், சரஸ்வதி.

''இல்லீங்க... இது என் பிள்ளை இல்லீங்க...''

அழுதழுது முகம் வீங்கிப் போய்விட்டது. சோகையான வெளிச்சத்தை வடிகட்டி வீட்டைச் சோகமாக்கிக் காட்டியது.

'எங்கேதான் போயிருப்பான்? என் மேலே கொஞ்சமாவது பாசம் இருந்தால் சொல்லாம கொள்ளாம போயிருப்பானா? வயசான காலத்தில் என்னை இப்படி தவிக்க விடுவானா?'

'டொக்... டொக்...'

கதவு தட்டப்பட்டது.

திடுக்கிட்டாள், சரஸ்வதி.

'இந்நேரத்தில் யாரு? மறுபடி போலீசா? ஐயோ... என் பிள்ளைக்கு ஏதாவது ஆகிவிட்டதா?' பதறியடித்துக் கொண்டு வாசலுக்கு விரைந்தாள்,

கதவைத் திறந்தாள்.

முகம் பரவசத்தில் அகன்றது.

முகுந்தன் நின்றிருந்தான்.



''மு...கு...ந்...தா...!''

''கண்ணுதான் பழுதுன்னு பார்த்தா, காதும் போச்சா? எவ்வளவு நேரமா தட்டுறது?'' அவளைத் தாண்டி உள்ளே வந்தான்.

சாராய நாற்றம் குப்பென மூக்கைத் துளைத்தது.

இதெல்லாம் சரஸ்வதிக்குப் பழகிப்போன ஒன்று.

''ரெண்டு நாளா எங்கேடா போயிருந்தே?''

''பசிக்குது... சாப்பிடுறதுக்கு என்ன இருக்கு?''

''நீ இல்லாம நான் மட்டும் தனியே பொங்கிச் சாப்பிட மனசு வருமா? மாவு இருக்கு... தோசை சுட்டுத் தர்றேன்... அழுக்கா இருக்கே, முதல்ல குளிச்சிட்டு வா!''

''அதெல்லாம் காலையிலே குளிச்சுக்கிறேன். இதோ பாரு... எனக்குத் தோசை பூசையெல்லாம் வேணாம். சோறு வேணும்!''

''சித்தநேரம் பொறு! பொங்கிப் போடுறேன். ரெண்டு நாளா எங்கேதான் போயிருந்தே? நான் அவஸ்தைப்பட்டுட்டேன். தேடாத இடமில்லை. போலீஸ் நிலையத்துக்குப் போய் புகார் கொடுத்து...ஏன்டா என்னை இந்தப் பாடுபடுத்துறே? வயசான அம்மாவாச்சே...? அரை குறையான பார்வையை வச்சுக்கிட்டு அவ என்ன பண்ணுவான்னு கொஞ்சமாவது யோசிச்சியா?''

''நான் என்ன சின்னக் குழந்தையா? வெளியே போகத் தெரிஞ்சவனுக்கு வீடு திரும்பத் தெரியாதா? உன்னைத் தேடச் சொன்னேனா? ஏன் இப்படி பண்றே?''

''பெத்த வயிறுடா... அப்படித்தான் தேடும். அப்பக்கூட மனசுல ஈரமில்லாமதானே பேசுறே? இங்கிட்டுப் போறேன்,



அங்கிட்டுப் போறேன்னு சொல்லிட்டுப் போனா உன் கௌரவம் குறைஞ்சிடுமா?''

''சரி... சரி... புலம்பாதே! ஒரு நல்ல காரியத்துக்காகப் போனேன். உங்கிட்டே சொல்லிக்கிட்டுப் போக வேணாம்னு தோணுச்சு!''

''நான் தாலியறுத்தவன்னு சொல்லாம சொல்றியா? எல்லாம் நான் வாங்கி வந்த வரம்!'' துளிர்த்த கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்தபடி சோற்றை வடித்தாள்.

''இந்த மாதிரி சினிமா வசனமெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''சரி, விடு... அதென்ன நல்ல காரியம்?''

''பொய்ச் சாட்சி சொல்லத்தான்! ஒரு கொலையை என் கண்ணால பார்த்தேன்னு சொன்னாப் போதும்... அஞ்சாயிரம் தர்றேன்னாங்க. விடுவேனா?'' சோற்றைப் பிசைந்தபடி சொன்னான்.

சரஸ்வதி அதிர்ந்தாள்.

''அப்ப... பொய்ச்சாட்சி சொல்லிட்டு வந்தியா?''

''ஆமா!''

''சே... நீயெல்லாம் ஒரு மனுஷனா? கிட்டத்தட்ட ஒரு கொலையைப் பண்ணிட்டு வந்திருக்கிற படுபாவி. எல்லார் வயித்தெரிச்சலையும் கொட்டிக்கிட்டு நீ மட்டும் நிம்மதியா வாழ்ந்திடுவியா? உன்னை என் வயித்தில சுமந்ததுக்காக வேதனைப்படுறேன்.''

அவ்வளவுதான்! சாப்பாட்டுத் தட்டை வீசி எறிந்தான், முகுந்தன்.



''என்ன சாபமா விடுறே? நானுந்தான் வேதனைப்படுறேன். சாப்பாட்டுக் கடை போட்டு வயித்தைக் கழுவுற உன் வயித்துல பொறந்ததுக்காக. எங்கேயோ பொறந்து, எப்படியோ வாழ்ந்திருக்க வேண்டியவன், தரித்திரம் பிடிச்ச இந்த வீட்டுல பொறந்ததுக்காக ரொம்பவே வேதனைப்படுறேன்!''

வார்த்தைகள் சூடாய் வந்து விழுந்தன.

சரஸ்வதி விக்கித்துப் போனாள்.

## 6

குளிர்ந்த நிலவு, 'மேக்கப்' போட்ட நடிகையின் முகம் போலப் பளிரென்றிருந்தது.

அம்பிகை வெற்றிலைத் தட்டுடன் மாடிப்படி ஏறினாள்.

பௌர்ணமி நாளில் மொட்டை மாடியில் ஊஞ்சலில் அமர்ந்தபடி பக்குவமாய் மனைவி பாக்கு வைத்து மடித்துத் தரும் வெற்றிலையை நிலவை ரசித்தபடி மென்று சுவைப்பது லெட்சுமணனுக்கு மிகவும் பிடித்தமானது.

அந்த நேரத்தில்தான் வீட்டுப் பிரச்சினையிலிருந்து, ஊர்ப் பிரச்சினை வரை மனம் விட்டுப் பேசுவார். மற்ற நாட்களில் தொழில், கோவில், நண்பர்கள் என்று நேரம் போதாது.

கணவனுடன் பேசுவதற்காகவே தினமும் பௌர்ணமி வராதா என்று ஏங்கிப் போவாள், அம்பிகை.

அவள் தந்த வெற்றிலையை வாங்கி வாய்க்குள் அடக்கிக் கொண்டு, தன்னை வந்து தழுவிய இதமான தென்றலை ரசித்தார்.

"இந்த ஆண்டு... நம்ம ஊரை மழை ஏமாத்தலே... மனம் குளிரப் பெய்து ஏழை மக்களோட பசியைப் போக்கிடுச்ச நல்ல விளைச்சல்."

"ஆமாங்க... விவசாயத்தை நம்பி வாழ்க்கையை ஓட்டிக் கிட்டிருக்கிறவங்க... ரெண்டு மூணு ஆண்டா மழையில்லாம ரொம்ப அவதிப்பட்டுட்டாங்க."

"நம்ம செம்மலை பொண்ணுக்கு வர்ற மாசியிலே கல்யாணமாம். தொழில் விஷயமா வெளியூர்போயிட்டேன்னு காரணம் சொல்லி வராம இருந்துடக் கூடாது. கண்டிப்பா குடும்பத்தோட வந்து வாழ்த்தணும்னு இப்பவே சொல்லிட்டார். போகணும். நல்ல மனுஷன்... ரெண்டு மூணு பவுன்ல செயின் வாங்கிப் பரிசா கொடுத்திடலாம்."

"ஏங்க..."

"என்ன?"

"நான் ஒண்ணு சொன்னா... கோபப்பட மாட்டீங்களே...!"

"என்னன்னு மொதல்ல சொல்லு..."

"நம்ம நளினிக்கு ஏகப்பட்ட வரன் வந்துக்கிட்டிருக்கே."

"வரட்டும்... அதுக்கென்ன?"

"என்னங்க இப்படிச் சொல்றீங்க? காலா காலத்துல அவளுக்கும் கல்யாணம் பண்ணி வச்சிட்டோம்னா நிம்மதியா உக்காரலாம். இருக்கிற ஒரு கடமையையும் முடிச்சிடலாமே!"

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இவ்வளவு பட்ட பிறகும் திருந்தலியே நீ!" குரலில் சூடேறியது.

"இல்லேங்க... எனக்கென்னமோ நளினிக்கு இப்பவே கல்யாணம் பண்ணி வச்சிட்டா நல்லதுன்னு தோணுது.



[illegible] தலைவிதி... போய்ச் சேர்ந்துட்டா. அதனால [illegible] பதினெட்டு வயசான பிறகுதானே கல்யாணம் [illegible] கொடுத்தோம்? அவமட்டுமென்ன, மகிழ்ச்சியாவா [illegible]?

"அவங்கவங்க தலையிலே என்ன எழுதி இருக்கோ, அதுதான் நடக்கும். பக்கத்து ஊர்ல ஒரு ஜோசியர் இருக்கார். அவர் சொல்றதெல்லாம் அப்படியே நடக்குதாம். நளினியோட ஜாதகத்தை அவர்கிட்டே காட்டினேன். ஆறு மாசத்துக்குள்ளே நீங்களே ஒரு நல்ல வரனாப் பார்த்து கல்யாணம் பண்ணிடுங்க. எப்படி இருந்தாலும் இந்த ஜாதகத்துக்கு கல்யாணம் சீக்கிரமே ஆகிடும். அது பெற்றோரா பார்த்துப் பண்ணி வைக்கிற கல்யாணமா இருந்தா ஓகோன்னு வாழ்வா... இல்லேன்னா பிரச்சினைதான்னு... பூடகமா சொல்றாருங்க..."

"இதோ பாரு அம்பிகை, எனக்கு இந்த ஜோசியம், ஜாதகம் இதிலே இருந்த நம்பிக்கை எல்லாம் சுபா செத்தப்பவே போயிடுச்சுன்னு தெரியுமில்லே? அவளுக்கும் ஜோசியம் பார்த்துத்தானே பண்ணி வச்சோம்? அப்ப ஜோசியக்காரன் சொல்லலியே... அவளுக்கு அல்ப ஆயுசுன்னு! நீ இப்படி முட்டாள்தனமா பேசறதை முதல்ல நிறுத்து. நளினி படிக்கட்டும். அவ எவ்வளவு படிக்கணும்னு ஆசைப்படு றாளோ, அதுவரைக்கும் படிக்கட்டும்."

"நீங்க சொல்றபடியே வச்சுக்கிட்டாலும், அவளுக்கு ஏத்தமாதிரி படிச்ச மாப்பிள்ளையாப் பார்க்கணும். நம்ம சாதியிலே, நம்ம அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி உள்ளவங்கள்ல நிறையப் படிச்சவங்க யாருமில்லையே..."

"அந்தக் கவலை உனக்கெதுக்கு? எனக்கு எத்தனையோ தொழிலதிபர்கள், நண்பர்கள் உண்டு. இந்த ஊரு





மாப்பிள்ளையே வேண்டாம். என் நண்பர்களோட பிள்ளைகள் பல பேர் டாக்டர், என்ஜீனியர்னு அமெரிக்காவுல, லண்டன்ல இருக்கிறாங்க. அதிலே நல்லவனா பார்த்து என் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பேன்."

"எதுக்குங்க அமெரிக்கா மாப்பிள்ளை யெல்லாம்? ஒழுக்கமா இருப்பாங்களா?"

"ஒழுக்கமா இருக்கிறதும், இருக்காததும் அவங்கவங்க மனசைப் பொறுத்தது. என்னமோ இங்கே இருக்கிறவங்க அத்தனை பேரும் ஒழுக்க சீலர்கள் மாதிரியில்லே பேசறே? ஜோதி வீட்டுக்காரன் எப்படிப்பட்டவன்? உள்ளூர்க்காரன் தானே! அப்ப அவசரப்பட்டு, சரியா விசாரிக்காம பொண்ணைக் கிணத்துல தள்ளியாச்சு. அனுபவப்பட்டாச்சு. இனி, கவனமா இருக்க மாட்டேனா! நளினிக்கு அலசி ஆராய்ந்து அவளை உள்ளங்கையிலே வச்சுத் தாங்குற நல்ல மாப்பிள்ளையா பார்த்துதான் கட்டிக் கொடுப்பேன்."

"ஊகூம்..."

"என்ன பெருமூச்சு விடுறே?"

"நீங்க சொல்றதெல்லாம் கேட்க நல்லாதான் இருக்கு. எல்லாம் நல்லபடி நடந்தா சரி!"

"கொஞ்சம் பேச விட்டாப் போதுமே... எனக்கே புத்திமதி சொல்லத் தொடங்கிடுவியே... அந்த தண்ணிய எடு..."

ஜன்னலின் திரைச்சீலைகளை இழுத்து மூடிக் கொண்டிருந்த பத்மாவின் பின்புறமாய் வந்து கட்டிக் கொண்டான், பாஸ்கர்.

திடுக்கிட்டுத் திரும்பியவள், சிணுங்கினாள்.

"என்னங்க இது... இப்பதான் கல்யாணமான மாதிரி... குழந்தைங்க பார்த்துடப் போறாங்க..."



"குழந்தைங்க ரெண்டு பேரும் நல்லா தூங்குறாங்க. கல்யாணமான புதுசுல மட்டும்தான் பொண்டாட்டியைக் [illegible]? ரெண்டு குழந்தை பெத்துட்டா [illegible] எல்லோரும் சாமியாராப் போயிடணுமா என்ன? [illegible] மனசைத் தொட்டுச் சொல்லு... நான் இப்படி கொஞ்சறது [illegible] பிடிக்கலையா?"

"[illegible] வேண்டாம்னு சொல்ற பூனை இருக்கா? எல்லாப் பொண்ணுங்களும், தான் கிழவியா ஆனாக்கூட கணவன் இப்படி கொஞ்சிக்கிட்டே இருக்கணும்னுதான் விரும்புவாங்க. [illegible] ஒரு பேச்சுக்கு அப்படிதான் பிகு பண்ணுவோம்... அதுக்குப் போய்..." கணவனின் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

அவள் கழுத்தின் வழவழப்பை ஒற்றை விரலால் ஆராய்ந்தவன், "இந்தச் சங்கு கழுத்துக்காக ஒரு பரிசு வாங்கி வந்திருக்கிறேன்," என்றான்.

"பரிசா? என்ன பரிசு?" ஆவலாய்க் கேட்டாள்.

"டொட்டடொய்ங்..." என்றபடி ஒரு நகைப் பெட்டியை அவள் முன் நீட்டினான்.

பத்மாவின் கண்கள் ஆர்வத்தில் அகன்றன.

"நகையா?"

பிரித்துப் பார்த்தாள்.

பல நிறக் கற்களுடன் அட்டிகை மின்னியது.

"ரொம்ப அழகாக இருக்குங்க... நளினிக்கு அம்சமா இருக்கும்!"

"இது உனக்குத்தான், பத்மா."

"தப்புப் பண்ணுறீங்களே! வயசுக்கு வந்த தங்கை இருக்கிறப்ப, பொண்டாட்டிக்கு மட்டும் நகையோ, சேலையோ எடுத்துத் தரக்கூடாதுங்க. அவ புகுந்த வீட்டுக்குப் போறப்ப பெத்தவங்க வாங்கிக் கொடுத்த சீர்செனத்தி மட்டுமல்ல; உடன் பிறந்தவங்க தர்ற சீரோடு போனால்தான் அவளுக்குக் கௌரவம். இதை நான் நளினிக்குக் கொடுத்திடுறேன். இதே மாதிரி எனக்கு வேறு நகை வாங்கிக் கொடுங்க."

மனைவியை இறுக அணைத்துக் கொண்டான், பாஸ்கர்.

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே, பத்மா. ஆனா ஒன்னு மட்டும் புரியுது. நீ எனக்கு மனைவியா அமைஞ்சது இறைவன் கொடுத்த வரம்!"

## 7

மறுநாளுக்கான காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தாள், சரஸ்வதி. நடுநடுவே எழுந்து போய், கிரைண்டரில் அரைபடும் மாவைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

ஒருவழியாய் மாவை அரைத்து வழித்துப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்துவிட்டு கிரைண்டரைக் கழுவினாள்.

அப்போது-

கதவு தட்டப்பட்டது.

'வழக்கமாய்ப் பத்து, பன்னிரண்டு மணிக்கு வருகிற முகுந்தன், இன்றைக்குச் சீக்கிரமே வந்துவிட்டானா என்ன?' ஆச்சரியத்துடன் கைகளைத் துடைத்தபடி கதவைத் திறந்தவள்...



அதிர்ந்தாள்.

வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் நின்றிருந்தனர்.

"எ... என்னங்க... யாரு... யாரு வேணும்?"

"ஸ்டேஷனுக்கு வாம்மா... ஐயா உன்னை அழைச்சிட்டு வரச் சொன்னார்."

"எ... எதுக்கு?"

"அதான்... பெத்து வச்சிருக்கியே... அருமை பெருமையா ஒரு பிள்ளை... அவன் இப்ப லாக்கப்ல இருக்கான்."

"ஐயய்யோ... ஏன்?"

"ஏன் அலர்றே? இதொண்ணும் புதுசில்லையே! மாசத்துல ரெண்டு முறையாவது லாக்கப்ல படுக்கணும் அவனுக்கு. குடிச்சிட்டு, ரெங்கசாமி மகனைப் போட்டு அடிச்சிருக்கான். மண்டை உடைஞ்சு ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்கு. உன் பிள்ளைக்குத் தாதான்னு நினைப்பு... இப்படியே அவன் அட்டகாசம் பண்ணிக்கிட்டிருந்தா ஒரு ஆண்டு முழுசும் உள்ளே போட்டுருவாங்க..."

"அவனுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன். அவனை ஒன்னும் பண்ணிடாதீங்கய்யா..."

"முதல்ல அவனைத் திருத்துற வழியைப் பாரும்மா. சீக்கிரம் கிளம்பு!"

இன்ஸ்பெக்டர் அடித்ததில், உதட்டோரம் ரத்தம் வழிய, போதையில் கண்கள் சிவந்திருக்க, லாக்கப்பில் அமர்ந்திருந்த முகுந்தன், அழுதபடி வந்து நின்ற அம்மாவை அலட்சியமாய் ஏறிட்டு விட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டான்.



"ஏன்டா இப்படி யெல்லாம் பண்ணுறே? என்னை நிம்மதியாகவே இருக்க விட மாட்டியா? இது உனக்கே நல்லா இருக்கா?"

"ப்ச்... புலம்பிட்டிருக்காம... சீக்கிரம் அபராதத் தொகையைக் கட்டிட்டு என்னை அழைச்சிட்டுப் போ!"

"கண்ணுல பூ விழுந்து ஒரு பக்கம் சுத்தமா பார்வையே தெரியலே. அந்த, பத்துன்னு சேர்க்கிற பணத்தையெல்லாம் நீ குடிக்கிறதுக்காகவும், சண்டை போட்டு போலீஸ்ல மாட்டிக் கிட்டா, அபராதம் கட்டி கூட்டிட்டுப் போறதுக்காகவும் தானே செலவு பண்ண வேண்டியதா இருக்கு."

"அடடா... உன்னோட கொசுத் தொல்லை தாங்கலே... நீ வேற கடிக்காதே... போயேன்!" எரிந்து விழுந்தான்.

தளர்ந்த மனதுடன், இன்ஸ்பெக்டர் கேட்ட தொகையை அபராதமாகக் கட்டினாள்.

"ஒன்னு சொன்னா கேப்பியா?" என்றார், இன்ஸ்பெக்டர்.

"சொல்லுங்கய்யா."

"இப்படிப்பட்ட பிள்ளை உனக்குத் தேவையா? பேசாம சாப்பாட்டுல விஷம் வச்சிக் கொடுத்திடு. உன்மேலே வழக்கே இல்லாம நான் பார்த்துக்கிறேன்."

"அப்படியெல்லாம் பேசாதீங்கய்யா... என் பிள்ளை திருந்திடுவான்!" கண்ணீருடன் கைகூப்பினாள், சரஸ்வதி.

முன்தினம் நடந்த சம்பவத்தின் கவலேயின்றி டிப்டாப்பாக உடையணிந்து கொண்டு அம்மாவின் முன்வந்து நின்றான், முகுந்தன்.

"எனக்கு ஆயிரம் ரூபா வேணும்!"



"ஆயிரம் ரூபாயா... எதுக்கு?"

"பண்டிகை யெல்லாம் வருது. துணி எடுக்கணும்."

"கொஞ்சம் கூட உனக்கு மனச்சாட்சியே இல்லையா முகுந்தா? நீ செய்துட்டு வர்ற அட்டூழியத்துக்காக போலீஸ்காரனுக்குக் கொட்டி அழுதுட்டு வர்றேன். பெத்தவளுக்கு ஒரு நூல் சேலை எடுத்துத் தரணும்னு தோணுதா உனக்கு. ஒரு மூக்குக்கண்ணாடி வாங்கிக்கணும்னா கூட என் கையை எதிர்பார்க்கிறியே... வெட்கமாயில்லே!"

"அம்மா..."

"என்னடா கத்துறே? மரமாட்டம் வளர்ந்திருக்கிறே... உழைச்சு ரெண்டு காசு சம்பாதிக்கணும்னு உறைக்காதா? காரசாரமாதானே ஆக்கிப் போடுறேன்?"

"நீ ரொம்ப அதிகமா பேசறே!" என்றான், கோபமாக.

"உன்னை உக்கார வைச்சி, நான் உழைச்சி சோறு போடுறேனே... அதிகமாகத்தான்டா பேசுவேன்! இருந்த பணத்தையெல்லாம் உன் எழவுக்குத்தான் கொடுத்திட்டேனே! திரும்ப ஆயிரம் ரூபா கொடுன்னு கேட்க வெட்கமாயில்லே?

"நீ எனக்கு ஒருவேளை கஞ்சிகூட ஊத்தாதே. என் உடம்புல உசிரு இருக்கிறவரைக்கும் என் பாட்டை நான் பார்த்துக்கிறேன். உனக்காகவாவது நீயொரு வேலையைத் தேடிக்கக் கூடாதா? வயசாகுதே... கல்யாணம் பண்ண வேண்டாமா? வெறும் பயலுக்குப் பொண்ணு கேட்டுப் போனா, காறித் துப்ப மாட்டாங்களா? எத்தனை காலம் உயிரோடு இருக்கப் போறேன்! நான் போயிட்ட பிறகு யார்கிட்டே போய்க் கையேந்தப் போறே?"

''இதோ பார் கிழவி! ரொம்ப புத்திமதி சொல்லாதே! ஒழுங்கா கேட்டா தர மாட்டே! உன்கிட்டே எப்படி வாங்குறதுன்னு எனக்குத் தெரியும். இந்த முருந்தனை ரொம்ப சாதாரணமா எடை போட்டுடாதே! என் ரேஞ்சே வேறு!'' என்று கூறிவிட்டு 'விருட்'டென வெளியேறி விட்டான்.

சரஸ்வதி, மகனை நைந்த மனதுடன், பார்த்துக் கொண்டிருந்தாள்.

முருந்தன் பார்க்க வாட்டசாட்டமாய் தமிழ்ப்பட கதாநாயகன் மாதிரிதான் இருந்தான். ஆனால், மனசுதான் கோணல்.

'இப்படியொரு பிள்ளைக்காகவா கோவில் கோவிலாய் ஏறி இறங்கினேன்! அதைவிட என்னை மலடியாகவே வைத்திருக்கலாமே! எப்பதான் இவன் திருந்துவானோ?'

ஒரே நிறத்தில் ஆயிரக் கணக்கில் பட்டாம்பூச்சிகளைப் பார்க்க முடியுமா?

ஆனால், அந்தப் பள்ளிக்கூடத்தில் பார்க்கலாம். பச்சை நிறச் சீருடையில் மாணவிகள் விடுதலை பெற்ற ஆனந்தத்தோடு சிறகடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். பள்ளிக்கூட வாசலில் அவர்களைத் தரிசிக்கக் கும்பல் கும்பலாய் இளவட்டங்கள் ஏதோ ஒரு பரவசத்துடன் காத்திருந்தனர்.

முருந்தனும் நண்பர்கள் பட்டாளத்துடன் நின்றிருந்தான். ஆனால் அவன் கவனமெல்லாம் எங்கோ இருந்தது.

''என்ன முருந்தா... பிகருங்களைப் பார்க்காம ஏதோ யோசனையில் ஆழ்ந்துட்டே?''

''ஒண்ணுமில்லே... அம்மாவோடு சின்ன பிரச்சினை...''



இங்கே வரும்போது வீட்டைப் பற்றி நினைக்கக் கூடாது. ...பாரு... அட... அட... அட...'' - இளங்கோ வாயில் ...ஒழுகத் தன்னிலை மறக்க...

தோழிகளுடன் வந்து கொண்டிருந்தாள், நளினி.

## 8

தன் பரிவாரங்களுடன் தன்னைக் கடந்து சென்றவளை வியப்புடன் பார்த்தான், முருந்தன்.

''யாருடா இவ?''

''நீ யாரைச் சொல்றே?''

''அந்தக் கூட்டத்திலேயே தனியா தெரியுறாளே அவதான்.''

''ஓ... நீ நளினியைச் சொல்றியா?''

''அவ பேரு நளினியா? நம்ம ஊர்க்காரியா?''

''என்ன இப்படிக் கேட்டுட்டே? இறால் பண்ணை வச்சிருக்காரே... லெட்சுமணன், அவரோட கடைசிப் பொண்ணு. ரொம்ப வசதி.''

''அவருக்கு இப்படியொரு பொண்ணா? ரொம்ப அழகா இருக்காயில்லே!''

''என்ன முருந்த்... பார்த்ததும் காதலா? உடனே அழிச்சிடு. பெரிய இடம்!'' என்றான், சங்கர்.

''காதல்ல என்னடா பெரிய இடம், சின்ன இடம்? முருந்தனோட அழகுக்கும், கம்பீரத்துக்கும் நளினி மாதிரி பெரிய இடத்துப் பொண்ணுதான்டா மனைவியா வரணும்!'' என்ற இளங்கோவை ஒருவிதத் திடுக்கிடலோடு ஏறிட்டான், முருந்தன்.



''உளறாதே, இளங்கோ!''

''சேச்சே... உண்மையைத்தான்டா சொல்றேன். நானே உன்னைப் பார்த்து, 'முருந்தன் மாதிரி நானும் அழகாயிருந்தா நல்லா இருக்குமே!'ன்னு பொறாமைப் பட்டிருக்கேன். உன்கிட்டே என்னடா குறைச்சல்? பணம் மட்டும்தான் இல்லே. ஒரு பணக்காரியாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அந்தக் குறையும் தீர்ந்துடும்.''

''டேய் இளங்கோ! இதெல்லாம் நடக்கிற காரியமா? நீ வேற ஏன்டா அவனை உசுப்பேத்தி விடுறே?'' என்றான் சங்கர்.

''ஏன் நடக்காது? முருந்தன் மனசு வச்சா எதுவும் சாத்தியம் தான்!''

''பெரிய இடத்து விவகாரம் தேவையா? அந்தப் பொண்ணுக்கு ஏத்த ஆளு முருந்தன்தான்னு எதை வச்சு சொல்றே? முருந்தன்கிட்டே அழகைத் தவிர வேற என்ன இருக்கு?''

''அது ஒண்ணே போதும்டா... அவளைக் கவுக்கறதுக்கு!''

''தான் உண்டு, தன் படிப்பு உண்டுன்னு இருக்கிற நளினி, அடக்கமான பொண்ணு. நீங்க நினைக்கிற மாதிரி அவளைக் கவுக்கறது நடக்காத காரியம்! வேணும்னா அஞ்சாயிரம் பந்தயம் வச்சுக்கலாம்.''

''என்ன முருந்தன்! இவன் உன்னை இவ்வளவு மட்டமா பேசறான்? இவன்கிட்டே சபதம் போட்டு ஜெயிச்சுக் காட்டு!''

''சபதத்திலே தோக்கிறது நீங்கதான்!'' ஏளனமாய்ச் சிரித்தான், சங்கர்.

முருந்தன் நிதானமாய் அவனைப் பார்த்தான்.



''எனக்குச் சவால்னா ரொம்ப பிடிக்கும், சங்கர். இந்த ...னால முடியாதது இந்த உலகத்துல எதுவும் இருக்கக் ...து இருக்கவும் முடியாது. நான் நளினியைக் கவுக்கறது ...யிலே, கல்யாணமே பண்ணிக் காட்டுறேன். சவால் ...'' என்றான், உறுதியான குரலில்.

''அப்படிப் போடு மச்சான்!'' முருந்தனின் முதுகைத் தட்டிக் கொடுத்தான், இளங்கோ.

அன்றிலிருந்து அவளைப் பின்தொடர்கிறான்.

நளினி தோழிகளுடன் பள்ளி நோக்கி நடக்கிறாள். இருபது வயதொத்த ஒரு இளைஞன் கிழிந்த, அழுக்கான ஆடையுடன் மழிக்காத முகத்துடன், பரிதாபமான தோற்றத்துடன் அவர்களின் எதிரே வந்து நின்றான்.

''சாப்பிட்டு அஞ்சு நாளாச்சு தாயி... உங்களால முடிஞ்ச காசு போடுங்கம்மா...''

''இல்லே... போயிட்டு வா!'' ஒருத்தி சொல்ல...''

''அப்படி சொல்லாதீங்கம்மா... நீங்களெல்லாம் மனசு வச்சா... என்னோட ஒருவேளைப் பசியைப் போக்கலாம்!'' கெஞ்சினான்.

நளினிக்கு இயல்பாகவே இரக்க குணம். யாராவது கொஞ்சம் கெஞ்சினாலே மனமிரங்கி விடுபவள்... கண்கள் கசிய இளைஞன் ஒருவன் பசிக்காகக் கைநீட்டி யாசிக்கும் காட்சியைக் கண்டால் என்னாவாள்?

இதயம் கசிய அவனைப் பார்த்தாள்.

'பாவம்... அஞ்சு நாளாய்ச் சாப்பிடலையாமே! இளமையில் வறுமை எத்தனை கொடியது! என்னால் ஒருவேளை

பட்டினியாய் இருக்க முடியுமா? நம் வீட்டில் எத்தனை பேர் பசியாறுகிறார்கள்? வெளி ஆட்கள் தினசரி பத்துப் பேராவது சாப்பிட்டு விட்டுச் செல்கிறார்கள்! அதற்காகவே கூடுதலாகச் சமைப்பது வழக்கமாயிற்றே! பசியைப் போக்கறதைவிட பெரிய புண்ணியம் எதுவுமில்லை என்று அம்மா அடிக்கடி சொல்வாளே! இவனுடைய ஒருவேளைப் பசியை என்னால் போக்க முடியாதா என்ன?'

சட்டெனப் பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினாள்.

"இந்தா... இந்தப் பணத்துல எதையாவது வாங்கிச் சாப்பிடு."

அவன் எதிர்பார்க்கவில்லை. பிரமிப்பும், ஆனந்தமுமாய் முகம் பளிச்சிட்டது.

"நீ ரொம்ப நல்லா இருப்பே, தாயி..."

வாங்கிக்கொண்டு சென்றுவிட, தோழிகள் பிலுபிலுவென நளினியைப் பிடித்துக் கொண்டனர்.

"கொஞ்சமாவது அறிவிருக்கா? ஒரு பிச்சைக்காரனுக்குப் போய் யாராவது பத்து ரூபாய் தருவாங்களா?"

"ஏன், தரக்கூடாதா? பசிக்கிறவங்களுக்குச் சாப்பிட ஏதாவது உதவி பண்ணனும். அதுதான் மனிதாபிமானம். என்னால அவனுக்கு ஒரு வேளைப் பசியைப் போக்க உதவ முடிஞ்சதேன்னு சந்தோஷப்படுறேன்."

"நீ பசியைப் போக்கலே நளினி. ஒரு சோம்பேறியை மேலும் சோம்பேறியாக்கிட்டே..."

"என்ன சொல்றே, மாதவி?"



"உதவு...வேணாங்கலே. ஆனா, யாருக்கு உதவனும் தெரியுமா? உழைக்கவே முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்ட ஊனமுற்றவர்களுக்கும், வயதானவர்களுக்கும்தான்! ஆனா நீ உதவி செய்தது யாருக்கு? எந்த ஊனமும் இல்லாத இருபது வயதுச் சோம்பேறிக்கு.

"இந்த வயசுல உழைச்சு அவனால சாப்பிட முடியாதா? முடியும். ஆனா, செய்யலே. கேட்டா யாரும் வேலை தரலேன்னு சொல்லுவான். ஏன் காகிதம் பொறுக்கி வித்துக் கூட சாப்பிடலாமே! பிச்சை எடுக்கிறதை விட அதொன்றும் கேவலமில்லையே. நீ பத்து ரூபாய் கொடுத்துட்டே. இனி என்ன பண்ணுவான்? பிச்சை எடுத்தா நிறையப் பணம் கிடைக்கும்னு முழு நேரத் தொழிலா இதிலேயே இறங்கிடுவான்!"

"அப்ப... நான் அவனுக்கு உதவி செய்ததைத் தப்புங்கிறியா?" பரிதாபமாய்க் கேட்டாள்.

"நிச்சயமா!"

இவர்கள் பேசுவது அத்தனையும் சற்றுத் தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த முகுந்தன், நளினியின் வெகுளித் தனத்தை நினைத்து ஆச்சரியப்பட்டான்.

9

உள்ளுணர்வு உறுத்த நளினி மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

சிறு புன்னகை இதழோரம் நெளிய, அவளையே குறுகுறுவெனப் பார்த்தான், முகுந்தன்.

உடல் முழுக்கப் பயம் பரவ... விரைந்து நடக்கத் தொடங்கினாள்.



நளினி படிக்கும் பள்ளி, அவள் வீட்டிலிருந்து நடந்து சென்றுவிடும் தூரம் என்பதால் தினமும் பள்ளிக்கு நடந்தே சென்று வருவாள். அவளுடன் வரும் தோழிகள் பாதி வழி வரை துணை வருவார்கள். அதன் பின் ஆளுக்கொரு பாதையில் பிரிந்து சென்று விடுவார்கள்.

நளினியின் இதயம் 'லப் டப்' என்று வேகமாய் அடித்துக் கொண்டது.

'யாரிவன்? கொஞ்ச நாட்களாய் என்னைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறான்? திரும்பிப் பார்த்தால் சிரிக்கிறான். பார்வையே சரியில்லை. பேசாமல் வீட்டில் சொல்லி விடலாமா?' யோசனையுடன் நடையைத் தொடர்ந்தாள்.

முகுந்தன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

'நளினி! என்னை ஏறிட்டுப் பார்த்து விட்டாய் அல்லவா? அவ்வளவுதான்... உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது.'

நளினியின் அறைக்குள் வந்த பத்மா, நெற்றி சுருங்கப் பார்த்தாள்.

அரை மணிநேரத்திற்கு முன் வைத்துவிட்டுப் போன காப்பி, அப்படியே இருந்தது. பக்கத்தில் நளினி எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

"ஏய்... நளினி..." தோளைத் தொட்டு அசைத்தாள்.

"அ... எ... என்னண்ணி?"

"காப்பி குடிக்கலே?"

"நீங்கதான் தரவேயில்லையே!"



"தரலியா? இதோ பார்... ஆறிப்போய்க் கிடக்கிறதை? அரை மணி நேரம் முன்னாடி உன் கையிலே கொடுத்துட்டுப் போனதுகூட ஞாபகம் இல்லேன்னா... என்னாச்சு உனக்கு?"

"ஒ... ஒன்னுமில்லே, அண்ணி..."

"நிச்சயமா ஏதோ இருக்கு. சொல்லு... அண்ணிகிட்டே சொல்ல மாட்டியா?"

"வந்து..."

"சொல்லும்மா."

"நான் பள்ளிக்கூடத்துக்குப் போறப்ப வர்றப்பவெல்லாம் ஒருத்தன் பின்னாலேயே வர்றான், அண்ணி. எனக்குப் பயமா இருக்கு. அம்மா, அப்பாகிட்டே சொல்லனும். எப்படிச் சொல்றதுன்னுதான் புரியலே. அம்மா கத்துவாங்க..."

"இதுக்குப் போயா கவலைப்படுறே? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். பலாப்பழத்துல ஈ மொய்க்கிறது ஆச்சரியமானதா என்ன? பொண்ணுங்கன்னா பசங்க பின்னாடியே சுத்தத்தான் செய்வானுங்க. அதுவும் உன்னை மாதிரி தேவதைங்க பின்னாடிச் சுத்தாம இருந்தாதான் ஆச்சரியம்.

"நான் படிக்கிறப்ப எனக்கும் இந்த மாதிரி அனுபவங்கள் உண்டு. எதையும் கண்டுக்கக் கூடாது. இதைப் போய் அத்தை கிட்டேயும், மாமாகிட்டேயும் சொன்னா என்னாகும்? இன்னையோடு படிப்புக்குக் கும்பிடு போட வேண்டியதுதான்!"

"ஐயோ..."

"அத்தைக்கு நீ படிக்கப் போறதே பிடிக்கலே. வசமா ஒரு காரணம் கிடைச்சிருச்சேன்னு உன்னை நிப்பாட்டிடுவாங்க.

மாமாவும், பிரச்சினை வேண்டாமேன்னு, உன்னை மேற்கொண்டு படிக்க வைக்கிற எண்ணத்தைத் தூக்கிக் குப்பையிலே போட்டுட்டு, வர்ற வரனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து மாமியார் வீட்டுக்கு அனுப்பிடுவார்!"

"அப்ப நான் என்னதான் பண்ணுறது, அண்ணி?"

"உன் கவனமெல்லாம் படிப்புல இருக்கட்டும். உன் பின்னாடி நூறு பேர் படையெடுத்து வந்தாலும் கண்டுக்காதே. ஏறிட்டுப் பார்க்காதே! அப்புறம் அவனுங்களே அலுத்துச் சலித்துப் போயிடுவானுங்க!"

"ஆமாண்ணி... நீங்க சொல்றதுதான் சரி!" என்றவளின் முகம் தெளிவடைந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை!

குளித்து முடித்த நளினி, மொட்டை மாடியில் கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

யதேச்சையாகத்தான் பார்த்தாள், அவனை.

தெரு முனையில் ஒரு மரத்தடியில் சாய்ந்தபடி, இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'பைத்தியக்காரன்!' கோபமாய் முறைத்துவிட்டுக் கீழே சென்று விட்டாள்.

இது தொடர்ந்தது.

காலையில் பள்ளிக்குச் செல்லும் போதும், வீடு திரும்பும் போதும் பின் தொடர்வது, இதை ஏதோ கடவுள் இட்ட கட்டளையைப் போல் செய்தான்.

தோழிகளும் அவனைக் கவனித்து விட்டனர்.



"யாருடி இவன்? இப்பல்லாம் பூனைப்படை மாதிரி நம்ம கூடவே வர்றான்?"

"இவனா? பேரு முகுந்தன். எங்க அத்தை வீட்டுக்குப் பக்கத்து வீட்டுலே இருக்கிறான். அவ்வளவுதான் தெரியும்," என்றாள் சங்கரி.

"பார்க்க ஆள் அழகா வாட்டசாட்டமாதான் இருக்கிறான்! நம்மல்ல யாருக்கோ பிராக்கெட் போடுறான். யாரா இருக்கும்?" இன்னொருத்தி சந்தேகத்தைக் கிளப்பினாள்.

"நம்ம கூட்டத்தில் பளிச்சின்னு, அழகா அவனுக்கு ஏத்த மாதிரி இருக்கிறது நளினிதானே! ஏய் நளினி... நான் சொல்றது சரிதானே?"

"ரொம்ப அவசியமானீ பேச்சா இது? எனக்குப் பிடிக்கலே. மெனக்கெட்டு அவனைப் பற்றிப் பேசிக்கிட்டு வர்றது! இன்னும் ரெண்டு வாரத்துல பரீட்சை வருது. உருப்படியா படிக்கிற வழியைப் பாருங்க!" எரிந்து விழுந்தாள், நளினி.

"ஏன்டி கோபப்படுறே? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். உன் அழகுக்கும், உங்கப்பாவோட செல்வாக்குக்கும், மந்திரியோட மகன் மாப்பிள்ளையா வந்தாக்கூட ஆச்சரியமில்லே. இவனெல்லாம் உன் வீட்டுக் காரை ஓட்டக் கூட தகுதியில்லாதவன்!" மகாலட்சுமி அவளைச் சமாதானப்படுத்தும் விதமாகப் பேசினாள்.

இதெல்லாம் முகுந்தன் காதில் விழாமலில்லை.

'பேசுங்கடி... பேசுங்க. இந்தப் பிறவியில் அவளுக்கு நான்தான் கணவன். அதை யாரால் மாத்த முடியும்?'

நளினி அவனை ஏறிட்டுப் பார்ப்பதில்லை. வெகுவாய் அலட்சியப்படுத்தினாள்.





இதற்கு மேலும் அவளிடம் பேசாமலிருப்பது தவறு என்று புரிந்தது, அவனுக்கு!

அன்று மாலை!

உடன் வந்த தோழிகள் பிரிந்து சென்றுவிடத் தனியே நடந்தாள், நளினி.

"நளினி!"

குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அவன்தான்.

"நான் உன்கிட்டே பேசணும்!"

64805

"என்கிட்டே என்ன பேசணும்?"

"அவசரப்படாதே... கோபப்படாதே! எனக்குப் பணக்கார வீட்டுப் பொண்ணுங்கன்னாலே பிடிக்காது. திமிர் ஆணவம் அகங்காரம் எல்லாமே இருக்கும். ஆனா உன்கிட்டே அதீதமான அழகோட, மென்மையான இரக்க குணமும் இருப்பதைப் பார்த்து அசந்து போயிட்டேன்.

"அன்னைக்கு ஒரு பிச்சைக்காரனுக்குப் பத்து ரூபா போட்டியே. அதுலே எனக்கே உடன்பாடில்லே. கை, கால் நல்லா இருக்கிறவனுக்குப் பிச்சை போட்டு ஊக்கப்படுத்தக் கூடாது. ஆனாலும், பசின்னு வந்து நின்னவனுக்கு எதைப் பற்றியும் யோசிக்காம உதவி செய்த உன் குணம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு, நளினி!" மென்மையாய் அவன் பேசிய விதம் எந்தப் பெண்ணையுமே ஈர்த்து விடும்.

"ரொம்ப நன்றி!" பட்டென்று கூறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல், விறுவிறுவென்று சென்று விட்டாள்.

முகுந்தன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.



## 10

"சொன்னாக் கேளக்கா... வீட்டுல ஏற்கெனவே அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி எல்லாருமே எனக்குப் பிறந்த நாளுக்காகத் துணி எடுத்து வச்சிருக்காங்க. நீ வேற எதுக்காக எடுக்கிறே?" என்றாள், நளினி.

ஜோதியின் அழைப்பிற்கிணங்க அவள் வீட்டிற்கு வந்திருந்தாள், நளினி.

64805

அவளோ, அந்த ஊரிலேயே பிரபலமான துணிக்கடைக்குத் தங்கையை அழைத்து வந்து விட்டாள்.

"நல்லா இருக்கு நீ சொல்றது! எனக்கிருக்கிறதோ, நீ ஒரே தங்கை. நல்ல நாள், பண்டிகைன்னு ஒரு துணி எடுத்துத் தர எனக்கு உரிமை இல்லையா என்ன? நான் விட்டாலும் உங்க மாமா சும்மா விடமாட்டார். அக்கா கணவனுக்கு இல்லாத உரிமை, கூடப் பொறந்த அண்ணனுக்குக் கூட இல்லை... புரிஞ்சுக்க. சும்மா தொணதொணன்னு பேசாம உனக்குப் பிடிச்ச துணியா சொல்லு! நல்ல பட்டுப் பாவாடைத் துணிகளை எடுத்துப் போடுங்க!" கனத்த உடம்பும், பாதி உடம்பைப் போர்த்தியிருந்த நகைகளுமாய், கடைக்காரர் இழுத்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்தாள், ஜோதி.

"சொன்னா கேக்கவா போறே? அதோ அந்த மயில் நிறப் பாவாடையை எடுத்துப் போடுங்க!"

"அது வேண்டாம்... பார்டர் சின்னதா இருக்கு. இப்ப கல்யாணம் வேண்டாம், படிக்கப் போறேன்னு சொன்னியாமே... அம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்க. நிறைய வரன் வருதாமே... நல்லதாப் பார்த்துப் பண்ணிக்கோயேன், நளினி."

"அம்மா பெத்த மூணு பொண்ணுகள்ல நான் ஒருத்தியாவது நிறையப் படிச்சுப் பட்டம் வாங்கணும்னு நினைக்கிறேன். அது

தப்பாக்கா? எனக்கு இப்ப கல்யாணத்துல வெள்ளை ஆர்வமில்லேக்கா. பண்ணிக்க மாட்டேன்னு சொல்லலியே. மூணு நாலு ஆண்டு கழிச்சு, பண்ணிக்கிறேன்னுதானே சொல்றேன். அந்தப் பச்சை நிறத்தைக் காட்டுங்க."

"நீ சொல்றதும் சரிதான். படிப்பறிவு பொண்ணுங்களுக்கு அவசியம். ஆம்பளைங்க பண்ணுற தப்பைக் கண்டு பிடிக்கவாவது படிக்கணும். நான்தான் மக்கு மாதிரி இருந்துட்டேன். 'பில்' போடுங்க. நீ இங்கேயே இரு— இதோ வந்துடறேன். எனக்கு ரெண்டு ஜாக்கெட் துணி எடுத்துக்கிறேன்!" என்று எதிர்ப் பக்கம் சென்றாள்.

அடுத்த நிமிடம்...

"சார்... அந்தச் சேலையை எடுங்க!" வெகு பக்கத்தில் ஒரு ஆண் குரல். அதுவும் அறிமுகமான குரல் கேட்க, திரும்பினாள்.

முகுந்தன்தான் நின்றிருந்தான்.

கடைக்காரர் சேலையை எடுத்துப் போடத் திரும்ப, சட்டென்று அவளைப் பார்த்துப் புன்னகைத்த முகுந்தன், "ஐ லவ் யூ!" என்றான்.

"ராஸ்கல்!" முறைத்துவிட்டு அக்கா இருந்த இடம் நோக்கிச் சென்று விட்டாள்.

முகுந்தன் சிரித்தபடி நகர...

"சார்... சேலை பார்க்கலியா?"

"கூடிய சீக்கிரம் என் மனைவியோடு வந்து அவ விருப்பப் பட்ட சேலையை எடுக்கிறேன்!" நளினியைப் பார்த்தபடி, அர்த்தம் பொதிந்த சிரிப்புடன், கூறிவிட்டு வெளியேறினான்.



"ஒரு நிமிடம் நில்லு, நளினி."

எதிரே வழிமறித்து நின்ற முகுந்தனை வெப்பத்துடன் பார்த்தாள்.

"என்ன இது அநாகரீகம்? நீங்க என்னைப் பின்தொடர் வதும், வழி மறித்துப் பேசுவதும் எனக்கு பிடிக்கலை."

"பொய் சொல்லாதே... உனக்கு என்னைப் பிடித்திருக்கிறது. இல்லேன்னா... அன்னைக்கு கடையில் 'ஐ லவ் யூ' சொன்ன போது, உன் அக்காவிடம் சொல்லி என்னைக் கண்டிச்சிருப்பே! ஏன் செய்யலே? உனக்கே தெரியாம என்னை நீ காதலிக்கிறதால."

"மண்ணாங்கட்டி! காட்டிக் கொடுத்திருப்பேன். கடைக் காரங்களும் உன்னைச் செமத்தியா கவனிச்சிருப்பாங்க. எங்கப்பா உன்னை ஜெயிலுக்கு அனுப்பி இருப்பார். ஆனா, யாருக்கு அசிங்கம்? எனக்குத்தானே!

"கேவலம் ரோட்டுல திரியற பொறுக்கிப் பயலெல்லாம் என்னைக் காதலிப்பதாக என்கிட்டேயே வந்து சொல்றது நல்ல குடும்பத்துல பிறந்த எனக்கு அசிங்கம்தானே! இதோ பார்! பகல் கனவெல்லாம் காணாதே! இனி என் பின்னாடி வந்து தொல்லை கொடுத்தால் சும்மா இருக்க மாட்டேன்... ஜாக்கிரதை!" சுட்டுவிரலை நீட்டி எச்சரித்து விட்டு விரைந்து சென்று விட்டாள், நளினி.

முகுந்தன் வெகு நேரம் அவள் முதுகையே வெறித்தபடி நின்றிருந்தான்.

'பொட்டை நாயே... இதுநாள் வரைக்கும் பந்தயத்துல அஞ்சாயிரம் ரூபாய் ஜெயிக்கணும்ங்கிறதுக்காக, உன்னைப் படிய வைக்க முயற்சித்தேன். ஆனா, இப்ப முடிவே



பண்ணிட்டேன். நீதான் என் மனைவி. உன் சொத்துக்கும் சொந்தக்காரன் நான்தான். முகுந்தனை யாருன்னு உனக்குத் தெரியாது. புரிய வைக்கிறேன், சீக்கிரமே!'

வகுப்பில் ஆங்கில ஆசிரியை சொல்லிக் கொண்டிருந்த குறிப்புகளை மாணவிகள் எழுதிக் கொண்டிருந்தனர். நளினியும் கவனமுடன் எழுதினாள். பக்கத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்த வானதியை எதேச்சையாகப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

காரணம், அவள் எழுதிக் கொண்டிருந்தது, தமிழில்.

"ஏய்... என்ன எழுதுறே?"

வானதி சட்டென நோட்டை மூடி மறைக்கப் பார்த்தாள்.

"ஒ... ஒண்ணுமில்லே..."

"என்கிட்டேயே மறைக்கிறியா?"

"உஷ்... இப்ப என்னை எதுவும் கேக்காதே. டீச்சர் பார்க்கிறாங்க. வகுப்பு முடிஞ்சதும் சொல்றேன்," என்றாள், பதற்றமாக.

வகுப்பு முடியும்வரை காத்திருந்து மறுபடி கேட்டாள்.

"அ... அது... காதல் கடிதம்!"

"காதல் கடிதமா? நீயா? என்ன வானதி இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுறே?"

"காதலிக்கிறது மகாப் பாவமான செயலா என்ன? நான் அவரையே கல்யாணம் பண்ணிக்கணும்னு முடிவு பண்ணிட்டேன். படிப்பு முடிஞ்சதும் வீட்டுல சொல்லி..."

"என்னவோ செய்..." என்றாள், சுசப்பாய்.



"நளினி... எனக்கொரு உதவி செய்வியா?"

"உதவியா?"

"ஆமாம்... என் கையெழுத்து ரொம்ப அசிங்கமாக இருக்கும்னு உனக்கே தெரியும். அதனால எனக்காக நீ ஒரு கடிதம் எழுதிக் கொடு!"

"சீச்சீ... என்ன உளறுறே நீ?" பதறினாள்.

"மாட்டேன்னு சொல்லிடாதே, நளினி. நான் எழுதி வச்சிருக்கிறதைப் பார்த்து அப்படியே எழுதிக் கொடு!" கெஞ்சினாள்.

"ஐயோ... நான் மாட்டேன்!"

"பிளீஸ், நளினி... நான் உன் தோழிதானே! எனக்காக இந்த உதவியைச் செய்யக் கூடாதா?"

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

எப்படியோ... நளினியைத் தலையசைக்க வைத்து விட்டாள், வானதி.

## 11

"நாளைக்குப் பரீட்சை. நினைச்சாலே பயமாயிருக்கு!" என்றாள், சங்கரி.

"ஒழுங்கா படிச்சா எதுக்குப் பயம்?"

"உனக்கென்ன, நளினி? கற்பூரப் புத்தி. போதாததுக்கு சாப்பிட்ட தட்டை எடுத்துப்போட ஆள், கை கழுவிவிட ஆள்னு ஒரு வேலையும் இல்லே. அதனால படிப்புல புலியா இருக்கே. நாங்க அப்படியா? வீட்டு வேலையும் செய்துக்கிட்டு, படிக்கவும் செய்யணும்னா, எப்படி முடியும்?"

"எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். படிப்பு மேலே ஆர்வமிருந்தா எந்தச் சூழ்நிலையிலேயும் படிக்கலாம்."

"சொல்வது எளிது! சரி... நாங்க வர்றோம்!"

நளினி தனியே நடக்கத் தொடங்கினாள்.

இரண்டு நிமிடம்தான் நடந்திருப்பாள்.

அவன் எதிரே வந்து நின்றான் - முகுந்தன்.

எரிச்சலுடன் அவனைப் பார்த்த நளினி, விரைந்து நடக்க முற்பட்டாள்.

"ரொம்ப நன்றி, நளினி!" என்றான்.

புரியாமல் விழித்தாள்.

"நன்றியா?"

"ஆமாம்!"

"எதுக்கு?"

"நீ என்னைக் காதலிக்கச் சம்மதித்ததற்கு."

"நான் உன்னை...? என்ன உளறுறே?"

"என்ன நளினி... அதுக்குள்ளே மறந்துட்டே? உருகி உருகி நீ எனக்குக் கடிதம் எழுதலே?"

"இதோ பாரு! நீ என்கிட்டே வரம்பு மீறிப் பேசிக்கிட்டிருக்கே... வழியை விடு!"

"ஏன் இப்படி பேசுறே? மறந்துட்டியா? இந்தா, நீ எனக்கு எழுதிய கடிதம்!"

"நான்... உனக்கு...?"



அதிர்ச்சியுடன் அவன் நீட்டிய கடிதத்தை வாங்கிப் படித்தாள்.

"என்னுயிர் முகுந்தனுக்கு!

என்னால் ஒரு நிமிடம் கூட உங்களைப் பிரிந்திருக்க முடியவில்லை. உங்களைச் சேரும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். தினமும் நாம் தனிமையில் சந்தித்தாலும், எப்போதும் உங்களுடனே இருக்கத் தோன்றுகிறது. எங்கள் வீட்டில் சம்மதித்தாலும், சம்மதிக்கா விட்டாலும் நான் உங்களைத்தான் மணப்பேன். அதற்காக, என் சொந்த பந்தங்களை உதறிவிட்டு வரவும் தயாராய் இருக்கிறேன்.

நாம் தினமும் சந்தித்துக் கொண்டாலும், ஏன் கடிதம் எழுதுகிறேன் தெரியுமா? எப்போதும் உங்களையே நினைத்துக் கொண்டிருப்பதால்தான்.

மீதி நேரில்.

காதல் கலந்த<br>
அன்பு முத்தங்களுடன்<br>
உங்கள் நாயகி<br>
**நளினி."**

"இல்லை..." படித்துவிட்டு அலறி விட்டாள்.

அவன் சிரித்தான்.

"இதை நான் வானதிக்காக அல்லவா எழுதினேன்? இதில் எப்படி உன் பெயரும், என் பெயரும் வந்தது? நான் எழுதவில்லையே!"

"இதை நீ வானதிக்காக எழுதினாய். வானதி அவள் காதலனிடம் கொடுத்தாள். உன் கையெழுத்தைப் பார்த்து என்



பெயரையும், கடைசியில் உன் பெயரையும் மாற்றி எழுதுவது பெரிய காரியமா என்ன...?"

நளினி சட்டென அக்கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தாள்.

முகுந்தன் மீண்டும் சத்தம் வராமல் சிரித்தான்.

"எத்தனை சினிமாவில் இதே காட்சி வந்திருக்கிறது? நான் என்ன அவ்வளவு பெரிய முட்டாளா? உன்னிடம் கொடுத்தது நகல். அசல் என்னிடம் பத்திரமாய் இருக்கிறது."

"என்ன உன் திட்டம்? எதற்காக இப்படி என் உயிரை வாங்குகிறாய்?"

"பரவாயில்லையே! எளிதில் புரிந்து கொண்டு விட்டாயே! எனக்கு நீ வேண்டும்... என் காதலியாக... மனைவியாக வேண்டும்."

"உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நான் யார்? என் குடும்பப் பின்னணி என்ன? உன்னைப் போய்... சே... நினைக்கவே குமட்டுகிறது. கற்பனை பண்ணிப் பார்க்கக்கூட உனக்குத் தகுதி இல்லை. மரியாதையாய் அந்தக் கடிதத்தைக் கொடுத்து விடு!"

"கொடுக்கா விட்டால்?"

"என் அப்பா யாரென்று உனக்குத் தெரியும். சொன்னால் நீ உயிருடனே இருக்க மாட்டாய்."

"என் உயிரே போனாலும் பரவாயில்லை என்று இந்தக் கடிதத்தைப் பெரிதாக அடித்து ஊரெங்கும் ஒட்டினால்... என்னாகும்?" நிதானமாய்க் கேட்டான்.

'திக்'கென அதிர்ந்தாள்.



"தயவு செய்து... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்... என் வழியில் குறுக்கிடாதே. அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடு. எனக்குப் பயமாக இருக்கிறது!" அழத் தொடங்கினாள்.

"சேச்சே... அழாதே நளினி! உன்னை அழ வைப்பதல்ல என் நோக்கம். உன் மேல அளவுக்கு அதிகமாய் நேசத்தை வைத்து விட்டேன். அதனால்தான் கொஞ்சம் கடுமையாய் நடந்து கொண்டேன். காதல் தானாக வர வேண்டும். வற்புறுத்தி வரவைக்க முடியாது. உன்னை அழ வைத்து எந்த இன்பத்தையும் பெறுவதில் எனக்கு விருப்பமில்லை. சரி... அந்தக் கடிதத்தை உன்னிடம் கொடுத்து விடுகிறேன்."

நளினியின் முகம் மலர்ந்தது.

"ரொம்ப... ரொம்ப நன்றி! கொடு..." ஆவலுடன் கையை நீட்டினாள்.

"இப்போது என்னிடமில்லை!"

"பின்னே?"

"என் நண்பனிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். நாளை காலையில்தானே உனக்குப் பரீட்சை? எழுதி முடித்துவிட்டு மதியம் வா! தருகிறேன்."

"இல்லை... நான் எங்கும் வர மாட்டேன். இங்கேயே கொண்டு வந்து கொடு!"

"இதோ பாரு! உன் காதல் எனக்குக் கிடைக்கவில்லை யேங்கிற வருத்தத்தில் இருக்கிறேன். ஒரு நண்பனாகக் கூடவா என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாய்?"

"அது வந்து...!"

"என்னை மேலும் வெறுப்பேற்றாதே! போனால் போகட்டுமென்று கடிதத்தைத் தர ஒப்புக் கொண்டேன். மேலும் வீம்பு பிடித்தால் என் மனசு மாறலாம். கடிதம் போஸ்டராய் மாறிச் சுவர்களில் அரங்கேறலாம்..."

"இல்லை... அப்படியெல்லாம் செய்துவிடாதே... நீ சொன்ன இடத்திற்கே வந்து விடுகிறேன்."

"இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். புத்திசாலித்தனமாய்ச் செய்வதாய் நினைத்துக் கொண்டு கூடவே உங்க அப்பாவையோ, உங்க அண்ணனையோ அழைச்சிட்டு வந்தால் என் உயிரே போனாலும் பரவாயில்லையென்று போஸ்டர் அடிக்க ஒட்டிடுவேன்!"

"இல்லை... யாரையும் அழைச்சிட்டு வர மாட்டேன்," என்றாள், அவசரமாக.

அவளால் தேர்வு கூடச் சரிவர எழுத முடியவில்லை. படித்ததையெல்லாம் மறந்துபோக... உடம்பெங்கும் ஒருவிதக் கிலியுடன் எழுதி முடித்துவிட்டு முகுந்தன் சொன்ன இடத்திற்கு வந்தாள்.

அது அவன் நண்பனின் வீடு. சாதாரண ஓடு வேய்ந்த வீடுதான். நண்பனைத் தவிர, குடும்பத்தினர் அத்தனை பேரும் திருப்பதி சென்றிருந்தனர். நண்பனையும் வெளியே அனுப்பிவிட்டு முகுந்தன் மட்டும் இருந்தான்.

நளினியைப் பார்த்ததும் முகம் மலர வரவேற்றான்.

"வா... நளினி!"

"எனக்கு நேரமில்லே... சீக்கிரம் அந்தக் கடிதத்தைக் கொடு!"

"என்ன அவசரம்? என்னை உன் நண்பனாகக் கூட நினைக்க மாட்டாயா?"



"ம்..."

"அப்படியானால் ஒரு அஞ்சு நிமிடம் உட்காரு!"

உட்கார்ந்தாள்.

"இதைக் குடி!" பிளாஸ்க்கில் இருந்த காப்பியை ஊற்றிக் கொடுத்தான்.

"வே... வேணாம்!"

"இந்தப் பிடிவாதம் எனக்குப் பிடிக்காதென்று உனக்கே தெரியும்!" என்றான், எரிச்சலுடன்.

வேறு வழியின்றி அதை வாங்கிப் பருகினாள்.

"இப்பதான்... உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!"

"எ...என்ன சொல்றே?" கேட்கும்போதே தலை சுற்றியது. நளினிக்கு.

முகுந்தன் எழுந்து சென்று கதவை உள் தாழிட்டான்.

## 12

"ஏய்... ஏய்... ஏன் கதவை... சாத்..." அதற்கு மேல் பேச முடியாமல் மயங்கிச் சரிந்தாள், நளினி.

முகுந்தன் அவளருகே வந்தமர்ந்தான்.

இளமை பொங்கும் தேகம். மயங்கி விழுந்ததில் தாவணி விலகி அங்கங்கள் 'பளிச்'சென்று விழிக்க, ஒரு மிருகத்தின் பசியோடு கண்கள் அவளை அளவெடுக்க... தாங்க முடியாத தாபத்தோடு அவள் தாவணியை உருவி எறிந்தான்.



தொலைக்கக் கூடாததைத் தொலைத்துவிட்டுத் தளர்ந்த நடையுடன் நடந்தாள், நளினி.

கண்களிலிருந்து கண்ணீர் நிற்காமல் பொங்கிக் கொண்டிருந்தது.

'எப்படி எளிதாய் ஏமாந்து போனேன்! அவன் திட்டம் போட்டு வரவழைத்து, காப்பியில் மயக்க மருந்து கலந்து கொடுத்து இருக்கிறான். அது தெரியாமல் குடித்து எல்லாவற்றையும் இழந்து விட்டேனே! கடிதத்தையும் பறிகொடுத்து, கற்பையும் பறிகொடுத்து... ஐயோ... வீட்டில் தெரிந்தால் என்னாகும்? அப்பாவால் இனி வெளியில் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா? அவன் மிரட்டலுக்குப் பயந்து முதலிலேயே வீட்டில் சொல்லாதது பெரும் தவறு!

இனி என்ன செய்யப் போகிறேன்? அவன் என்ன சொன்னான்? உன்னைக் கற்பனை செய்யக்கூட எனக்குத் தகுதி இல்லை என்றாயே! இப்போது உன் கற்பையே சூறையாடி விட்டேனே! நான் உன்னைக் காதலித்ததையே... குமட்டுகிறது என்றாயே! உன்னை முழுதாய்ச் சுவைத்து விட்டேனே... இதற்கென்ன செய்யப் போகிறாய்? இந்தப் பிறவியில் நீ முகுந்தனின் மனைவி! அதை யாராலும் மாற்ற முடியாது. உன் வீட்டில் சம்மதித்துப் பண்ணினாலும் சரி, எங்கேயாவது ஓடிச்சென்று பண்ணிக் கொண்டாலும் சரி... நான்தான் உன் கணவன் என்றானே! அவன் என் கணவனா? ஐயோ!'

எப்போது, எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது.

"ஏன்டி, இவ்வளவு தாமதம்?" அவளுக்காகக் காத்திருந்த அம்பிகை, வந்ததும் வராததுமாய்க் கேள்வி கேட்டாள்.



"அ... அது...வந்து..."

"ஏன் ஒரு மாதிரியா இருக்கே? கண்ணெல்லாம் சிவந்திருக்கு. அழுதியா என்ன?"

"அட... நளினி... வந்துட்டியா? பரீட்சை நல்லா எழுதினியா?" பத்மா வந்தாள்.

"இவளைப் பாரேன், பத்மா! என்னவோ மாதிரி இருக்கா... முகமெல்லாம் வீங்கிப் போயிருக்கு. கேட்டா ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறா. என்னன்னு கேளு...!"

"ஆமாம்... முகம் வெளுத்து... வித்தியாசமாகத்தான் இருக்கா!"

பத்மா வியப்புடன் நாத்தனாரின் கன்னத்தைத் தொட்டாள்.

"என்ன நளினி?"

அவ்வளவுதான்!

"அண்ணி...!" என்று கதறியபடி அவள் தோளில் சாய்ந்து அழுதாள்.

"இவ ஏன் இப்படி அழுறா? எனக்குப் பயமா இருக்கு பத்மா... அடிப்பாவி... எதுவா இருந்தாலும் சொல்லிட்டு அழுடி..." பதறினாள், அம்பிகை.

"அத்தை... நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க. நளினி... இங்கே பாரும்மா... என்ன பிரச்சினை? அண்ணிகிட்டே சொல்லும்மா...!"

'சொல்லலாமா? குப்பையில் கிடக்கும் எச்சில் இலையாய்த் தானும் எச்சிலாகிப் போனதைச் சொன்னால் என்னாகும்? அம்மா இருக்கும் பதற்றத்தில் என்னைக் கொளுத்தி விடுவாள்.

நான் சாவது இருக்கட்டும். அதிர்ச்சி தாங்காமல் [illegible] இறந்துவிட்டால்...? ஐயோ! வேண்டாம்... சொல்லக்கூடாது... சொல்ல மாட்டேன்...'

"வாயைத் திறக்கிறாளா பாரேன்...!"

"இருங்க அத்தை... அவளே சொல்லுவா...! ஏம்மா பரீட்சை சரியா எழுதலியா?"

"ஆ...ஆமாண்ணி!" விக்கி விக்கி அழுதாள்.

"அட ச்சே... இதுக்குப் போயா, இந்த ஆர்ப்பாட்டம்! எதெதுக்கு அழுது தொலைக்கிறதுன்னு விவஸ்தையே இல்லையே! நான் என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேன்!" அம்பிகை திட்டியபடி அங்கிருந்து சென்றாள்.

"ஏம்மா... சாதாரண விஷயம்! இதுக்குப் போய் இப்படி அழுவாங்களா? அரைப் பரீட்சைதானே? முழுப் பரீட்சையிலே நூற்றுக்கு நூறு வாங்குவே. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. முகத்தைக் கழுவிட்டு வா! சாப்பிடலாம்..."

"இல்லேண்ணி... எனக்கு வேணாம்..."

'சாதாரண விஷயமா? என் தலையிலே நானே மண் அள்ளிப் போட்டுக்கிட்டேன், அண்ணி...'

"வேணாம் அண்ணி... இப்ப எனக்கு எதுவும் வேணாம்... தலை வலிக்குது... நான் தூங்கணும்."

"சரி... போய்ப் படுத்துக்க!"

என்றவள் நளினியைக் கவலையாய்ப் பார்த்தாள்.

படிப்பில் படுசுட்டியான நளினி தேர்வுகளைச் சரிவர எழுத முடியாமல் திணறினாள். படித்த பாடங்கள் மறந்து



[illegible] அன்று நடந்த சம்பவமே நினைவில் முட்டி மோதிக் [illegible]தது. முகுந்தனின் வியர்வை, தன் உடம்பெங்கும் [illegible] கொண்டிருப்பது போல் அருவருப்பாய் இருந்தது.

எப்போதும் பட்டாம்பூச்சி போல் சிறகடித்துப் பறந்த நளினி, சிறகு பிய்க்கப்பட்டவளாய் இருந்த இடமே தெரியாமல் முடங்கிப் போனாள்.

படிப்பில் இருந்த நாட்டம் சுத்தமாய்க் காணாமல் போனது.

பள்ளிக்குப் போவதே பாகற்காயாய்க் கசந்தது. அந்தப் படுபாவியின் கண்ணில் பட்டு விடுவோமோ என்கிற பயம் வேறு. ஆனால், தேர்வு முடிகிறவரை அவனது கண்ணில் படவேயில்லை. அதுவே கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது.

"முன்னே மாதிரி இல்லை நீ! ஏன் எப்பவும் சோர்வா இருக்கே? இந்தப் பரீட்சை சரியா எழுதலேன்னா என்ன? விட்டதையும் சேர்த்து அடுத்ததுல பிடிச்சுட மாட்டியா என்ன?" நாத்தனாரைக் கனிவுடன் தேற்றினாள், பத்மா.

'விட்டதையா? பிடிச்சுட முடியுமா என்ன?'

"ஊகூம்.. எனக்கு இப்ப படிக்கப் பிடிக்கலே, அண்ணி... இந்த ஆண்டு படிப்போட நிறுத்திடப் போறேன்!"

"ஏம்மா...?" என்றாள் அதிர்ச்சியாய்.

"பிடிக்கலை... அவ்வளவுதான்!"

அந்த சூழ்நிலையில் முகுந்தனைத் தவிர்ப்பதற்குத் தற்காலிக வழி அது மட்டும்தான் என்று முடிவு செய்தாள்.

"என் பொண்ணுக்கு இப்பதான் புத்தி தெளிஞ்சிருக்கு. வந்திருக்கிற வரன்ல ஒண்ணை நல்லதா பார்த்து முடிச்சிட வேண்டியதுதான்!"





அம்மாவின் பேச்சு காதில் விழ, துடித்துப் போனாள் நளினி.

'கடவுளே... கல்யாணமா? எனக்கா? என்ன செய்யப் போகிறேன் நான்?'

ஒரு வழியும் புலப்படாமல் தவித்துப் போனாள்.

தேர்வு முடிந்து விடுமுறை விடப்பட்டது.

வீட்டில் அப்பாவின் தலை தெரிந்தாலே நத்தையைப் போல் பதுங்கிக் கொள்வது வாடிக்கையாயிற்று.

வியாபாரத்தை விஸ்தரிக்கும் பணியில் இருந்ததால் அவருக்கும், பாஸ்கருக்கும் நளினியைக் கவனிக்க முடியாமல் போனது. அது நளினிக்கு நிம்மதியைத் தந்தது.

விடுமுறை முடிந்து பள்ளி திறக்கப்பட்டது.

முகுந்தன் பள்ளி வாசலில் நிற்கத் தொடங்கினான்.

அவனைப் பார்த்தாலே உடம்பெங்கும் ஒரு வித நடுக்கம் பற்றிக் கொண்டது.

ஓட்டமும் நடையுமாய் நடப்பாள்.

ஆனால், முகுந்தன் அவளது பள்ளி வாசலில் நிற்பதோடு சரி... பின் தொடர்வதில்லை.

நாட்கள் கடந்தன.

காலையில் எழும்போதே தலையைச் சுற்றிக் கொண்டு வர, நெஞ்சுவரை குமட்டிக் கொண்டு வந்தது.

கழிவறைக்குள் ஓடினாள்.

முன் தினம் சாப்பிட்டதையெல்லாம் வாந்தி எடுத்தாள்.



## 13

பள்ளியின் மைதானத்திலிருந்தே பார்த்து விட்டாள், நளினி.

முகுந்தன், நண்பர்களுடன், வாசலில் நின்றிருந்தான்.

"நீங்கல்லாம் போங்க... எனக்கொரு சந்தேகம். கணக்கு டீச்சர்கிட்டே பேச வேண்டி இருக்கு." என்றாள், தோழிகளிடம்.

"பரவாயில்லை... பேசிட்டு வா... காத்திருக்கிறோம்."

"ரொம்ப தாமதமாகும். நீங்க போங்க."

"என்னமோ போ... நீ முன்னே மாதிரி இல்லே! எப்பவும் ஏதோ யோசனையிலேயே இருக்கிறே... சரியாப் பேச மாட்டேங்கிறே..."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே... நான் டீச்சரைப் பார்க்கப் போறேன்."

தோழிகளின் பதிலுக்குக் காத்திராமல் ஆசிரியைகள் ஓய்வெடுக்கும் அறையை நோக்கி நடந்தாள்.

தோழிகள் குழாம் போய்விட்டதா என்று மறைந்திருந்து பார்த்துவிட்டு, திரும்ப வாசல் நோக்கி வந்தாள்.

இளங்கோ கவனித்து விட்டான்.

"மச்சான்... நம்ம பக்கமா நளினி வர்றாடா..."

முகுந்தன் இதழில் இளநகை பொங்கச் சங்கரை அலட்சியமாய்ப் பார்த்தான்.

நளினி நெருங்கி வந்தாள்.

"நான் உன்கிட்டே பேசணும்... தனியா பேசணும்," என்றாள்.

"போ... பின்னாலேயே வர்றேன்."

போனாள்.

"இப்ப என்னடா சொல்றே? பந்தயம் கட்டினியே... ஜெயிச்சேனா, இல்லையா?" எகத்தாளமாய்க் கேட்டான் முருந்தன்.

"என்னால நம்பவே முடியலேடா! எப்படிடா அவ மனசை மாத்தினே? ரொம்ப நல்ல பொண்ணாச்சே!"

பணத்தைத் தோற்றுவிட்டதை விட நளினியின் எதிர்கால வாழ்க்கையை நினைத்துத்தான் கவலைப்பட்டான், சங்கர்.

"எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்துட்டா, நீயும் காதலில் குருவாயிடுவே. பணத்தைத் தயார் பண்ணி வை! அவ கூப்பிடுறா. போயிட்டு வந்திடுறேன்." விஷமமாய்க் கண்ணடித்துச் சிரித்துவிட்டு நகர்ந்தான்.

"என்ன நளினி?"

"நான் உனக்கு என்ன தீங்கு பண்ணினேன்? எதுக்காக என் வாழ்க்கையிலே விளையாடினே?"

"அடடா... அது பழைய வசனம். நீயும் இதையே பேசணுமா? சரி விடு... ஏன் இப்படி இளைச்சிட்டே?"

"ஏன் கேக்கமாட்டே? நான்... இப்ப... இப்ப..."

"கர்ப்பமாயிருக்கியா?"

"......."

"ஏய்... எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி. இதைப் போய் அழுதுகிட்டே சொல்றே?"



"உனக்கு எல்லாமே விளையாட்டுதானா? எங்க வீட்டுலே தெரிஞ்சா என்னாகும்?"

"தெரியட்டுமே! நான் என்ன உன்னை அனுபவிச்சிட்டு அம்போன்னு விட்டுடுவேனா? நாளைக்கே உன் வீட்டுக்கு வந்து பொண்ணு கேக்கிறேன்."

"என் அப்பா, உன்னை மட்டுமில்லே; என்னையும் சேர்த்துக் கொன்னு போட்டு விடுவார். நீ யாருங்கிற எண்ணமாவது உனக்கிருக்கா? நீ வந்து பொண்ணு கேட்டா... 'சரி, கட்டிக் கோப்பா!'ன்னு தூக்கிக் கொடுத்துடுவாரா? என்ன பேசுறே நீ?"

"அதுக்காக... கர்ப்பத்தைக் கலைச்சிடலாம்ங்கிறியா?"

"இதுவும் நல்ல யோசனைதானே!"

"நல்ல யோசனையா? இது என் குழந்தை. எனக்கு உயிரோடு வேணும். ஏதாவது தகிடுதத்தம் பண்ணிக் கலைச்சியோ... ஊர் முழுக்க போஸ்டர் ஒட்டுவேன். ஜாக்கிரதை!"

"என்னை என்னதான் பண்ணச் சொல்றே?"

"முதல்ல அழுவதை நிறுத்து. நான் சொல்றதைக் கேளு. நீயும், நானும் கணவன் மனைவிங்கிறதை யாரும் மறுக்க முடியாது. தாலி மட்டும்தான் கட்டலே. மத்தப்படி எல்லாம் முடிஞ்சாச்சு. அந்தத் தாலியை உன் வீட்டுச் சம்மதத்தோட கட்டுறதா, இல்லே... ஓடிப்போய் யாருக்கும் தெரியாம கட்டுறதான்னு நீயே முடிவு செய்."

"ஓடிப் போறதா?"

"இல்லேன்னா... வீட்டுக்கு இப்பவே வந்து பேசவா?"

"ஐயோ..."



"எதுக்கும் ஒத்து வரமாட்டேன்னா என்ன பண்றது? கல்யாணம் பண்ணிக்காம குழந்தை பெத்துக்கிட்டா... உன் குடும்பத்துக்கே அசிங்கம். பேசாம எங்கேயாவது ஓடிப் போயிடலாம். உன் வீட்டுல கொஞ்சம் ஆத்திரப்படுவாங்க. குழந்தையோடு அவங்க முன்னாடி வந்து நின்னா, ஆரத்தி எடுத்து வரவேற்பாங்க. இதுதான் பெரியவங்களோட பலவீனம். நாளைக்கு நீ தயாரா இரு!"

மேற்கொண்டு சில யோசனைகளையும் கூறிவிட்டுப் போய்விட்டான், முருந்தன்.

நளினி என்ன செய்வதென்று புரியாமல் கண்ணீர் வடித்தாள்.

அந்த யோசனையை மறுக்கவும் முடியவில்லை. ஒதுக்கவும் முடியவில்லை.

கன்னியின் கற்பு, கண்ணாடிப் பாத்திரம் மாதிரி. உடையாதவரைதான் உயர்வு!

குடும்ப மானம் சந்தி சிரிக்கும் என்று தெரிந்தே வேறு வழியின்றி அந்தத் தவறான முடிவிற்குக் கட்டுப்பட்டாள், நளினி.

"ஏ... என்ன... என்னடி சொல்றே?"

பூஜையறையில் இருந்து வெளிப்பட்ட லெட்சுமணன் மிக மிக அதிர்ந்து போனார்.

"ஆமாங்க... நம்ம நளினியைக் காணோம்ங்க..."

"அவசரப் படாதே! மாடியிலோ, தோட்டத்திலோ, எங்கேயாவது இருப்பா... போய்ப் பாரு!"

"எல்லா இடத்திலேயும் தேடிப் பார்த்துட்டேங்க... அவ இல்லை!" அழத் தயாரானாள், அம்பிகை.

அவர்களின் பேச்சுக் குரல் கேட்டு பாஸ்கரும், பத்மாவும் வந்தனர்.



"என்னாச்சம்மா?"

"நளினியைக் காணோம், பாஸ்கர்!"

"நளினியைக் காணோமா? என்ன உளறுறீங்க?" நம்ப முடியாத மனநிலையோடு நளினியின் அறை நோக்கி ஓடினான், பாஸ்கர். அவன் பின்னே மற்ற மூவரும் சென்றனர்.

உண்மைதான். நளினி இல்லை.

பீரோ திறந்திருந்தது. அதிலிருந்த உடைகளில் பாதி இல்லை. ஒரு காகிதம் மடித்து வைக்கப்பட்ட நிலையில் கண்களில் தெரிய...

பத்மா எடுத்துச் சத்தமாய்ப் படித்தாள்.

"அன்புள்ள அப்பா, அம்மாவிற்கு!

என்னை மன்னித்து விடுங்கள். என் வாழ்க்கையில் நடக்கக் கூடாததெல்லாம் நடந்து விட்டது. என்னை முருந்தன் என்பவரிடம் பறிகொடுத்து விட்டேன். உங்கள் முகத்தில் விழிக்கக் கஷ்டமாக இருக்கிறது. உங்களுக்கு அவமானத்தைத் தேடித் தந்துவிட்டேன். எனக்கு வேறு வழி தெரியவில்லை. முருந்தனோடு இந்த ஊரை விட்டே ஓடிப் போகிறேன். என்றாவது ஒருநாள் உங்கள் கோபம் தீரும். அப்போது உங்களைத் தேடி வருவேன்!

இப்படிக்கு

நளினி."

"ஐயோ... சண்டாளி... இப்படியொரு காரியத்தைப் பண்ணிட்டுப் போயிட்டாளே... நான் என்ன பண்ணுவேன்? என் புருஷன் இனி எப்படி தெருவிலே தலை நிமிர்ந்து நடக்க முடியும்? நான் சொன்னதை யாராவது கேட்டீங்களா? அவளைப் படிக்க வைக்க வேண்டாம்னு அடிச்சுக்கிட்டேனே.

இப்ப தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டாளே... பாஸ்கர், இப்ப என்னடா பண்றது?"

"அவமானமா இருக்கும்மா... அவ மேலே எவ்வளவு பாசம் வச்சிருந்தேன்! அத்தனையும் நாசம் பண்ணிட்டுப் போயிட்டா ளேம்மா."

''அழாதீங்க!'' கணவன் கண்ணீர் விடுவதைப் பார்த்துப் பத்மாவும் அழுதாள்.

''நளினியா? அந்தக் குழந்தைக்குள் இவ்வளவு பெரிய அயோக்கியத்தனமா? சே...'' கண நேரத்தில் நளினி மீது சொல்லொணா வெறுப்பு மண்டியது, பத்மாவிற்கு.

அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த லெட்சுமணன், வியர்வையில் நனைந்திருந்தார்.

''பா... பாஸ்கர்... நளினி செ... செத்துப் போயிட்டா! என் கௌரவத்தைக் குழிதோண்டிப் புதைச்சிட்டுப் போனவ... என் பொண்ணா இருக்க முடியாது. நீ... உ... உடனே வக்கீலை அழைச்சிட்டு வா.'' திக்கித் திணறிச் சொல்லி முடித்தவர், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழுந்தார்.

## 14

உறக்கம் வராமல் நளினி புரண்டு படுத்தாள். மின்விசிறி இல்லாத ஒற்றை ஜன்னலைக் கொண்ட சிறிய அறை அது! காற்று வசதி இல்லாமல் புழுக்கமாய் இருந்தது.

பக்கத்தில் படுத்திருந்த முகுந்தனிடமிருந்து கர்ண கொடூரமாய்க் குறட்டையொலி எழுந்தது. வியர்வை நாற்றம் வேறு.



முகம் சுழித்தபடி இன்னும் சற்று விலகிப் படுத்தாள்.

டிப்டாப்பாய் உடை அணிகிறானே யொழிய, அவனுடைய பழக்க வழக்கங்கள் குமட்டிக் கொண்டு வந்தது.

முகுந்தன் சோம்பேறி. தினசரி குளிக்கும் பழக்கமெல்லாம் கிடையாது. முகத்தைக் கழுவி உடை மாற்றிக் கொள்வான். சில நாட்கள் காலையில் தாமதமாய் எழுவான். அப்போதே வயிறு கபகபவென்று பசிக்கத் தொடங்கிவிடும். அந்த நேரங்களில் பல் துலக்கக்கூட பொறுமையின்றிச் சாப்பிடுவான்.

அழுக்காய், ஒருவித வீச்சத்தோடு அவன் நளினியை அணைக்கும்போது... பல்லைக் கடித்துக் கண்களை மூடிக் கொள்வாள்.

'செத்துப் போய்விடலாமா?' என்று கூடத் தோன்றும்.

தனியாளாய் இருந்திருந்தால் அந்த முடிவிற்குப் போயிருப்பாள். ஆனால், வயிற்றிலும் ஒன்று வளர்கிறதே! முதலில் கலைத்துவிட்டால் தேவலை என்று நினைத்த அதே மனசு இப்போது முகம் தெரியாத அந்தச் சிசுவின் மேல் ஒரு பாசத்தை வளர்த்து விட்டிருந்தது. தாய் மனசல்லவா?

முகுந்தன் அவளை நாகப்பட்டினத்திலிருந்து அழைத்து வந்துவிட்டான். முன்பே ஏற்பாடு செய்திருந்த சின்னஞ்சிறு வீட்டில் வாடகைக்குக் குடியேறினான். அவன் சொன்னபடியே வரும்போது முப்பது பவுன் நகை, கொஞ்சம் பணம் என்று வீட்டிலிருந்து எடுத்து வந்திருந்தாள். அதில்தான் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தான். சமையல்கட்டுப் பக்கமே தலை வைத்துப் படுத்திராத நளினி, பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் கேட்டுக் கேட்டு ஓரளவு சமைக்கத் தெரிந்து கொண்டாள்.



'ஆனது ஆயிற்று. இனி அடித்தாலும் உதைத்தாலும் இவன்தான் கணவன். நம் மீது அன்பிருந்ததால்தானே அப்படியெல்லாம் அளவுக்கு மீறி நடந்து கொண்டான்?' என்று அவனைத் தன் மனசுக்குள் அமர வைக்கவும் முயற்சி செய்தாள். ஆனால், அவனுடைய பழக்க வழக்கமும் திமிர் பேச்சும் வெறுப்பையே தந்தன.

''குளிக்கக் கூடாதா? ரொம்ப அழுக்கா இருக்கீங்களே!'' என்பாள்.

64805

''ஏன்? உன்னைக் கட்டியணைக்கும்போது கஷ்டமா இருக்கா? 'நீயா? எனக்கா? நினைச்சாலே குமட்டுது!'ன்னு சொன்னியே! இப்ப நான் உன் கணவன். நான் எப்படி இருந்தாலும் நீ சகிச்சுக்கிட்டுதான் போகணும். நான் நினைச்சது இன்னும் நடக்கலே. அதெல்லாம் நடக்கட்டும். குழந்தை பிறக்கட்டும். அதுக்குப் பிறகு உன்னைப் புதுவித மணத்தோடு வந்து கட்டியணைக்கிறேன்!''

''குழந்தையின்னா அவ்வளவு ஆசையா உங்களுக்கு?'' ஆச்சரியமாய்க் கேட்பாள்.

''என் சொத்தே குழந்தைதானே?''

'சரி... உடம்பைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதற்கும், குழந்தை பிறப்பதற்கும் என்ன சம்பந்தம்?' குழம்பிப் போவாள்.

'வீட்டில் அம்மா- அப்பா, அண்ணன் - அண்ணி எல்லோரும் எப்படி இருக்கிறார்களோ? எவ்வளவு பெரிய அவமானத்தைத் தேடித் தந்துவிட்டேன்? என்னைப் பொத்திப் பொத்தி வளர்த்தார்களே! அன்பைக் காட்டுவதில் போட்டி போட்டார்களே! அப்படிப்பட்டவர்களுக்கு நான் தந்த பரிசு



அவமானம் அல்லவா? எப்படி ஜீரணித்திருப்பார்கள்? அப்பாவுக்கு இரத்த அழுத்தம் வேறு இருந்ததே!' பலதையும் எண்ணிக் கவலைப்பட்டாள்.

அவளும் ஒரு வாரமாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள். முகுந்தனிடம் இருந்த கலகலப்பு காணாமல் போயிருந்தது. எப்போதும் யோசனையிலேயே மூழ்கியிருந்தான்.

அவளுக்கு உணவு இருக்கிறதா, இல்லையா என்று பார்க்காமல் திருப்தியாய்ச் சாப்பிட்டு ஏப்பம் விடும் சாப்பாட்டு ராமனான முகுந்தன், இரண்டு கவளம் சாப்பிடுவதே அரிதாயிருந்தது.

அன்றும் சாப்பாட்டை விரல்களால் அளைந்து கொண்டிருந்தான்.

64805

''என்னாச்சு உங்களுக்கு? இப்பல்லாம் சரியாவே சாப்பிடுறதில்லை... ஏதோ யோசனையிலேயே இருக்கீங்க!''

''ஒண்ணுமில்லே!''

''இல்லே... ஏதோ இருக்கு... என்கிட்டே சொல்லக் கூடாதா?''

''......''

''பிளீஸ்...''

''எப்படி சொல்றதுன்னே தெரியலை, நளினி!''

''......''

''நீ வீட்டைவிட்டு வந்த அன்னைக்கே உங்கப்பாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தாங்க...''

"எ... என்ன?"

"சிகிச்சை பலன் தராம, போன வாரம் உங்கப்பா இறந்துட்டாராம்."

"ஐயோ... அப்பா..." அலறினாள்.

"நீ அலறுகிற அளவுக்கு உங்கப்பா உனக்கு நல்லது எதுவும் பண்ணிடலே. சொத்துல உனக்குச் சல்லிக் காசு கூட கிடையாதாம். எல்லாத்தையும் உங்க அண்ணன் பேர்லேயும் ஜோதி பேர்லேயும்தான் எழுதிட்டாராம்!"

"அவர் நிலையிலே யாராயிருந்தாலும் அந்த முடிவைத் தான் எடுப்பாங்க. சொத்தா முக்கியம்? என்னோட முட்டாள்தனத்தால் எங்கப்பாவைப் பலிவாங்கிட்டேனே...'

'என்னது சொத்தா முக்கியம்னா சொல்றே? உன்னைக் காதலிச்சு, கல்யாணம் பண்ணிக்கிட்டதே அதற்காகத்தானே!'

மனசுக்குள் கறுவிக் கொண்டான்.

"நான் இப்பவே எங்க வீட்டுக்குப் போகணுங்க... என்னைக் கூட்டிக்கிட்டுப் போங்க."

"முதல்ல அழுவதை நிறுத்து. இப்படி அழுதா வயித்துப் பிள்ளைக்கு என்னாகும்?"

"எப்படிங்க அழாம இருக்க முடியும்? என்னால்தானே அப்பா செத்துப் போனாரு. நான் வீட்டுக்குப் போகணும்.. அம்மாவைப் பார்க்கணும்..."

"புரியாமப் பேசாதே! எனக்கு மட்டும் போகணும்னு ஆசையில்லையா? ஆனா, இப்ப அதுக்குத் தருணமில்லே. உங்க வீட்டுலே நம்ம மேலே ரொம்ப கோபமா இருக்காங்க. இப்ப போனா... ரெண்டு பேரையும் வெட்டிக் கொன்னுடு



வாங்க. நீ அழுது வேதனைப்படுவேங்கிற காரணத்தால்தான் இத்தனை நாளும் சொல்லாம மறைச்சேன்."

"எப்படிங்க இவ்வளவு பெரிய விஷயத்தை மறைக்க உங்களுக்கு மனசு வந்தது?"

"எனக்கு உன்னை விட எதுவும் முக்கியமில்லே, நளினி. அப்பவே சொல்லியிருந்தா, 'கடைசியா ஒரு முறை முகத்தையாவது பார்த்துட்டு வந்திடுறேன்'னு அடம்பிடிச்சு இருப்பே. நானும் சம்மதிச்சிருப்பேன். ஆனா, அங்கே உனக்கு அவமானம்தான் பரிசா கிடைச்சிருக்கும். என்னால் அதையெல்லாம் தாங்கிக்க முடியாது நளினி. அந்த வீட்டு இளவரசி நீ! நாம இப்ப இருக்கிற நிலைமையிலே ஏழை முகுந்தனோட பொண்டாட்டியா அங்கே காட்சி தர்றதை நான் விரும்பலே. கௌரவமா- பார்க்கிறவங்க அசந்து போகிற அளவுக்கு மகாராணி மாதிரி அவங்க முன்னாடி போய் நீ நிக்கணும்னு ஆசைப்படுறேன்!"

இப்படிப்பட்ட அன்பான வார்த்தைகளை அவன் வாயிலிருந்து கேட்டறியாத நளினி, சற்று நேரம் அப்பாவை மறந்து திகைத்துத்தான் போனாள்.

"இத்தனை நாளும் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்துட்டேன். எனக்கே ஒரு குழந்தை வரப்போகுது. பிழைக்கிற வழியைப் பார்க்கணும். மும்பையிலே என் நண்பன் ஒருத்தன் இருக்கிறான். அவன் அங்கே எனக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தர்றதா சொல்லியிருக்கான்!"

"மும்பையிலேயா?"

"பிழைக்கணும்... முன்னேறணும்னா எங்கேயும் போய்த் தான் ஆகணும்! உன்னை மகிழ்ச்சியா வச்சுக்கணும். அதுதான் என் லட்சியம்!"



மகிழ்ச்சியா? கவலையா? இனம் புரியாத உணர்வுடன், அப்பா இறந்ததற்குக் காரணம் தான்தானே என்கிற குற்ற உணர்வும் தலைதூக்க... அவளது மனசு துவண்டு போனது.

## 15

இப்போதெல்லாம் நளினியால் சரிவர நடக்க முடிய வில்லை. மூச்சு வாங்குகிறது. கவலையாலும் ஊட்டமிக்க உணவை உட்கொள்ளாததாலும் மிகவும் பலவீனமாகி இருந்தாள்.

வீட்டிற்குள் நுழைந்த முகுந்தன், சட்டையைக் கழற்றி விட்டுச் சாப்பிட அமர்ந்தான்.

பரிமாறிய நளினி, "ஏங்க... ரொம்ப களைப்பா இருக்கு. குழந்தை பிறக்க இன்னும் ஒரு மாசமிருக்கு. ஆனா, அடிக்கடி வயிறு வலிக்குதுங்க. என்னை டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போறீங்களா?" என்றாள்.

"விசாரிச்சேன். இந்த மாதிரி நேரத்துல அப்படித்தான் இருக்குமாம். நல்லா வேலை செய்தாலே போதுமாம். டாக்டர்கிட்டே போனா, இந்தப் பரிசோதனை அந்தப் பரிசோதனைன்னு பணத்தைப் பறிக்கிறதிலேயே குறியா இருப்பாங்க. நாம இப்ப இருக்கிற நிலைமையிலே அதெல்லாம் முடியாது நளினி. கொண்டு வந்த நகை எல்லாம் தீர்ந்து போச்சு. உன் பிரசவச் செலவுக்கே என்ன பண்ணுறதுன்னு புரியலே."

"என்னங்க... இப்படிச் சொல்றீங்க?"

"கவலைப்படாதே! அதுக்காக உன்னை அப்படியே விட்டுடு வேனா? அநேகமாக அடுத்த வாரம் மும்பை போவேன். என் நண்பன் நல்ல வேலையா ஏற்பாடு பண்ணி இருக்கானாம்."



"மும்பைக்கா? அடுத்த வாரமா? நான்?"

"உன்னை எப்படிம்மா கூட்டிக்கிட்டுப் போக முடியும்? புது ஊர். நீ நிறைமாதக் கர்ப்பம் வேற! ஏதோ, நான் மட்டும் நண்பனோட ஒரே அறையிலே ஓரமா ஒண்டிக்குவேன். நீ இங்கேயே இரு. அக்கம்பக்கத்திலே உள்ளவங்க உன்னைப் பார்த்துக்குவாங்க. பணம் சம்பாதிக்கத்தானே போறேன். அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாம அனுப்பி வை! போனதும் எப்படியாவது பத்து நாளைக்குள்ளே உன் சாப்பாடு, பிரசவச் செலவுக்குன்னு பணம் அனுப்பி வைக்கிறேன். இங்கேயே இருந்தா என்னால எதுவும் பண்ண முடியாது. நீதான் ஒத்துழைக்கணும், நளினி!" அவன் அன்பாய் ஏற்ற இறக்கத்துடன் பேசிய விதம் அவளை வாயடைக்க வைத்தது.

'வேறு வழியில்லை. பிரசவ நேரம் நெருங்குவதற்குள் பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே!' நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்டாள், நளினி.

நளினி வாசலில் வந்து நின்றாள்.

தபால்காரர் வரும் நேரம். பத்து நிமிடக் காத்திருத்தலுக்குப் பின் சைக்கிளில் வந்த தபால்காரர் இவளைத் தாண்டிப் போனார்.

ஆர்வம் வடிய, ஏமாற்றத்துடன் வீட்டிற்குள் சென்றவளின் கண்கள் துளிர்க்க... 'பம்'மென்று உப்பியிருந்த வயிற்றைப் பயத்துடன் தடவிக் கொண்டாள்.

முகுந்தன் மும்பைக்குச் சென்று பதினைந்து நாள் ஓடிவிட்டது. 'ஒரு வாரத்தில் பணம் அனுப்பி வைக்கிறேன்' என்றவன், இதுவரை பணம் அனுப்பவில்லை, ஒரு கடிதம் கூடப் போடவில்லை. நாலு வீடு தள்ளி இருந்த மளிகைக்

கடைக்குப் போன் பண்ணுகிறேன் என்றவன், அதையும் பண்ணவில்லை.

'என்னாச்சு?' உடல் முழுக்கத் திகில் பரவியது.

நாட்கள் கடந்தன.

பிரசவ நாளுக்கு இரண்டு நாள் முன்னதாகவே வலியெடுக்க... தன்னந்தனியே... நள்ளிரவில் பயமும், வலியுமாய் அலறினாள், நளினி. ஆனால், அவள் அலறல் நெடுநேரம் யார் செவியையும் எட்டவில்லை. கடைசி நேரத்தில் இரண்டு வீடு தள்ளியிருந்த வேணி பாட்டிதான் சத்தம் கேட்டு விரைந்து வந்தாள்.

ஆனால், அதற்குள் வீட்டிலேயே பிரசவித்து விட்டாள், நளினி.

அழுது கொண்டிருந்த குழந்தையைப் பார்க்கப் பார்க்க நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. பசிக்காக அழுதழுது தொண்டை கட்டிவிட்டது.

என்ன செய்வது? குழந்தையின் பசியாற்ற அவள் உடம்பில் பால் இல்லை. அவள் சாப்பிட்டால்தானே? சாப்பிட்டே இரண்டு நாளாகி விட்டது.

முகுந்தனிடமிருந்து எந்தவிதத் தகவலுமில்லை. அவன் மும்பைக்குச் சென்று விளையாட்டுப் போல மூன்று மாதம் ஓடிவிட்டது. அக்கம் பக்கத்தாரின் கருணையால் அவ்வப்போது அவள் வீட்டில் அடுப்பு எரிந்தது. எப்போதும் கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா? அவர்களும் அடிமட்ட வாசிகள்தான்.

அடுத்து என்ன செய்வதென்றே புரியவில்லை, நளினிக்கு.



இவர் இருக்கும் முகவரி கூட தெரியாதே. எப்படித் தொடர்பு கொள்வது? கொஞ்சம் கூட அக்கறை இல்லாமல் என்ன மனுஷன்! மனைவியை நிறைமாதக் கர்ப்பத்தில் விட்டுச் சென்றோமே, என்னானது, ஏதானது என்று விசாரித்து ஒரு கடிதம் கூடப் போடாமல்...?

'ஒருவேளை... அவருக்கு அசம்பாவிதமாக ஏதாவது நேர்ந்து விட்டதா?'

'ஐயோ... கடவுளே... அப்படியெல்லாம் ஏதும் ஆகியிருக்கக் கூடாது. அவர் எங்கிருந்தாலும், ஆரோக்கியமாக, நல்லா இருக்கணும்!' பேதை மனம் வேண்டிக் கொண்டது.

அப்போது கதவு தட்டப்பட்டது.

சோர்வுடன் எழுந்து சென்று கதவைத் திறந்தவள், வாசலில் நின்றிருந்த அந்த இளைஞனைப் பார்த்துப் புருவம் சுருக்கினாள்.

'யாரிவன்? எங்கோ பார்த்திருக்கிறேனே!'

''என் பேர் சங்கருங்க... என்னைத் தெரியலியா? உங்க ஊர்க்காரன்தான். பள்ளிக்கூட வாசலில் பார்த்திருப்பீங்க, முகுந்தன்கூட...''

''ஓ... ஆமாமாம்... வாங்க... உள்ளே வாங்க!''

உள்ளே வந்த சங்கர், அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

'நளினியா இது? அழகிற்கே உதாரணமாய் இருந்தவள். உடல் ஒடுங்கி, கண்கள் உள்ளடங்கி, புகை படிந்த ஓவியமாய்...

''எப்படி இருக்கீங்க, நளினி? இதுதான் உங்க குழந்தையா?''

''ஆமா... அவரைப் பற்றி ஏதாவது விபரம் தெரியுமா? அவர் மும்பைக்குப் போய் மூணு மாசமாகுது. இதுவரை எந்த





தகவலுமில்லை. அவர் இருக்கிற இடமாவது தெரிஞ்சா நல்லா இருக்கும்!''

அவன் கேட்ட கேள்விக்குப் பதில் தராமல் நேரே அவளே விஷயத்துக்கு வந்தது அவனுக்கு நல்லதாய்ப் போய்விட்டது.

முகுந்தன் அவளைக் கை கழுவிட்டு ஓடிப்போன விஷயத்தை அறியாமல் அவனுக்காகக் காத்திருக்கும் நளினியைப் பற்றி இளங்கோ சொல்லித்தான் சங்கருக்கே தெரியும். அதைத் தவிர நளினியின் அம்மா அம்பிகை, கணவரின் மரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாகி உறக்கத்திலேயே உயிர் நீத்த தகவலையும் கூறி அவளை ஊருக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தான்.

இன்று நளினியின் இந்த நிலைமைக்குத் தானும் ஒரு காரணம் என்ற குற்ற உணர்வு அவனை அரித்துத் தின்றது. தான் மட்டும் அவனை உசுப்பி விட்டிருக்கா விட்டால், முகுந்தனும் நளினியை அடைவதில் தீவிரம் காட்டி இருக்க மாட்டான் அல்லவா?'

'அவனைப் பற்றிய உண்மையை எப்படி எடுத்துச் சொல்வது?'

''என்னங்க... அமைதியா இருக்கீங்க? முகுந்தனைப்...''

''போதும்...'' கையை நீட்டித் தடுத்தான்.

''பேசாதீங்க... அவனைப் பற்றிப் பேசாதீங்க!''

''எ... என்னாச்சு?'' திக்கென அதிர்ந்தாள்.

''உங்களைப் புத்திசாலிப் பொண்ணா நினைச்சிருந்தேன். ஆனா, நம்பக்கூடாத ஒரு ராஸ்கலை நம்பி வாழ்க்கையையே வீணாக்கிட்டீங்களே...''



''நீ... நீங்க சொல்றது புரியலே...''

''முகுந்தன் நல்லவனில்லைங்க. உங்க சொத்துக்காகத்தான் உங்களைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டான். சொத்து வராதுன்னு தெரிஞ்ச பிறகு உங்களைக் கை கழுவிடணும்னு முடிவு பண்ணிட்டான். நீங்க நினைச்சிட்டிருக்கிற மாதிரி அவன் நல்லவன் இல்லேங்க. தேவையில்லா சகவாசம், பழக்க வழக்கம்னு மோசமாயிட்டான். அவன் திரும்ப வருவான்னு எதிர்பார்க்காதீங்க.''

''நீங்க... சொல்றதெல்லாம்...'' நம்ப முடியாமல் கண்ணீர் வழிந்தோடக் கேட்டாள்.

''எல்லாமே உண்மைதான். அதுமட்டுமில்லீங்க... போன மாசம் உங்க அம்மாவும் தவறிட்டாங்க...''

''என்னது...?'' உச்சமாய் அதிர்ந்தாள்.

''அதிர்ச்சியான செய்திதான். ஆனா, உங்களை நீங்கதான் திடப்படுத்திக்கணும். எப்படி வாழ்ந்தவங்க நீங்க! இங்கே வந்து சாப்பாட்டுக்கே கஷ்டப்படணுமா? அடிச்சாலும் உதைச்சாலும் பரவாயில்லே... உங்க அண்ணன்கிட்டேயே போய்ச் சேர்ந்திடுங்க.''

''கடவுளே...! அம்மா...!'' தலையில் 'மடார் மடார்' என்று அடித்துக் கொண்டு சுவரோடு சுவராகச் சாய்ந்தமர்ந்து அழுதாள்.

'கயவன் ஏமாற்றி விட்டானே!' என்ற ஆதங்கமா? பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்காகவா? எதற்காகப் பொங்கி வழிகிறது பேதையவளின் கண்ணீர்?

**16**

"எங்கே வந்தே? போடி வெளியே!" வாசலில் வந்து நின்ற நளினியைப் பார்த்ததும் இரைந்து கத்தினாள், பத்மா.

சத்தியமாய் இதை எதிர்பார்க்கவில்லை, நளினி.

அவளைத் தன் சொந்த மகளாய்க் கருதி அன்பைக் கொட்டியவள்; அம்மாவிடம் கூடப் பகிர்ந்து கொள்ளாமல் தன்னிடம் பகிர்ந்து கொண்டவள்; இவ்வளவு பெரிய விஷயத்தை மறைத்தது மட்டுமின்றி, வீட்டைவிட்டே ஓடிப் போனவள்; அவளால் மாமனாரும், மாமியாரும் இறந்தது என்று எல்லாத் துன்பத்திற்கும் காரணம் இவள்தானே! அந்த ஆத்திரம், நளினி மீது பாய்ந்துவிட்டது.

சத்தம் கேட்டுப் பாஸ்கர் வந்து எட்டிப் பார்த்தான்.

அங்கு நின்றிருந்த நளினியைக் கண்டவன், தன் மனைவியை விடக் கூடுதலாகக் கோபப்பட்டான்.

"நீயா?"

"அண்ணா...!"

"சீ... வாயை மூடு! என் அப்பா, அம்மா சாகிறதுக்குக் காரணமான கொலைகாரி நீ. உன் வாயால என்னை அண்ணான்னு கூப்பிடாதே. நான் கொலைகாரனா மாறுவதற்குள் மரியாதையா இந்த இடத்தை விட்டுப் போயிடு."

"அண்ணா... என்னைப் பேசறதுக்குக் கொஞ்சம் அனுமதி யுங்க. உங்க கோபம் நியாயமானது. ஆனா, மனசறிஞ்சு நான் எந்தத் தப்பும் பண்ணலேண்ணா... திட்டம் போட்டு வலையில் வீழ்த்திட்டான்..."



"இதோ பாரு.. என்னை அநாவசியமா கோபத்துக்கு ஆளாக்காதே... இங்கே இருந்து போயிடு..."

"அண்ணி... நீங்களாவது அவருக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?"

"அண்ணி மாதிரியாடி உன்னிடம் நடந்துகிட்டேன்? தாய் மாதிரிப் பாசத்தைக் கொட்டினேனே... பிஞ்சிலேயே பழுத்துட்டு இந்த வீட்டுக் கௌரவத்தையே தரைமட்டமாக்கிட்டுப் போன உனக்காக நான் பரிஞ்சு பேசினா, செத்தவங்க ஆத்மா என்னை மன்னிக்காது... போயிடு!"

"நீங்களே இப்படிச் சொன்னா எப்படி, அண்ணி? என் நிலைமையைப் புரிஞ்சுக்குங்க. பட்டுக் கெட்டு வந்துட்டேன். இந்தப் பச்சைக் குழந்தையோட முகத்தைப் பாருங்க. நான் பட்டினி கிடக்கிறேன். இந்தக் குழந்தை பசி தாங்குமா? எனக்கு உங்களை விட்டால் வேறு யார் இருக்கா அண்ணி?"

"பத்மா... கதவைச் சாத்திட்டு உள்ளே வா! தெருவிலே போகிற வர்ற நாய்க்கெல்லாம் பதில் சொல்லிட்டிருக்கிறது நம்ம வேலை இல்லை. வா!" மனைவியின் கையைப் பற்றி உள்ளே இழுத்துச் சென்றவன், படீரெனக் கதவை அறைந்து சாத்தினான்.

"அண்ணா... அண்ணா..."

அவள் கதறல் அவர்கள் செவியை... மனசைத் தொட வில்லை.

நளினி அங்கேயே அமர்ந்து விட்டாள்.

அடித்தாலும் விரட்டினாலும் இனி அவள் எங்கே போக முடியும்?



'முட்டாள்தனமாகத் தான் செய்த காரியத்திற்காக அவள் வேண்டுமானால் தற்கொலை செய்து கொள்ளலாம். ஆனால், அந்தப் பிஞ்சு என்ன தவறு செய்தது? எனக்கு அயோக்கியத் தனமான அப்பா வேண்டும், முட்டாள்தனமான, வெகுளித் தனமான அம்மா வேண்டும் என்று விரும்பி வந்தா பிறந்தது? தவறு செய்த என்னைப் பெற்றவர்கள் ஒதுக்கி வைத்ததில் நியாயம் இருக்கிறது.

தவறு செய்யாத குழந்தையைத் தண்டிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? என் குழந்தையை நல்லபடி வளர்க்க வேண்டும். அதற்கு முதலில் பாதுகாப்பான நாலு சுவரும் ஒரு கவளம் உணவும் வேண்டும். பிறகு ஏதாவதொரு வேலை தேடிக் கொண்டு வருமானத்திற்கு வழி செய்து கொள்ள வேண்டும். என்ன ஆனாலும் சரி, இங்கிருந்து போகவே கூடாது!' தீர்மானமாய் அங்கேயே இருந்தாள்.

குழந்தை பசியில் அழுதது.

தெருவாசிகள் அவளை வேடிக்கை பார்த்தனர்.

எவ்வளவு நேரம்தான் கதவைச் சாத்தி வைத்திருக்க முடியும்?

ஆவேசத்துடன் அவளை நோக்கி வந்தான், பாஸ்கர். 'என்னதான் நினைச்சிட்டிருக்கே உன் மனசுல? இதோ... கூட்டம் சேர்ந்தாச்சு. இருக்கிற கொஞ்ச நஞ்ச மானத்தையும் சந்திசிரிக்க வைக்க வந்திருக்கியா? போயிடு!"

"அண்ணா... நான் உன் தங்கச்சி... என் மேலே எவ்வளவு பாசம் வச்சிருந்தே! அத்தனையையும் மறந்துட்டியா?"

"எங்களைப் பொறுத்தவரை நீ செத்துப் போயாச்சு... இங்கிருந்து போயிடு!"



"எங்கேண்ணா போவேன்? எனக்கு உங்களை விட்டா யாருண்ணா இருக்கா? சொத்துக்கு ஆசைப்பட்டு, திட்டம் போட்டு என்னை நாசம் பண்ணிட்டான், அந்த நயவஞ்சகன். சொத்து கிடைக்காதுன்னு தெரிஞ்சதும் என்னை விட்டுட்டு ஓடிப் போயிட்டான். இந்தக் குழந்தையை யாருமில்லாம அனாதையா யார் வீட்டிலோ பெத்தெடுத்தேண்ணா! எனக்காக இல்லேன்னாலும் என் குழந்தைக்காகவாவது ஒதுங்கிக்கொள்ள கொஞ்சம் இடம் கொடுங்கண்ணா!"

அவள் அழுகையைக் காணச் சகிக்கவில்லை, பத்மாவுக்கு.

"என்னங்க... அந்தக் குழந்தைக்காகவாவது..."

"என்ன... வீட்டுக்குள்ளே சேர்த்துக்கலாம்னு சொல்லப் போறியா? அப்பா சாகும்போது என்ன சொன்னார்? ஞாபகமில்லையா? அவளை என் வீட்டு வாசற்படியை மிதிக்க விடக்கூடாதுன்னு சொல்லலே?"

"சரி... வீட்டுக்குள்ளே வேண்டாம். வெளி அறையில் இருக்கட்டும். குழந்தையோடு வெளியிலே சீரழிஞ்சா நமக்குத்தான் அசிங்கம்."

அதைக் கேட்டதும் யோசித்தவன், அரை மனதுடன், "என்னவோ செய்!" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டான்.

"இதோ பாரு, நளினி! உன் மேலே இன்னமும் பாசம் இருக்கிறதாலதான் இந்த உதவியைச் செய்யுறேன்னு முடிவு பண்ணிக்காதே! என்னைப் பொறுத்தவரை நீயொரு குப்பை. இந்தப் பிஞ்சு குழந்தைக்காகத்தான் இந்த அளவிற்காவது நாங்க இறங்கி வந்ததே. மத்தப்படி வேறெந்த உதவியும் எதிர்பார்க்காதே!" என்றாள், விரைப்பாக.

''போதும் அண்ணி... இதுவே போதும்!'' கையெடுத்துக் கும்பிட்டாள்.

இருக்க இடம் கொடுத்தார்களேயொழிய ஒரு தம்ளர் தண்ணீர் கூடக் கொடுக்கவில்லை. அதற்கு மேல் அவர்களிடம் கையேந்தி நிற்க நளினியின் தன்மானம் இடம் தரவில்லை.

அன்றிரவு.

கதவு தட்டப்பட.... 'இந்நேரத்தில் யாரு?' என்ற கேள்வியுடன் கதவைத் திறந்தாள், நளினி. முற்றிலும் புதிய - ஒரு வயதான பெண்மணி. கண்கள் சுருங்கப் பார்த்தாள்.

''யாரு நீங்க?''

''நா... நான் உள்ளே வந்து பேசுறேனே...'' சுற்றுமுற்றும் பயத்துடன் கண்களை அலைய விட்டாள்.

''முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க!''

''உ... உன்னோட மாமியார்...''

''எ... என்னது?''

''ஆமாம்மா... அந்தப் படுபாவியைச் சுமந்து பெத்த பாவி நான்தாம்மா!''

''உள்ளே வாங்க!'' ஆச்சரியத்துடன் அழைத்தாள்.

கையிலிருந்த கூடையைக் கீழே வைத்துவிட்டு உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கி முத்தமிட்டாள்.

''என் ராசாத்தி...போயும் போயும் ஒரு கேடுகெட்ட அப்பனுக்கா வந்து நீ பொறக்கணும்?''

''உங்களுக்கு எப்படி எங்களை...?''



''நீ குழந்தையோடு இந்த ஊருக்கு வந்தது. இங்கே நடந்தது. எல்லாமே தெரியும். காலையிலேயே வரணும்னு மனசு அடிச்சது. உன்னையே சேர்க்காதவங்க என்னை எப்படி சேர்த்துப்பாங்க? அதான் இருட்டினப்புறம் யாருக்கும் தெரியாம வந்தேன்! தாயீ... செப்புச் சிலையாட்டம் எம்புட்டு அழகா இருக்கே? எப்படிம்மா... என் பிள்ளை விரிச்ச வலையிலே விழுந்தே? அடிமட்டக் குடும்பத்திலேருந்து பொண் பார்த்து அவனுக்கு கட்டி வைக்கக்கூட யோசிச்சவ நான்! அநியாயமா ஒரு பொண்ணோட வாழ்க்கையிலே விளையாடக் கூடாதேன்னு தயங்கினேன்! எப்பேர்ப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு! கேள்விப்பட்டப்ப துடிச்சிப் போயிட்டேன். என்னடா பெத்த பிள்ளையைப் பற்றி இப்படிச் சொல்றாளேன்னு பார்க்கிறியா? பெத்தவளே இப்படி பேசுறாள்னா அவன் எப்படிப்பட்டவனா இருப்பான்னு நினைச்சுப் பாரு. எது நடந்தாலும் நஷ்டம் பொம்பளைக்குத் தான்.''

''.......''

''அம்மாடி... இந்தக் கூடையிலே குழந்தைக்கு பால்பவுடர், துணிமணி, மளிகைச் சாமான்கள் கொஞ்சம் வாங்கி வந்திருக்கேன். எடுத்துக்கம்மா!''

''எதுக்கு இதெல்லாம்?''

''மறுத்திடாதே தாயி... என் பேத்திக்கும் உனக்கும் என் சக்திக்கு முடிஞ்சளவு மனசார தர்றேன். அதுக்கு எனக்கு உரிமை இருக்கு. வாங்கிக்கம்மா!''

வாங்கிக் கொண்டாள்.

''அப்புறம் இன்னொரு விஷயம்...''



''.......''

''நீயும் சின்னப் பொண்ணு! குழந்தையை வச்சுக்கிட்டு தன்னந்தனியா எப்படி சமாளிப்பே? என்கூட வந்திடேன். கையிலே தொழில் இருக்கு. உங்க ரெண்டு பேரையும் நான் பார்த்துக்கிறேன்!''

''உங்க நல்ல மனசைப் பாராட்டுறேன். ஆனா, மறுக்கிறதுக்கு மன்னிச்சிடுங்க. இது நானா தேடிக்கிட்ட தப்பான வாழ்க்கை. அதோட கஷ்ட நஷ்டத்தை நான் அனுபவிக்கணும். என்னைப் பெத்து வளர்த்தவங்களையே பலி கொடுத்திட்டேன். என்னை எப்படியெல்லாம் வளர்த்திருப்பாங்க! அதை நான் உணரணும். எந்த வசதியுமில்லாம என் குழந்தையை நல்லபடியா வளர்க்கணும். அது என்னால் முடியும். ஒண்ணும் தெரியாம வெகுளியா இருந்தவளை வைராக்கியமுள்ள தாயா உருவாக்கியிருக்கா, என் குழந்தை. என்னைத் தனியா விட்ருங்க!'' என்றாள், தயவுடன்.

## 17

மாமியார் வாங்கி வந்திருந்த கவுனை மகளுக்கு அணிவித்துப் பார்த்தாள்.

கொள்ளை அழகுடன் அவளைப் பார்த்துச் சிரித்தது. சாயலில் அப்படியே அம்மா அம்பிகையைப் போலிருந்தது குழந்தை.

வாரியணைத்துக் கண்ணீர் விட்டாள், நளினி.

'நான் உனக்குச் செஞ்ச துரோகத்தை நினைச்சு அழணுங்கிறதுக்காகவே எனக்கு மகளா வந்து பிறந்திட்டியாம்மா?'

நளினி எதிர்காலத்தைப் பற்றியோசிக்கலானாள்.



'குழந்தை வளர்ந்து பெரியவளாவாள். அவளைப் படிக்க வைக்க வேண்டும். நல்ல வாழ்க்கை அமைத்துத் தர வேண்டும். அதற்கு இப்போதிருந்தே உழைத்தால்தானே முடியும்? கைக்குழந்தையை வைத்துக் கொண்டு வெளியில் போய் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்ய முடியாது. அதனால் சுயமாய் ஏதாவது தொழில் செய்வதுதான் சரி என்று பட்டது.

நாகப்பட்டினத்தில் முகுந்தனோடு வசித்த ஒண்டுக் குடித்தனத்தில் இரண்டு வீடு தள்ளியிருந்த பாட்டியின் பேத்தி வள்ளிக்கு இரண்டு குழந்தைகள். கட்டடத் தொழிலாளியான அவள் கணவன், மூங்கில் சாரம் கட்டிக் கொண்டிருந்தபோது தவறி விழுந்து இறந்து போனான். படிக்காத வள்ளி, வீட்டில் இருந்தபடியே பினாயில், துணிக்குப் போடும் நீலம் தயாரித்து வீடு வீடாய் விற்பனை செய்து வந்தாள். கணிசமாக வருமானம் கிடைத்தது.

'அதே போல் நாமும் செய்தால் என்ன?' உருப்படியாய் ஒரு யோசனை வரவும், முகம் அழகிய அல்லியாய் மலர்ந்தது.

'சரி... அதற்குப் பணம் வேண்டுமே... குறைந்தது இரண்டாயிரமாவது தேவைப்படும்...! யாரிடம் கேட்பது? அண்ணியிடம்? சேச்சே... பச்சைக் குழந்தை பசியில் அழுத போதே பத்து ரூபாய் தந்து உதவ மனம் வரவில்லை. ஆயிரம், இரண்டாயிரம் என்று கேட்டால் தருவார்களா?'

'ஜோதியிடம் கேட்டால் என்ன? என்மேல் மிகுந்த அன்பு வைத்திருப்பவள். நிச்சயம் உதவுவாள்!'

ஆனால், நளினி எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. ஜோதி இவளைப் பார்த்ததும் அண்ணன் - அண்ணியை விடவும்

மோசமாய்க் கத்தினாள். வெளியில் தள்ளிக் கதவைச் சாத்தினாள். அதுவே அதிர்ச்சி. அதைவிடப் பெரிய அதிர்ச்சி வெளியில் காத்திருந்தது. ஜோதியின் கணவன் வேணு அப்போதுதான் வீடு திரும்பினான்.

நளினியைப் பார்த்ததும் சிரித்தான்.

"என்னம்மா நளினி, கேள்விப்பட்டேன்... இதுதான் உன் குழந்தையா? சொக்கத் தங்கம் மாதிரி இருக்கிற உன்னை விட்டு ஓடிப்போக அவனுக்கு எப்படிதான் மனசு வந்ததோ? ஆமா, என்ன இந்தப் பக்கம்? ஏன் கண்ணெல்லாம் கலங்கி இருக்கு?"

நளினி நடந்ததைச் சொன்னாள்.

"ஜோதி அப்படித்தான். அவளை விடு. நீ என்கிட்டே கேட்டிருக்கலாமே! நான் உதவி செய்ய மாட்டேனா? ஆமா, எவ்வளவு வேணும்?"

"ரெண்டாயிரம்... சீக்கிரம் திருப்பித் தந்திடுவேன் மாமா!"

"சேச்சே... அதெல்லாம் திருப்பித் தர வேண்டாம். அது மட்டுமல்ல; நான் மாசா மாசம் உன் செலவுக்கும் ரெண்டாயிரம் தர்றேன்."

"ஐயோ... வேண்டாம், மாமா!"

"எதையும் நீ திருப்பித் தர வேண்டாம்..."

"பின்னே?"

"ஜோதி சரியில்லே, நளினி. உடம்பு பாட்டுக்கு பெருத்துக் கிட்டே போகுது. எந்நேரமும் நொறுக்குத் தீனி சாப்பிட்டுக் கிட்டே இருக்கிறா... மனுஷன் எவ்வளவுதான் சகிச்சுக்க முடியும்? எனக்கென்று ஆசாபாசங்கள் இருக்காதா நளினி?



இவகிட்டே எனக்குத் திருப்தியே இல்லே... ஏன் சுத்தி வளைக்கணும்? நீயும் இளவயசு... புருஷனும் ஓடிப் போயிட்டான். உனக்கும் அந்த சுகம் வேணுமில்லையா? எனக்கும் தேவைப்படுது. நான் என்ன சொல்ல வர்றேன்னு புரிஞ்சுக்கிட்டிருப்பேன்னு..."

அவன் சொல்லி முடிக்கவில்லை.

"த்தூ..." என்று துப்பினாள்.

"என் அக்கா வீட்டுக்காரனாச்சேன்னு பார்க்கிறேன். சீ... என்னடா மனுஷன் நீ? பணத்துக்காக உடம்பை விக்கிறவ இல்லேடா நான்! நல்ல அப்பா - அம்மாவுக்குப் பொறந்தவ... இதுவே வேறு எவனாவது கேட்டிருந்தா ரெண்டா பொளந்திருப்பேன்... உன்கிட்டே நின்னு பேசறதே அசிங்கமா இருக்கு!"

ஆத்திரமும், வெறுப்புமாய் அவனைக் கண்களால் எரித்து விட்டுச் சென்றாள்.

"தாயி..."

பஸ்ஸை விட்டிறங்கி வீடு நோக்கி நடந்தவளை அழைத்தாள், சரஸ்வதி.

திரும்பிப் பார்த்த நளினி, மென்மையாய்ப் புன்னகைத்தாள்.

தோளில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தொட்டு முத்தமிட்டவள், நளினியைக் கரிசனமாய் நோக்கினாள்.

"நான் தர்றதை நீ ஏத்துக்குவியாம்மா?"

"....!"

"யாரோட உதவியுமில்லாம நீ தனியா கஷ்டப்படுறே! உன் சொந்த பந்தமும் கைகொடுக்கப் போறதில்லே... நான்



கூப்பிட்டும் வரலே... சுயமா உழைக்கணும்னு நினைக்கிறே. குழந்தையை வச்சுக்கிட்டு வெளியிலே போய் உழைக்க முடியுமா? நான் கொஞ்சம் பணம் தர்றேன். அதை வச்சுக்கிட்டு வீட்டிலிருந்தபடியே ஏதாவது தொழில் செய்ய முடியுமாம்மா?"

நளினி ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

தன் மனதில் உள்ள கருத்தை அப்படியே அவள் கூறுவது ஒருபுறம், உடன்பிறந்த சொந்த ரத்த பந்தங்கள் காத தூரம் விரட்டியடிக்கும்போது, இவள் ஓடிவந்து உதவி செய்வது ஆச்சரியத்தையும், ஆனந்தக் கண்ணீரையும் வரவழைத்தது.

அந்த உதவியை ஏற்றுக் கொள்வது போல் மெல்லச் சிரித்தபடி தலையாட்டினாள்.

பெரிதும் மகிழ்ந்து போனாள், சரஸ்வதி.

"ரொம்ப மகிழ்ச்சி தாயி... மறுத்திருந்தா வருத்தப்பட்டி ருப்பேன். என் பிள்ளை செய்த துரோகத்துக்காக என்னையும் வெறுத்திடுவியோன்னு பயந்தேன். இந்தாம்மா... இப்போதைக்கு இந்த அஞ்சாயிரத்தை வச்சுக்க..."

"இதுவே அதிகம்..."

"பரவாயில்லேம்மா... வச்சுக்க... கடவுள் உனக்குத் துணையிருப்பான்... நான் வர்றேன் தாயி..."

போகும் அவளைக் கனிவுடன் பார்த்தாள், நளினி.

அதற்கடுத்த நாட்களில் மளமளவெனக் காரியத்தில் இறங்கினாள்.

அண்ணன் - அண்ணியின் பாராமுகம், அடிமனதைக் கஷ்டப்படுத்திற்று. அவர்கள் எதிரே தான் சிரமப்படுவது தன் தன்னம்பிக்கையை மட்டுப்படுத்தும்.



தவிர ஜோதியின் கோபப் பேச்சும், வேணுவின் அபத்தமான எண்ணமும் தன் சொந்த பந்தங்களின் மீது ஒருவித வெறுப்பை ஏற்படுத்தியது. இவர்கள் உதவியின்றி வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறி எழுந்தது.

அதனால், முதலில் தான் தங்கியிருந்த அறையிலிருந்து வெளியேறி சங்கரின் உதவியோடு ஊருக்கு ஒதுக்குப்புறமாய் ஒரு சிறிய வீட்டைப் பார்த்துக் குடியேறினாள்.

வீட்டிலேயே நீலம், பினாயில் போன்றவற்றைத் தயாரித்தாள். வீடு வீடாய் எடுத்துச் சென்று விற்றாள். அவள் அந்த ஊர் செல்வந்தரின் மகள் என்ற மரியாதையும், அவர்களால் உதாசீனப்படுத்தப்பட்டு, கைக்குழந்தையுடன் வாழ்க்கைக்காகப் போராடுகிறாள் என்ற பரிதாபமும் அவளுக்கு நிறைய நிரந்தர வாடிக்கையாளர்களை உருவாக்கித் தந்தது.

பொருட்களின் தரமும் நன்றாக இருந்தது.

நளினி கடுமையாய் உழைத்தாள். விற்பனை அதிகமாகியது. தயாரிப்பும் கூடியது. அவள் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாகப் பணம் கிடைத்தது.

காலம் ஓடியது. விரைந்து சென்ற நாட்களைத் திரும்பிப் பார்த்தபோது நான்கு ஆண்டு உருண்டோடி விட்டது.

நளினியின் குழந்தை மாலதி, பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள்.

அந்த மழலையின் சிரித்த முகத்தைப் பார்த்துத் தன் கசந்த நாட்களை மறந்து கொண்டிருக்கிறாள், அவள்.

## 18

மாலதி, கைக்குழந்தையாய் இருந்தபோது அவளைத் தூக்கிக் கொண்டு விற்பனைக்காக வீடு வீடாய்ச் செல்வாள். அவளைப் பள்ளியில் சேர்த்த பிறகு தன் உபயோகத்திற்கென்று ஒரு சைக்கிளை வாங்கி, அதில் சென்று வந்தாள்.

இப்போது கடைகளுக்கும் 'சப்ளை' செய்து வருகிறாள்.

வகுலுக்காக அன்று மேலத் தெரு நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது எதிரே சில பெண்கள் பதற்றமும் ஓலமுமாய் ஓடி வந்து கொண்டிருந்தனர்.

சைக்கிளை விட்டிறங்கி விசாரித்தாள்.

"பெருமாள் கோவிலை ஒட்டியுள்ள கிணற்றில் ஐந்து வயதுச் சிறுமியின் பிணம் கண்கள் பறிக்கப்பட்ட நிலையில் கொடூரமாய்க் கொல்லப்பட்டு மிதக்கிறதாம்."

துடித்துப் போனாள், நளினி.

கடந்த இருபது நாளில் இது மூன்றாவது கொலை.

மூவருமே ஐந்தாறு வயதிற்குட்பட்ட சிறுமிகள். குழந்தைகள் காணாமல்போவதும், நான்கைந்து நாள் கழித்துச் சிறுநீரகம் கண்கள் உள்பட முக்கிய உறுப்புகள் எடுக்கப்பட்டு, புதரிலோ, கிணற்றிலோ பிணத்தை வீசியெறிந்து விட்டுப் போவதுமாய்...

'பிஞ்சுகளைச் சிதைக்க எப்படித்தான் மனசு வருகிறதோ?'

அந்தப் பாதகர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் காவல் துறை திணறியபடி தலை கவிழ்ந்து கிடக்கிறது.



குழந்தையைத் துள்ளத் துடிக்கப் பறிகொடுத்த தாய், வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதபடி ஓடுகிறாள்.

அந்தக் காட்சியைப் பார்க்கையில் கண் நிறைந்து போனது, நளினிக்கு. உடனே தன் மகளைப் பார்க்க வேண்டும் போல் ஆவல் எழ, வந்த வேலையை மறந்துவிட்டுப் பள்ளிக்குச் சென்றாள். தலைமை ஆசிரியர் அனுமதி பெற்று மகளை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அன்றிரவெல்லாம் மகளை இறுக அணைத்தபடி படுத்துக் கிடந்தாள். ஆனால், உறக்கம் வரவில்லை.

மாவைக் கரைத்து உப்பு போட்டுவிட்டு காய்கறிகளை நறுக்க அமர்ந்தாள், சரஸ்வதி.

கதவு தட்டப்பட்டது.

'வேலை செய்ய விடமாட்டாங்களே... இந்நேரத்தில் யாரு?' சலிப்புடன் எழுந்து சென்றாள்.

முன்பு போல் இல்லை. உடம்பும் மனசும் வெகுவாய்ச் சோர்ந்து விட்டிருந்தது.

'எத்தனை நாள் இந்த வண்டி ஓடுமோ?' முணுமுணுத்தபடி கதவைத் திறந்தவள், கண்களைச் சுருக்கிப் பார்த்தாள். மட்டுப்பட்டிருந்த பார்வையால் தெளிவாய்த் தெரியவில்லை.

வாட்டசாட்டமாய் பணக்கார வீட்டுப் பிள்ளை போல் கம்பீரமாய் உடையணிந்து நறுமணம் கமழ நின்றிருப்பவன்...

அவளை மேற்கொண்டு யோசிக்கவிடாமல் அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான்.





"என்னம்மா அசந்து போயிட்டே? நான்தான்!"

"மு... முகுந்தா...?"

"முகுந்தனேதான். ஏன் ஆளே அடையாளம் தெரியலையா?"

உண்மைதான். அடையாளமே தெரியாதளவு உருமாறித் தான் போயிருந்தான்.

சதை போட்டு, நிறம் மெருகேறி...

"என்ன அப்படிப் பார்க்கிறே? நாலு ஆண்டு ஆயிடுச்சில்லே... உன்னைப் பார்த்து? வந்து பார்க்கணும்னு நினைப்பேன். ஆனா, வீணாப் பிரச்சினை வரும்னுதான் வரலே. ஏன்னு உனக்கே புரிஞ்சிருக்கும். சரி... அதைவிடு. என்னை உருப்படாதவன்னு எப்பவுமே திட்டிக்கிட்டு இருப்பியே... நான் இன்னைக்கு லட்சாதிபதி. கூடிய சீக்கிரம் கோடீஸ்வரனாயிடுவேன். பணமா கொட்டுற தொழில் பண்ணுறேன். ரெண்டு கார் வச்சிருக்கேன். மும்பையிலே பங்களா கூட வாங்கிட்டேன். இப்ப உனக்கு ஒருமுறையென்ன... நூறு முறை கூட ஆபரேஷன் பண்ணுவேன். அந்தளவு வசதியா இருக்கேன்."

"போதும், நிறுத்துடா!"

"அம்மா..."

"கூப்பிடாதே... உன் வாயால அப்படிக் கூப்பிட்டு என்னை அசிங்கப்படுத்தாதே... முதல்ல வெளியே போ!"

"அம்மா..."

"பெத்தவ இருக்காளா, போயிட்டாளான்னு கூட நாலு ஆண்டா வந்து பார்க்காத நீ, இன்னைக்கு உன் வசதியைச் சொல்லிட்டுப் போக வந்திருக்கியா?"



"தப்பாப் புரிஞ்சுக்கிறே! எனக்கு மட்டும் உன்னைப் பார்க்கணும்னு ஆசை இல்லையா? அதான் சொன்னேனே... நளினியால்தான் வரலே. அவளால பிரச்சினை வரும்னு நினைச்சிதான் வரலே. அண்ணன்காரனும், மாமன்காரனும் பிரச்சினை பண்ணுவாங்கன்னு தயங்கினேன். ஆனா, குடும்பம் மொத்தமும் அவளுக்கு எதிரா இருக்காங்கன்னு கேள்விப் பட்டேன்."

"எல்லாத்துக்கும் நீதானே காரணம்? எப்பேர்ப்பட்ட பொண்ணு! அது வாழ்க்கையைக் கெடுத்து குழந்தையோடு நடுத்தெருவிலே நிறுத்திட்டியே... நீயெல்லாம் மனுஷனாடா? பச்சைப் பிள்ளைக்குப் பால் தரக்கூட தெம்பில்லாம திக்கவச்ச பாவம், உன்னைச் சும்மா விடாதுடா!"

"சரி... இப்ப என்ன? சுயமா தொழில் செஞ்சு நல்லாதானே இருக்கா? விடு!"

"ஏன்டா இப்படிப் பேசுறே? இன்னுமா நீ திருந்தலே? அவளை யாரோ மாதிரி பேசுறே. உன் பொண்டாட்டிடா... போ... அவகிட்ட போய் மன்னிப்புக் கேட்டு மறுபடி சேர்ந்து வாழப் பாரு... அப்பதான் உன் பாவம் கரையும்!"

'சேர்ந்து வாழுறதா? நளினியோடா? நடக்கிற காரியமா அது? மும்பையிலே எனக்கும், ஓட்டல்லே நடனம் ஆடிக்கிட்டிருந்த ரீனாவுக்கும் கல்யாணமாகி ஒரு பையனும் இருப்பதைச் சொன்னா அவ்வளவுதான். கிழவி உண்டு இல்லைன்னு ஆக்கிடும். சொல்லாம இருக்கிறது நல்லது.'

"என்ன யோசிக்கிறே?" அதட்டலாய்க் கேட்டாள் சரஸ்வதி.

"நீ சொல்றது சரிதான். ஆனா, நளினிக்கு என்மேலே கோபமிருக்குமே... எப்படி?"

"கோபப்படாம கொஞ்சுவாளா? நீ செய்த துரோகம் சாதாரணமானதா? அவ அடிச்சாகூட நீ பொறுத்துக்கதான் வேணும். கால்ல கையிலே விழுந்தாவது மன்னிப்புக் கேட்டு அவளோடு சேர்ந்து வாழணும். இல்லேன்னா... இப்பவே வெளியே போ... எனக்கு மகனே பிறக்கலேன்னு நினைச்சுக் கிறேன்."

"இப்படி அவசரப்பட்டா எப்படிம்மா? சரி... நீ சொல்றதைக் கேட்கிறேன். ஆனா, இப்ப இல்லே... ஒரு தொழில் விஷயமா வந்தேன். அப்படியே உன்னைப் பார்த்துட்டு, உன் கையால சாப்பிட்டுட்டுப் போகணும்னு நினைச்சுதான் இங்கே வந்தேன். காலையிலே கிளம்பிடுவேன். போயிட்டு மறுபடி அடுத்த வாரம் வருவேன். அப்ப கண்டிப்பா இங்கே ஒரு மாசம் இருப்பேன். கையோடு நளினியைக் கூட்டிட்டுப் போறேன். சரியா?"

64805

"இப்பப் போய் பார்க்கிறதுல என்ன கஷ்டம் உனக்கு?"

"காரணமிருக்கு. அவளைச் சமாதானப்படுத்தவே இரண்டு நாள் வேணும். இப்ப அதுக்கு ஏது நேரம்? நான்தான் அடுத்த வாரம் வர்றேன்னு சொல்றேனே... பசிக்குதும்மா... உன் கையால சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு! முதல்ல சாப்பாடு போடும்மா!"

அவன் அப்படி கேட்டதும் சரஸ்வதிக்குள் இருந்த கோப மெல்லாம் கொஞ்ச நேரத்தில் பறந்து போனது.

பைத்தியம் பிடிக்காத குறை நளினிக்கு. அழுதழுது முகம் உப்பிப் போயிருந்தது. அக்கம் பக்கத்து வீட்டாரெல்லாம் அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் போயினர்.

அவளது ஒரே ஆறுதல், ஆதாரம், உயிரான அவளது மகள் மாலதி மூன்று நாளாய்க் காணாமல்போய் நேற்றுத்தான்



பறவைகள் சரணாலயம் பக்கத்தில் பிணமாகக் கண்டெடுக்கப் பட்டாள்.

இதற்கு முன் கொல்லப்பட்ட குழந்தைகளைப் போலவே மாலதியும் கொடூரமாய்க் கண்களும் சிறுநீரகமும் எடுக்கப் பட்டு, அழுகிய நிலையில்...

நினைக்கவே நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. கதறினாள், நளினி.

'நான் என்ன பாவம் செய்தேன்! எதற்காக எனக்கு மட்டும் அடுத்தடுத்துச் சோதனைகள்? நான் வாழ்ந்ததே என் மகளுக்காகத்தானே! அவளையும் பறித்துக் கொண்டாயே கடவுளே! இனி நான் என்ன செய்வேன்? ஐயோ! என் கண்ணே... எப்படி எல்லாம் துடிச்சிருப்பியோ? உன் உயிரைப் பறிச்ச படுபாவி மட்டும் என் கையிலே கிடைக்கட்டும்..."

கண்ணீருடனான அவளின் கண்களில் வெறி தாண்டவ மாடியது.

64805

## 19

முழங்காலில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தவளைப் பார்த்து, சரஸ்வதியும் வேதனை தாங்காமல் அழுதாள்.

முகுந்தன் ஒருவிதக் குற்ற உணர்ச்சியோடு, இதயத்தைக் கம்பளிப் பூச்சி நெருடும் அவஸ்தையோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"எம்புட்டு அழகான குழந்தை தெரியுமா? நாள் பூரா பார்த்துகிட்டே இருக்கலாம்! என்னைப் பார்த்தா பாட்டின்னு ஓடிவந்து கட்டிப் பிடிச்சுக்குவா... அருமையான குழந்தை...



அந்தக் கொலைகாரப் பாவிக்கு எப்படித்தான் மனசு வந்ததோ என் செல்லத்தைத் துள்ளத் துடிக்கச் சாகடிக்க! பாடையிலே போறவன்... கடவுள் இருப்பது உண்மைன்னா... அவன் கூடிய சீக்கிரம் துடிதுடிச்சுச் சாவான்!"

"இப்படியே பேசிப் பேசி குழந்தையை நினைவுபடுத்திட்டு இருக்காதேம்மா! பாரு... நளினி எப்படி அழுறா பாரு."

"கடைசிவரை உன் குழந்தையோட முகத்தைக்கூட பார்க்கலையே முகுந்தா..."

நளினி, முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, சரஸ்வதியை நிமிர்ந்து பார்த்தாள்.

"அம்மா... இப்ப, இங்கே இவர் எதற்காக வந்திருக்கிறார்? நான் ஏதாவது பேசிடுறதுக்குள்ளே இவரை இங்கேயிருந்து போயிடச் சொல்லுங்க..." என்றாள், கோபமாக.

"ந...ளி...னி..."

"நளினி... அவசரப்படாதேம்மா... உன் கோபம் நியாய மானதுதான். ஆனா, யதார்த்தமா யோசிச்சிப் பாரும்மா! நீயும் சின்ன வயசு. எத்தனை காலத்துக்கு இப்படி தனியா இருந்துட முடியும்?"

"என்னால முடியும்! இந்தாளு செஞ்ச துரோகத்தை மறக்கச் சொல்றீங்களா? இவரால எனக்குக் கிடைச்சதைவிட இழந்தது தான் அதிகம். அம்மா, அப்பா, சொந்த பந்தம், படிப்பு, வாழ்க்கை இத்தனையையும் யாரால இழந்தேன்? இப்படிப்பட்ட அப்பனோட முகத்தைப் பார்க்கப் பிடிக்காம தான் என் பொண்ணு போய்ச் சேர்ந்துட்டாளோ, என்னவோ?" ஆத்திரத்துடன் கத்தினாள்.



முகுந்தன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நளினி... நீ சொல்றதெல்லாம் சரிதான், இல்லேன்னு சொல்லலே. இந்தப் பிறவியிலே முகுந்தன்தான் உன் கணவன்னு தலையிலே எழுதி இருக்கிறப்ப அதை யாரால மாத்த முடியும்? முகுந்தன் என் பிள்ளைங்கிறதால சொல்லலே...உண்மையாகவே அவன் மாறிட்டான். கைநிறைய சம்பாதிக்கிறான். கார், பங்களான்னு வசதியாஇருக்கிறான். இப்ப உன்னை அழைச்சிட்டுப் போகத்தான் வந்திருக்கிறான். சொல்லு, முகுந்தா!"

"அ... ஆமாம், நளினி... நான் மாறிட்டேன். அம்மா சொல்றது சத்தியம்தான். பழசையெல்லாம் மறந்திடு. நான் செஞ்சது தப்புதான்."

"........"

"தாயி... உன்னைப் பெத்தவங்க உயிரோடு இருந்திருந்தா... அவங்களும் மனசு மாறி இதைத்தான் சொல்லுவாங்க. இந்தக் கிழவி மேலே நீ வச்சிருக்கிற பாசமும், மரியாதையும் உண்மைன்னா... நீ முகுந்தனோடு சேர்ந்து வாழ்ந்துதான் ஆகணும். பொண்ணைப் பறிகொடுத்திட்டுப் பரிதவிச்சி நிக்கிற உனக்கு சாஞ்சுக்க ஒரு தோள் வேணாமா? நம்ம மாலதி, அம்மாவையும், அப்பாவையும் ஒண்ணு சேர்த்து வச்சிட்டான்னுதான் நான் நினைக்கிறேன்.

"திருந்தி வந்தவனை ஏத்துக்கிறதுதான் புத்திசாலித்தனம், மனிதாபிமானம். ஒரு பொண்ணால் முடியாதது எதுவுமில்லே நளினி. அவ நினைச்சா ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். அப்ப வெருளிப் பொண்ணா இருந்தே... உன் வாழ்க்கையே நாசமாகிடுச்சு. ஆனா, இப்ப நீ உலகத்தைப்

புரிஞ்சக்கிட்ட, சுயமா உழைச்சு கைநிறையச் சம்பாதிக்கிற தன்னம்பிக்கையான பொண்ணு. முகுந்தன் உன்னை ஏமாத்த நினைச்சா... அவனைத் தண்டிக்கிற அளவுக்குப் புத்திசாலித் தனமான பொண்ணு நீ! உன் வாழ்க்கை உன் கையிலேதாம்மா இருக்கு. உன் மேலே பாசமில்லாமலா இப்ப உன்னைத் தேடி வந்திருக்கிறான். சொல்லு, முகுந்தா!"

"ஆமாம், நளினி! உன்னை மகாராணி மாதிரி வச்சுக்கணும் னுதான் நாலு ஆண்டா பார்க்காம நாயா, பேயா உழைச்சு பணக்காரனானேன். உன்னை ஆனந்தமா வச்சுப்பேன் நளினி... இதுக்கு மேலே நம்புறதும் நம்பாததும் உன் பொறுப்பு."

நளினி குழம்பிப் போனாள்.

'இவர்கள் சொல்வது உண்மைதானா? பாம்பிடம் விஷமே இல்லையென்று சொல்வதை எப்படி நம்புவது? என்னை மகாராணி மாதிரி வச்சுக்கிறதுக்காக வயிற்றுப் பிள்ளையோடு அனாதையாய் விட்டுட்டுப்போவானா? ஆனால், அத்தை அவ்வளவு எளிதில் நம்ப மாட்டாள். பெற்ற பிள்ளை மீது கடுங்கோபம் கொண்டிருந்தவள். இப்போது நல்லவிதமாய்ச் சொல்கிறாள் என்றால், அவள் பேச்சையும் நம்பாமல் இருக்க முடியாது. என்ன செய்யலாம்?'

"நல்ல முடிவா எடுப்பேங்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. நான் அப்புறமா வர்றேன்." குறிப்பறிந்து வெளியேறி விட்டாள்.

முகுந்தன் நளினியிடம் வந்தான்.

அவள் கண்ணீரைத் துடைத்தான். தோளில் கை போட்டு மெல்லத் தன்னருகே இழுத்தவன், நெற்றியில் அன்பாய் முத்தமிட்டான்.



அதை யெல்லாம் தடுக்க நினைத்தும் நளினியால் முடிய வில்லை.

அந்த அணைப்பும், ஆறுதலும் வேண்டும் போலிருக்க... நெஞ்சில் உறைந்திருந்த துக்கமெல்லாம் மேலெழுந்து அழுகையாய்ப் பீறிட்டு வர... ஓவென்று கதறியபடி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"ஏய்... என்னடா... அழாதே...அதான் நான்... வந்துட்டேனே!"

இதமாய், பதமாய் அவன் கேட்ட விதமும், இறுக்கமான அணைப்பும் அவள் அழுகையை இன்னும் அதிகப்படுத்தியது.

மறுபடி அவனை வென்றுவிட்ட மமதையில் அவன் இதழோரம் புன்னகை அரும்பியது.

நாட்கள் கழிந்தன.

அன்று நள்ளிரவு!

முகுந்தனின் செல்போன் அலறியது.

உறக்கத்திலிருந்து விழித்தவன் சட்டெனப் பக்கத்தில் படுத்திருந்த நளினியைப் பார்த்தான்.

நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தாள். மெல்ல எழுந்து பூனை நடை போட்டுப் பின்பக்கமாய்ச் சென்றான்.

"என்ன அனில் இந்த நேரத்திலே? மதியமே உன் போனை எதிர்பார்த்தேன்!"

"......"

"என்ன... இதே ஊரிலேயா? அஞ்சு வயசா? மாட்டிக்காம கவனமா கடத்தணும். இதே ஊர்ல நாலு குழந்தைகளைக் கடத்தி



கண்களையும், சிறுநீரகத்தையும் எடுத்துட்டுக் கொன்னு விட்டதால ஊர்ல அத்தனை பேரும் கோபமா இருக்காங்க... மாட்டினோம்... அவ்வளவுதான்..."

"....."

"வருத்தமில்லாம இருக்குமா? என்ன இருந்தாலும் மாலதி என் ரத்தமில்லையா? தெரிஞ்சிருந்தா விட்டிருப்பேனா? சரி விடு... அவளோட ஆயுசு அவ்வளவுதான். ஆனா, அனில்! இனிமே யாரையும் கொல்ல வேண்டாம். கண்களையும், சிறுநீரகத்தையும் வெளிநாட்டுக்கு வித்துட்டு, கண்ணில்லா குழந்தைகளைக் கொல்கத்தாவுக்கோ, டெல்லிக்கோ அனுப்பி வித்துடலாம். குருட்டுப் பிள்ளைகளை வச்சு எவ்வளவு பேர் பிச்சையெடுக்க வச்சு பணக்காரன்களா இருக்காங்க தெரியுமா? அதுதான் நமக்கும் நல்லது. இந்த ஊர்ல நம்ம திட்டம் நாளையோடு முடியுது... அடுத்து மதுரையிலே!"

"......"

"சேச்சே... நளினியோடா? குடும்பம் நடத்துறதா? நீ வேற! சீனாவுக்கு முன்னாடி இவ தூசி. என் மனைவி என்றால் அது சீனா மட்டும்தான். எனக்கு மும்பையிலே ஒரு குடும்பம் இருக்கிற விஷயமே நளினிக்குத் தெரியாது. நளினி முன்னைவிட பார்க்க தளதளன்னு அழகா இருந்தா!

"இந்த ஊர் அழகியாச்சே! எனக்குத்தான் தனியா படுத்தா தூக்கமே வராதே! சரி, இந்த ஊரைவிட்டுப்போகிறவரைக்கும் தொட்டுக்கலாம்னுதான்! நாளை இரவு இவளுக்கு சொல்லாமக் கொள்ளாம குட்பை சொல்லிட்டு ஓட வேண்டியதுதான்... சரி... மீதியைக் காலையில பேசிக்கலாம். வச்சிடட்டுமா?"

பேசி முடித்துவிட்டு உள்ளே வந்தான்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள், நளினி.



20

"இன்னைக்கு மதியம் வெளியிலே எங்கும் சாப்பிடக் கூடாது... வீட்லேதான் சாப்பிடணும். உங்களுக்குப் பிடிச்ச கோழிக்கறி, மீன் எல்லாம் சமைக்கப்போறேன்," என்றாள், நளினி.

"என்ன ரொம்ப கொஞ்சறே? என் கண்ணம்மாவுக்கு மூடு வந்திடுச்சா?"

"சே... எப்பவும் அதே நினைப்பா? என் கணவனுக்கு வகை வகையா வாய்க்கு ருசியா சமைச்சுப் போட நினைக்கிறேன். அது தப்பா?"

"தப்பேயில்லே... கண்டிப்பா சாப்பிட வந்திடுறேன்!" செல்லமாய் அவள் கன்னத்தை திமிண்டி விட்டுச் சென்றான்.

சொன்னபடி சாப்பிட வந்து விட்டான்.

"அட... கோழி சாப்ஸ் தெருமுனை வரைக்கும் மணக்குதே..."

அவள் பரிமாற, ஆவலுடன் சாப்பிட்டான்.

"பிரமாதம்... இந்தா... உனக்கும் நானே ஊட்டி விடுவேனாம்... ஆ... காட்டு!"

"ஐயோ... வேணாங்க... நீங்க சாப்பிடுங்க..."

"ஊகூம்... நீ சாப்பிட்டாதான் நானும் சாப்பிடுவேன்."

"சொன்னா கேளுங்க... நான் அப்புறமா சாப்பிடுறேன்!"

"அப்ப எனக்கு வேண்டாம்!"

சற்று தயங்கிய நளினி, வேறு வழியின்றி அவனை நெருங்கி அமர்ந்து வாயைத் திறக்க...

"இதோடு எப்படி உனக்கு ஊட்டப்போறேன்? ரொம்ப பிகு பண்ணிக்கிறே! சாப்பிடு!" முகத்தில் அன்பைப் படரவிட்டு ஊட்டி விட்டான்.

இவன் ஒரு வாய் சாப்பிட்டு விட்டு, அவளுக்கு ஒரு வாய் ஊட்டினான்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் இதய நரம்பு வலித்தது.

போகப் போக வலி தீவிரமானது.

"ந...ளி...னி... நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கு!"

"........"

"நளினி... நான் நெஞ்சு வலிக்குதுன்னு சொல்றேன்... நீ சிரிக்கிறே...?"

"ஒரு பொண்ணு, தான் நினைச்சதைச் சாதிக்கும்போது சிரிப்பாளா, மாட்டாளா?"

"ஏய்... என்ன நீ பைத்தியக்காரி மாதிரி பேசறே?"

"பைத்தியக்காரிதானே நான்? உன்கிட்ட ஏமாந்து... எத்தனை இழந்தேன்?"

"நளினி..." அதட்டினான். முகம் வலியால் சுருங்கியது.

"என்ன... புரியலையா முகுந்தன்? என் பேச்சு, சிரிப்பு, நடவடிக்கை இதெல்லாம் மனசுக்குள்ளே ஒருவிதப் பயத்தை உண்டாக்குது இல்லையா?"

"இதோ பாரு... வீணாகப் பேசி என்னைக் கோபமூட்டாதே... வாயை மூடு!"

"ஊகூம்... இப்ப பேசித்தான் ஆகணும். அப்புறம் பேச உனக்கும் சரி, எனக்கும் சரி, நேரமிருக்காது. இப்ப அடிவயிறு



வரை ஒரு எரிச்சல் பரவியிருக்குமே... இருக்கும், அப்படித் தான் இருக்கும்!" என்றாள், ஏளனமாக.

அவளிடம் ஏதோ ஒரு விஷமத்தனம் இருப்பதை உணர்ந்து கொண்ட முகுந்தன், அவளையே ஆத்திரத்துடன் பார்த்தான்.

"நான் உன்னை என்னடா பண்ணினேன்? ஏன்டா, என் வாழ்க்கையிலே நுழைஞ்சு நாசம் பண்ணினே? நிறைய படிக்கணும்னு நினைச்சிருந்தேன். அதிலே மண் அள்ளிப் போட்டு, அடாவடித்தனமா, அநியாயமா என்னைச் சிதைச்சு, வீட்டை விட்டு ஓடி வரவச்சு... என்னைப் பெத்த பாவத்துக்கு அவமானம் தாங்காம அப்பாவும், அம்மாவும் போய்ச் சேர்ந்தாச்சு. உன்னையே நம்பி வந்த என்னையாவது ஒழுங்கா காப்பாத்தினியா? அன்னையிலேருந்து இன்னைக்கு வரைக்கும், உன் பணத்திலே ஒரு வேளை சாப்பாடாவது போட்டிருப்பியா? நிறைமாத கர்ப்பிணின்னு கூடப் பார்க்காம என்னைத் தவிக்கவிட்டு ஓடிப்போனியே..."

"இப்ப எதுக்கு அதெல்லாம்?"

"அவசியமிருக்கு! உன்னைப் பற்றி நான் எவ்வளவு அருமையா புரிஞ்சு வச்சிருக்கேன், தெரிஞ்சு வச்சிருக்கேன்னு உனக்குத் தெரிய வேணாமா? குழந்தையை வச்சுக்கிட்டு எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்பேன்! நினைச்சுப் பார்த்திருப்பியா? ஆனா, மும்பையிலே எவளையோ கல்யாணம் பண்ணி குழந்தையும் பெத்து குடும்பம் நடத்திக்கிட்டிருக்கே..."

"ந...ளி...னி..." அதிர்ந்தான். "இதெல்லாம் உனக்கு..."

"தெரியும்... எல்லாமே தெரியும். நீ என்ன தொழில் பண்ணிக்கிட்டு இருக்கேன்னும் தெரியும். ஆடு மாடுங்க அடிபட்டு நொண்டி நொண்டிப் போனாலே மனசு



பதைபதைச்சுப் போகுதே... எப்படிடா பச்சைக் குழந்தைங் களைப் படுபயங்கரமா கொலை பண்ண மனசு வருது?"

"ந...ளி...னி..."

"சில மிருகங்கள் குட்டி போட்டா... அதிலே ஒரு குட்டியைத் தானே தின்னுடுமாம். அதே மாதிரி என் குழந்தையை... என் செல்லத்தைக் கொன்னுட்டியே! படுபாவி... ஐயோ..."

குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

"ந...ளி..."

கண்களைத் துடைத்துக் கொண்டாள், நளினி.

"இதெல்லாம் எப்படித் தெரியும்னு பார்க்கிறியா? நேற்றிரவு நீ போன்ல பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். நிழலுக்கு ஒதுங்கிக்கிற மரம் மாதிரியில்லே என்னை நினைச்சுக்கிட்டே! பணத்துக்காகப் பெத்தவளைக் கூட கொல்லத் தயங்கமாட்டே! போகும்போது பணத்தையா கொண்டுபோகப்போறே? இல்லே மூட்டை மூட்டையா பாவம்! நீ உயிரோடு இருந்தா இன்னும் எத்தனை பிஞ்சுகள் பலியாகுமோ? இருக்கலாமா? நீ உயிரோட இருக்கலாமா? கூடாது... நீ சாகணும்!"

"ந...நளினி... நான் செஞ்சதெல்லாம் தப்புதான். இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். நான் இனிமே இப்படியெல்லாம் பண்ண மாட்டேன். ரீனாவை விவாகரத்து பண்ணிட்டு உன்னோடு இருந்திடுறேன். போலீஸ்கிட்டே சொல்லிடாதே!"

"சீச்சீ... இனி எந்தப் பிறவியிலேயும் நீ எனக்கு வேண்டாம். நான் போலீஸ்கிட்டே சொல்லிடுவேன்னு பயப்படாதே! நீதி



மன்றத்திலே தண்டனை தாமதமாகக் கிடைக்கலாம். சிலநேரம் கிடைக்காமலும் போகலாம். அதனால் நான் உன்னை இன்னொரு இடத்துக்குக் கூட்டிட்டுப் போகப் போறேன்!"

"எ... எங்கே?"

"எமன்கிட்டே!" 64805

"ஐயோ... வேணாம்!" பயத்தில் விழிகள் அகன்றன.

"வேற வழியே இல்லை, முகுந்தன்! நீ சாப்பிட்ட சாப்பாட்டுல நான் விஷத்தைக் கலந்துட்டேன்!"

"எ... என்ன... ஐயோ... யாராவது என்னைக் காப்பாத் துங்க...நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்! உன்னைக் கொல்லாம விட மாட்டேன்!" அலறியபடி அவள் கழுத்தை ஆத்திரத்துடன் நெரித்தான், முகுந்தன்.

பலமாய் அவனை உதறித் தள்ளினாள்.

"முட்டாள்... நீ சாப்பிட்ட அதே சாப்பாட்டைத்தானடா எனக்கும் ஊட்டிவிட்டே! நானும் இப்ப கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக்கிட்டுதான்டா இருக்கிறேன். நான் தற்கொலை பண்ணிக்கணும்னு என்னைக்குமே நினைச்சதில்லேடா! உன்னைக் கொன்னுட்டு ஜெயிலுக்குப் போகணும்னுதான் நினைச்சேன். ஆனா, நீ சாப்பிட்ட சாப்பாட்டை எனக்கும் பிடிவாதமா ஊட்டிவிட்டே மறுந்தா உனக்குச் சந்தேகம் வரும். நீ தப்பிச்சிடுவே. அதான் நானும் சாப்பிட்டேன். களையெடுக் கிறப்ப சில நல்ல பயிர்களையும் அழிக்க நேரிடுது இல்லையா? அதுபோல்தான்.அம்மா..." அதுவரை வலியைப் பொறுத்துக் கொண்டிருந்தவள் அலறினாள். வாயில் நுரை தள்ளியது.

"உன்னை... சும்மா..." அதற்கு மேல் பேச முடியாமல் சுருண்டு விழுந்தான் முகுந்தன். வாயில் நுரை பொங்க, கையும்

காலும் 'விலுக் விலுக்'கென இழுக்க... இரண்டு நிமிட அவஸ்தையோடு அடங்கிப் போனான்.

மனம் நிறைய முகத்தில் புன்னகையும் நிம்மதியும் படர... சுவரோடு சாய்ந்தமர்ந்து மெல்ல மெல்ல இந்த உலகில் இல்லாமல் காற்றில் கலந்து போனாள், நளினி.

தவளை, தாமரை மலருக்கு அருகில் இருந்தாலும், அதற்குத் தேன் சுவை தெரியாது. நளினி என்கின்ற அரிய வைரம் கைக்குக் கிடைத்தும், அதை நெருப்பில் போட்ட முட்டாள், முகுந்தன்.

எல்லாக் கெட்ட நடவடிக்கைக்கும் முதல் வாசல் பணத்தாசைதான்.

மனிதனின் அதிருஷ்டமும் சரி, துரதிருஷ்டமும் சரி, தலைவிதியில் இல்லை! அவனின் செயல்களில்தான் உள்ளது!

★ ★ ★

113

# முத்தமிட ஆசை!

**1**

பூமிப் பெண்ணின் கறுத்த முகத்தைத் துடைத்து பவுடர் போட்டுப் பளிச்சிட வைக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது, விடியத் தொடங்கிய சூரியன்.

டேப்பில் சுப்ரபாதம் கசிந்து கொண்டிருக்க... சுந்தரி குளித்து முடித்து நெற்றியில் விபூதி பளிச்சிட... சாமி படங்களின் முன் கண் மூடிக் கரம் குவித்திருந்தாள். தீவிரமாய் எதையோ யாசித்துக் கொண்டிருந்தன உதடுகள்.

மெல்லிய கொலுசுச் சப்தத்தில் கண் திறந்தாள் சுந்தரி.

கூந்தலை அவிழ்த்தபடி, தோளில் தேங்காய்ப் பூ டவலைச் சுமந்து கொண்டு பாத்ரூமை நோக்கி அவசரமாய் நடந்து கொண்டிருந்தாள் ரம்யா.

"ரம்யா.."

"என்னம்மா?" திரும்பிப் பார்த்தாள்.

"என்ன இவ்வளவு சீக்கிரம் எந்திரிச்சிட்டே?"

"இவ்வளவு நாளும் ஏழு மணி வரைக்கும் ஜாலியா தூங்கிட்டிருந்தேன். இனி அப்படி முடியுமா? இன்னைக்கு வேலையிலே ஜாய்ன் பண்ற நாள்.. மறந்து போச்சாம்மா?"





"மறக்கலேம்மா! ஆனா அதுக்காக அஞ்சரை மணிக்கே எந்திரிச்சிடணுமா? அரக்கப் பரக்க பஸ்ஸைப் பிடிச்சு ஓடுவே. இங்கேர்ந்து எட்டரை மணிக்குக் கிளம்பினாக் கூட போதுமே! உடம்பைப் போட்டு ரொம்ப வருத்திக்காதே ரம்யா!"

"என் செல்ல அம்மாவே! நீயே என்னைச் சோம்பேறியாக்கிடுவே போலிருக்கே! பாரேன்.. பேசிக்கிட்டிருந்ததிலேயே அஞ்சு நிமிஷம் பஞ்சாய்ப் பறந்து போய்டுச்சு... நான் குளிச்சிட்டு வர்றேன்.."

நகர்ந்தவளைத் தடுத்தாள் அம்மா.

"வெந்நீர் வச்சு தர்றேன்.."

"ம்ஹூம்.. இனிமேல் வெந்நீருக்கு ஒரு பெரிய கும்பிடு. சூடான சென்னை சிட்டியிலே இருந்துக்கிட்டு வெந்நீர்ல குளிக்கறோம்னு தெரிஞ்சாலே வித்தியாசமா பார்ப்பாங்க. உன் அஞ்சு வயசுக் குழந்தை ரம்யாவுக்குப் பச்சைத் தண்ணியிலே குளிச்சா ஒண்ணும் ஆகாது. வழியை விடும்மா!" கிண்டலாய்க் கூறிவிட்டு பாத்ருமிற்குள் நுழைந்து கொண்டாள் ரம்யா.

"எத்தனை வயசானாலும்.. நீ எனக்குக் குழந்தைதானேடி!" என்றவளின் பேச்சில் அளவுக்கதிகமான அன்பு வழிந்தது.

'சுமன் மேன்ஷன்!'

சுண்ணாம்பு வாசம் கண்டு பல வருடங்களாகி விட்டிருந்த.. மூன்று மாடி காரை பெயர்ந்த கட்டிடத்தில் அந்த போர்டு மட்டும் உச்சியில் பளீரென்றுதான் கம்பீரமாய் இருந்தது. அந்த கம்பீரத்திற்குக் கொஞ்சமும் சம்பந்தமின்றி... சுற்றுப்புறச் சுவர் மொத்தமும் மழை நீர் பட்டுக் கோடு கோடாய் அழுக்கையும், பாசியையும் உள்வாங்கியிருக்க.. அசிங்கமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தது.



ஜனசந்தடி மிகுந்த திருவல்லிக்கேணியில்தான் இருந்தது அந்த மேன்ஷன். பிரம்மசாரிகள் ஒட்டு மொத்தமாய்க் குவிந்திருப்பது அந்த ஏரியாவில்தானே! தடுக்கி விழுமிடமெல்லாம் அவர்களுக்கென்றே கட்டப்பட்ட மேன்ஷன்கள். அவர்கள் தகக்கிச் சாகடிக்கவும், கைதட்டி நடனமாடவும் வளர்க்கப்படும் மூட்டைப் பூச்சியும், கொசுக்களுமாய்... தோசுறாய்க் கரப்பான் பூச்சியும், பல்லிகளும் அவர்களுடன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்க..

அப்படிப்பட்ட மேன்ஷனின் ஒரு அறையில் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தான் கார்த்திக்.

தலைமாட்டிலிருந்த அலாரம் அதிபாயத்திற்கு அலற.. போர்வையிலிருந்து ஒரு கை நீண்டு அதன் தலையில் தொப்பென்று ஆசீர்வதிக்க.. கீழே சாய்ந்து அடங்கிப் போனது. மறுபடி உறக்கம் தொடர்ந்தது.

சற்று நேரத்தில் தொடையில் நறுக்கென்று மூட்டைப் பூச்சி முத்தமிட... பட்டென்று தொடையில் அடித்துச் சொறிந்தபடி போர்வையை விலக்கினான். நழுவிக் கிடந்த லுங்கியைச் சரி செய்தபடி கட்டிலை விட்டு இறங்கியவன்... கொட்டாவி விட்டபடி ஜன்னலருகே வந்தான்.

பார்த்தசாரதி கோவில் கோபுரம் தெரிந்தது.

"ஹலோ.. தலைவா! குட்மார்னிங்!" என்று கைதூக்கி விஷ் பண்ணிவிட்டுக் கீழே தெருவை எட்டிப் பார்த்தான்.

வரிசையாய்ப் பலதரப்பட்ட கடைகள், ஹோட்டல்கள், அதையொட்டி பஸ் ஸ்டாண்ட்...

அந்நேரத்திற்கே யூனிஃபார்மில் பஸ்ஸிற்காகக் காத்திருந்த மாணவ மணிகள்.

'மணியென்ன?' சட்டென்று உறைக்க... படுத்துக் கிடந்த அலாரத்தை எடுத்துப் பார்த்தான்.

எட்டு பத்து ஆகியிருந்தது.

"மை காட்! மணி எட்டுக்கு மேலாகி விட்டதே! ஆறு மணிக்கு எழுப்பி விடச் சொல்லி அலாரம் வைத்தால் எட்டு மணிக்குக் கூவித் தொலைக்கிறது சனியன். இதை வாங்கியதற்குப் பதில் ஒரு சேவலையாவது வாங்கி வளர்த்திருக்கலாம்! இன்று ஆபீஸிற்குச் சீக்கிரமாய் வரச் சொன்னானே...சசி!" பதறியபடி அலாரத்தைக் கட்டில் மேல் தூக்கி எறிந்தவன், அதே வேகத்தில் பாத்ரூமை நோக்கி ஓடினான்.

ஏதோ நினைத்துக் கொண்டவனாய்த் தாடையைத் தடவிப் பார்த்தான். சொரசொரவென்றிருந்தது.

'இப்படியே போனால் நன்றாயிருக்காது. அதுவும் இன்று புதிதாய் ஒரு இளம் பெண் ஆபீஸில் ஜாய்ன் பண்ணப் போவதாக நேற்றுச் சசிதரன் சொன்னானே! ஒரு வாரத்திற்கு நான்தான் அவளுக்கு வேலையைப் பற்றி சொல்லித்தர வேண்டும். அவள் பக்கத்தில் மூன்று நாள் தாடியோடு அமர்ந்தால் நன்றாகவாயிருக்கும்! அவள் எப்படி இருப்பாள்? சிநேகாவின் முகச்சாயலோடு, சிம்ரனின் உடல் வளைவுகளோடு... அவன் மூளை செய்த கற்பனைக்குச் சிரித்தபடி.. அவசரம் அவசரமாய் க்ரீம் தடவி, சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியைப் பார்த்தபடி ஷேவ் பண்ண ஆரம்பித்தான்.

சென்ற வாரம்தான் ஹெட் ஆபீஸில் இண்டர்வியூ நடந்தது. அங்கிருந்து செலக்ட் பண்ணி, இவர்கள் ஆபிஸிற்குப் போட்டிருக்கிறார்கள்.



அந்த தேவதை எப்படி யிருப்பாள்? சராசரி பிரம்மசாரிகளின் எதிர்பார்ப்பில் மில்லி மீட்டர் அளவு கூட குறையாமல்... கார்த்திக்கின் இதயம் எதிர்பார்ப்பில் வேகமாய் எம்பிக் குதித்தது.

பத்தே நிமிடத்தில் குளித்து முடித்து, அயர்ன் பண்ணி வந்திருந்த பேண்ட் சட்டையை அணிந்து டக் இன் பண்ணிக் கொண்ட கார்த்திக் இருபத்தெட்டு வயது நிரம்பிய அழகிய வாலிபன்.

சட்டையைச் சரி பண்ணிக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்பட்டது.

திறந்தான்.

மேன்ஷனில் எடுபிடியாகப் பணி புரியும் பதினேழு வயதுச் சிதம்பரம் நின்றிருந்தான்.

"வணக்கம் சார்! டிபன், காபி வேணுமா சார்?"

"வேணாம்ப்பா.. நான் வெளியிலே பார்த்துக்கறேன். அப்புறம் சிதம்பரம்... அதோ.. மூணு செட் டிரஸ் இருக்கு... எடுத்துச் சலவைக்குப் போட்டுடு!"

"சரி..." என்றபடி அறையைப் பெருக்கினான். ஐந்தே நிமிடத்தில் வந்த வேலையை முடித்துக் கொண்டு துணிகளுடன் வெளியேறினான்.

சற்று நேரத்தில் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியில் வந்தான்.

எதிர்ப்பட்ட வாட்ஜ் மேனேஜர் பரமசிவம் இவனைப் பார்த்ததும் விஷ் பண்ணினார்.

"குட் மார்னிங்.."



"குட்மார்னிங்.. உங்களைத்தான் பார்க்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். நல்லவேளை, எதிரேயே வந்திட்டீங்க.."

"என்ன சார் விஷயம்?"

"இந்த மாசத்தோட கணக்கை முடிச்சுக்கறேன். காலி பண்ணிடறேன்!"

"என்ன சார் திடீர்னு?"

"வாடகையை மட்டும் கூசாம ஏத்தி வாங்கிடறீங்க. மூட்டைப் பூச்சிகளெல்லாம் சமாதியாகி, சுவரெல்லாம் ரத்தம். பார்க்கவே குமட்டுது. எத்தனையோ சொல்லியாச்சு. வொய்ட் வாஷ் பண்ணுங்கன்னு. இதோ அதோன்னு சொல்றீங்களே தவிர, இதுவரை ஒண்ணும் செய்யற மாதிரி தெரியலே."

"இல்லே சார்! அடுத்த வாரம் கண்டிப்பா பண்ணிடலாம் சார்!"

"அதைப்பத்தி இனி எனக்கு அக்கறையில்லை. நான் வேற வீடு பார்த்தாச்சு, ஆளை விடுங்க!"

கார்த்திக் மணிக்கட்டைத் திருப்பி வாட்சைப் பார்த்தபடி, "நேரமாய்டுச்சு... வர்றேன் சார்," என்று கிளம்பி விட்டான்.

'இந்த ஓனர் சொல்றதை கேட்டாதானே? இப்படியே மாசத்துக்கு ரெண்டு பேர் காலி பண்ணிட்டுப் போனா.. எப்படி பொழைப்பு நடக்கும்?' பரமசிவம் கவலைப்பட்டபடி ஓனருக்கு போன் பண்ண டேபிளை நோக்கிப் போனார்.

கார்த்திக் அடுத்த தெருவிலிருந்த ஆட்டோ மொபைல் வொர்க் ஷாப்பிற்குச் சென்றான்.

"என்னப்பா.. என் பைக் ரெடியாய்டுச்சா?"



"ஹி.. ஹி..." என்று தலையைச் சொறிந்தபடி, அருகில் வந்தான், அங்கு வேலை செய்து கொண்டிருந்த பீட்டர்.

"வாங்க சார்... ஈவ்னிங் கண்டிப்பா ரெடியாய்டும் சார்..!"

"ஒரு வாரமா இதையேதான் சொல்லிட்டிருக்கே... பைக் இல்லாம ஆபீசுக்குப் போய்வரக் கஷ்டமாயிருக்கு. ஈவ்னிங்காவது ரெடி பண்ணிடுவேயில்லை?"

"கண்டிப்பா சார்!"

"இந்த பீக் அவர்லே ஆட்டோ கிடைக்கறது கூட கஷ்டமாயிருக்குப்பா!" சலித்தபடி அங்கிருந்து நகர்ந்தான்.

இளநீல நிற ஷிபான் சேலை. அழகான உடலைத் தழுவிக் கர்வப்பட்டுக் கொண்டிருக்க... இடுப்பைத் தாண்டி அடர்ந்த கூந்தல் பாம்பு போல நீண்டிருந்தது.

சுந்தரி கையில் மல்லிகைச் சரத்துடன் வந்தாள்.

"இவ்வளவு பூ வேண்டாம்மா..!"

"பூவை வேண்டாம்னு சொல்லக் கூடாது.. திரும்பு!"

"என்னைப் பொண்ணு பார்க்க வர்ற மாதிரி கூடைப் பூவை சுமந்துக்கிட்டு ஆபீஸ்க்குப் போகச் சொல்றியா? யாராவது கிண்டல் பண்ணப் போறாங்க!"

"பிடிச்சா உடும்புப் பிடிதான்!" பாதியாய் கட் பண்ணி மகளின் கூந்தலில் செருகி அந்த அழகை ரசித்தாள்.

வானின் அழகு விண்மீன்களில் உள்ளது. பெண்ணின் அழகு கூந்தலில் உள்ளது.

ரம்யா.. ரம்யமான தேவதை. கைதொழ வைக்கும் தோற்றம். அவளின் அழகுக்கு அழகைச் சேர்த்தது கூந்தல்.

"டிபன் பாக்ஸை எடுத்து பேக்ல வச்சுக்கோ!"

"சரி!"

"சாமி படத்தையும் அப்பா படத்தையும் தொட்டுக் கும்பிட்டுக்க!"

ரம்யா சட்டென அம்மாவின் காலில் விழுந்தாள்.

"என்ன ரம்யா இது?"

"எனக்குத் தெய்வமும் நீதான், அப்பாவும் நீதான். நாலு சட்டத்துக்குள்ளே அடங்கிப் போன அவங்க எனக்கு என்ன செய்தாங்க? இன்னைக்கு சொஸைட்டியிலே என்னை என் கால்ல நிக்கற தைரியத்தையும், கெபாஸிட்டியையும் தந்தது நீதானேம்மா! உன்னோட வியர்வைதானேம்மா!"

"ர...ம்...யா!" நெகிழ்ந்து போய் மகளை அணைத்துக் கொண்டாள், கண்ணீர் மல்க அவள் நெற்றியில் இதழ் பதித்தாள்.

"நீ... நல்லாயிருப்பே கண்ணம்மா!"

"டைமாய்டுச்சு.. கிளம்பட்டுமா?"

"பத்திரமா போய் வாம்மா!"

"நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்தச் சிங்காரச் சென்னையில்தான். அதை நீ அடிக்கடி மறந்திடறே! வர்றேன்ம்மா!" கையசைத்துவிட்டுப் புறப்பட்டாள்.

தெரு முனையில் அவள் தலை மறையும்வரை வாசலிலேயே நின்றிருந்தாள் சுந்தரி.



## 2

ஏதோ ஒரு புதிய ஊருக்குப் பயணப் படுவதைப் போன்ற உணர்வு எழுந்தது ரம்யாவிற்கு. மக்களின் வேகம் அவளுக்குப் பதட்டத்தை ஏற்படுத்தியது.

இத்தனைக்கும் இருபத்திரண்டு வருடமாய் இதே ரோடில் பயணப்பட்டவள்தான். பள்ளிக்கும் கல்லூரிக்கும் இதே பஸ் ஸ்டாண்டில் நின்றிருக்கிறாள். இன்றென்னவோ, மனிதர்கள் உட்பட அனைத்துமே புதிதாய்த் தெரிகிறது. இதுவரை அம்மாவின் கையை மட்டுமே எதிர்பார்த்து வாழ்ந்திருந்தாள். இனி அப்படியில்லை. அவளுக்குச் சிறகு முளைத்துவிட்டது. அவளே இரை தேடுமளவிற்கு அம்மா ஆளாக்கிவிட்டு விட்டாள்.

"அம்மா!"

அம்மாவை நினைக்கும் போதே மனசு நெகிழ்ந்தது. அன்பு சுரந்தது.

பாவம் அம்மா! ஒவ்வொரு பெண்ணிற்கும் திருமண வாழ்க்கை என்பது இன்பத்தின் திறவு கோலாக இருக்கும். ஆனால் சுந்தரிக்கு மட்டும் அது விதி விலக்காகி விட்டிருந்தது.

நடுத்தரக் குடும்பத்தில் நான்கு பெண்களில் இரண்டாவதாகப் பிறந்த சுந்தரியைத் துறைமுகத்தில் சாதாரண கிளார்க்காகப் பணிபுரிந்த பலராமனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வந்து கணவனுடன் வாழ்க்கை நடத்தியவளுக்கு வசந்த காலமே ஒரு மாதம் வரை மட்டும்தான். ஒரு மாதம் வரை கஷ்டப்பட்டு, குடிக்காமல் வாயைக் கட்டிப் போட்டிருந்த பலராமனால் அதன் பிறகு கட்டுப்படுத்த முடியவில்லை.



வாங்குகிற சம்பளமெல்லாம் சாராயக் கடைக்கே போனது. பட்டினியோடும், சிகரெட், சாராய நாற்றத்தோடும் வாழ்க்கையை ஓட்டச் சிரமப்பட்டாள். இன்னும் இரு பெண்களுக்குக் கல்யாணம் பண்ணிக் கரையேற்ற வேண்டிய கட்டாயம். பிறந்த வீட்டிற்கும் போக முடியாமல் திண்டாடிய சுந்தரி கருவுற்றாள். ரம்யா வயிற்றில் ஏழு மாதச் சிசுவாக இருக்கும்போதே, கண்மண் தெரியாத போதையில் பதினெட்டுச் சக்கர லாரியில் கூழாகிப் போனான். வயிற்றுப் பிள்ளையோடு என்ன செய்வாள் சுந்தரி? திக்குத் தெரியாமல் திண்டாடினாள்.

ஆனால், அந்த சூழ்நிலையிலும் தற்கொலை என்ற எண்ணமே வராமல் குழந்தைக்காகவாவது வாழ்ந்தாக வேண்டும் என்கிற வைராக்கியம்தான் பிறந்தது. பதினெட்டு வருடமாய்ப் பெற்றவர்கள் வளர்த்து, கணவன் என்று இடையில் வந்து, ஒப்பந்தம் முடித்து ஒரு வருடத்தில் போய்ச் சேர்ந்து விட்டவனுக்காக இருக்கிற காலத்தையும் சோர்ந்து போய்க் கழிக்க விரும்பவில்லை.

பலராமன் அந்த லோன், இந்த லோன் என்று எதையும் விட்டு வைக்கவில்லை. எஞ்சியிருந்த லொட்டு லொசுக்கு பணத்தையும் நிர்வாகம் அவ்வளவு எளிதில் கொடுத்துவிடவில்லை. சுந்தரிதான் பலராமனின் மனைவி என்பதற்கு என்ன ஆதாரம்? அப்படி, இப்படி என்று ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்டு நடையாய் நடக்க வைத்தார்கள்.

அப்போது சமயத்தில் உதவியவர்தான் பாண்டியன். பலராமனோடு பணி புரிந்தவர். மேலிடத்தில் பேசி அவளுக்குப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்ததோடு, ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் துணிகளை இஸ்திரி போடுகிற



வேலையும் வாங்கிக் கொடுத்தார். நாள் முழுக்க நின்று கொண்டே வேலை செய்ய வேண்டும். அதில் கிடைத்த வருமானம் அவளுக்குப் போதுமானதாய் இருந்தது. குழந்தை பிறந்தது முதல், ரம்யாவை ஸ்கூலில் சேர்க்க... இன்ஸ்டிட்யூட்டில் சேர்க்க என்று பாண்டியன்தான் உதவி செய்தார். பி.காம். கம்ப்யூட்டர் கோர்ஸ், எதற்கும் இருக்கட்டுமே என்று இன்டீரியர் டெகரேஷன், ஷார்ட் ஹாண்ட்... எல்லாமே படித்துத் தேறினாள், ரம்யா.

ஹிண்டுவில் விளம்பரம் பார்த்து அப்ளை செய்த கம்பெனியில் இன்டர்வியூ வந்ததும் மகிழ்ந்து போனாள். அவள் அட்டெண்ட் செய்த முதல் இன்டர்வியூவிலேயே செலக்ட் செய்யப்படுவாள் என்று சத்தியமாய் அவளே எதிர்பார்க்கவில்லை.

அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் வந்ததும் ரம்யா செய்த முதல் வேலை அம்மாவை வேலைக்குப் போக விடாமல் தடுத்ததுதான்.

"போதும்மா நீ உழைச்சது... அதான் எனக்கு வேலை கிடைச்சிடுச்சே. இனி நான் உனக்கு உட்கார வச்சு சாப்பாடு போடுவேன்!" என்றாள்.

"அம்மாவை சந்தோஷமாக வச்சுக்கணும்.. முதல் மாதச் சம்பளத்தில் அவள் எதிர்பார்க்காத அளவிற்குப் பெரிய பரிசாய்த் தர வேண்டும்!

அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவள் போக வேண்டிய பஸ் உப்பென்று பெருத்துப் போய் வந்து நின்றது.

இண்டு இடுக்கில் நுழைந்து எப்படியோ உள்ளே சென்று விட்டாள். நிற்கக் கூட இடமில்லை. ஜன நெருக்கடியில் வியர்த்து வழிந்தது.

'முதல் நாளே.. வியர்த்து, விறுவிறுத்து, சேலை கசங்கிப் போய் நிற்க வேண்டுமா? இந்த இடத்தில் இந்த பஸ் ஒரு மணி நேரத்திற்கு ஒன்றுதான் வரும். தினமும் இதை எதிர்பார்த்துப் போக முடியாது. முதலில் டிரைவிங் கற்றுக் கொண்டு ஒரு டூவீலர் வாங்கிவிட வேண்டும்.'

''புஸ்ஸ்...'' பெரிய சப்தத்தோடு பஸ் நின்றுவிட... அனைவர் முகத்திலும் டென்ஷன்.

64805

பஸ் இனி நகராதாம்!

''சை.. என்னய்யா பஸ் இது? தினத்துக்கும் இதே வேதனையாய்ப் போச்சே! எங்ககிட்டேர்ந்து அந்த வரி, இந்த வரின்னு பிழிஞ்செடுத்து வாங்கிக்க மட்டும் தெரியுது. நல்ல பஸ்ஸா விடத் தெரியாதா இந்த அரசாங்கத்துக்கு..'

ஆளாளுக்குக் கத்திக் கொண்டிருக்க... ரம்யா பதைபதைப்புடன் கீழிறங்கினாள்.

'முதல் நாளே லேட்டாய்ப் போய் நிற்கக் கூடாது. இனி பஸ்ஸை எதிர்பார்த்திருப்பது முட்டாள்தனம். ஆட்டோவில் தான் போயாகணும். இங்கேர்ந்து அம்பத்தூர் ரொம்ப தூரம். செமத்தியாகப் பணம் பறிச்சிடுவான், ஆட்டோ டிரைவர். ஆனாலும் வேறு வழியில்லை..'

ரம்யா ரோடில் கைகாட்டிக் கடந்து சென்ற ஆட்டோக்களை நிறுத்த முயன்றாள். ஆனால் அதில் எதுவும் காலியில்லை.

அவளுக்குச் சற்று தொலைவில் ஒரு ஆட்டோ வந்துநிற்க, அலுத்தபடி பணம் கொடுத்துவிட்டு இறங்கினான் கார்த்திக்.

''ஏம்ப்பா.. வரும்போதே பார்த்து எடுத்துட்டு வரக் கூடாதா? நடு வழியிலே.. இதுக்கு மேலே ஆட்டோ போகாது சார்னு கழுத்தறுத்திட்டியே!''



''ஸாரி சார்! நான் வேணும்னா வேற ஆட்டோவைப் பிடிச்சு ஏத்தி அனுப்பறேன் சார்!''

''அதை நானே செஞ்சுக்கறேன்... நீ போ!'' என்றான் எரிச்சலுடன்.

''ஆட்டோ.. ஆட்டோ..!'' சர்சர்ரென்று பறந்த ஆட்டோக்களைக் கைகாட்டி நிறுத்த முயன்றான். ஆனால் எல்லாமே சவாரியுடன் பறந்து கொண்டிருந்தன.

64805

பொறுமை யிழந்தான் கார்த்திக்.

அதே நிலையில் தவித்துக் கொண்டிருந்தாள் ரம்யா.

நேரமாகிக் கொண்டிருந்தது. யாராவது டைம் கேட்டால் அழுது விடும் நிலையில் இருந்தாள்.

அப்போது.. ஒரு ஆட்டோ காலியாய் வந்து கொண்டிருக்க, இருவரும் அதைப் பார்த்துக் கையசைத்தனர்.

ஆட்டோ வந்து நிற்க, இருவரும் அங்கே ஓடி வந்தனர்.

''அம்பத்தூர் போகணும்... ஆட்டோ வருமா?'' என்று ரம்யா கேட்க,

அவளை அப்போதுதான் கவனித்தான் கார்த்திக்.

''மேடம்.. ஆட்டோவைக் கூப்பிட்டது நான். சவாரிக்குக் கூப்பிடறது நீங்களா?''

ரம்யா அவனை ஏறிட்டாள்.

''கூப்பிட்டது நான்!'' என்றாள், அமைதியாக.

''நீங்க சரியா கவனிக்கலே போலிருக்கு!''

''உங்களைக் கவனிச்சிட்டிருக்கறது என்னோட வேலையில்லே, மைண்ட் யுவர் வேர்ட்ஸ்!'' என்றாள் கோபமாக.



''அடடா.. நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க போலிருக்கு. பாருங்க மேடம்.. உங்ககிட்டே சண்டை போட எனக்கு நேரமுமில்லை. ஆட்டோ.. அம்பத்தூர் போகணும். வர்றியா?'' என்றான் டிரைவரிடம் திரும்பி

டிரைவர் இருவரையும் திருதிருவெனப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''மிஸ்டர்.. என்ன விளையாடறீங்களா? என்ன.. ரொம்ப புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பா? லேடீஸ்கிட்டே எப்படி பிஹேவ் பண்ணணும்னு கூடத் தெரியாத ஸ்டுப்பிட். ஆர் யூ எஜுகேட்டட்?'' கோபமாகக் கத்தினாள்.

''நான் எம்.எஸ்.ஸி கோல்டு மெடலிஸ்ட் மேடம்! நாளைக்கு இதே டைம் இங்கே வந்தா என்னுடைய டிகிரி சர்டிபிகேட் எல்லாம் கொண்டு வந்து காட்டுவேன்! டிரைவர்! வண்டியை எடுப்பா!''

''திமிர்.. திமிர் பிடிச்ச ராஸ்கல்!'' முணுமுணுத்தவள், ''டிரைவர்! நீங்களே சொல்லுங்க... யார் முதல்ல கூப்பிட்டது?'' என்றாள்.

டிரைவர் மென்று விழுங்கினான்.

''சொல்லுப்பா.. யார் கூப்பிட்டது.. நான்தானே?'' என்றான் கார்த்திக்.

''சொன்னா தப்பா எடுத்துக்கக் கூடாது. நீங்க ரெண்டு பேருமே ஒரே நேரத்திலே பக்கத்து பக்கத்திலே நின்னுக்கிட்டு கையசைத்ததும், புருஷன் பொஞ்சாதின்னு நினைச்சேன்.''

இருவரும் திகைத்துப் போயினர்.



''தேவையில்லாம எதுக்குப் பேசிக்கிட்டு? பாருங்க சார்... நீங்க வேற ஆட்டோவைப் பார்த்துக்குங்க!''

''மேடம்.. எனக்கும் ஆபீஸ்க்கு நேரமாய்டுச்சுங்க.. நான் இன்னைக்கு சீக்கிரமா வேற போயாகணும்.. ஆல்ரெடி லேட்!''

''ரெண்டு பேரும் ஏன் சண்டை போட்டுக்கிறீங்க? ரெண்டு பேருமே அம்பத்தூர்தானே போறீங்க? ரெண்டு பேரும் ஏறிக்குங்க!''

''இந்த ஆளோடயா? நான் மாட்டேன்!''

கார்த்திக் சட்டென ஆட்டோவில் அமர்ந்து விட்டான்.

''நீங்க வேற ஆட்டோவைப் பார்த்துக்குங்க மேடம்!''

''எனக்கு நேரமே சரியில்லை. எல்லாம் என் தலையெழுத்து!'' என்றபடி வேண்டாவெறுப்பாக ஏறிப் பக்கத்தில் அமர்ந்தாள்.

கார்த்திக் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

''சரியான ராங்கிக்காரி!''

''மேடம்.. அம்பத்தூர்ல எந்த இடம்?''

''முகில் ஃபெர்டிலைசர்ஸ் பிரைவேட் லிமிடெட்!' என்றாள்.

கார்த்திக் ஆச்சரியத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''மேடம்.. நீங்க அங்கேயா வொர்க் பண்றீங்க?''

''அவசியம் சொல்லியாகணுமா? அந்த கம்பெனியை விலைக்கு வாங்கத்தான் போய்க்கிட்டிருக்கேன்!'' நக்கலாகக் கூறினாள்.

''ஓஹோ..!'' என்று பெரிதாய்த் தலையாட்டினான்.

"சார்... நீங்க எங்கே போகனும்?"

"மேடம் இறங்கிட்ட பிறகுதான். நான் வழி சொல்றேன்.. நீ மொதல்ல சீக்கிரமா போப்பா.."

அதன் பிறகு கார்த்திக் வாயைத் திறக்கவில்லை.

அம்பத்தூரில் பெரிய கம்பெனி அது.

வாசலில் மெட்டல் டிடெக்டர் வைத்து பரிசோதித்த பின்பே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்.

பூச்செடிகள் இருமருங்கும் வரவேற்க, வலப்பக்கம் பார்க்கிங் செய்யப்பட வசதிகளுடன் பிரம்மாண்டமாய் அகன்று உயர்ந்திருந்தது கட்டிடம்.

ஆட்டோவிலிருந்து இறங்கும் போதே பார்த்துப் பிரமித்துப் போனாள் ரம்யா.

டிரைவருக்குப் பணம் கொடுத்துவிட்டு இறங்கி நடந்தாள்,

வாட்ச் மேனிடம் தான் யார் என்பதைக் கூறிவிட்டு, உள்ளே நடந்தவள்... எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தாள்.

ஆட்டோவில் வந்தவனும் அவளைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

"ராஸ்கல்! பொம்பளைப் பொறுக்கி! நான் இங்கே இறங்குவதைப் பார்த்ததும் இவனும் இங்கேயே இறங்கி விட்டான். மறுபடி வம்பிழுத்தால் கையை நீட்டிவிட வேண்டியதுதான்!" கோபமாய் முறைத்துவிட்டு ரிசப்ஷனை நோக்கிச் சென்றாள்.

அங்கிருந்த இளம்பெண்ணிடம் அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டரை எடுத்துக் காண்பித்தாள்.



அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

"வெல்கம் மிஸ் ரம்யா!" என்றவள், இன்டர்காமில் தொடர்பு கொண்டு பேசிவிட்டு, "அதோ.. அங்கே லெ∴ப்ட்ல கட் பண்ணிப் போனா ∴பர்ஸ்ட் ரூம் ஜி.எம்.மோடது. போய்ப் பாருங்க.. ஆல் த பெஸ்ட்!"

"தாங்க்யூ!" என்றபடி நடந்தவள், ஏதோ உள்ளுணர்வு உறுத்தத் திரும்பியவள்... அதிர்ந்தாள்.

ரிசப்ஷனில் அந்தப் பெண்ணிடம் அவளைச் சுட்டிக் காட்டி ஏதோ கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

## 3

"மே.. ஐ. கமின் சார்!" என்று சொல்லும் போதே, நா உலர்ந்து போனது ரம்யாவிற்கு.

"ப்ளீஸ்.. கமின்!" கம்பீரமான குரல் உள்ளிருந்து ஒலிக்க, கதவைத் திறந்து உள்ளே சென்றாள். குப்பென்று குளிர்காற்று முகத்தில் மோதியது.

ஜி.எம். என்றால் வழுக்கைத் தலையுடன், சபலத்தை உள்ளடக்கிய கண்ணாடி அணிந்த கண்களுடன், நாற்பத்தைந்து, ஐம்பது வயதில் எதிர்பார்த்து வந்தவள், சினிமா கதாநாயகனைப் போல் இளைஞன் ஒருவன் கம்பீரமாய் அமர்ந்திருந்ததைக் கண்டு சற்றே திகைத்துத்தான் போனாள்.

"கு.. குட் மார்னிங் சார்! ஐ'ம் ரம்யா.."

"வெல்கம் மிஸ் ரம்யா... ப்ளீஸ் சிட்டவுன்!" கொள்ளை கொள்ளும் சிரிப்புடன், எதிரில் இருந்த சேரைச் சுட்டிக் காட்டினான்.





"தாங்க் யூ சார்!"

"உங்க சர்ட்டி∴பிகேட்ஸ் எல்லாம் பார்த்தேன். யூ ஆர் வேரி யங். சமீபத்தில்தான் எல்லா கோர்ஸூம் முடிச்சிருக்கீங்க.. உடனே வேலையும் கிடைச்சிருச்சு... யூ ஆர் எ லக்கி கேர்ள்!"

"ஆமா சார்! அதுவும் நான் அட்டெண்ட் பண்ணின முதல் இன்டர்வியூவிலேயே செலக்ட் ஆனது கடவுளோட ஆசீர்வாதமும் கூட!"

"உங்க வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான டர்னிங் பாயிண்ட் நிறைய வரட்டும். அதற்காக என்னுடைய வாழ்த்துக்கள்!"

"தாங்க்யூ.. தாங்க்யூ... வேரி மச் சார்!"

"இங்கே உங்களை எனக்கு அஸிஸ்டெண்டாகத்தான் அப்பாய்ண்ட் பண்ணியிருக்காங்க.. எக்ஸ்பீரியன்ஸ் கிடையாது. ∴ப்ரெஷ் கேண்டிடேட். ஸோ, குறைஞ்சது ரெண்டு வாரமாவது உங்களுக்கு வேலையைக் கத்துக் கொடுக்கனும். அந்தப் பொறுப்பு மேனேஜர் கார்த்திக்கோடது."

"நான் முன் அனுபவம் இல்லாதவளா இருந்தாலும் என்னோட சின்ஸியாரிடிக்கு ரெண்டு வாரம் அதிகம்!"

"வெரிகுட்... வெரிகுட் மிஸ் ரம்யா.. இந்த நம்பிக்கை இருந்தாலே போதும். எதையும் ஜெயிச்சிடலாம். ஓக்கே... என்னோட வாங்க. ஸ்டா∴ப் அத்தனை பேரையும் இன்ட்ரடியூஸ் பண்றேன்!"

அவன் பின்னே எழுந்து சென்றாள்.

ஒவ்வொரு கேபினாக அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினான்.



ரம்யாவின் விழிகள் அவளறியாமல் அவனைத் தேடின.

"இவர் மிஸ்டர் தாஸ்! ரெப்ரசென்டேடிவ்!"

"ஹலோ.."

"ஹலோ.."

"இவர் மிஸ்டர் கரிகாலன்! அஸிஸ்டண்ட் மேனேஜர்!"

"ஹலோ.."

"ஹலோ.."

"இவங்க மிஸஸ் புவனேஸ்வரி, கம்ப்யூட்டர் புரோகிராமர். இவங்க மிஸ் ரம்யா... புதுசா ஜாய்ன் பண்ணியிருக்காங்க.."

ஒவ்வொருத்தருக்கும் அறிமுகப்படுத்திக் கொண்டே அந்த கேபினுக்குள் நுழைந்தான்.

"இவர்..மிஸ்டர் கார்த்திக். மேனேஜர். இவர்தான் உங்களுக்கு வேலை கற்றுத் தரப் போகிறவர். கார்த்திக்! இவங்கதான் புதுசா.."

அவன் சொல்லிக் கொண்டே போக... ரம்யா வெல வெலத்துப் போய்விட்டாள், அவனைப் பார்த்து..

'மைகாட்.. இவனா? ஐயோ.. இவரா?'

கார்த்திக் அவளைப் பார்த்துச் சிநேகமாய்ச் சிரித்தான்.

"அப்புறம்?"

சுந்தரி, சப்பாத்தியைத் தணலில் வாட்டியபடி, ஆவலாய்க் கேட்டாள்.

"அப்புறமென்ன? ராஸ்கல். பொறுக்கின்னு மனசுக்குள்ளே திட்டிக்கிட்டிருந்த அந்த ஆளை ஜி.எம். இவர்தான்

மேனேஜர்னு அறிமுகப்படுத்தினா.. எப்படியிருக்கும்? நீயே யோசிச்சுப் பார்.."

"ஐயோ! மேனேஜர் கோபப்பட்டிருப்பாரே! உன் வேலைக்குப் பிரச்னை வரும் ரம்யா."

"ஓவரா கற்பனை பண்றேம்மா! அந்த மாதிரி எதுவும் நடக்கலே... நடக்காது. அவர்.. அதான் மேனேஜர் கார்த்திக்.. ஒண்ணுமே நடக்காதது மாதிரி சிரிச்சுக்கிட்டே ஹலோன்னு சொன்னார்... எனக்குத்தான் அசிங்கமாய்டுச்சு.."

"அவர்கிட்ட மன்னிப்புக் கேட்கலையா?"

"பேசச் சந்தர்ப்பம் கிடைக்கலை. ஜி.எம். யாரையோ ரிசீவ் பண்ண அவரை ஏர்போர்ட்டுக்கு அனுப்பிட்டார்."

"நாளைக்கு முதல் காரியமா அவர்கிட்டே நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுடு. இதுக்குத்தான் பொட்டைப் புள்ளைங் களுக்கு எதிலுமே நிதானம் வேணுங்கறது. அவசரப்பட்டு யாரையும் தப்பா எடை போட்டுடக் கூடாது."

"இல்லேம்மா... இப்பல்லாம் பெரும்பாலும் இப்படித்தான் இருக்காங்க. ஏதோ ஒரு சில பேர் நல்லவங்களா இருந்து தொலைச்சு என்னைச் சங்கடத்திலே மாட்டி விட்டுடறாங்க. நாளைக்குக் கண்டிப்பா அவர்கிட்டே ஸாரி கேட்டுடறேன். பசிக்குது. ஆறிப் போகறதுக்குள்ளே சப்பாத்தியைப் போடும்மா!" தட்டை நீட்டினாள்.

சிரித்தபடி பரிமாறியவள் கேட்டாள்.

"உங்க ஜி.எம்.எப்படி? அவர் நல்லா பேசற ரகமா? முசுடு ரகமா?"

"அவருக்கென்னம்மா...! அவர் அந்த கம்பெனியின் ஜி.எம்.இல்லே...!"



"பின்னே?"

"ஹீரோ.. அப்படியொரு பர்ஸனாலிட்டி!" கண்ணடித்துச் சிரித்தாள் ரம்யா.

ரம்யா ஆபீஸிற்குள் நுழைவதை இங்கிருந்தே பார்த்து விட்ட கார்த்திக்கிற்கு நேற்றைய சம்பவம் நினைவிற்கு வர.. சட்டென சிரிப்பு வந்து விட்டது. எனினும் உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைக் கவனிக்காதது போல் ஃபைலைப் புரட்டினான்.

அவனுக்குப் பக்கத்து ஸீட்தான் ரம்யாவிற்கு.

கார்த்திக்கைப் பார்த்ததும் சங்கடப்பட்டாள்.

"குட் மார்னிங் ஸார்.." என்றாள்.

"குட் மார்னிங்..' என்றவன், நிமிர்ந்துபார்த்தான். அதில் எந்த உணர்ச்சியுமில்லை.

அவனே அது குறித்து ஏதாவது பேச மாட்டானா என்று எதிர்பார்த்தாள்.

ம்ஹூம்!

"சிட் டவுன் மேடம்! வேலையை ஆரம்பிக்கலாமா?"

"ம்.."

"ஆரம்பத்திலே, கஷ்டமா பிரம்மிப்பா தோணும். ஆனா, போகப் போக... ப்பூ.. இவ்வளவுதானான்னுசொல்ற அளவுக்கு ஈஸியான விஷயம்தான்... ஆர்வம் இருக்கும் பட்சத்தில்!"

"ம்.."

சில தொழில் நுணுக்கங்களைப் பற்றி விளக்கி, அதற்குக் கையாளும் வழிமுறைகள் என்ன?விரல் நுனியில் குறிப்புகளை



வைத்திருப்பது எப்படி? என்பது போன்ற ஐடியாக்களைக் கூறினான்.

"இதிலே என்ன டவுட் இருந்தாலும் கேளுங்க.. சொல்றேன்!"

"சார்.."

"சொல்லுங்க!"

"ஐ'ம் வெரி ஸாரி!"

"எதுக்கு?"

"எனக்கு உறுத்தலாயிருக்கு. இப்ப நீங்க சொன்ன எதுவுமே மனசுல பதியலே. காரணம் குற்ற உணர்வு. நேத்து நீங்க யாருன்னே தெரியாமே கன்னாபின்னான்னு பேசிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க!"

"நான் அதை நேத்தே மறந்தாச்சு. எல்லாரும் மோசமான வங்க இல்லே. கார்த்திக் மாதிரி அப்பாவிப் பிள்ளைகளும் நிறையப் பேர் உண்டு. பெண்கள் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதுதான். அதுக்காக இந்தளவிற்கா?" என்றான் கிண்டலாய்.

தயக்கம் உதறி, டென்ஷன் குறைந்து சிரித்தாள்.

சிரிக்கும் போது மிக அழகாகத் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்து, ஒரு கணம் தடுமாறித்தான் போனான்.

"இனிமே உங்ககிட்டே நான் திட்டு வாங்க முடியாது."

"ஏன்?"

"ஏனா? கேள்வி வேற கேக்கறீங்களா? அப்ப மறுபடி திட்டற ஐடியா இருக்கா?"



"ஐயோ.. தப்பா எடுத்துக்காதீங்க!"

சட்டெனப் பதற்றத்துக்கு மாறிய முகத்தை ரசித்தான்.

"பயப்படாதீங்க. சர்வீஸுக்கு விட்டிருந்த என் பைக் வந்திடுச்சு. ஆட்டோவிலே வந்தாதானே சண்டை போடு வீங்க.. அதைச் சொல்ல வந்தேன்!"

"மைகாட்!" பொங்கி வந்த சிரிப்பை ஐந்து விரல்களால் பொத்தி அடக்கப் பார்த்தாள் ரம்யா.

ஐந்து விரல்களும் வெள்ளையாய், மெத்தென்று, நீளமான நகங்களுக்கு வர்ணம் பூசி.. விரல்கள் கூட நளினமாய் அழகாய் இருக்குமா என ஆச்சர்யப்பட்டான் கார்த்திக்.

ரம்யா சொன்னபடியே ஒரே வாரத்தில் வேலையின் நெளிவு சுழிவுகளைக் கற்றுக் கொண்டாள். அவளின் ஆர்வமும், வேகமும் கார்த்திக்கிற்கே வியப்பைத் தந்தது.

அடுத்த வாரத்திலேயே சசிதரன் அறையை ஒட்டிய அடுத்த கேபினில் ரம்யாவிற்கு இடம் ஒதுக்கப்பட்டது.

சசிதரன் இட்ட பணிகளை உடனுக்குடனும், எந்தவிதத் தடுமாற்றமுமின்றி திறமையுடனும் முடித்துக் கொடுத்தாள். எதிர்பார்க்காத சசி.. மனம் திறந்து அவளைப் பாராட்டி உற்சாகப்படுத்தினான்.

அன்று மாலை!

ஆபீஸ் முடிந்து அனைவரும் கிளம்பி விட்டனர்.

கார்த்திக் டேபிள் மீதிருந்த தன் பைக் சாவியை எடுத்து பேண்ட் பாக்கெட்டில் போட்டபடி சீட்டை விட்டு எழுந்தான்.

அப்போது சசிதரன் அவன் எதிரில் வந்து நின்றான்.

"நல்லவேளை.. புறப்பட்டிருப்பியோன்னு நினைச்சேன். சரி... கிளம்பு!"

"எங்கே சசி?"

"ஷாப்பிங் போகணும்... பைக் இங்கேயே இருக்கட்டும். நாளைக்கு எடுத்துக்க!"

"பைக் இங்கே இருந்தா... நாளைக்கு எப்படி ஆபீஸ்க்கு வர்றதாம்?"

"ஒரு வாரமா ஆட்டோவிலே வந்தியே.. அப்படி!"

"ஆட்டோவிலேயா? நான் மாட்டேன்ப்பா!" பயப்படுவது போல் நடித்தான் கார்த்திக்.

"ஏன்?"

சட்டென ரம்யாவின் நினைவு வரச் சிரித்தான்.

"சொல்லிட்டுச் சிரியேன்ப்பா!"

"அது ஒரு இன்பியல் சம்பவம்!" என்றபடி, ரம்யா முதல் நாள் ஆபீஸ்க்கு வந்தபோது நடந்த சம்பவத்தைக் கூறினான்.

சசிதரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ரம்யா ஒரு பெக்கூலியர் டைப்தான்.. இல்லே!"

"ஆமாம் சசி! ரொம்ப நல்ல பெண்!"

"திறமைசாலியும் கூட! நான் எதிர்பார்த்ததையும் விட, ஸ்பீடா.. பர்ஃபெக்ட்டா வேலையை முடிச்சிடறா... அவளுக்கு நல்ல ஃப்யூச்சர் இருக்கு!"

"ஆமாம்.. இப்ப எதுக்கு ஷாப்பிங்?"



"நாளைக்கு ஒரு மேரேஜ்க்குப் போக வேண்டியிருக்கு. நல்லதா கிஃப்ட் வாங்கணும்!"

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள்.

அலுவலகத்தில் சசிதரனின் கீழ் கார்த்திக் பணிபுரிந்தாலும் இருவரும் நல்ல நண்பர்கள். ஒரே கல்லூரியில் படித்தவர்கள். வெவ்வேறு பாடப்பிரிவை எடுத்துப் படித்தாலும், நெருங்கிப் பழகினர். வேலை விஷயத்திலும் அந்த நட்பு தொடர்ந்ததுதான் ஆச்சரியம். இருவருமே ஒருவர் மற்றவர்க்கு சஸ்பென்ஸ் வைத்துக் கொண்டு ஒரே கம்பெனிக்கு அப்ளிகேஷன் போட... இருவருக்குமே வேலை கிடைத்து, ஒரே கிளையில் போஸ்ட்டிங் போட்டதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்.

மிகப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் அது!

சசிதரன் பரிசுப் பொருளைத் தேர்வு செய்து கொண்டிருந்தான்.

கார்த்திக் வந்ததற்காக ஒரு பேனாவை வாங்க, வெற்றுப் பேப்பரில் எழுதிப் பார்த்தவன் அதிர்ந்தான்.

காரணம், ரம்யா என்று தன்னையறியாமல் எழுதியிருந்தது தான்!

## 4

அந்தி சாயும் பொழுது என்பதால்... காற்று காதலுடன் சிலுசிலுவென வந்து தழுவியது.

பால்கனியில் தன்னந்தனியே செஸ் விளையாடிக் கொண்டிருந்த வரதராஜனுக்கு ஐம்பத்தைந்து வயது. மத்திய அரசாங்கப் பணியில் உயர் அதிகாரியாக இருப்பவர். பரம்பரை



பரம்பரையாக வந்த சொத்துக்களும் ஓரளவு உண்டு. பள்ளி கட்ட இடம் வேண்டும் என்று விலைக்கு இவர் நிலத்தைக் கேட்க வந்தவர்களுக்கு. 'கல்விக் கண் திறக்க என்னால் இயன்றது' என்று பைசா வாங்காமல் தானமாய்க் கொடுத்த நல்ல மனிதர்.

எங்கே திறமையைக் கண்டுணர்ந்தாலும் அந்த நபரை ஊக்கப்படுத்தி, தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து உயர்த்தப் பாடுபடுபவர். பல சேவை அமைப்புகளில் தன்னை இணைத்துக் கொண்டு கிடைக்கும் நேரங்களில் அதற்கான பணிகளில் ஈடுபடுபவர். அவர் மனதிற்கேற்ற மனைவியாய் அமைந்தவள்தான் பத்மினி. கணவர் செய்யும் நியாயமான உதவிகளைச் செய்ய விடாமல் தடுக்காததே பெரிய உபகாரம்தானே! சில சமயங்களில் அவருடன் சேவை மையங்களுக்கும் செல்வதுண்டு.

பத்மினி கணவரிடம் வந்தாள்.

"தனியே உட்கார்ந்து இதை யெல்லாம் எப்படித்தான் விளையாடறீங்களோ? எனக்கு போரடிக்குது. இப்படி பார்க்கறதுக்கு! டிபன் கொண்டு வரட்டுமா? மைசூர் போண்டாவும் தக்காளி கொத்ஸும் பண்ணியிருக்கேன்!"

"தனியே விளையாடுவேன். ஆனா, தனியே சாப்பிட முடியாது. சசிவந்திடட்டும். ஆபீஸ்லேர்ந்து கிளம்பிட்டேன்னு போன் பண்ணினானே! வர்ற நேரம்தான். வந்ததும்... ரெண்டு பேரும் சேர்ந்தே சாப்பிட்டுக்கறோம்!"

அவர் சொல்லி முடிக்கவில்லை. கீழே கார் ஹார்ன் சப்தம் கேட்டது.

'அதோ.. சசியே வந்துட்டான்!" என்றார் உற்சாகமாக.



காரை போர்டிகோவில் விட்டுவிட்டு மேலே வந்தான்.

"ஹலோ டாட்! என்ன தனியா விளையாடறீங்க?"

"அதான் இப்ப நீ வந்துட்டியே?"

"உனக்காகத்தான் டிபன் கூட சாப்பிடாம வெயிட் பண்ணிட்டிருக்கார் சசி!"

"ஜஸ்ட் டென் மினிட்ஸ். சின்னதா ஒரு குளியல் போட்டுட்டு வந்திடறேன்மா!"

சொன்னபடி பத்தாவது நிமிடம் சந்தன சோப்பின் மணம் கமழ, அப்பாவின் எதிரே வந்தமர்ந்தான் சசிதரன்.

"என்ன டாடி, இன்னைக்கு சீக்கிரமா வீட்டுக்கு வந்திட்ட மாதிரி இருக்கு!"

"ஆமாப்பா! ஆபீஸ்.. ஆபீஸ் விட்டா சேவா மந்திர், அன்பு இல்லம்னு போயிடறேனா.. உங்கம்மாவைப் பார்த்து ரொம்ப நாளாயிட்ட மாதிரி ஃபீலிங்! பாவம் அவ செய்யற டிபனை நீயும் லேட்டா வர்றதனால சாப்பிட முடியலை. நானும் சாப்பிடலேன்னா வேற யார்தான் சாப்பிடறது? இதுவும் ஒரு சேவைதானே!"

"என்ன கிண்டலா? என் சமையல் அலுத்துப் போய்டுச்சுன்னா, சீக்கிரமா இந்த வீட்டுக்கு ஒரு மருமகளை வரவைச்சு, அவ கையால சமைச்சுச் சாப்பிடுங்களேன், யார் வேணாங்கறது?"

"எப்படி பத்மினி, எப்படி...? என் மனசிலே ஓடற எண்ணத்தை அப்படியே புட்டுப் புட்டு வைக்கறியே! எப்படி?"

"டாடி.. போதும் உங்க டிராமா? என் கல்யாண விஷயமாய்ப் பேசணும்ங்கறதுக்காக சுத்தி வளைச்சு மூக்கைத் தொடணுமா?" என்றான் சிரித்தபடி.

''சசி யாரு? என் பிள்ளை. சட்டுன்னு புரிஞ்சுக்கிட்டான் பாரு!''

''அப்ப நான் யாரு? அவனுக்கு அத்தையா? எனக்கும் அவன் பிள்ளைதான்!''

''இப்பல்லாம் மறதி கொஞ்சம் அதிகமாயிருக்கு. அடிக்கடி நினைவுபடுத்தறது பெட்டர்!''

''போதும் விளையாட்டு. சகிக்கலே! சரிப்பா... நேரடியா விஷயத்துக்கு வர்றேன்.'' மகன் பக்கம் திரும்பினாள் பத்மினி.

''அம்மா.. நீங்க சிரமப்படவே வேண்டாம். அழகோ, பணமோ எனக்குப் பெரிசில்லை.. கொஞ்சம் படிச்சவளா,, உங்களையும் பிள்ளையையும் கவனிச்சிக்கிற வகையில் பாருங்க.. இப்ப சந்தோஷம்தானா..'' என்று கூறியவாறு எழுந்து சென்றான்.

''இப்ப சந்தோஷமா? கல்யாணத்துக்குப் பச்சைக்கொடி காட்டிட்டான்!'' என்றார் மனைவியைப் பார்த்து.

''ஆமாங்க.. ரொம்ப சந்தோஷமா யிருக்கு. ஒரே பிள்ளையாச்சே! கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக்கிட்டே வர்றானேன்னு கவலைப் பட்டேன். இப்பதாங்க நிம்மதியா யிருக்கு!''

''பொண்ணு பார்க்கிற படலத்தை ஆரம்பிக்க வேண்டியது தானே?''

''என் மனசுல ஒரு பொண்ணு இருக்கா. நம்ம சசிக்கு ஏத்தவ அவதான். ப்ராப்தம் இருந்தா எல்லாம் நல்லபடி நடக்கும்.''

''யாரந்தப் பொண்ணு?''



''சஸ்பென்ஸ்! இப்ப சொல்ல மாட்டேன். காரியத்தை வெற்றிகரமாக முடிச்சிட்டு வந்து சொல்றேன். அப்ப நீங்களே அசந்துடப் போறீங்க... பாருங்க!''

''அப்பேர்ப்பட்ட பொண்ணா?''

''ஆமாம்... வாயைப் பொளக்கப் போறீங்க!''

''ஓகே சார்... கிளம்பட்டுமா?'' பவ்யமாய்க் கைகுவித்து விடைபெற்றாள் ராகவி.

இசையமைப்பாளர் தேவா முகம் முழுக்கப் பரவிய புன்னகையுடன் விடை கொடுத்தார்.

''போய் வாம்மா! இன்னைக்கு பாடிய சாங்.. ரொம்ப அற்புதம்மா. சூப்பர் ஹிட்டாகும்.''

''தாங்க் யூ சார்!''

''நாளைக்கும் ரிக்கார்டிங் இருக்கு..''

''மறக்கலே சார். ஷார்ப்பா 8 மணிக்கு இங்கே இருப்பேன். வர்றேன் சார்!''

''போய் வாம்மா..''

சல்வார் கமீஸில், தங்க நிறத்தில் ப்ளீச் செய்யப்பட்ட தலைமுடி, உடைக்கேற்ற பிங்க் நிறத்தில் லிப்ஸ்டிக்குமாய், மாடல் அழகியைப் போல் பிரமாதமாக இருந்த ராகவி... வேகமாக வளர்ந்து வரும் பின்னணிப் பாடகி.

பாடகிமட்டுமல்ல.. சிறந்த ஓவியத்தாரகையும் கூட. அவள் வீடு முழுக்க அவள் வரைந்த தஞ்சாவூர் ஓவியங்கள்தான் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.



கல்லூரியில் மிஸ் குயீன் என்ற சிறந்த அழகிக்கான பட்டம் பெற்றவள்.

தன் அழகிய சாக்லெட் நிற சான்ட்ரோவை நோக்கிச் சென்றாள்.

நீட்டிய ஆட்டோகிராஃப் புத்தகங்களில் கையெழுத்தைப் போட்டு ரசிகர்களுக்கு 'பை' சொல்லிவிட்டு காரில் உட்கார்ந்தாள். இக்னீஷியனை உசுப்பிச் சீறவிட்டுப் பறந்தாள்.

இவள் கார், திறக்கப்பட்ட கேட்டினுள்ளே நுழைவதைப் பார்த்ததும், துள்ளிக் குதித்து ஓடி வந்தது மெர்ஸி.

ராகவியின் செல்ல நாய்க்குட்டி.

கார் கதவை திறந்ததும்தான் தாமதம்.. தாவி அவள் மடியில் அமர்ந்து கொண்டது.

'ஏய்.. என்ன அவசரம் உனக்கு?'' ஆசையுடன் தடவினாள்.

''ங்.. ங்..'' என்ற சந்தோஷத்துடன் அவள் முகத்தை நக்க முயன்றது.

''மெர்ஸி.. கீழே இறங்கு.. வந்ததும் உன்னைத் தூக்கிக் கொஞ்சணும். வாம்மா ராகவி! என்றாள் மகேஸ்வரி.. ராகவியின் தாய்.

அவளின் அதட்டலுக்கு முகத்தைத் தொங்கப் போட்டபடி கீழே இறங்கி ஒடியது மெர்ஸி.

ராகவி அம்மாவுடன் நடந்தாள்.

கலைநயத்துடன் கட்டப்பட்ட பங்களா அது!

பிரபல தொழிலதிபர் பார்த்தசாரதி - மகேஸ்வரியின் ஒரே செல்ல மகள்தான் ராகவி.



'ரிக்கார்டிங் நல்லபடி முடிஞ்சுதாம்மா?'

'ம்... எனக்கே ரொம்ப திருப்தியா இருந்தது. டாடி எங்கேம்மா?'' சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

''இந்த நேரத்தில் எங்கே இருப்பார்? கம்பெனியிலதான். அப்புறம் பிரபாத் கல்சரல் அகாடமி செக்ரட்டரி வந்திருந்தார். அடுத்த வாரம் அவார்டு ஃபங்ஷன் வச்சிருக்காங்களாம். இன்விடேஷன் கொடுத்துட்டுப் போனாங்க!''

டீப்பாய் மீதிருந்த இன்விடேஷனை எடுத்து மகளிடம் கொடுத்தாள்.

பலதரப்பட்ட கலைஞர்களுக்கும் விருதுவழங்கும் விழா. அதில் ராகவியும் ஒருத்தி.

பிரித்துப் பார்த்தாள்.

'கானக்குயில் செல்வி ராகவி!' தங்க நிறத்தில் எழுத்துக்கள் மின்னின.

'செல்வி.. செல்வி.. ராகவி!' கசப்புடன் உச்சரித்துப் பார்த்தவளின் கண்கள் கலங்கின.

## 5

லன்ச் டைம்!

பழக்கத்தில் ரம்யாவும் கார்த்திக்கும் பெயர் சொல்லி அழைத்துக் கொள்ளும் அளவுக்கு நெருங்கியிருந்தனர்.

''இன்னைக்கு என்ன சார் டிபன்?''

''வெஜிடபிள் புலாவ்!''

''நல்ல வாசனையாய் இருக்கே!'' கொஞ்சம் வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டவள், ''சூப்பர்ப்!'' என்றாள்.

''ரொம்ப டேஸ்ட்டா இருக்கே! பரவாயில்லை சார்... ஸாரி.. கார்த்திக்.. நீங்க கொடுத்து வச்சவர்.''

''ஏன்?''

''உங்க வொய்ப் இவ்வளவு அருமையா சமைச்சி இருக்காங்களே!''

''அப்படிங்கறீங்களா?''

''ஆமாம்!''

''அப்ப கொடுத்து வச்சது நானில்லே.. எனக்கு மனைவியா வரப் போகிறவதான்!'

''அப்படின்னா...?'' வியப்புடன் பார்த்தாள் ரம்யா.

''எனக்கு இன்னும் கல்யாணமாகலைங்க.. நானேதான் சமைச்சேன்..''

''நிஜமாகவா? ரொம்ப ஆச்சரியமாயிருக்கு... எனக்கே சமைக்கத் தெரியாது!''

''கவலைப்படாதீங்க.. நானிருக்கேன்!''

''என்ன?''

''அ.. அ... ஒண்ணுமில்லே.. நேரமிருந்தா வீட்டுக்கு வாங்க, நான் கத்துக் கொடுக்கறேன்!''

''இதுவும் நல்ல ஐடியாதான். அப்புறம்.. பர்ஸனல் விஷயம் பத்தி பேசறேனேன்னு தப்பா நினைக்காதீங்க.. உங்க ஃபேமிலி யெல்லாம்..?''



''இதிலே என்னங்க தப்பிருக்கு? அதான் சொல்லிட்டேனே. வி ஆர்.. ப்ரண்ட்ஸ்... என்கிட்டே எதைப் பத்தியும் பேசலாம்.. அந்த லிபர்ட்டி உங்களுக்கு இருக்கு.. எனக்கு அப்பா இல்லை. அம்மாவும் ரெண்டு தங்கைகளும்தான். ஒரு தங்கைக்குக் கல்யாணம் ஆயிடுச்சு.. ஊர் அம்பாசமுத்திரம். சொந்த வீடும், கொஞ்சம் நிலபுலன்களும் இருக்கு. அப்பாவோட வாழ்ந்த வீடு. அதனால அம்மா அந்த வீட்டை விட்டு வரமறுக்கிறாங்க.. ஸோ.. நான் இங்கே.. அவங்க அங்கே!''

''என்னதான் இருந்தாலும் பெண்ணில்லாதவீடு... சிலை இல்லாத கர்ப்ப கிரகம் மாதிரி. சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்குங்க...''

''அழகான மேற்கோள்! நானும் இப்ப பெண் பார்த்துக் கிட்டுதான் இருக்கிறேன், தங்கைக்குக் கல்யாணம் முடிஞ்சதும்.. நான் பண்ணிப்பேன்!'' என்றவன், அவளை அர்த்தமுடன் பார்த்தான்.

ரம்யா அதன் பொருளை உணராதவளாய்... தன் உணவை டிபன் பாக்ஸ் மூடியில் வைத்து அவனிடம் நீட்டினாள்.

''எங்கம்மா அருமையா சமைப்பாங்க. சாப்பிட்டுப் பாருங்க.''

சாப்பிட்டவன், 'ரொம்ப அருமையா இருக்கு. இன்னும் கொஞ்சம் போடுங்க!' என்றான்.

பந்தாவின்றிப் பழகும் அவனின் குணம் ரம்யாவை ரொம்பவே கவர்ந்தது.

கண்விழித்த ரம்யா அலாரத்தில் நேரம் பார்த்து அலறினாள்.

மணி ஏழே கால்!





''அம்மா.. அம்மா... போர்வையை உதறி எறிந்து அம்மாவைத் தேடிச் சென்றாள்.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட சுந்தரி -

''என்னடி ஆச்சு? ஏன் இப்படி கத்தறே?''

''ஆறு மணிக்கெல்லாம் எழுப்பச் சொன்னேனே! ஏன் எழுப்பலே?''

''நேத்தெல்லாம் உனக்குத் தலைவலி. தூங்கறதுக்கே லேட்டாயிடுச்சு. எழுப்ப மனம் வரலேடி!''

''ஐயோ.. உன் கரிசனத்தையெல்லாம் தூக்கிக் குப்பையிலே போடு.. இன்னைக்கு எக்ஸாம்... எட்டரை மணிக்கெல்லாம் நான் காலேஜ்ல இருந்தாகணும்.. இப்படி காலை வாரி விட்டுட்டியே..''

''உடம்புக்கு முடியலேங்கறப்ப.. உன்னை நீயே வருத்திக்கணுமா? இன்னைக்கு எக்ஸாம் எழுதலேன்னாதான் என்ன?''

''புரியாம பேசாதேம்மா...! ஒரு வேளை எனக்காக எக்ஸாம் எழுதணும்னா கூட.. இதைக் காரணம் வச்சு எழுதாம இருந்திடுவேன். ஆனா, நம்மளை மாதிரி இந்த உலகத்தைப் பார்க்க முடியாத பார்வையில்லாத மாணவர்களுக்காக எழுதறதை எப்படிம்மா ஒதுக்கி வைப்பேன்? நான் படிச்சு டிகிரி வாங்கினப்ப கூட கிடைக்காத சந்தோஷம், ஸ்கிரைபரா இருக்கறப்ப கிடைக்குதும்மா! மனுஷனா பொறந்த ஒவ்வொருத்தரும் தன்னை ஏதாவதொரு பொதுநல சேவையிலே ஈடுபடுத்திக்கணும். தனக்காகச் செலவழிக்கிற நேரத்திலே ஒரு சிறு பகுதியை மத்தவங்களுக்காகவும் செலவழிக்கணும். இயலாதவர்களுக்கு அள்ளி அள்ளிக்



கொடுக்கணுங்கிற மனசு இருக்கு. ஆனா, கொடுக்கறதுக்கு நம்மகிட்டே வசதியில்லே.. அதனாலதான் இதைத் தேர்ந் தெடுத்தேன்! பார்வையில்லாதவங்களுக்காக எக்ஸாம் எழுதறப்ப எனக்குக் கிடைக்கிற சந்தோஷமும், திருப்தியும் கொஞ்ச நஞ்சமல்ல.''

''அதுக்காக.. ஆபீஸ்க்கு ஒரு வாரம் லீவு போட்டுட்டு போய் எழுதணுமா...? அதுவும்.. சேர்ந்து ரெண்டு மாசம்தான் ஆகுது. அதுக்குள்ளே லீவு போட்டா.. நல்லாவா இருக்கும்?''

''ஏன்... போடக் கூடாதா? இதனால என்னை டிஸ்மிஸ் பண்ணினாக் கூட நான் கவலைப்பட மாட்டேன். இதிலே கிடைக்கிற திருப்தியை விட வேலை எனக்குப் பெரிசில்லேம்மா...'' என்றவள், அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாமல், குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் தயாராகி, ஹேண்ட் பேகை மாட்டிக் கொண்டாள்.

''அம்மா.. வர்றேன்!'' உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள்.

''இரு.. இரு..'' விரைந்து உள்ளிருந்து வந்தாள் சுந்தரி.

''என்ன.. டிபன் கூட சாப்பிடாம கிளம்பிட்டே? ரெடியாய்டுச்சு.. சாப்பிட்டுட்டுப் போ...!''

''ஏது நேரம்? வேண்டாம்மா!''

''உனக்காகத்தானே உனக்குப் பிடிச்சதா பார்த்துப் பார்த்துச் சமைக்கிறேன். நீயே சாப்பிடாமப் போனா எப்படி?''

''புலம்பிக்கிட்டே இருக்காதேம்மா! திருப்தியா சாப்பிட றேன். நீ சாப்பிட்டுக்க. மறக்காம டேப்லட் போட்டுக்க. வர்றேன்ம்மா!'' காபி குடித்து முடித்து டம்ளரைத் தந்துவிட்டுக் கிளம்பினாள்.

அலுவலகத்தில் ரம்யா இல்லாமல் ஜி.எம். சசி மிகவும் சிரமப்பட்டான். தன் திறமையான பணிகளால் அவனுக்கு வலது கையாக மாறியிருந்தாள்.

ஒரு வாரம் எதற்காக லீவு எடுத்துக் கொண்டாள்? ஒருவேளை... அவளுக்கு உடல் நிலை சரியில்லையோ? வீட்டிற்குச் சென்று பார்க்கலாமா? ரம்யா தவறாக நினைத்து விட்டால்? சேச்சே... அவள் அப்படி எல்லாம் நினைக்க மாட்டாள். நல்ல பெண்! அவளுக்கு ஏதேனும் உதவி தேவைப் பட்டால்.. செய்ய வேண்டியது மனிதாபிமானமல்லவா? இன்று மாலை.. கண்டிப்பாய் அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டும்! தீர்மானித்தான்.

இப்போது அவனுள் ஒரு நிம்மதி பரவியது.

## 6

டிபன் கேரியரைப் பிரித்த கார்த்திக்கிற்குச் சாப்பாடும், பொரியலும் கற்களும், மணல் களுமாய் காட்சியளிக்க.. சாப்பிடப் பிடிக்காமல் மூடி வைத்தான்.

இதுநாள் வரை ரம்யாவுடன் சாப்பிட்டு விட்டு.. அவளில்லாமல் சாப்பாடு இறங்க மாட்டேன் என்றது. நான்கைந்து நாட்களாகவே சாப்பிடப் பிடிக்காமல் சாப்பாட்டை வீட்டிற்குத் திருப்பி எடுத்துச் சென்றான்.

'ரம்யா ஏன் வரவில்லை? ஒருவார லீவாமே! என்னிடம் கூட சொல்லவில்லையே! என்னவாய் இருக்கும்? உடல்நிலை சரியில்லையோ? அவள் வீட்டிற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தால் என்ன?



ஒரு வார லீவில் ஐந்து நாட்கள் ஓடிப் போய்விட்டது.

இன்னும் இரண்டு நாட்களில் வந்துவிடப் போகிறாள். பிறகேன் வீட்டிற்குச் செல்ல வேண்டும்?

'இல்லை.. அவளைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது.'

'ஏன்?'

'அதுதான் எனக்கும் புரியவில்லை.'

எப்போதடா மணி ஐந்தாகும் என்று காத்திருந்தவனை மேலும் எரிச்சலுறச் செய்தது மணி நான்கைக் காட்டிக் கொண்டிருந்த கடிகாரம்.

'முதன் முதலில் ரம்யாவின் வீட்டிற்குச் செல்கிறோம். ஸ்வீட்.. பழங்கள், பிஸ்கட் எல்லாம் வாங்கிச் செல்ல வேண்டும். இந்த டிரஸ் நல்லாயிருக்கா? ஆலீவ் க்ரீன்ஷர்ட் போட்டுக் கொண்டு வந்திருக்கலாம். சரி, பரவாயில்லை. இந்த சா∴ப்ரான் கலர் ஷர்ட்டும், பிளாக் பேண்ட்டும் நன்றாகத்தான் இருக்கிறது! தன்னைக் குனிந்து பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டான்.

"சார்!" ஆபீஸ் பியூன் சடகோபன் அழைத்தான்.

"என்ன சடகோபன்?" நிமிர்ந்தான்.

"சார் கூப்பிடறார்."

கார்த்திக் எழுந்து சசியின் அறையை நோக்கி நடந்தான்.

கதவைத் தட்டினான்.

"மே ஐ கமின் சார்!"



"வா... கார்த்திக்! உட்காரு.. இந்த கலர் ஷர்ட் உனக்கு நல்லாயிருக்கு."

"தாங்க்ஸ்.. என்ன விஷயம் சசி? ஐஸ் வைக்கறே!"

'சேச்சே.. நிஜத்தைத்தான் சொன்னேன்! அப்புறம் ஒரு இம்பார்ட்டன்ட் மேட்டர்!"

"சொல்லு!"

"ஒரு முக்கியமான டெண்டர் சம்பந்தப்பட்ட ∴பைல்.. அதை உடனே பெங்களூர் ப்ராஞ்ச்ல சேர்த்தாகணும். யாரையும் நம்ப முடியலே. அதனாலதான் உன்னைப் பெங்களூருக்கு அனுப்பறேன்!"

64805

"பெங்களூருக்கா?"

"ஆமாம் கார்த்திக்! டிராவல்ஸ்ல சொல்லி உனக்கு டிக்கெட் புக் பண்ணியாச்சு. ஏழு மணிக்கு பஸ். பெங்களூர் ராயல் ஹோட்டல்ல ரூம் போட்டாச்சு. எர்லி மார்னிங் சிக்லோ க்ளாக் மிஸ்டர் மாதவன் உன்னை வந்து மீட் பண்ணுவார். இந்த ∴பைலை அவர்கிட்டே கொடு! அதுக்குப் பிறகு ஜாலியா சிட்டியை ஒரு ரவுண்ட் அடி! ஈவ்னிங் அவர் தர்ற வேறொரு ∴பைலை வாங்கிக்கிட்டு சென்னைக்குக் கிளம்பறே!"

'போச்சுடா! ரம்யாவை இன்னைக்கும் பார்க்க முடியாதா? நேரங்காலம் தெரியாம பெங்களூருக்கு அனுப்பறானே! அவாய்ட் பண்ணவும் முடியாது. அபிஷியல் வொர்க்!'

"டைம் அதிகமில்லை கார்த்திக்! நீ இப்பவே வீட்டுக்குப் புறப்படு. டிரஸ் எடுத்துக்கிட்டு கிளம்பு."

'ஓக்கே சசி! வர்றேன்.."

அரை மனதுடன் அறையை விட்டு வெளியேறினான் கார்த்திக்.



ரம்யாவுக்குப் பிடித்த முருங்கைக் கீரை அடையை நெய் மணக்க வார்த்துக் கொண்டிருந்த சுந்தரி வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு, நெற்றி சுருங்க, தீயைக் குறைத்துவிட்டு வெளியில் வந்தாள்.

வாட்டசாட்டமாய், வசீகரமாய் ஒரு இளைஞன் கார் கதவைத் திறந்துவெளிப்பட, 'யாரிவர்?' என்று பிரமிப்புடன் பார்த்தாள்.

ரம்யாவின் சாயலில் குழப்பத்துடன் நின்றிருந்த அவளைப் பார்த்ததும், சசிக்குப் புரிந்து போக, புன்னகையுடன் கைகூப்பினான்.

"வணக்கம்மா... என் பேரு சசிதரன். மிஸ் ரம்யா வேலை செய்யற ஆபீஸ்ல ஜி.எம்."

பதட்டமானாள் சுந்தரி.

64805

"வாங்க.. உள்ளே வாங்க!"

பார்வையால் ஒரு முறை வீட்டைத் துழாவினான்.

எளிமையாய், அடக்கமாய், சுத்தமாய் இருந்தது. சுவரினை அலங்கரித்த ஒரே ஓவியம் ரம்யாவின் போட்டோ மட்டும்தான்.

ஒரு பெரிய பிளாஸ்டிக் கூடையை அவளிடம் நீட்டினான்.

பல வகையான பழங்கள், இனிப்புடன், ஹார்லிக்ஸ் பாட்டிலும், க்ளுகோஸ் பாக்கெட்டும் இருந்தன.

"ஏ.. எதுக்குங்க இதெல்லாம்?"

"பரவாயில்லை. எடுத்துக்குங்க.. ரம்யா இப்ப எப்படி இருக்காங்க?"

"அவளுக்கென்ன.. நல்லாதானே இருக்கா? நிக்க வச்சிட்டே பேசறேனே.. உங்காருங்க.. இதோ வந்துட்டேன்!" என்று உள்ளே சென்றாள்.

சசிக்குக் குழப்பமாக இருந்தது.

'ரம்யா நன்றாக இருப்பதாகச் சொல்கிறார்களே... நான்பாட்டுக்கு எதையோ கற்பனை செய்து..'

"இந்தாங்க தம்பி!" என்று அவனை மேலும் யோசிக்க விடாதவாறு காபியை நீட்டினாள். காபியின் மணம் மூக்கை நிரடியது.

வாங்கிக் கொண்டான்.

"ரம்யா இல்லையா?"

"வர்ற நேரம்தான் தம்பி! ஒரு வாரம் லீவுன்னதும் உடம்பு சரியில்லைன்னு நினைச்சு வீடு தேடி விசாரிக்க வந்த உங்க மனிதாபிமானத்தை நினைச்சா சந்தோஷமா இருக்குங்க. ரம்யாவுக்கு உடம்புக்கு ஒன்னுமில்லே. அவ லீவு போட்டது ஒரு நல்ல விஷயத்துக்காக...!" என்று விளக்கமாய்க் கூறினாள்.

அவள் கூறக் கூற... பிரம்மித்துப் போனான் சசிதரன்.

'அந்த சின்னப் பெண்ணின் மனசுக்குள் இவ்வளவு பெரிய லட்சியமா?'

அவன் மனசிற்குள் மிகப் பிரமாண்டமாய், உருப்பெற்றிருந்தாள் ரம்யா.

மேலும் சில நிமிடங்கள் கரைய.. அதற்கு மேலும் அமர்ந்திருப்பது நாகரீகமில்லை என்று கருதி எழுந்தான்.

"சரிங்கம்மா.. நான் புறப்படறேன்.. ரம்யா வந்தாங்கன்னா, நான் விசாரிச்சேன்னு சொல்லுங்க."



"கொஞ்சம் இருந்தீங்கன்னா அவ வந்திடுவா! அவளைப் பார்க்கணும்னு முத முதலா வீட்டுக்கு வந்திட்டு, பார்க்காம போகாதீங்க.. ரம்யா வர்ற நேரம்தான்!" சுந்தரி சொல்லி முடிக்கவில்லை. ரம்யா உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

பத்மினி கணவனுக்கும், மகனுக்கும் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தாள். கடச் கட சப்பாத்தியும் சென்னாவும் மணத்தது.

அவள் முகம் களைப்புற்றிருந்தது. புஸ் புஸ்ஸென்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு வீசிங் ப்ராப்ளம் இருந்தது.

பத்மினியை அவள் கணவர் கிண்டலுக்குச் சீண்டிக் கொண்டே இருந்தார். சசி சாப்பாட்டைக் கவனிக்காமல் ஏதோ யோசித்துக் கொண்டு இருந்ததை அப்போதுதான் கவனித்தார்கள்.

"வாட் ஹாப்பெண்ட் சசி?"

"நத்திங் டாடி!"

"நம்பணுமா?"

"என்னப்பா.. ஏதாச்சும் பிரச்னையா?" பதற்றமாய்க் கேட்டாள் பத்மினி.

"அடடா... சொல்லலேன்னா விட மாட்டீங்க போலிருக்கு! ஒரு கேரக்டரை இன்னைக்கு சந்திச்சேன்.. கொஞ்சம் பிரமிப்பா இருந்துச்சு."

"இன்னைக்கு சந்திச்சியா? யாரந்த கேரக்டர்?"

"இன்னைக்கு சந்திச்சேன்னு சொன்னது.. இதுவரை எனக்குத் தெரியாத நல்ல கேரக்டரை. பட், நபரை எனக்கு முன்பே தெரியும். என் ஆபீஸ்லே வொர்க் பண்றா.. பேரு ரம்யா.."



"பொண்ணா?" என்றாள் பத்மினி.

"அந்தப் பேரை ஆம்பளைக்கு வச்சு இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை.. நீ சொல்லு சசி... அப்படி என்ன பண்ணிட்டா அந்த ரம்யா?"

"யோசிச்சுப் பார்த்தா சாதாரண விஷயம்தான். ஆனா, அந்த சோஷியல் வொர்க்கைச் செய்யறதுக்கு கூட எத்தனை பேர் தயங்கறோம்? ரம்யா ஸ்கிரைபரா இருக்கா. அதுக்காகவே ஆபீஸ்க்கு ஒரு வாரம் லீவு போட்டுட்டு பார்வையில்லாதவங்களுக்கு எக்ஸாம் எழுதிக்கிட்டு.. பாடமும் சொல்லிக் கொடுத்திட்டு வர்றா!"

"பரவாயில்லையே! சினிமா, மாயாஜால், டிஸ்கொதேன்னு வயசுப் பொண்ணுங்க சுத்தறாங்க.. அப்படிப்பட்ட கும்பல்ல இப்படியொரு பொண்ணா! வெரிகுட்... நிஜமாகவே பாராட்டக் கூடிய விஷயம்தான்!" மனம் திறந்து பாராட்டினார் வரதராஜன்.

"அதுமட்டுமில்லேப்பா! நான் அவளைப் பாராட்டிப் பேசும்போது இந்தக் காலத்துல மனிதன்ங்கற போர்வையிலே மிருகங்கள்தான் நடமாடிட்டு இருக்கு. சேவை மனப்பான்மை குறைஞ்சுக்கிட்டே வருது. நீங்க இப்படி மனிதாபிமானத்தோட செய்யற உதவிகள்.. எனக்கு கூட இப்படித் தோணலையேன்னு வெட்கப்படறேன்னேன். அதுக்கு அவ சொல்றா, இது ரொம்ப சாதாரண விஷயம் சார். மனிதனை மனிதனா ஆக்கறது உதவிகளும் வசதிகளும் அல்ல. இடையூறுகளும், துன்பங்களும்தான். இப்ப நான் வாழ்க்கையில் எட்டியிருக்கிற உயரங்கள் சில அடிகள்தான். ஆனா இதுக்காக எங்கம்மா பட்டபாடு.. எனக்குத்தான் தெரியும்... அடிபட்டவங்களுக்குத்தான் அடுத்தவங்க வலி தெரியும்.. எங்கம்மா என்னைப் படிக்க வச்சிருக்கலேன்னா.. என்னால ஸ்கிரைபரா இருந்திருக்க



முடியுமா? லட்ச லட்சமா பணமிருந்து அதைத் தானம் செஞ்சிருந்தாக் கூட.. இது மூலமா கிடைக்கிற திருப்தியும் சந்தோஷமும் எனக்குக் கிடைச்சிருக்காது சார்.'னு சொன்னாப்பா!"

"ஓ..." என்று ஆச்சர்யப்பட்டார் அப்பா.

"நீ சொல்றதைப் பார்க்கும்போது... அந்த ரம்யா ரொம்ப பொறுமைசாலியா, நல்ல பொண்ணா இருப்பான்னு புரியுது. இப்படிப்பட்ட பெண்களாலதான் வீட்டையும், நாட்டையும் வெற்றிகரமா நடத்த முடியும். அந்தப் பெண்ணைக் கட்டிக்கப் போகிறவன் நிச்சயமாய்... அதிர்ஷ்டசாலியாத்தான் இருப்பான்!" என்றாள் பத்மினி.

அந்த வார்த்தை சசிதரனை ஈர்த்தது.

## 7

முகத்தைக் கண்ணாடியில் இப்படியும் அப்படியுமாய்த் திருப்பிப் பார்த்தான் கார்த்திக். பிளேடு வழித்த அழுத்தத்தில் கன்னத் தசைகள் சிவந்து பளபளப்பைக் காட்டியது.

குக்கர் விசிலடித்துக் கூப்பிட..

கிச்சனுக்கு ஓடிப் போய் ஸ்டவ்வை அணைத்தான்.

இன்று புலாவ் பண்ணியிருக்கிறான். அன்று அவன் செய்த புலாவை ரம்யா ரசித்து, ருசித்துச் சாப்பிட்டது நினைவிற்கு வர.. சிரத்தையுடன் சீக்கிரமே எழுந்து சமைத்தான்.

தலைக்குக் குளிர்ந்த நீரை விட்டுக் கொண்டபோது, உடம்பு சிலிர்த்தது.. ஜில்லிட்டதால் அல்ல... ரம்யாவின் நினைவால்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ரம்யா இன்றுதான் ஆபிஸிற்கு வரப் போகிறாள். பாழாய்ப் போன ஒரு வாரம்! ரம்யாவை ஒரு வாரமாய்ப் பார்க்காததில் என் கண்கள் கூட செல்லரித்துப் போய் விட்டன.

'அட... கவிதை மாதிரி வருகிறதே வார்த்தைகள். ரம்யாவை நினைத்தாலே கவிதை வருகிறதே! எனக்கு மட்டும் நிஜமாகவே கவிதை எழுதத் தெரிந்தால்...? ரம்யாவின் அழகிய விழிகளை ஆச்சரியத்தால் விரிய வைப்பேனே!

தனக்குத் தானே சிரித்தபடி உடையணிந்து கண்ணாடியின் முன் நின்றான். வழக்கத்தை விட அவன் முகம் இன்று பிரகாசமாய், கவர்ச்சியாய் இருந்தது. காதல் ஒருவரை அழகாக்குவது போல வேறெந்த அலங்காரத்தாலும் அழகாக்க முடியாது.

வீட்டைப் பூட்டிப் புறப்பட்டான்.

வீட்டின் சொந்தக்காரர் கீழே வசிக்க, இவன் மாடியில் ஒரு பெட்ரூம், ஹால், பாத்ரூம், கிச்சன் கொண்ட போர்ஷனில் வசிக்கிறான். மாடிப்படி தனியே இருந்தது. கீழ்ப்படியில் வழக்கம் போல் ரஞ்சனி வெட்கத்துடன் நின்றிருந்தாள். வீட்டுச் சொந்தக்காரரின் மகள். பதினெட்டு வயது. பிளஸ் டூவில் பெயிலானதால் வீட்டோடு இருக்க வைத்துவிட்டார்கள். கார்த்திக் அந்த வீட்டுக்குக் குடி வந்தது முதல் ரஞ்சனியின் பார்வையில் காதல் படர்ந்து விட்டது. வலிய அவனிடம் பேச்சுக் கொடுப்பாள். இந்த மாதிரி வம்பில் மாட்டிக் கொள்ள கார்த்திக் விரும்பவில்லை. பதிலே கூறாமல் சங்கடத்துடன் கடந்து சென்று விடுவான்.

"குட் மார்னிங்!" என்றாள் இன்றும்.



"..." தலை நிமிரவில்லை.

"இந்த டிரஸ் உங்களுக்கு ரொம்ப அழகாயிருக்கு!"

"..." கடந்து சென்று விட்டான்.

பெருமூச்சுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரஞ்சனி.

'சரியான ஜடம்! ஆனாலும் உன்னை விடப் போவதில்லை கண்ணா!' கறுவிக் கொண்டாள்.

சற்று முன்னதாகவே ஆபிஸிற்குப் போய் விட்டான் கார்த்திக். ரம்யா... இன்னும் வந்திருக்கவில்லை.

சசிதரனின் அறைக்குச் சென்றான்.

"வா... கார்த்திக்..."

"குட் மார்னிங் சசி!" என்றபடி ஃபைலை நீட்டினான்.

"வெரி குட் மார்னிங்!" ஃபைலை வாங்கியபடி, புரட்டிப் பார்த்து, திருப்தியுடன் டிராயரில் வைத்து மூடினான்.

"ரொம்ப தாங்க்ஸ் கார்த்திக்!"

"எதுக்குப்பா? இட்ஸ் மை டியூட்டி! அதுக்குத்தானே சம்பளம் தர்றீங்க?"

"ஓக்கே.. ஓக்கே...! உன்னை மாதிரி, ரம்யா மாதிரி டேலண்ட் ஆட்கள் என்னிடம் இருக்கும் போது.. நிறைய சாதிச்சுக் காட்டணும்னு தெம்பு வருது. ரம்யா வந்துட்டாளா?"

"இன்னும் இல்லை.."

"ரொம்ப நல்ல பொண்ணு கார்த்திக்! ஒரு வாரம் ஆபீஸ்க்கு லீவுபோட்டிருந்தாயில்லே? உடம்புதான் சரியில்லையோன்னு



நினைச்சு ஒரு ஃபார்மாலிட்டி விஸிட் அடிக்க, அவ வீட்டுக்குப் போயிருந்தேன். அப்புறம்தான் தெரிஞ்சது.."

அவன் சொல்லிக் கொண்டே போக.. ஆரம்பத்தில் அதிர்ச்சியாய் இருந்தாலும், ரம்யா லீவுபோட்டதன் காரணம் அறிந்ததும் நெகிழ்ந்து போனான்.

"ரம்யாவா? ரம்யாவா இப்படி?"

"இந்தக் காலத்துப் பொண்ணுங்க இப்படியொரு ஹெல்ப்பிங் மைன்டோட இருக்கிறது அபூர்வமில்லையா?"

"நிச்சயமா!"

அதன் பிறகு சசி பேசிய எதுவும் அவன் காதில் விழ வில்லை. ரம்யாவை உடனே பார்க்க வேண்டும் போலிருந்தது.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் ரம்யா ஆபிஸிற்கு வந்தாள்.

இருவரும் புன்னகைகளைப் பரிமாறிக் கொள்ள முடிந்ததே யன்றி மதிய உணவு இடைவேளை வரை பேசிக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை.

டைனிங் ஹாலுக்கு வந்ததுதான் தாமதம்... அவளை நோக்கிக் கையை நீட்டினான் கார்த்திக்.

புரியாமல் அவனையே பார்த்தாள் ரம்யா.

"என்ன விஷயம் கார்த்திக்?"

"அட.. மொதல்ல கையைக் கொடுங்க.."

'சரி' என்று நீட்டினாள்.

கொத்தாய் ரோஜாப் பூக்களைப் பற்றுவது போல் அத்தனை மென்மையாக இருந்தது.



சுத்தமாய், நகங்கள் கூட அழகாக நறுக்கப்பட்டு, பொருத்த மான பாலீஷ் உபயோகப்படுத்தி... ஒவ்வொரு விரலும் கவிதையாய்..

பற்றிய கையில் இதமாய்.. பதமாய்... அன்பாய் முத்தமிட வேண்டும் போல் ஆசை எழுந்தது.

கட்டுப்படுத்திக் கொண்டான்.

"கங்க்ராஜுவேஷன்ஸ் ரம்யா... உங்களுக்குள்ளே மதர் தெரசா இருக்காங்கன்றதைத் தெரிஞ்சுக்கிட்டப்ப ஐ'ம் ரியலி ப்ரவுட் ஆஃப் யூ!"

"ஓ.. அதுக்கா? சசி சார் உங்கிட்டேயும் சொல்லிட்டாரா?" என்று செல்லமாய்ச் சலித்துக் கொண்டாலும், மனசு முழுக்க குளிர் காற்று பரவுவது போலிருந்தது.

'அவருக்குதான் என் மேல் எவ்வளவு அக்கறை!' விடாப்பிடியாய் சசி அவள் இதயத்திற்குள் வர முயன்றான்.

எப்போதாவது டைரி எழுதுவான் கார்த்திக்.

அம்மாவிடமிருந்து இன்று கடிதம் வந்தது.

இன்று என் பிறந்த நாள்..

இப்படி நான்கைந்து தாள்களில் கிறுக்கியிருப்பான். மற்ற தாள்களில் ரம்யாதான் நிறைந்திருந்தாள்.

சென்ற மாதம் ரிடையரான அக்கவுண்ட்டன்ட் நீலமேகத் துக்குக் கொடுக்கப்பட்ட சென்ட் ஆஃப் பார்ட்டியில் ரம்யாவுக்கே தெரியாமல் க்ளோஸப்பில் அவளை ஒரு ஸ்டில் எடுத்திருந்தான் கார்த்திக்.

அது டைரியில் பத்திரமாய்ப் படுத்திருந்தது.

எங்கோ, எப்போதோ, எதிலேயோ படித்த ஒரு கவிதை நினைவிற்கு வர.. போட்டோவின் பின்புறம் எழுதினான்.

"தண்டவாளத்தில்

தலை சாய்த்துப் பூத்திருக்கும்

ஒற்றைப் பூ

என் காதல்.

நீ நடந்து வருகிறாயா?

ரெயிலில் வருகிறாயா?"

எழுதி முடித்தவன் ரம்யாவின் போட்டோவைப் பார்த்துப் பேசினான்.

"சொல்லு ரம்யா.. நீ நடந்து வருகிறாயா? ரெயிலில் வருகிறாயா?" வெகு நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவன்.. அதில் இதமாய் இதழ் பதித்தான்.

## 8

இளம் வெயில் பூமியெங்கும் படர்ந்திருந்தது. மாநகர் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. சசிதரன் காரை வேகமாய்ச் செலுத்திக் கொண்டிருந்தான்.

'உயிர் கொண்ட ரோஜாவே!
உயிர் வாங்கும் ரோஜாவே!"

ஸ்டீரியோவில் இதமான சப்தத்தில் பாடிக் கொண்டிருந்த பாடலைக் கூடவே ஹம் செய்து கொண்டிருந்தவன் விழிகள் சட்டெனக் குறுகின.



சற்று தூரத்தில் கும்பலாய் மக்கள் பரபரப்புடன் நின்றிருந்தார்கள்.

'யாருக்கேனும் விபத்தா?' பதற்றத்துடன் காரை விரைந்து செலுத்தி ஓரமாய் நிறுத்தி இறங்கினான்.

"அநியாயமில்லை!"

"உலகம் ரொம்பக் கெட்டுப் போச்சு."

"நல்லதுக்கே காலமில்லை. யாரைத்தான் நம்பறது? கலி முத்திப் போச்சு!"

"பாவம் அந்தப் பொண்ணு!"

"என்னாச்சு?" கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தவன் அதிர்ந்து போனான்.

கைகளைப் பிசைந்தபடி சங்கடத்துடன் ரம்யா.

"ர..ம்..யா..!"

அவன் குரல் கேட்டு நிமிர்ந்தவள் சட்டென முகம் மலர்ந்தாள்.

"சார்..!" என்றபடி அருகில் வந்தாள்.

"என்னாச்சு ரம்யா? உங்களைச் சுத்தி இவ்வளவு பெரிய கூட்டம்?"

"என்னோட ஹேண்ட் பேக்கைத் திருடன் அடிச்சிட்டு ஓடிட்டான்.."

"அட்டா.. எப்படி?"

"அதோ.. அந்த எதிர் பஸ் ஸ்டாண்ட்லதான் நின்னுக்கிட்டிருந்தேன். கண் தெரியாத ஒரு இளைஞர் தட்டுத்தடுமாறி கிட்டே





வந்து, 'என்னை யாராவது ரோடை க்ராஸ் பண்ணி எதிர்ப் பக்கம் விடுங்க... ப்ளீஸ்...'னு கேட்டுக்கிட்டிருந்தார். எல்லோருக் கும் அவரவர் அவசரம்... யாரும் முன்வரலே.."

"அதனாலே நீங்க அழைச்சிகிட்டு வந்திருப்பீங்க.. வந்ததும் பேகை பறிச்சுக்கிட்டு ஒரே ஓட்டமா ஓடியிருப்பான். அப்படித்தானே...?" என்றான் இடைமறித்து.

"ஆமாம்.." என்றாள் தலை கவிழ்ந்து.

"பணம் எவ்வளவு வச்சிருந்தீங்க?"

"செவன் ஹண்ட்ரட்.."

"அவன் இன்னைக்கு நரி முகத்துல முழிச்சிருப்பான். கூட்டம் அதிகமாகக் கூடிக்கிட்டே போகுது. ஏறுங்க முதல்ல."

ஏறிக் கொண்டாள். கார் புறப்பட்டது.

"எல்லோரையும் ஒரேயடியா நம்பிடக் கூடாது ரம்யா. இந்த மாதிரி ஆட்கள் நாட்டிலே பெருகிட்டாங்க. இனிமேல் கேர்ஃபுல்லா இருங்க. ரோடை க்ராஸ் பண்ண ஹெல்ப் பண்ணுங்கன்னு வர்றவங்ககிட்ட கேர் ஃபுல்லாயிருங்க.. ஹெல்ப் பண்ணாதீங்க!"

"அதெப்படி சார்? எல்லோரையும் ஒரே மாதிரி எடை போட்டுட முடியுமா? பயிர்களுக்கு நடுவேதான் புல்லுருவி களும் வளருது. அதுக்காக நெற் பயிரையும் புல்லுருவின்னு சொல்லிட முடியுமா? இன்னைக்கு நடந்த சம்பவத்தால் எனக்குப் பணம் இழப்புதான். ஆனா, அதனால எச்சரிக்கை உணர்வு அதிகமாயிருக்கே தவிர, உதவணும்ங்கற எண்ணம் குறையவேயில்லை. நிஜமாகவே.. உதறவங்களை விட உதவிக்கரம் வேண்டி நிக்கிறவங்கதான் இங்கே அதிகம்.



இன்னைக்கு தேவையில்லாத ஒரு நபருக்கு என் உதவி போய்ச் சேர்ந்திருக்கலாம். அதுக்காக தேவையுள்ளவங்களுக்கு உதவி செய்யக் கூடாதுன்னு முடிவெடுக்கறது... சுயநலம். நான் சுயநலவாதியாக இருக்க விரும்பலை சார்!" என்றாள் பொறுமையாக. பணத்தைப் பறிகொடுத்த வருத்தம் கூட இப்போது அவள் முகத்தில் இல்லை.

அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தவன் உதடுகளுக்கிடையில் சிரிப்பை மென்றான்.

'எதற்காக இப்படி அநியாயத்திற்கு என் மனதில் உயர்ந்து கொண்டே செல்கிறாய் ரம்யா?'

## 9

படுக்கையை விரித்துப் போடுவதும் சுருட்டிக் கொண்டி ருப்பதுமாக... சளைக்காமல் மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருந்தன அலைகள்.

மணல் வீடு கட்டிக் கொண்டிருந்தாள் சிறுமி ஒருத்தி.

டால்பின் மீன்களைப் போல் நீச்சலடித்துக் கொண்டிருந்தனர் மீனவச் சிறுவர்கள்.

ரம்யா அவற்றிலிருந்து பார்வையை விலக்கி மறுபடி சசிதரனைப் பார்த்தாள்.

எதையோ சொல்லத் தவித்துக் கொண்டிருந்தான்.

முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று ஆபீஸ் முடிந்த கையோடு அவளை இங்கு அழைத்து வந்து முக்கால் மணி நேரமாகிவிட்டது.

எத்தனையோ கதைகளில், படங்களில் படித்த, பார்த்த அதே சூழ்நிலை, அதே தவிப்பு.. ஒரு வேளை நான் நினைத்தபடியே அதையேதான் சொல்லப் போகிறாரோ?

இதற்கு மேல் தயங்குவதில் அர்த்தமில்லை என்பது போல் அவள் பக்கம் திரும்பினான்.

''ரம்யா..''

''சொல்லுங்க!''

''நான் என்ன சொல்லப் போறேன்னு புரிஞ்சுக்க முடியுதா?''

''ம்ஹூம்...''

''போர்டு மீட்டிங்ல கொஞ்சம் கூட திணறாம பேசற ஆள் நான். படிக்கறப்ப பேச்சுப் போட்டிக்காக ஏகப்பட்ட பரிசுகள் வாங்கியிருக்கேன். ஆனா, பேச வார்த்தைகள் மறந்து போய், எப்படிப் பேசறேன்னு தெரியாம ஒரு பெண் எதிரே தடுமாறிப் போய் உட்கார்ந்திருக்கேன்னா.. இதுதான் ஃபர்ஸ்ட் டைம்!''

''....?''

''எங்க வீட்லே எனக்காக என் பேரெண்ட்ஸ் பொண்ணு பார்த்துக்கிட்டிருக்காங்க. அதுவும் என் பர்மிஷன் கிடைச்ச பிறகு. பர்மிஷன் கொடுக்கறப்ப கூட எனக்குள்ள எந்த தடுமாற்றமும் இல்லே. இத்தனைக்கும் அப்ப நீங்க எனக்கு அறிமுகமாயிருந்தீங்க. நான் சொல்லப் போற விஷயத்தைக் கேட்டு என்னைத் தப்பா எடை போட்டுட மாட்டீங்களே?''

''சேச்சே..!'' இதயம் துடிக்கும் ஒலி காதருகில் துல்லியமாய்க் கேட்டது.

''பெண்கள் படிச்சோமா, வேலைக்குப் போனோமா, கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தை பெத்தோமான்னு



தங்களோட வட்டத்தைச் சுருக்கிக்கிறதுல எனக்கு எப்பவும் உடன்பாடில்லை. ஏதாவதொரு துறையிலே, விஷயத்திலே தன்னை ஈடுபடுத்திக்கணும். நூறு கோடிப் பேரிலே தனியா தெரியணும். மத்த விஷயங்கள்ல ஈடுபடறது கூட புகழுக்காகவும், பணத்துக்காகவும் இருக்கலாம். ஆனா, எந்த எதிர்பார்ப்பும் இல்லாம, நீங்க வேலைக்குப் போய் சம்பாதிக்கதான் ஆகணும்ங்கற குடும்பப் பின்னணி இருந்தும் ஸ்கிரைபரா சோஷியல் வொர்க் பண்றீங்களே... ஐ லைக் வெரி மச். பிளைண்ட் மாதிரி நடிச்சு உங்க ஹேண்ட் பேகைத் திருடிட்டு ஓடிப் போனப்ப கூட, நான் சுயநலவாதியா இருக்க விரும்பலே... இப்படிப்பட்டவங்களுக்கான என் சேவை தொடரும்!'னு சொன்னீங்க பாருங்க.. அப்பதான் தொட்டீங்க..''

திடுக்கிடலோடு பார்த்தாள்.

''என் இதயத்தை!'' என்றான் அவள் கண்களை இமைக்காமல் சந்தித்து..

''சா..ர்..!'' எதிர்பார்த்திருந்தாலும் அந்த வார்த்தை அவளைத் திக்குமுக்காடவே செய்தது.

''யெஸ் ரம்யா.. ஐ திங்... ஐ லவ் யூ!''

''...''

''இப்படி திகைச்சுப் போயிருந்தா என்ன அர்த்தம்? பிடிச்சா, பிடிச்சிருக்குன்னு சொல்லுங்க.. பிடிக்கலேன்னா பிடிக்கலேன்னு சொல்லுங்க. ஸே.. யெஸ் ஆர் நோ!''

ரம்யாவின் கண்கள் பனித்தது.

''ஒரு அற்புதமான மனுஷனை, காதலை மறுக்கற அளவுக்கு நான் முட்டாள் இல்லை சசி!''



''என்ன சொன்னே? மறுபடி சொல்லு!''என்றவன் முகம் பிரகாசமானது.

''ஒரு அற்புதமான..''

''நோ.. நோ.. அதில்லே.. என்னை எப்படி கூப்பிட்டே?''

''ச.. சசி!'' என்றாள் வெட்கத்துடன்.

''மறுபடி சொல்லு!''

''ம்ஹூம்...'' தலை கவிழ்ந்தாள்.

வெட்கத்தில் முகம் சிவக்க..

ஒற்றை விரலால் அவள் தாடையைத் தொட்டு நிமிர்த்தினான்.

''தாங்க்ஸ் ரம்யா!'' என்றபடி அவள் கன்னத்தைத் தொட்டுத் தன் உதட்டில் ஒற்றிக் கொண்டான்.

இன்னும் வெட்கப்பட்டாள் ரம்யா.

''இதற்கே இப்படி வெட்கப்பட்டா... இன்னும் இதாலேயே தொட்டா என்ன பண்ணுவே?'' உதட்டைக் கடித்துக் காண்பிக்க..

''ச்சீ...'' என்றவளுக்குக் கூடை நிறையப் பூக்களை வாரியிறைப்பது போலிருந்தது.

''ரம்யாவைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?''

சசியிடமிருந்து இப்படியொரு கேள்வி வரவும், குழம்பிப் போனான் கார்த்திக். அதுவும் முன்தினம் அவளை மாலையில் காரில் அழைத்துச் சென்றது வேறு நிரடியது. பாம்பின் கால் பாம்பறியுமே!



அவர்கள் அமர்ந்திருந்தது உயர்தர ரெஸ்டாரண்ட் ஒன்றில்.

''ஏன் கேட்கறே?''

''ப்ச்.. சொல்லேன்!''

''புதுசா சொல்ல என்ன இருக்கு? ரொம்ப நல்ல பெண். திறமையுள்ள பெண். அற்புதமான பெண்!''

''அழகோடு இவை அத்தனையும் சேர்ந்திருப்பது அபூர்வம்தான் இல்லையா?''

''ஆ..ஆமாம்!''

''இத்தனை நாளும் பிஸினஸ் பிஸினஸ்னு அது பின்னாடியே ஓடிக்கிட்டிருந்தேனே தவிர, பெண்கள், சைட், காதல்னு மனசை அலைபாய விட்டதில்லே. அப்படிப்பட்ட என்னையே ரம்யா அசைச்சுப் பார்த்துட்டா கார்த்திக்!'' என்றான், வியர்த்திருந்த குளிர்பானப் பாட்டிலில் ரம்யா என்று கிறுக்கியபடி.

மனதைப் பிசைவது போலிருந்தது.

'என்ன சொல்ல வருகிறான்?'

''நீ..நீ.. என்ன சொல்றே?''

''யெஸ்.. நீ என்ன நினைக்கிறியோ.. அதேதான்! ஐ லவ் ஹர்!''

''ச.. சி!''

''ஆச்சர்யமாயிருக்கா? இதை நான் ரம்யாகிட்டே சொன்னப்ப அவ முகத்தைப் பார்க்கணுமே!''

''சொ.. சொல்லிட்டியா?''

''ம்.. நேத்து!''

"அவ.. அவளுக்கு!"

"பரிபூரணச் சம்மதம். அவளுக்கும் என் மேலே ஏற்கெனவே ஒரு சா∴ப்ட் கார்னர் இருந்திருக்கு. உங்களை மாதிரி ஒரு பர்ஸன் கிடைக்க நான் அதிர்ஷ்டம் பண்ணியிருக்கணும்னு சொன்னா. சீக்கிரம் இதைப் பத்தி வீட்லே பேசப் போகிறேன்.." உற்சாகமாய்ப் பேசிக் கொண்டே போனான் சசிதரன்.

துளிர்த்த கண்ணீரை மறைக்க மிக மிகச் சிரமப்பட்டான் கார்த்திக்.

காதலர்கள் இருவரும் நாகரீகமாய்க் காதலை வளர்த்தனர்.

தங்களுக்குப் பிடித்தது பிடிக்காதது பற்றி பரிமாறிக் கொண்டார்கள்.

"எனக்கு ஸ்போர்ட்ஸ்ல ரொம்ப இன்ட்ரஸ்ட். அதுவும் ∴புட்பாலும், டென்னிஸும்னா எனக்குச் சோறு தண்ணியே வேண்டாம். இன்டர்நேஷனல் லெவல்ல விளையாடற அளவுக்கு சான்ஸ் கிடைச்சது. பட். அந்த சமயத்துல கால்ல அடிபட்டு சின்னதா ∴ப்ராக்சர். கேப் விழுந்துடுச்சு. அந்த இடைப்பட்ட நாட்கள்ல... உன் வாய்ஸ் ரொம்ப நல்லா இருக்கே.. சினிமாவுல பாடலாமேன்னு ஏத்தி விட்டுட்டாங்க.. அப்ப ஏதோ ஒரு ஆர்வத்துல சங்கீதம் கத்துக்கிட்டேன். மூணு நாலு முறை ஸ்டேஜ்லயும் பாடியிருக்கேன். சினிமாவுல பாடணும்னு ஆசைதான். பட். அதுக்குள்ளே மைன்ட் பிஸினஸ்க்கு மாறிடுச்சு. பிஸினஸ்ல ஓரளவு என் இலக்கை எட்டியாச்சுன்னுதான் சொல்வேன். ஜி.எம். போஸ்ட்டிங் என் வயதுக்கு மீறிய பதவி. ஆனாலும் அது என் திறமைக்குக் கிடைச்ச பரிசு. அதே சமயம் சினிமாவுல பின்னணி பாடணுங்கற என்னோட ஆசை இன்னும் நீறுபூத்த நெருப்பாதான் இருக்கு."



அவன் பேசுவதைப் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆமா.. உனக்கு இந்த மாதிரி இன்ட்ரஸ்ட்டெல்லாம் உண்டா ரம்யா?"

"எனக்கா...?" என்று சிரித்தாள்.

"இந்தப் படிப்பை முடிக்கவே அம்மா எவ்வளவு உழைக்க வேண்டியிருந்தது தெரியுமா? பொழுதுபோக்கா சில விஷயங்கள்ல ஈடுபடறப்பதான் நமக்குள்ளே என்னென்ன திறமைகள் இருக்குங்கறது தெரிய வரும். எந்நேரமும் படிப்பு, படிப்புன்னு அதிலே மட்டுமே கவனமாயிருந்தேன். அதனால எனக்குள்ளே எக்ஸ்ட்ரா ஆக்ட்டிவிட்டிஸ் என்ன இருக்குன்னே தெரியாது. நானொரு வீட்டுப் பறவை.. அவ்வளவுதான். மயிலோ, குயிலோ அல்ல..!"

"நீ பேசறதே கவிதை மாதிரி இருக்கு ரம்யா.."

"கதை,கவிதைன்னு நிறைய புக்ஸ் படிப்பேன். கவிதைங்கற பேர்ல கிறுக்குவேன். வேறெந்தப் பொழுது போக்கும் கிடையாது."

"சோம்பேறி!" என்று செல்லமாக அவள் தலையில் குட்டினான் சசிதரன்.

"ஆ.." என்று வலிப்பது போல் சிணுங்கினாள் ரம்யா.

தொலைபேசி கிணுகிணுத்தது.

பத்மினி எடுத்து 'ஹலோ' என்றாள்.

"எப்படியிருக்கீங்க பத்மினி?"என்றது எதிர்முனை.

"ஹலோ மகேஸ்வரி... எப்படியிருக்கே? ரொம்ப ஆச்சர்யமாயிருக்கே... நீயே போன் பண்றே! நீ சரியான



சோம்பேறியாச்சே! எப்பவும் நான்தானே பண்றது வழக்கம்..!"

"கிண்டல் பண்ணாதே. இன்னைக்கு நீ ∴ப்ரீயா இருக்கியா?"

"ஏன் கேட்கிறே?"

"என் பொண்ணு ராகவியோட கச்சேரி இன்னைக்கு இருக்கு. வரணும்னு சொல்லிட்டிருந்தியே.. வாயேன்!"

"அப்படியா? கண்டிப்பா வந்திடறேன். டைம் சொல்லு!"

மகேஸ்வரி சொன்னதைக் குறித்துக் கொண்டு, ஒரு திட்டத்துடன் அன்று மாலையே புறப்பட்டு விட்டாள் பத்மினி.

வி.ஐ.பி. சீட்டில் மகேஸ்வரியின் பக்கத்தில் அமர்ந்து கச்சேரியை ரசித்ததை விட.. ராகவியைத்தான் வெகுவாக ரசித்தாள்.

"உன் பையன் சசிதரன் எப்படியிருக்கிறான்?" என்று கேட்டாள் மகேஸ்வரி.

"அவனுக்கென்ன... ராஜா! பெரிய கம்பெனியிலே ஜி.எம்.மா இருக்கான். அவனுக்குப் பொருத்தமான பொண்ணைத் தேடிக்கிட்டிருக்கேன்!"

"நா.. நானும் ராகவிக்கு நல்ல மாப்பிள்ளையைத் தேடிக்கிட்டிருக்கேன். நல்ல வரன் இருந்தா சொல்லு பத்மினி!"

"நாம ரெண்டு பேருமே கையிலே வெண்ணெயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலையறோம்... மகி! பேசாம நாம சம்பந்தியாய்ட்டா என்ன?"



"எ.. என்ன.. நிஜமாகவா சொல்றே?" ஆச்சரியமும், சந்தோஷமும் போட்டியிட்டன பேச்சில்.

"எனக்கு ராகவியை ரொம்ப பிடிச்சுப் போச்சு. சசிக்கும் பிடிக்கும். இன்னைக்கே அவன்கிட்டே இதுபத்தி பேசிடறேன்!"

"செய்!" என்ற மகேஸ்வரியின் முகத்தில் நிம்மதி.

## 10

"போதும்மா..!" இன்னொரு கோதுமைத் தோசையைத் தட்டில் போட வந்த அம்மாவைத் தடுத்தான்.

"ஒண்ணுதானே... சாப்பிடு! நீங்க ரெண்டு பேரும் வந்திருக்கணும் கச்சேரிக்கு... அவ்வளவு கூட்டம். அந்தப் பொண்ணு என்ன அருமையாப் பாடறா தெரியுமா! குரலா அது...! அப்பப்பா.. சரஸ்வதி கடாட்சம் நிறைஞ்ச பொண்ணு!"

வரதராஜன் மனைவியை ஓரக் கண்ணால் பார்த்தார்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதே! கச்சேரிக்குப் போய் வந்ததிலிருந்தே ராகவியின் புகழ் பாடிக் கொண்டிருக்கிறாள் என்றால் காரணம் இல்லாமலா?

"இந்தச் சின்ன வயசிலேயே எவ்வளவு பேரும் புகழும்! அழகுன்னா.. அப்படியொரு அழகு. சினிமாவுல நடிக்கக் கூட நிறைய சான்ஸ் வந்ததாம் விருப்பமில்லைன்னு மறுத்துட்டாளாம். ஏற்கெனவே பூர்வீக சொத்து பத்து உண்டு. அது போதாம இவ பாடிச் சம்பாதிச்சது வேற! நல்லா ஓவியம் வரைவாளாம்! யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோ? பொண்ணுக்கு வரன் பார்த்திட்டு இருக்காளாம். நானும் சொன்னேன், என் பிள்ளைக்கும் வரன் பார்த்திட்டிருக்கேன்னு!"

''நானும் உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்னு நினைச்சிட்டிருந்தேன்,'' என்று தயங்கியபடி ஆரம்பித்தான் சசிதரன்.

''என்ன சசி?''

''எனக்கு உங்களைப் பத்தியும், அப்பாவைப் பத்தியும் நல்லாத் தெரியும். மத்த அப்பா, அம்மா மாதிரியில்லாம, பிள்ளையோட எந்த நியாயமான விருப்பத்தையும் நிறைவேத்தற அருமையான, புரிஞ்சுக்கிட்ட பேரென்ட்ஸ். அதனாலதான் தைரியமா உங்ககிட்டே எதைப் பத்தி வேணும்னாலும் பேச முடியுது!''

''என்னப்பா சொல்ல வர்றே?'' அதிர்ச்சியுடன் மகனை நோக்கினாள் பத்மினி.

அதே உணர்வுதான் வரதராஜனுக்கும்.

''பொண்ணு பார்க்கற வேலையை ஸ்டாப் பண்ணிடும்மா!''

''ஏன்ப்பா?'' குரல் நடுங்கியது.

''நானே பார்த்திட்டேன்!''

''ச..சி!!''

''யாருப்பா அந்தப் பொண்ணு?'' என்றார் ஆச்சர்யமாய் அப்பா.

''அன்னைக்கே சொன்னேனே.. ரம்யான்னு..''

''சோஷியல் வொர்க்ல ரொம்ப இன்ட்ரஸ்ட் உள்ளவள்னு..''

''யெஸ்.. அவளேதான்..''

''அவ உங்க ஆபீஸ்ல உனக்குக் கீழே வேலை பார்க்கிறவதானே சசி?'' என்றாள், பத்மினி - சுவாரஸ்யம் குறைந்தவளாய்.



சசி இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவான் என்று பத்மினி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ராகவியைத் தன் மருமகளாக்கிப் பெருமைப்பட்டுக் கொள்ள ஆசைப்பட்ட அவள் கனவெல்லாம் சிதைந்து போன அதிர்ச்சி.

''ஆமாம்... ரொம்ப ஏழைப் பொண்ணுதான்! பணம் என்ன பெரிய விஷயமா? அதை நாம என்றைக்குமே பெரிது பண்ணியதில்லை. ரம்யா ரொம்ப நல்ல பெண்! நம் குடும்பத்துக்கு ஏத்த பெண்!''

''நீயும் காதல்ல விழுந்திடுவேன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலே சசி!'' என்றாள் வருத்தமாய்.

''காதல் பண்ணலேன்னாதான் ஆச்சரியமே! ஒரு பெண்ணின் சிவந்த உதடுகளைக் காட்டிலும் நான் கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியின் சிவப்பு நிறத்தை அதிகம் நேசிக்கிறேன்!' என்ற ரஷ்யாவின் லெனின் கூட காதல் தோல்வியால்தான் செத்துப் போனான். நமக்குப் பிடிக்கிறதை விட சசிக்குப் பொண்ணைப் பிடிக்கணும். அதான் முக்கியம்!'' என்ற அப்பாவை நன்றியுடன் பார்த்தான் சசி.

''நீ ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே? இந்த விஷயம் உனக்குப் பிடிக்கலையா?'' பட்டென்று கேட்டான்.

''சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்லே! ஆனா, இந்த விஷயத்திலே அவசரப்பட்டு சரின்னு சொல்ல முடியலே. அந்த ரம்யாவைப் பத்தி முழுக்கத் தெரியாம எப்படி நான்...?''

''டோன்ட் ஒர்ரிம்மா! ரம்யாவைப் பார்த்ததுமே உனக்குப் பிடிச்சிடும். இவதான்டா உனக்கேத்தவள்னு நீயே சொல்லுவே. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு,'' என்றான் தெளிவாய்.

தொய்ந்து போனாள் பத்மினி.



நான் என் பெற்றோரிடம் நம் காதல் விஷயத்தைக் கூறிவிட்டேன், நீயும் உன் அம்மாவிடம் கூறிவிடு என்று சசி சொன்னதிற்கிணங்க இன்று அம்மாவிடம் எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்தாள் ரம்யா.

இரவு உணவிற்காகச் சப்பாத்தியைப் பிசைந்து கொண்டிருந்தாள் சுந்தரி.

கசகசப்புப் போகக் குளித்துவிட்டு நைட்டியில் வந்தமர்ந்தாள் ரம்யா.

''இப்படிக் குடும்மா... நான் பிசையறேன்!'

64805

''ஏம்மா.. பாவம்.. நாள் முழுக்க ஆபீஸ்லே வேலை பார்த்துட்டு களைப்பா வந்திருக்கே.. நான் பார்த்துக்கறேன்.. நீ போய் டி.வி. பார்த்திட்டிரு..''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.. இதைக் குடுத்துட்டு நீங்க வேற வேலையைப் பாருங்க..''

வலுக்கட்டாயமாய் அம்மாவிடமிருந்து பாத்திரத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

சுந்தரி சற்று நேரம் மகளையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் ஈரமானது.

அதைக் கவனித்த ரம்யா பதறிப் போனாள்.

''என்னம்மா... என்னாச்சு உனக்கு?''

''வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கதான் ஆகணுங்கற விதி என்னோட முடிஞ்சு போயிருக்கக் கூடாதா? உன்னை வேலைக்கு அனுப்பறதிலே எனக்கு விருப்பமே இல்லை ரம்யா!''



''இதிலே என்னம்மா தப்பிருக்கு?''

''தப்புன்னு சொல்லலே! எத்தனையோ பொண்ணுங்க வேலைக்குப் போகாம, கல்யாணம் பண்ணிக்கிட்டு, சீரும் சிறப்புமா வாழலியா? அந்த மாதிரி என் பொண்ணும் வாழணும்னு ஆசைப்பட மாட்டேனா?''

''நேரம் காலம் வந்தா எல்லாம் தன்னால நடக்கும். ஏன் எல்லாத்தையும் நினைச்சு உன்னை நீயே கஷ்டப்படுத்திக்கறேம்மா!''

64805

''மனுஷனோட வாழ்க்கை காளான் மாதிரி! வளர்ந்த மாதிரி வளர்ந்து சட்டுனு காணாமப் போயிடும். அதுக்கு உதாரணம் உங்கப்பா! நான் நல்லாயிருக்கும்போதே உனக்கொரு கல்யாணம் பண்ணிப் பார்த்திடணும்!''

''ஓஹோ அப்படியா? எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கப் போகிறே?'' கலகலப்பாய்ப் பேச்சை மாற்றி அம்மாவின் முகத்தில் புன்னகையைப் படர விட்டாள்.

''நம்ம தகுதிக்குச் சாதாரண வேலை செய்யற வரன் கிடைத்தாலும், உன் அழகுக்கு ராஜகுமாரன் மாதிரி அழகா ஒரு மாப்பிள்ளை கிடைக்க மாட்டானா என்ன?''

''அழகுன்னா.. எப்படி, யாரை மாதிரி எதிர்பார்க்கிறே?''

''ம்..'' என்று சில கணங்கள் யோசித்தவள், ''அன்னைக்கு உன்னைப் பார்க்க உங்க ஆபீஸ் ஜி.எம். வந்திருந்தாரே.. அந்த மாதிரி..''

''என்னது அவரையா?'' வேண்டுமென்றே அதிர்ச்சி அடைந்தவள் போல் கேட்டாள்.

"ஐயோ.. அவரைச் சொல்லலே! அவர் எவ்வளவு பெரிய இடம்! அந்தப் பிள்ளைய எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. நமக்குக் கீழே வேலை செய்யறவதானேன்னு கவுரவம் பார்க்காம, உனக்கு உடம்பு சரியில்லைன்னு நினைச்சுக்கிட்டு வீடு தேடி வந்தாரே.. அந்த நல்ல மனசும், தோற்றமும் எனக்குப் பிடிச்சிருந்தது. அந்த மாதிரி ஒரு பையன் கிடைச்சா உனக்குப் பொருத்தமா யிருக்கும்னு நினைச்சேன்.. அவரைச் சொல்லலை."

"ஏன் அவர் உன் மருமகனா வந்தா ஏத்துக்க மாட்டியா?"

"ரம்யா! என்ன சொல்றே நீ?" புரியாமல் பார்த்தாள் சுந்தரி.

"ஆமாம்மா!" வெட்கத்துடன் தலை கவிழ்ந்தாள் ரம்யா

"எனக்குப் புரியலே.. புரியற மாதிரி சொல்லு!" பரபரத்தாள்.

"அவரும் நானும்.." என்றபடி, சுருக்கமாய்ச் சொல்லி முடித்தாள்.

சுந்தரியின் கண்ணில் பயம்.

"அவர் ரொம்ப பெரிய இடம்! இதெல்லாம் நடக்குமா ரம்யா?"

"கண்டிப்பா!"

மகளை இழுத்தணைத்துக் கொண்ட சுந்தரி விசும்பினாள்.

"கடவுள் கல்நெஞ்சுக்காரன்னு நினைச்சிட்டிருந்தேன். அவன் நம்ம மேலே இவ்வளவு கருணையைக் காட்டுவான்னு நான் நினைச்சே பார்க்கலே.. என் பொண்ணு ராணி மாதிரி வாழப் போகிறா! நன்றி முருகா.. ரொம்ப நன்றி!"

"சசி!"



ரம்யாவின் கையைப் பிடித்துக் கற்பனையில் வலம் வந்து கொண்டிருந்தவன் அம்மாவின் குரல் கேட்டுப் பதறிப் படுக்கையை விட்டு எழுந்தான்.

"என்னம்மா?" என்றான் ஆச்சரியமாய்.

இரவு பத்தரை மணிக்கு மகனைத் தேடி அவன் படுக்கையறைக்கே வந்திருக்கிறாளே!

"உங்கிட்டே கொஞ்சம் பேசணும்!"

"பேசுங்க.. அனுமதி கேட்காதீங்க.. நான் உங்க பிள்ளை!"

"அந்த நம்பிக்கையிலேதான்.. என் பிள்ளை என்னோட நியாயமான பேச்சைக் கேட்பான்கற அசைக்க முடியாத நம்பிக்கையிலேதான் வந்திருக்கேன்!"

"சொல்லும்மா... என்ன விஷயம்?"

"நான் காதலுக்கு எதிரியில்லை. அதை முதல்ல புரிஞ்சுக்கணும்!"

"நல்லாவே தெரியும்."

"உனக்குப் பிடிக்காத எதையும் செய்து எனக்குப் பழக்கமில்லே!"

"நீங்க சொல்லித்தான் தெரியணுமா, என்ன?"

"நம்ம குடும்பத்துக்கென்று ஒரு கவுரவமிருக்கு சசி. அது உன் கல்யாணத்தால கெட்டுடக் கூடாது."

"அம்மா... என்ன ஒரு மாதிரியா பேசறீங்க..?'

"ஒரு மாதிரியான குடும்பத்திலேர்ந்து பொண்ணைக் கட்டிக்க நீ துடிக்கிறியே... பேசித்தானே ஆகணும்!"

சசிதரனின் முகம் மாறியது.





"நீ யாரைச் சொல்றே? ரம்யா குடும்பத்தையா?"

"ஆமாம் சசி! தீர விசாரிச்சுட்டுதான் சொல்றேன். பணம் நமக்குப் பெரிசில்லே. கட்டின புடவையோட வரட்டும். ஏத்துக்கறேன். அநாவசியமா அடுத்தவங்களைப் பத்திப் பேசக் கூடாதுன்னாலும், உனக்கு உண்மை தெரியணுமே.. ரம்யாவோட அப்பா பயங்கர குடிகாரன். அவர் ஆக்ஸிடண்ட் ஆகிச் செத்துப் போனது கூட போதையிலே இருந்தப்பதான். அதுக்குப் பிறகு பாண்டியன்ங்கற ஆள்தான் அந்தக் குடும்பத் தலைவனா இருந்திருக்கிறான். கேட்கவே அசிங்கமாயில்லே!"

பாண்டியனைப் பற்றி தங்கள் குடும்ப நண்பர் என்று ரம்யாவே கூறியிருக்கிறாள். அதிலும் அம்மாவைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். பொய் பேச மாட்டாள்.

குழம்பிப் போனான் சசி.

"ஆனா, ரம்யா நல்லவம்மா!"

"இருக்கட்டும். ஆனா, அவளைப் பார்க்கிறவங்க ரம்யா நல்ல பொண்ணுங்கறதைப் பத்திப் பேச மாட்டாங்க. அவளோட அம்மாவைப் பத்திதான் பேசுவாங்க.. அது உனக்கு அசிங்கமில்லையா?"

பதில் சொல்லத் தெரியவில்லை சசிதரனுக்கு.

## 11

"சோஷியல் வொர்க்தானே? யார்தான் பண்ணலே? உங்கப்பா பண்ணலியா? எனக்குத் தெரிஞ்ச எத்தனையோ பேர் பண்ணிட்டு தானிருக்காங்க. நான் உனக்காக ஒரு அருமை யான பொண்ணைப் பார்த்து வச்சிருக்கேன்."



"அம்மா!" கோபமாய் அலறினான்.

"அவசரப்படாதே! நீ ரம்யாவைப் பத்தி சொன்னப்ப நான் மறுத்துச் சொல்லலியே. இப்பக் கூட ரம்யாவைதான் கட்டிக்கு வேன்னு நீ பிடிவாதம் பிடிச்சா உனக்காக நான் விட்டுக் கொடுக்கவே செய்வேன். கடைசி வரைக்கும் துணையா வரப் போகிற உறவைத் தர்ற சடங்குதான் கல்யாணம். இதிலே அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டாமே. நான் சொல்றதை யும் கன்ஸிடர் பண்றதிலே எந்த தப்பும் இல்லே..நான் சொல்ற பொண்ணைப் போய்ப் பார்! நான் வாய் திறந்து எதையும் சொல்ல மாட்டேன். நீயே புரிஞ்சுப்பே. அதுக்குப் பிறகும் ரம்யாதான் வேணும்னு அடம் பிடிச்சா, உன் விருப்பப்படியே கல்யாணம் நடக்கும். உன்னை நீ குழப்பிக்காம தூங்கு!" என்று அறையை விட்டு வெளியேறி விட்டாள் பத்மினி.

குழம்பாதே என்று பயங்கரமாய் அவனைக் குழப்பி விட்டாள்.

சசிதரனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஆபீஸ் கேட்டருகே வரும்போதே பைக்கை நிறுத்திவிட்டு வந்து கொண்டிருந்த கார்த்திக்கைப் பார்த்து விட்டாள் ரம்யா.

சிநேக புன்னகையுடன் அவனை நோக்கிச் சென்றாள்.

"ஹலோ.. குட் மார்னிங்!"

"ஹலோ.. ரம்யா.. குட் மார்னிங்!" என்றான்.

"என்ன சார், ஒரேடியா ஒரு மாசம் லீவு எடுத்துக்கிட்டு ஊருக்கு ஓடிப் போயிட்டீங்க? நீங்க இல்லாம சாப்பிடவே பிடிக்கலை தெரியுமா?"

இதுவே பழைய கார்த்திக்காய் இருந்தால், குறும்புடன் பதில் சொல்லியிருப்பான். அவள் இப்போது சசிதரனின் காதலி. என்று சசி ரம்யாவைக் காதலிப்பதாகச் சொன்னானோ, அப்போதே நொறுங்கிப் போய்விட்டான். தனக்குத்தானே ஒருதலையாய்க் காதலை வளர்த்துக் கொண்டு அதிலிருந்து மீள முடியாமல் தவித்தான்.

எந்த தோல்வியையும் தாங்கிக் கொள்ளலாம்... காதல் தோல்வியைத் தவிர. அந்த வேதனையுடன் சகஜமாய் ரம்யாவின் முகம் பார்த்துப் பேச முடியாது என்று புரிந்தது. தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ளத் தனிமை அவசியம் என்று உணர்ந்தவன் ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டு சொந்த ஊருக்குப் போய் விட்டு இதோ, இன்றுதான் வந்திருக்கிறான்.

"ஊர்ல கொஞ்சம் பிரச்சனை. அதனாலதான்! சரி... அதை விடுங்க.. நீங்க எப்படியிருக்கீங்க? சசி எப்படி இருக்கிறான்?"

"அவருக்கென்ன? நல்லாயிருக்கார். அவர் நல்லாயிருந்தா நானும் நல்லாயிருப்பேன் அல்லவா?" வெட்கத்துடன் கூறினாள்.

"ஆனா, நீங்க ரொம்ப டல்லாயிட்ட மாதிரி தெரியுது!" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே ரம்யா! ஐ'ம் ஆல்ரைட்.. ஒக்கே... லன்ச்ல மீட் பண்ணுவோம்!" அவளிடமிருந்து வலிய விலகிச் சென்றான்.

அன்று மாலை!

சீக்கிரமாகவே புறப்பட்ட சசிதரனை வியப்போடு பார்த்தாள் ரம்யா.



"என்ன சசி கிளம்பிட்டீங்க?"

"அது.. அது வந்து ஒரு கச்சேரிக்குப் போகிறேன்!" தடுமாறினான்.

"கச்சேரியா.. நானும் வர்றேன்.. ப்ளீஸ்!"

"ஸாரி ரம்யா... என் ஃபேமிலியோட போகிறேன்!"

"ஓ.. அப்படியா? சரி. போய் வாங்க!"

ஒரு வித உறுத்தலோடு கிளம்பிப் போய்விட்டான் சசிதரன்.

வேண்டாவெறுப்பாகத்தான் பெற்றோருடன் கச்சேரிக்குச் சென்றான்.

ஆனால், அங்கு ஓவியம் ஒன்று உயிர்பெற்று வந்து பாடியது போலிருந்தது ராகவியைப் பார்க்கும்போது.

குரல் தேனினும் இனிமை. குயிலை விட இனிமை. பனியை விட குளுமை. தமிழைக் கடித்துத் துப்பாமல் அட்சர சுத்தமாய், தெளிவாய்ப் பாடிய விதம் அவனை வெகுவாய்க் கவர்ந்தது. அவள் தனக்காக அம்மா பார்த்த வரன் என்பதைச் சுத்தமாய் மறந்து இசையில் லயித்துப் போனான்.

கச்சேரி முடிந்தபின், அதில் கிடைத்த பெரும் தொகையை அப்படியே.. ஊனமுற்ற பள்ளிக்கு நன்கொடையாக அளிப்பதாக ராகவி கூறியதும், கரகோஷம் மண்டபத்தையே கிடுகிடுக்க வைத்தது.

சசிதரன் வியப்பால் புருவத்தை உயர்த்தினான்.

பார்த்தசாரதியும், மகேஸ்வரியும், சசிதரனையும் அவன் பெற்றோரையும் ராகவியிடம் அறிமுகப்படுத்தினர்.



"ஹலோ.." என்ற ஒற்றை வார்த்தையைத் தவிர, வேறு எதுவும் பேசவில்லை ராகவி. கண்களில் ஒரு வித அலட்சியம்.

மிகக் கிட்டத்தில் அவளைப் பார்த்தபோது திகைத்துத்தான் போனான் சசிதரன்.

'இப்படியொரு அழகா!'

மறுநாள் காலை டிபன் சாப்பிடத் தங்கள் வீட்டிற்குச் சசி குடும்பத்ினரை அழைத்தாள் மகேஸ்வரி.

காரில் போய்க் கொண்டிருந்தபோது அம்மாவிடம் கேட்டாள் ராகவி.

"வீட்டுக்கு யாரையும் வரவழைச்சு விருந்து கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கேன்! இவங்க மட்டும் என்ன விதி விலக்கு!"

"அநாவசியமா யாரையும் கூப்பிடறதில்லே. அவசியம் இருக்கிறப்ப கூப்பிடறதிலே தப்பில்லேம்மா!"

"நீ காரணமில்லாம எதையும் செய்ய மாட்டே! அவங்க பார்க்க நல்லவங்களா தெரியறாங்க. உன் திட்டம் என்னன்னு எனக்குத் தெரியும். பாவம்.. ஏமாத்தாதே! அதுவும் அந்தம்மா உன் ஃப்ரண்டுன்னு சொல்றே!"

"எனக்கு என்ன செய்யணும்னு தெரியும். நீ ஒண்ணும் சொல்லாதே! பொண்ணைப் பெத்தவங்களுக்குத்தான்டி அந்த வேதனை யெல்லாம் தெரியும். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். நாளைக்கு அவங்ககிட்டே யதார்த்தமா பேசிச் சிரி!"

"நடிக்கச் சொல்றியா?"



"உன் கால்ல வேணும்னாலும் விழறேன்! என் மனசைப் புரிஞ்சுக்கடி!"

"மைகாட்!" என்றபடி தலையில் கைவைத்துக் கொள்கிறாள் ராகவி.

அவள் தலையை ஆறுதலாய்க் கோதுகிறார் பார்த்தசாரதி. அந்த அன்பில் டென்ஷன் குறைய... கண் மூடித் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்கிறாள்.

பங்களா பிரம்மாண்டமாய் இருந்தது. அசந்து போய் விட்டான் சசிதரன்.

மரியாதைக்காகப் பெற்றோருடன் வாசல்வரை வந்து அவர்களை வரவேற்ற ராகவி, அவசரமாய் ரெக்கார்டிங் தியேட்டர் செல்ல வேண்டியுள்ளது என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிச் சென்று விட்டாள்.

மனதிற்குள் ஒரு ஏமாற்றம் பரவியதை உணர்ந்தான் சசிதரன்.

அறுசுவை விருந்தில் பணக்காரத்தனம் மிளிர்ந்தது.

வீடு முழுக்கச் சுற்றிக் காண்பித்தாள் மகேஸ்வரி.

சுவரெங்கும் மாட்டப்பட்டிருந்த ஓவியங்கள் ராகவி வரைந்ததாம். வியந்து போனான்.

கண்ணாடி அலமாரியினுள் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்த ஷீல்டுகள்... அவளின் பாடும் திறமைக்குக் கிடைத்தனவாம்... அதற்காக இவ்வளவா? யப்பா!

இது எல்லாவற்றையும் விட ராகவியைப் பற்றி அவள் அம்மா சொன்ன விஷயம்தான் ஹைலைட்.. மூன்று அனாதைச்

சிறுமிகளைத் தத்தெடுத்து இந்த இல்லத்திலேயே வளர்த்து வருகிறாளாம்... மாதா மாதம் பணம் அனுப்பி விடுவாளாம்.

அங்கிருந்து புறப்பட்டபோது எதையோ ஒன்றை அங்கேயே விட்டுவிட்டு வருவது போலிருந்தது சசிதரனுக்கு.

பார்த்தசாரதி மனைவியை டென்ஷனோடு பார்த்தார்.

''இதெல்லாம் சரி வருமா, மகேஸ்வரி?''

''எல்லாம் சரிவரும். சசியோட முகத்தைப் பார்த்தீங்களா? அவனுக்கு ராகவியை ரொம்பப் பிடிச்சிருக்கு!''

''உண்மையைச் சொல்லிட்டா என்ன?''

''அறிவு கெட்டதனமா பேசாதீங்க. நம்ம ஒரே பொண்ணுக்குக் கல்யாணம் ஆக வேணாமா? அவளுக்கு என்னங்க குறை? ஒரு உண்மையை மறைக்கப் போகிறோம். அவ்வளவுதான். ராகவிக்கும், சசிக்கும் கல்யாணம் நடக்கணும். நடத்திக் காட்டுவேன். அதுக்காக ஆயிரம் பொய் சொல்லக் கூட நான் தயாராயிருக்கேன்!'' என்றவளின் குரல் வீரியம் குறைந்து அழுகைக்குத் தயாரானது.

பெரிய மனப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருந்தான் சசிதரன்.

'என்ன செய்யப் போகிறேன்?'

'ரம்யாவா? ராகவியா?'

'நானும் வருங்கால மனைவியைப் பற்றிக் கனவு கண்டவன்தான். அதில் பத்து சதவீதம் ஒத்துப் போன ரம்யாவைக் கண்டதும் காதலிக்க ஆரம்பித்தேன். ஆனால் ராகவி? நூறு சதவீதத்தையும் தாண்டி, என் எதிர்பார்ப்பு களையும் விட அதிகமாயிருக்கிறாளே! ரம்யா நல்லவள்.



உதவும் குணம் உடையவள். ராகவி எல்லாத் துறையிலும் தேர்ச்சி பெற்றவள், பிரபலமான பாடகி.

நல்லவள் என்ற ஒரே காரணத்துக்காக ரம்யாவைக் கல்யாணம் செய்து கொண்டபின், அவசரப்பட்டு விட்டோமே.. ராகவியை மிஸ் பண்ணி விட்டோமே என்ற உறுத்தலின்றி சந்தோஷமாய் குடும்பம் நடத்த முடியுமா? இப்போதே அந்தக் கேள்வி எழும்போது.. பின்னாடி விஸ்வரூபம் எடுக்காது என்பது என்ன நிச்சயம்?

மனச்சாட்சி சொல்வதைக் கேட்டு முடிவெடுப்பதா? அல்லது புத்திசாலித்தனமாய் முடிவெடுப்பதா?

ரம்யாவுடனான பழக்கம் இரண்டு மாதம் மட்டும்தான். அவளை என் வாழ்க்கையிலிருந்து விலக்குவதால் பெரிய பாதிப்பென்று எதுவும் ஏற்படாது.

அம்மா பொய் சொல்ல மாட்டாள். ரம்யாவின் குடும்ப கவுரவம் எனக்கு இழுக்கைத் தரும்.

பலமான யோசனைக்குப் பின் தீர்மானமான முடிவிற்கு வந்திருந்தான்.

தராசுத் தட்டில் ரம்யா அமர்ந்திருந்த தட்டு கீழே இறங்கியது.

## 12

'எப்படி ஆரம்பிப்பது?'

இதுவரை அவன் இவ்வளவு டென்ஷனுடன் யார் முன்பும் குற்ற உணர்வு தகிக்க அமர்ந்த தில்லை.



'சுயநலத்துடன் எடுத்த முடிவுதான். ஆனால் வேறு வழியில்லை.'

'என்ன சசி? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? முக்கியமான விஷயம் பேசணும். ரெஸ்டாரண்டுக்கு வந்திடுன்னு சொல்லிட்டு நீங்க மட்டும் கார்ல கிளம்பிப் போனதுமே ஏதோ பிரச்னைன்னு புரிஞ்சது. என்ன சொல்லுங்க?'' கவலையுடன் கேட்டாள் ரம்யா.

அவள் முகத்தைப் பார்த்துப் பேசக் கூட முடியவில்லை அவனால்.

''பிரச்னை பெரிசுதான். ஆனா, நான் சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்டு நீ என்னைத் தப்பா நினைச்சிடக் கூடாது.''

''விஷயத்தைச் சொல்லுங்க.. புதிர் போடாதீங்க!'' முகத்தில் கலவரம் படிந்தது.

''உங்கம்மா மேலே உனக்குப் பாசமிருக்குதானே?''

''அம்மா மேலே பாசமில்லாத குழந்தை ஏது?''

''அவங்க என்ன சொன்னாலும் கேட்பியா?''

''நிச்சயமா! சில விஷயங்கள்ல எனக்கு உடன்பாடு இல்லா விட்டாலும் அவங்க சந்தோஷத்துக்காகவே உடன்படுவேன்!''

''இதுதான்... இதே காரணத்தாலதான்.. நாம் பிரிய வேண்டியதாயிருக்கு ரம்யா..''

''ச.. சி.. எ... என்ன சொல்றீங்க?'' திக்கென அதிர்ந்தாள்.

''ஆமா, ரம்யா. என்னால விளக்கமா சொல்ல முடியலை. அம்மாவுக்கு நம்ம கல்யாணத்துல விருப்பமில்லே. தவிர, முன்னாடியே எனக்காகப் பொண்ணு பார்த்து முடிவு



பண்ணியிருக்காங்க.. நம்ம கல்யாணத்துக்கு எப்படியும் சம்மதிச்சுடுவாங்கன்ற தைரியத்துலேதான் நான் உன்னிடம் நம்பிக்கையை ஏற்படுத்தினேன்..''

''உங்களால.. அம்மாகிட்டே எடுத்துச் சொல்ல முடியாதா?''

''எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அசைஞ்சு கொடுக்கலே. ஸாரி ரம்யா! உங்கிட்டே இப்படி சொல்றதுக்கே எனக்குக் கஷ்டமாதான் இருக்கு. ஆனா, எனக்கு வேறு வழி தெரியலே. என் சந்தோஷம்தான் முக்கியம், அவங்களுக்கு. அந்த அன்பு முன்னால சுயநலமா முடிவெடுக்க மனசு வரலை!''

திகுதிகுவென மனசு எரிய.. கண்கள் பொங்க முற்பட்டதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'வேண்டாம்.. அழக் கூடாது! இவனெதிரே அழுது என் வீக்னசைக் காட்டிக் கொள்ளக் கூடாது. உயர்ந்த இடத்தில் இருப்பவன். அதனால் சாதாரணக் காரணத்தைச் சொல்லி இவனால் என்னைத் தூக்கி எறிய முடிகிறது. வலிக்கிறதுதான். உயிர் போவது போல் வலிக்கிறது. என் வேதனை ஆண் மனசுக்குக் கர்வத்தைத் தரும். ரம்யா.. வேண்டாம். அழாதே... விழுங்கிக் கொள்!'

அடுத்த கணம் இறுகிப்போனாள்.

சட்டென முகத்தில் புன்னகையை உற்பத்தி செய்து கையை நீட்டி வலிய அவன் கையைப் பற்றினாள்.

''எனிவே... கங்க்ராஜுலேஷன்ஸ் சார்! மை ஹார்ட்டி விஷஸ்! நேரமாய்டுச்சு... அம்மா எனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பாங்க... புறப்படறேன் சார்!'' புயலாய் விரைந்து வெளியேறிவிட்டாள்.

"சே.. ஒரு மனதைப் புண்படுத்தி விட்டோமே!" அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

பண்பாடு பொருந்தாத அனுதாபமெல்லாம் மறைமுகமான சுயநலம்தான்!

அம்மா சொல்லச் சொல்ல ஆவேசமானாள் ராகவி.

"ஸ்டாப்பிட் மம்மி! என்ன.. என்ன பேசறீங்க? புரிஞ்சுதான் பேசறீங்களா? ஆர் யூ ஆல்ரைட்!"

"அமைதியா யிரு ராகவி! இப்ப நான் என்ன சொல்லிட்டேன்? என் ஒரே பொண்ணான உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க ஆசைப்படறேன். இதிலே என்ன தப்பு?"

"எல்லாமே தப்புதான்! ஒரு பொம்மைக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க ஆசைப்படறே!"

"உனக்கு நீயே ஒரு வட்டத்தைப் போட்டுக்காதே ராகவி! வெளியிலே வா! நீ எப்பவும் இப்படியே இருந்திட முடியாது. உனக்குன்னு ஒரு துணை வேணும்!"

"அதுக்காக? அடப் போம்மா... உருப்படியா வேற வேலையைப் பாரு!"

"கடவுள் நமக்கு ஒரு பிரச்னையைக் கொடுத்தான்னா.. கூடவே அதை ஸால்வ் பண்ண ஒரு வழியையும் கொடுப்பான்."

"உன் பொண்ணு நல்லாயிருக்கணும்னு மட்டும்தானே பார்க்கிறே!.. அதனால இன்னொருத்தர் வாழ்க்கையும் அழியுமே.. அது பெரிய பாவமில்லையா?"

"நீ சொல்றது புரியுது! உன்னோடது தீர்க்க முடியாத பிரச்னையல்ல ராகவி. நீ குறையா நினைக்கிற விஷயத்தை... அதைக் குறையாகவே எடுத்துக்காம.. ஏத்துக்கிட்டா?"



"மம்மி.. நீ என்ன சொல்றே?"

"ஆமாம் ராகவி! பத்மினி என்னோட ஃப்ரண்ட். உன்னைப் பத்தி அவளுக்கு நல்லாவே தெரியும். அவளோட புருஷனும் ஹெல்பிங் மைண்ட் உள்ளவர்தான். சசிதரன்கிட்டேயும் பேசியிருக்காங்க. உன்னைச் சசிக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. பத்மினி உன்னைப் பத்தி சொன்னப்ப, 'இதெல்லாம் பெரிய விஷயமா? ராகவியை ராகவிக்காகவே எனக்குப் பிடிச்சிருக்கு. உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க!'ன்னு சொன்னானாம். இப்ப என்ன சொல்றே?"

"நிஜமாகவா சொல்றே? உண்மையைத் தெரிஞ்சும், சசி என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னாரா?" நம்ப முடியாமல் கேட்டாள்.

"ஆமாம், ராகவி! உனக்கு நான் சொல்றதுல நம்பிக்கை வரலேன்னா... நீயே சசிக்கு போன் பண்ணிப் பேசு!"

"அதெப்படி.. நான் போய் அவர்கிட்டே.. அந்த விஷயத்தைப் பத்தி... " மறுத்தவளின் கண்களில் ஒரு இளக்கம்.

'சசி.. நீங்கள் அவ்வளவு நல்லவரா?'

"சொல்லு ராகவி! ஒரு மாசத்துக்குள்ளே, கல்யாணத்தை முடிச்சிடலாம்னு சொல்றாங்க. ஏற்பாட்டை ஆரம்பிக்கட்டுமா?"

"சரி, ஆனா.. இன்னும் ஒரு வாரத்துல இன்னிசை நிகழ்ச்சிக்காக கல்ஃப் போறேனே! இருபது நாள் புரோகிராம்."

"நீ சம்மதிச்சதே போதும் ராகவி. மத்ததை நான் பார்த்துக்கறேன். சிம்ப்பிளா இப்ப நிச்சயம் வச்சுக்கலாம். முடிச்சிட்டு நீ கல்ஃப் புறப்படு. அதுக்குள்ளே எல்லா ஏற்பாடும்



நாங்க செஞ்சிடறோம். நீ இந்தியா திரும்பியதும் தாலி கட்டிக்க கழுத்தை நீட்டு.. அது போதும்!"

வசீகரமாய்ச் சிரித்தபடி அம்மாவின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டி, "என்னவோ செய்!" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

இப்படி மனசு விட்டு சிரித்து மகளைப் பார்த்ததேயில்லை மகேஸ்வரி.

குளம் கட்டி நின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டவளின் எதிரே வந்து நின்றார் பார்த்தசாரதி.

"மகேஸ்வரி.. முழுப் பூசணிக்காயைக் கையளவு சோத்துல மறைக்கப் பார்க்கறியே! பயமாயில்லே? நாளைக்கு எப்படியும் உண்மை வெளியே வரும். அப்ப மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மட்டுமில்லே... உன் பொண்ணே உனக்கு எதிரியா மாறுவா?"

"துன்பங்கள் நிரந்தரமல்ல. ஆற்றுத் தண்ணீரிலே எத்தனையோ கசடுகள் அடிச்சிட்டு வருது. அது அங்கேயேவா தங்கிடுது? ஆத்றோட சேர்ந்து ஓடிப் போய்டலியா? அது மாதிரிதான் இதுவும். தப்பு நம்ம பக்கம் இருக்கலாம். ஆனா, ராகவி மாதிரி ஒரு பொண்ணை அவ்வளவு ஈஸியா அவாய்ட் பண்ணிட முடியாது. சசி அப்படிச் செய்ய மாட்டான். ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்ங்கற நம்பிக்கை இருக்குங்க. ஆண்டவன் மேலே பாரத்தைப் போட்டுட்டேன். மத்ததை அவன் பார்த்துப்பான்!" என்றாள் கொஞ்சமும் பயமின்றி.

பார்த்தசாரதி மனைவியைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏன் சசி.. ஏனிந்த முடிவு?" மின்சாரம் தாக்குண்டவன் போன்ற நிலையிலிருந்தான் கார்த்திக்.



"நான் ரம்யாவைக் காதலிப்பதாக எடுத்த முடிவு ஏதோ அவசரத்தில் எடுத்தது. ராகவியைக் கல்யாணம் பண்ணிக்கறதா எடுத்த முடிவு நிதானமா யோசிச்சு, புத்திசாலித்தனமா எடுத்தது..."

"ரொம்ப சுயநலமா யோசிச்சிருக்கே சசி! பாவம் ரம்யா, அவ உன் மேலே ரொம்ப நேசம் வச்சிருக்கா. இந்த ஏமாற்றத்தை அவளால தாங்கிக்க முடியும்னு நினைக்கிறியா?"

"இல்லே கார்த்திக்.. நீ தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கே.. என்னால விளக்கமா சொல்ல முடியலை. ஆனா, நானும் ரம்யாவும் வாழ்க்கையிலே ஒண்ணு சேர்ந்தா சந்தோஷமா வாழ முடியாது. தவிர, இப்ப நாங்க பிரிஞ்சிட்டதால அவளுக்கு எந்த பாதிப்பும் இல்லே. விஷயத்தைச் சொன்னப்ப நான் எதிர்பார்த்த அளவிற்கு அவள் ஷாக் ஆகலே.. ஏன்னா, எங்களுடைய பழக்கம் விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்கள்தான்."

கார்த்திக் நக்கலாய்ச் சிரித்தான்.

"மனசுல காதல் வேர் விடறதுக்குக் கால அளவுன்னு இருக்கா சசி! அதுக்கு ஒரு நிமிஷம் கூட வேண்டாம். ஒரு செகண்ட் போதும். மனசுல பதிஞ்சதை உடனே அழிச்சிட முடியாது சசி! அதுவும் ரம்யா மாதிரியான மென்மையான இதயம் கொண்டவங்களுக்குச் சாத்தியமே இல்லே."

"அவளே ஸ்போர்ட்டிவா எடுத்துட்டு... வாழ்த்துச் சொல்லிட்டுப் போய்ட்டா.. உனக்கேன் ஆதங்கம்? இந்த டாபிக்கை இத்தோடு முடிப்போம்! வேற பேசுவோம்!"

'சசி.. எவ்வளவு நல்லவனாய் இருந்தாய்? ஏன் திடீரென்று மாறிப் போனாய்? எது மாற்றியது உன்னை? என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உன்னிடம் பேசவே பிடிக்கவில்லை.'

"எனக்கு வேற வேலையிருக்கு சசி.. நான் புறப்படறேன்!' சொல்லி விட்டு அவன் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் பைக் உதைத்துக் கிளம்பினான் கார்த்திக்.

சசிதரன் அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

## 13

இரண்டு நாட்களாய் ஆபீஸிற்கு வராத ரம்யாவிடமிருந்து கூரியரில் ராஜினாமா கடிதம் வந்திருந்தது.

எதிர்பார்க்காத சசிதரன் ஆடிப் போனான், என்றாலும் அதுவும் நல்லதற்கென்றே நினைத்தான்.

கார்த்திக் ரம்யாவிற்காக வருத்தப்பட்டான். அவளைச் சந்தித்து ஆறுதலாய் நான்கு வார்த்தைகள் பேச வேண்டும் என்று தோன்றியது. ஆனால், அதற்கு இது சந்தர்ப்பமில்லை. இன்னும் சில நாட்கள் போகட்டும் என்றெண்ணினான்.

திருமண ஏற்பாடுகள் துரிதமாய் நடக்க ஆரம்பித்தன.

பத்மினிக்கும், மகேஸ்வரிக்கும்தான் சந்தோஷம் பிடிபட வில்லை. அந்த இருவரின் விடாமுயற்சியால்தானே இந்த திருமணம் நடக்கிறது! ஒரு சின்னப் பெண்ணின் காதல் முளையிலேயே கிள்ளி நசுக்கப்பட்டது!

ராகவி இதுவரை காதல், திருமணம் என்று எதிலும் மனதைச் செயலிழக்க வைத்ததில்லை. அதையெல்லாம் கிட்டவே அண்ட விடக் கூடாது என்பதற்காகவே அவள் கவனத்தை யெல்லாம் இசையிலும், ஓவியத்திலும் திசை திருப்பியிருந் தாள். அப்படிப்பட்ட இரும்பு இதயத்திற்குள் காதல் நுழைந்து புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தது.



"சசி.. சசிதரன்!"உச்சரித்துப் பார்த்தாள், நா இனித்தது.

"சசி.. நீங்கள் உயர்ந்த நோக்குடைய மனிதரா? என் பிரச்னையெல்லாம் தெரிந்தும் மணக்க முன் வந்திருக்கிறீர்கள் என்றால்.. அற்புதமான மனிதர்தான்! என்னைப் பார்த்ததுமே பிடித்துப் போய் விட்டதாமே! அவ்வளவு காதலா என் மீது! உங்களிடம் பேச வேண்டும் போல் இருக்கிறது சசி. ஆனால் பாழாய்ப் போன வெட்கம் தடுக்கிறது. அது மட்டுமல்ல.. எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் நானும் பெண்தான்! நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். பெண்களுக்கே உரிய அத்தனை பண்புகளும் உடையவள். நானே வலிய உங்களை வந்து சந்திப்பதோ, போனில் பேசுவதோ... இயலாத காரியம். வீட்டிலும் அம்மா'பயங்கர ஸ்ட்ரிக்ட். கல்யாணத்திற்குப் பிறகுதான் பேச வேண்டுமாம். நீங்களாவது பேசலாம் அல்லவா?"

தனியே புலம்பிக் கொண்டிருந்தாள் ராகவி. அதுவே அவளுக்கு இன்ப அவஸ்தையாகத்தான் இருந்தது.

அதே அவஸ்தை சசிதரனுக்கும் இல்லாமல் இல்லை.

பத்மினி மகனிடம் கெஞ்சி அவன் வாயைக் கட்டிப் போட்டிருந்தாள்.

"ஒரு மாசம்தானே! கல்யாணமாகி விடும்.. உன் பொண்டாட்டிகிட்டே யுகம் யுகமாய்ப் பேசிக்கிட்டிரு. யாரும் தடுக்கப் போறதில்லை. ஆனா கல்யாணத்துக்கு முன்னாடி பேசக் கூடாதாம்... நான் சொல்லலை.. உன் வருங்கால மாமியார் சொல்லியிருக்கா. அவங்க குடும்ப வழக்கத்திலே இதெல்லாம் பழக்கமில்லையாம். அதையும் மீறி நீ பேசினா, உன்னைக் கிண்டல் பண்ணுவாங்க. என் பிள்ளை ராஜா, உன்னை யாரும்





கிண்டல் பண்ணக் கூடாது!" என்று ஒரேயடியாய் ஏற்றி விட்டிருந்தாள்.

அம்மாவின் பேச்சை மீற முடியாமல் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான்.

ராகவியும் இன்னிசை நிகழ்ச்சிக்காகக் குவைத் சென்று விட்டாள்.

ஒரு வழியாய்...

திருமணம் நடந்தேறியது.

ரம்யாவிற்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தான். அவளிடமிருந்து வாழ்த்துத் தந்தி வந்திருந்தது. கார்த்திக் சக ஊழியர்களைப் போல் ஒரு மரியாதைக்காக வந்து கலந்து கொண்டான்.

திரையுலகப் பிரமுகர்கள் நிறையப் பேர் வந்திருந்தனர். அன்றைய மாலைத் தினசரிகளில் அவர்களின் திருமணப் புகைப்படத்துடன் செய்தி வெளிவந்திருந்தது.

சசிதரனுக்குப் பெருமையாய் இருந்தது.

சூரியன் எப்போதடா மறையும் என்று காத்திருந்தான்.

ஒரு வழியாய்ச் சூரியன் போய்ச் சந்திரனை அனுப்பி வைத்தது.

முதலிரவல்லவா?

மகளைப் பதைபதைக்கும் நெஞ்சத்துடன் அலங்கரித்துக் கொண்டிருந்த மகேஸ்வரி அடிக்கடி வியர்த்தாள்.

"கடவுளே... நான் செய்தது பெரிய தவறுதான். ஆனால் என் நிலைமையில் இருக்கும் எந்த தாயும் இந்தத் தவறைச்



செய்வாள். எல்லாப் பெண்களைப் போல் என் பெண்ணும் வாழ வேண்டும். இந்த மணவாழ்க்கை அவள் வாழ்க்கையில் ஒரு அற்புதத்தை நிகழ்த்தாதா என்ற நப்பாசைதான். 'என் மகள் வாழ்க்கையில் ஒளியேற்று ஆண்டவா!' மனமுருக வேண்டிக் கொண்டு மகளை அனுப்பி வைத்தாள்.

இவளுக்காகவே பிறப்பெடுத்துக் காத்திருந்தான் சசிதரன்.

சிற்பமும் ஓவியமும் ஒன்று சேர்ந்த கவிதையாய் உள்ளே நுழைந்த ராகவியைப் பெருமிதத்தோடு கைப்பற்றித் தன் பக்கத்தில் அமர வைத்தான்.

"தி கிரேட் ரரகவி... என் வொய்ஃப்.. ஆஹா!"

அவன் கைப்பட்ட சிலிர்ப்பில் கொஞ்சம் தவித்துத்தான் போனாள் ராகவி.

"எல்லா ஹஸ்பண்டும் இந்த நேரத்துலே கேட்கிற அசட்டுத்தனமான கேள்வியை நானும் கேட்கிறேன். என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?" அவன் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டான் சசிதரன்.

"ம்.." என்றாள் வெட்கத்துடன்.

"நான் உங்க வீட்டுக்கு முதன் முதலா வந்தப்ப சரியா முகம் கொடுத்துக் கூடப் பேசாம வெளியே போயிட்டயே... ஏன்?"

"அப்ப உங்களைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. அதுமட்டுமில்லே.. எந்த ஆண்களோடயும் எனக்குப் பேசப் பிடிக்காது. புரொஃபஷனல் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர்த்து."

"கேள்விப்பட்டேன்.. ராகவி நெருப்புன்னு.. இந்த நெருப்பை அணைக்கிற பாக்கியம் இந்த அடியேனுக்குதானே கிடைச்சிருக்கு!"

"ச்சீ.."

"நீ அழகியல்ல.. பேரழகி ராகவி. நீ எனக்குக் கிடைச்சது நான் செய்த அதிர்ஷ்டம்.."

"..."

"நவீன கால சரஸ்வதி நீ! ஒன்னையும் விட்டு வைக்கலியே.. ஓவியம், இசை, இலக்கியம், சமூக சேவைன்னு... அப்பப்பா.. நினைச்சாலே பிரம்மிப்பா இருக்கு. நான் எப்படியெல்லாம் எதிர்பார்த்தேனோ.. அப்படியே நீ கிடைச்சிருக்கே!" அவள் கையை உயர்த்திப் புறங்கையில் முத்தமிட்டான்.

சிலிர்த்தாள்.

"உனக்கொன்னு தெரியுமா? எனக்கும் இசைன்னா ரொம்பப் பிடிக்கும். ஸ்டேஜ்ல பாடியிருக்கேன். சினிமாவுல பின்னணி பாடணும்னு ரொம்ப நாள் ஆசை."

"நிஜமாகவா?" என்றாள் மிகுந்த ஆச்சர்யத்துடன். "நீங்க சினிமாவுல பாடநீங்க.. அது என்னோட பெருப்பு. எங்கே ஒரு பாட்டுப் பாடுங்க.."

"பாடற நேரமாயிது? இதழால் கதை எழுதற நேரமல்லவா?'

'ச்சீ!"

"என்னைப் பத்தி என்ன நினைக்கிறே ராகவி?" முகத்தை மூடிய கைகளை அப்புறப்படுத்தி விரலால் அவள் இதழில் கோலமிட்டான்.

"நீங்கள் எவ்வவு உயர்ந்தவர்! அம்மா உங்களைப் பத்தி சொன்னப்ப கண்கலங்கிட்டேன். எனக்குக் கூட இப்படியொரு அதிர்ஷ்டமான்னு! குறைகளோட ஏத்துக்கறதுதானே



உண்மையான காதல்? என் மேலேதான் உங்களுக்கு எவ்வளவு காதல்!"

"உனக்கென்ன டியர் குறை? நிலவோட மறுபக்கத்தை ஒருமுறையாவது பார்த்துவிட முடியாதான்னு எதிர்பார்ப்பது பேராசை! நீ எனக்குக் கிடைக்க மாட்டியான்னு நினைச்சது கூட பேராசைதானே!"

"சரி.. உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்னு சொல்லுங்க.."

"ராகவி.. ராகவி... மறுபடி ராகவி.."

"என்னைத் தவிர.." கெஞ்சலுடன் அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"எனக்கு இப்ப உன்னைத் தவிர வேறெதுவும் பிடிக்கலே."

"பொதுவான விஷயங்களைச் சொல்லுங்க.. சாப்பாடு, சினிமா, இலக்கியம்.. இது மாதிரி!"

"இதுதான் சாப்பிடுவேன்னு அடம் பிடிக்க மாட்டேன். ஆனா எதையும் சூடா, ருசியா சாப்பிடணும்னு ஆசைப் படுவேன். சினிமா? காலேஜ்ல படிக்கறப்ப நிறைய பார்ப்பேன். இப்ப.. டைமை வேஸ்ட் பண்ண மனம் வரலே... உழைக்கணும்.. முன்னேறணும்.. வீட்டிலே லைப்ரரி வச்சிருக்கேன்.. எல்லா ரைட்டர்ஸையும் வாசிப்பேன்.. அப்புறம்.. எங்க அப்பா அம்மாவுக்கு நான் ஒரே பிள்ளை! அம்மா தனக்கு வரப் போகிற பேரப் பிள்ளைகளுக்காகவே ஒரு பெரிய ரூம் நிறைய டாய்ஸ் வாங்கிக் குவிச்சிருக்காங்க... எனக்குக் குழந்தைகள்னா ரொம்ப உயிர். வீடு நிறைய வசவசன்னு பெத்துக்கணும், பெத்துத் தாரியா?"



ராகவியின் முகம் மாறியது.

"நா.. நா..எப்படி?"

"பின்னே நானா பெத்துக்க முடியும்? நீதான் பெத்துத் தரணும்?" அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

"எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு ஏன் இப்படி பேசறீங்க?"

"எப்படி பேசறேன்?" யதார்த்தமாய்க் கேட்டான்.

"என்னால எப்படி குழந்தை பெத்துக்க முடியும்?"

"ஏன் முடியாது?"

"நான்தான் இன்னும் பெரிய பொண்ணா ஆகலையே.."

"எ..ன்.. ன..?"

திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தான் சசிதரன்.

## 14

விக்கித்து அமர்ந்திருந்த ராகவியின் கண்கள் வற்றாமல் நீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன.

ஒரே நாளில் எல்லாம் முடிந்து போய்விட்டது. பிரச்னை இவ்வளவு பெரிதாய் விஸ்வரூபம் எடுக்கும் என்று சத்தியமாய் மகேஸ்வரி எதிர்பார்க்கவில்லை.

பத்மினி தன் மகளைப் பற்றி இவளிடம் கூறியபோது அவன் எதிர்பார்ப்புக்கேற்ற பெண்ணான ராகவியை அவன் மறுக்க மாட்டான். பிறகு உண்மை தெரிய வந்தாலும் அவள் மீதுள்ள அளவுக்கு மீறிய நேசத்தால் மன்னித்து ஏற்றுக் கொள்வான் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டாள்.

பத்மினி கத்தித் தீர்த்தாள்.



"எப்படி மகேஸ்வரி.. இவ்வளவு பெரிய துரோகம் செய்ய மனசு வந்தது? நாங்க பெத்து வச்சிருக்கிறதோ ஒண்ணே ஒண்ணு! என் குலம் தழைக்க வேண்டாமா? நீயொரு பிள்ளையைப் பெத்து, அவனுக்கு இவளை மாதிரி ஒரு பொண்ணை ஏமாத்திக் கல்யாணம் பண்ணி வச்சா.. சும்மாயிருப்பியா? நகை நட்டுல, சீர் சௌத்தியிலே, ஜாதகத்துல இப்படி பொய் சொல்லி மறைச்சு கல்யாணம் பண்ணியிருந்தா.. அதைக் கூட மன்னிச்சி விட்டுடலாம்! ஆனா நீ பண்ணியிருக்கிற காரியம்.. ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் நீ உருப்பட மாட்டே!"

"பத்மினி! அவசரப்பட்டுப் பேசாதே! ராகவி அழறா பாரு! என் பொண்ணு இந்தளவுக்கு அழுது இப்பதான் பார்க்கிறேன். நான் செஞ்சது தப்புதான். அதுக்காக நான் என்ன தண்டனை வேணும்னாலும் அனுபவிக்கிறேன். என் பொண்ணை வாழாவெட்டியா ஆக்கிடாதே! கல்யாணமானா.. ஒருவேளை வயசுக்கு வரலாம்னு டாக்டர் சொன்னார்."

"இந்த டெஸ்ட் பண்ணிப் பார்க்க உனக்கு எங்க குடும்பம்தான் கிடைச்சுதா?"

"கோடிக் கணக்குல சொத்து இருக்கு.. அதை எல்லாம் உங்க பேருக்கே எழுதிக் கொடுத்திடறேன்!" கெஞ்சினாள்.

"சொத்து கொடுத்து சொத்தையைத் தலைல கட்டலாம்னு பார்க்கறியா? அதுதான் நடக்காது! எங்களுக்கு உங்க பொண்ணு வேணாம்... டைவர்ஸ்தான்!" என்றாள் பத்மினி ஆணித்தரமாக.

பெண்கள் இருவரும்தான் சண்டை போட்டார்களே ஒழிய, ஆண்கள் வாயே திறக்கவில்லை.

'பெண்கள் தாங்கள் நினைத்ததை நடத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக, மூன்று உள்ளங்களைத் திராவகம் ஊற்றி எரிய வைத்துவிட்டார்களே!' என்று பொருமினர்.

'பாவி... எவ்வளவு சொன்னேன்! ராகவியின் கல்யாண விஷயத்தில் ரிஸ்க் எடுக்காதே! உண்மை தெரிந்தால் யாராலுமே ஜீரணித்துக் கொள்ள முடியாது என்று.. கேட்டாளா? எப்படியும் டைவர்ஸ்தான். இதனால் என் செல்ல மகளின் மனம் எப்படியெல்லாம் பாடுபடும்? மருகினார் பார்த்தசாரதி.

'சிநேகிதியின் பிரபலமான மகள் தன் வீட்டு மருமகள் ஆக வேண்டும் என்ற பெருமைக்காக.. அநியாயமாக அந்த ரம்யாவின் மீது பழியைப் போட்டு, மகனைத் தன் வசப்படுத்தி நினைத்ததைச் சாதித்து விட்டாள். ஆனால், அந்த அப்பாவிப் பெண்ணின் கண்ணீர் சும்மா விடுமா? அவளின் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் ஒவ்வொரு பாறாங்கல்லாய் மாறி ஒரே நாளில் வாழ்க்கையைச் சிதைத்து விட்டதே!'' வருந்தினார் வரதராஜன்..

சசிதரன் தலையில் கை வைத்து அமர்ந்தவன்தான். உள்ளுக்குள்ளே எரிமலையைப் போல் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. யாரையும் ஏறிட்டுப் பார்க்கவே பிடிக்க வில்லை.

64805

அவனுடைய அந்த பொஷிஸனே ராகவியை வதைத்தது. இதயத்தைக் கூறுபோட வைத்தது.

''விவாகரத்துதான்.. அதைத் தவிர வேறு பேச்சிற்கே இடமில்லை!'' என்று முடிவாய்க் கூறிவிட்டுச் சென்ற பத்மினியின் பின்னே எந்தவித சலனமுமின்றிச் சென்ற சசிதரனை இதயத்தில் இரத்தம் கசியப் பார்த்தாள்.



அறிமுகமானது சில நாட்களுக்கு முன்புதான் என்றாலும் அவளின் இரும்பு இதயத்தை இளக வைத்துக் காதல் விதையைத் தூவியவன் அவனாயிற்றே! முதல் காதல். அதுவும் திருமணத்தில் முடிந்த காதல். நிலவோட மறுபக்கத்தை ஒருமுறையாவது பார்த்துவிட மாட்டோமான்னு எதிர்பார்ப்பது பேராசை. நீ எனக்குக கிடைக்க மாட்டியான்னு எதிர்பார்த்தது கூட பேராசைதானே! - என்று சொன்ன அதே சசிதரன்... பந்தைக் காலால் எட்டி உதைப்பது போல் உதைத்துவிட்டுப் போய்விட்டார் என் மனசை.

நான் என்னைப் பற்றி மட்டுமே யோசித்தால் சுயநலக்காரி. பாவம்.. அவர் மனதில் என்னென்ன ஆசைகளோ... கற்பனைகளோ! வீட்டிற்கு ஒரே பிள்ளை. அவர் குலம் தழைக்க வேண்டாமா? அவரைக் குற்றம் சொல்ல முடியாது. எல்லாமே அம்மா செய்த தவறு!

'ராகவி!' மகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

'நீ கவலைப்படாதேம்மா! அவங்க கோபத்திலே அப்படி பேசிட்டாங்க. நீ தேவதை! சசிதரனால உன்னை மறக்க முடியாது. கண்டிப்பா உன்கிட்டே வருவான். நீ அழாதே, என் ராஜாத்தி!'

64805

''மேலும் மேலும் பொய் சொல்லி என்னுள்ளே நம்பிக்கையை வளர்த்து ஏமாத்தாதேம்மா! போதும்.. நான் பட்ட அவமானமெல்லாம் போதும். உன்னோட ஆசைக்காக இந்தப் பட்ட மரத்துக்குக் கல்யாணம் பண்ணிப் பார்த்துட்டே.. ஆனா, விஷயம் தெரியாதவங்களுக்கெல்லாம் தெரியப்படுத்தி என்னை அசிங்கப்படுத்திட்டியேம்மா!''

''ராகவி!''



''எப்படிம்மா வெளியிலே தலை காட்டுவேன். ஒவ்வொண்ணா சசியைப் பத்தி சொல்லிச் சொல்லி என் மனசுல ஆசையை வளர்த்தியே... அதை, அவரை எப்படிம்மா மறப்பேன்? போம்மா.. நீ என்னை ஒரு பொம்மை மாதிரி நினைச்சிட்டியேம்மா!'' குரல் வேகமாய் வெளிப்பட...

ஓவென்று கதறினாள் மகேஸ்வரி.

பார்த்தசாரதி மகளுக்கு ஆறுதல் கூற வார்த்தைகளின்றிக் கண் கலங்கினார்.

''நடந்த தவறுகளுக்கு மன்னியுங்கள். உங்கள் தரப்பு நியாயங்கள் புரிகிறது. அதனால் வழிவிட்டு விலகுகிறேன். நீங்கள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளுங்கள். விவாகரத்து அது இது என்று கோர்ட்டுவரை செல்ல வேண்டாமே! நான் பொது வாழ்க்கையில் இருப்பதால் அது சங்கடத்தைத் தரும். ஊரைப் பொறுத்தவரை நான் உங்கள் மனைவியாகவே இருந்துவிட்டுப் போகிறேன், ப்ளீஸ்!

இப்படிக்கு

ராகவி.''

அவள் அனுப்பியிருந்த கடிதத்தை உயிரேயின்றிப் படித்து முடித்து... சலனமின்றி அமர்ந்து விட்டான் சசிதரன்.

''எங்கே தவறு நிகழ்ந்தது? ஏனிப்படி என் வாழ்க்கை கோணல்மாணலாகி விட்டது? ஒவ்வொரு விஷயத்திலும் திட்டமிட்டுத் தேர்ந்தெடுத்து வெற்றியை ருசி பார்த்து வந்த நான் மண வாழ்க்கையில் மட்டும் ஏன் சறுக்கி விழுந்தேன்?

அவள் அம்மாதான் விஷயத்தை மறைத்ததாய் இருக்கட்டும். இவளுக்கெங்கே போனது? தகுதியே இல்லாமல்



பேராசைப்படலாமா? கல்யாணமாகி விட்டால் எப்படியாவது பேசி சமாதானப்படுத்தி விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டாள். அது என்னிடம் நடக்காது. என் நிம்மதியைப் பறித்த அவளைச் சும்மா விடப் போவதில்லை. பணத் திமிர். அதை அடக்கிக் காட்டுகிறேன். வேஷக்காரி. இவளை விட அந்த ரம்யா எவ்வளவோ மேல்.. சே.. அவளைப் போய் அவாய்ட் பண்ணினோமே! அதற்குத்தான் கைமேல் பலன் கிடைத்து விட்டது!

நினைத்து, குழம்பி, வேதனைப்பட்டு.. ஆபீஸிற்கு வர முடியாமல் நீண்டதாய் விடுப்பு எடுத்துக் கொண்டான் சசிதரன்.

ரம்யாவின் வீட்டைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அவ்வளவு சிரமம் ஏற்படவில்லை கார்த்திக்கிற்கு.

எளிமையான அந்த வீட்டின் முன் வந்து நின்றான். கதவு உள்ளே தாழ் போடப்பட்டிருந்தது.

தயக்கத்துடன் கவரோரம் இருந்த சுவிட்சை அழுத்த... காலிங் பெல் அலறியது.

சில கணங்கள் கரைந்த பின் கதவு திறக்கப்பட... அதிர்ச்சியில் கார்த்திக்கின் கண்கள் நிலை குத்தின.

காரணம்..

வேண்டாத பொருட்களுடன் எறியப்பட்ட ஓவியம் போல் நின்றிருந்த ரம்யாதான்.

நிறம் தப்பி, கன்னங்கள் ஒட்டிப் போய், உதடுகள் உலர்ந்து போய், மின்சாரம் பறிபோன பல்புகளாய் ஒளியிழந்து போன விழிகளுடன்...

கார்த்திக்கை எதிர்பார்க்கவில்லை என்பதை விரிந்த கண்கள் வெளிப்படுத்தியது.

இதழோரம் சிறு புன்னகை நெளிய, 'வாங்க கார்த்திக்!' என்று வரவேற்றாள்.

அதிர்ச்சி மாறாமலே அவள் பின்னே உள்ளே நுழைந்தவனை அடுத்த அதிர்ச்சி தாக்கியது.

சுந்தரியின் போட்டோவிற்குச் சந்தன மாலை போடப்பட்டு காமாட்சி விளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

'ரம்யா... எ.. என்ன இது? எ.. எப்போ?"

'எங்கம்மா என்னை விட்டுட்டுப் போய்ட்டாங்க கார்த்திக்!" என்றபடி வாய்விட்டுக் கதறினாள்.

## 15

ஒரே நாளில் மலர்ந்து உதிர்ந்து போன மலரைப் போல் ரம்யா சசிதரனால் ஒதுக்கப்பட்ட செய்தியை அறிந்ததுமே துடித்துப் போனாள் சுந்தரி.

மகளைப் பற்றிப் பல விதமாய்க் கனவு கண்டு கொண்டிருந்தவளுக்கு அந்த செய்திதான் எமனானது.

'நெஞ்சை வலிக்கிறது' என்று மார்பைப் பிடித்துக் கொண்டு கீழே மயக்கமாக விழுந்த அம்மாவைப் பதறி, பயந்து அக்கம் பக்கத்தவர் உதவியுடன் ஹாஸ்பிடலில் சேர்த்தாள்.

சீரியலான நிலைமையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஆனாலும் ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின் நிரந்தரமாய்க் கண்ணை மூடி விட்டாள் சுந்தரி.

அனைத்தையும் சொல்லி முடித்த ரம்யாவினால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.



"அழாதீங்க ப்ளீஸ்! இவ்வளவு நடந்திருக்கு. ஒரு வார்த்தை எனக்குத் தெரியப்படுத்தி யிருக்கலாமே! என்னையும் மனச்சாட்சியில்லாதவன்னு முடிவு பண்ணிட்டீங்க இல்லே?"

கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அப்படியெல்லாமில்லே கார்த்திக்! உங்க வீட்டு அட்ரஸ் எனக்குத் தெரியாது. உங்களை காண்டாக்ட் பண்ணனும்னா ஆபீஸுக்குத்தான் போன் பண்ணனும். நானும் சசிசாரும்... நேசிச்ச விஷயம் எல்லோருக்குமே தெரியும். போன் பண்ணினா டெலிபோன் ஆபரேட்டர் மீனாதான் எடுப்பா. அவ வம்புக்கு அலைபவள்னு உங்களுக்கே தெரியும். வீணா பலதையும் பேசி மனதைப் புண்படுத்துவா.. அதனாலதான்.. ஸாரி கார்த்திக்!"

"இட்ஸ் ஒக்கே! உங்க சூழ்நிலையைப் புரிஞ்சுக்க முடியுது. யாருமில்லாம நீங்க மட்டும் தனியே இருந்து கஷ்டப்பட்டிருக்கீங்கன்னு நினைக்கறப்ப மனசுக்கு ரொம்ப வேதனையாயிருக்கு. உங்களுக்கு யாருமே இல்லேன்னு நினைச்சு துவண்டு போய்டாதீங்க... உங்க நண்பன் நானிருக்கேங்க. சாப்பிட்டீங்களா? போட்டது போட்டபடி கிடக்கறதைப் பார்த்தா சமைக்கவே இல்லை போலிருக்கே! இப்படி சாப்பிடாம பட்டினி கிடந்தா உடம்பு என்னத்துக்காகும்? இருங்க.. நான் ஹோட்டலில் போய் சாப்பிடறதுக்கு ஏதாவது வாங்கி வர்றேன்!"

"வேணாங்க.. எனக்கு எதுவும்.. வே.."

"ஸாரி.. உங்க பேச்சைக் கேட்கறதாயில்லே!" என்று எழுந்து சென்றான்.

பைக்கில் கிளம்பியவன் பதினைந்து நிமிடத்தில் திரும்பி வந்தான் பார்சலோடு.



"ஏன் கார்த்திக்... வீண் சிரமம் உங்களுக்கு?"

"இப்படி பேசறதுதான் கஷ்டமாயிருக்கு எனக்கு. முதல்ல சாப்பிடுங்க!"

அவனே பார்சல்களைப் பிரித்துச் சாப்பிட வைத்தான்.

"வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தா அம்மாவோட ஞாபகம் அதிகமாகும். வேலைக்குப் போகிற ஐடியா இருக்கா ரம்யா?"

"ம்.."

"அப்ப சரி.. அது என் பொறுப்பு! அடுத்த வாரமே ஒரு நல்ல ஆபீஸ்ல வேலை கிடைக்கும். ஒக்கே? நடந்ததையே நினைச்சிட்டிருக்காம... வேறெதிலேயாவது கான்ஸன்ட்ரேட் பண்ணுங்க.. நான் வர்றேன்!" என்று கூறிக் கிளம்பினான்.

அதன் பிறகு தினமும் ஆபீஸ் முடிந்ததும் ஒட்டலில் சாப்பிட எதையாவது வாங்கிக் கொண்டு அவளைப் பார்க்க வருவான். நகைச்சுவையோடு பேசி அவளைச் சிரிக்க வைப்பான். அவள் எவ்வளவு மறுத்தும் கேட்காமல் ஒட்டலில் வாங்கி வருவதால்.. வீட்டில் அவளே சமைக்க ஆரம்பித்தாள்.

சொன்னபடியே ஒரு பெரிய கம்பெனியில் அவளுக்கு வேலை வாங்கிக் கொடுத்தான்.

அவனுக்குக் கைகூப்பி நன்றி சொன்னாள்.

"இதான்.. இதான் வேணாங்கறது. இதென்ன போல்.. எலக்‌ஷன்ல நிக்கற மாதிரி! என்னை ரொம்ப தள்ளி வைக்காதீங்க.. அப்புறம், இன்னொரு விஷயம். நான் இப்ப இருக்கிற வீடு சரிப்பட்டு வரலே.. பெருச்சாளித் தொல்லை அதிகம். அதுவும் மனுஷ வடிவத்திலே இருக்கிற பெருச்சாளி!



அதனால அங்கேயே ரெண்டு தெரு தள்ளி வீடு பார்த்திருக்கிறேன். நீங்கதான் வந்து பால் காய்ச்சணும்!"

"கண்டிப்பா வர்றேங்க.. நீங்க பக்கத்திலேயே வந்துட்டது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்குங்க!" என்றாள்.

அவள் இந்தளவிற்காவது தேறி வந்திருக்கிறாள் என்றால் அது கார்த்திக்கினால்தான்!

அவள் மனதில் கார்த்திக் உயர்ந்த இடம் பெற்றான்.

அலுவலகம் பக்கத்திலேயே என்பதால்.. சீக்கிரமே வீட்டிற்கு வந்து விடுவாள். தனிமை அம்மாவின் நினைவை அதிகப்படுத்த.. அழுவாள்.

ஒரு நாள் அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

"உங்களுக்கு வேறெதிலாவது இன்ட்ரஸ்ட் இருக்கா ரம்யா?"

"ஏன் கேக்கறீங்க?"

"ப்ச்.. சொல்லுங்களேன்!"

"இப்ப எதிலேயும் இல்லே!"

"அப்ப முன்னாடி இருந்திருக்கு!"

"ஆமாம்.. கவிதை எழுதுவேன். கட்டுரையும் எழுதுவேன். பொதுமக்களோட பிரச்னைகளைப் பத்தி நான் எழுதின சில ஆர்ட்டிக்கிள் பத்திரிகையிலே வந்திருக்கு.."

"வெரி குட்... இதை ஏன் முன்னாடியே என்கிட்டே சொல்லலே! இப்ப மறுபடியும் நீங்க எழுத ஆரம்பிக்கிறீங்க.."

"ஐயோ.. நானா? இல்லே கார்த்திக்... நான் இப்ப இருக்கிற மனநிலையில் என்னால எதையும் எழுத முடியாது!"

"ஏன் முடியாது ரம்யா? மனசு வச்சா எதுவுமே கண்டிப்பாக முடியும். அமைதியான சூழ்நிலையிலே எழுதிப் பேர் வாங்கறதிலே என்ன இருக்கு/ இப்படிப்பட்ட மனநிலையிலே, சூழ்நிலையிலே எழுதறதே பெரிய போராட்டம்தான்.. சவால்தான். போராடி ஜெயிக்கிறதுதான் சாதனை ரம்யா. மண்ணுக்குள்ளே புதைச்சாலும், வெளியுலகம் காண முட்டி மோதி வெளியே வருதே விதை? உயிருள்ள பெண் நீ! முடியாதது எது? ஆண்டவன்.. முயற்சி செய்து கடைசி வரை போராடுகிறவரிடம்தான் இருப்பான். அதைப் புரிஞ்சுக்குங்க.. வெற்றி பல தடைகளையும், துயரங்களையும் தாண்டிக் கிடைக்கும் போதுதான் சுவைக்கிறது ரம்யா!"

அவன் வார்த்தைகள் அவளுள் புது ரத்தத்தை ஏற்றியது போலிருந்தது.

"என்னால முடியுமா கார்த்திக்?"

"கண்டிப்பா!"

ரம்யா எழுதத் தொடங்கினாள்.

கார்த்திக் அவளை மேலும் மேலும் ஊக்கப்படுத்தினான். அவள் எழுதியவைகளை அவனே பத்திரிகைகளுக்கு அனுப்பினான். பிரசுரமாகின. அதுவே ரம்யாவினுள் ஒரு உத்வேகத்தை தர, சிறுகதைகள் எழுதினாள்.

அவள் எழுத்தின் வீச்சும், ஆழமும், எடுத்துக் கொண்ட கருவும், மனதைப் பிசைந்த எழுத்துக்களும் வாசகர்களிடமிருந்து ஏகப்பட்ட வரவேற்பைப் பெற.. பத்திரிகைகள் அவள் படைப்புக்களை இருகரம் நீட்டி வரவேற்றன.



முன்னணி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் அவளுக்குத்தான் முதல் பரிசு. போட்டோவுடன் அவள் பேட்டியும் இடம் பெற்றது.

மிகக் குறுகிய காலத்தில் மளமளவெனப் புகழ் ஏணியில் ஏற ஆரம்பித்தாள்.

கார்த்திக்கின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

இந்த இடைப்பட்ட நாட்களில் ஒருமுறை கூட கார்த்திக் அவளிடம் சசியைப் பற்றியோ, அவள் காதல் தோல்வி பற்றியோ பேசியதேயில்லை. அவள் மனம் புண்படும் என்று தெரிகிற எதையும் அவன் பேசுவதில்லை.

ஆபீஸ் முடிந்ததும் வீட்டிற்கு வந்து எழுத ஆரம்பித்து விடுவாள். கார்த்திக்கும் வந்து சேர்ந்த பிறகு எழுதப் போகும் கதையை விவாதித்து, பிறகு எழுத ஆரம்பிப்பாள்.

அவள் காயங்கள் ஆறத் தொடங்கின. ரம்யா புதிதாய்ப் பிறப்பெடுத்திருந்தாள்.

ரம்யாவின் போட்டோ பிரசுரமாயிருந்த வார இதழை வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டேயிருந்தான் சசிதரன்.

விரலால் அவள் போட்டோவைத் தொட்டுத் தடவினான்.

'உன்னை மிஸ் பண்ணிட்டேன் ரம்யா. என் பொக்கிஷத்தைக் கைதவற விட்ட முட்டாள் நான்! எவ்வளவு எளிதாய் உன்னை உதறினேன்! எப்படியெல்லாம் துடித்திருப்பாய்! அந்த வேதனை எப்படியிருக்கும் என்று இப்போது புரிகிறது ரம்யா!'

பத்மினி அவனருகே வந்து நின்றாள்.

அதைக்கூட சசி கவனிக்கவில்லை.





அம்மா அவனிடமிருந்து புத்தகத்தைப் பிடுங்கிப் பார்த்தாள்.

"அந்த ரம்யாவா இது?"

"ம்.."

"நான் ஒண்ணு சொன்னா கேட்பியா சசி?"

"என்னம்மா?"

"அப்ப வேண்டாம்னு சொன்ன அதே அம்மா இப்ப சொல்றேன். உன்னால இவளை மறக்க முடியலேன்னா இவளையே கல்யாணம் பண்ணிக்க. நான் அவளைப் பார்த்துப் பேசறேன்.."

"இல்லேம்மா.. நானே அவளைப் பார்த்துப் பேசறேன்!"

அந்தப் பதில் பத்மினியை சந்தோஷப்படுத்தியது.

சோகத்திலேயே மூழ்கிவிடாமல் கரை ஏற நினைக்கிறானே!

"அதுக்கு முன்னாலே.. ராகவிக்கு டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பிடு. சட்டப்படி எல்லாம் நடந்தாதான் நல்லது. ரம்யாவும் அதைத்தான் எதிர்பார்ப்பா.. இல்லையா?"

யோசித்தவன் தலையாட்டினான்.

"நாளைக்கே லாயரைப் பார்த்திடறேன்!"

## 16

திருமணத் தோல்வி தந்த அடி ராகவியை எதிலும் ஈடுபடவிடாமல்... வீட்டிற்குள்ளே முடங்கிப் போனாள். பெற்றோர் உட்பட யாரிடமும் சரிவரப் பேசுவதில்லை.



மகேஸ்வரியும், பார்த்தசாரதியும் மகளைப் பார்த்துக் குமைந்து போயினர்.

இந்நிலையில் சசிதரனிடமிருந்து வந்த வக்கீல் நோட்டீஸ் அவள் வேதனையை மேலும் கிளறிவிட்டது.

பெண்ணாய்ப் பிறந்தவள் மலர்வதற்குத் தகுதியின்றி அவள் இதயத்தைக் கத்தி கொண்டு பீஸ் பீஸாகக் கிழித்து வேதனைப்படுத்தியது போதாதென்று அந்த அலங்கோலத்தை மேடை போட்டு வேறு காட்டவேண்டுமா?

பார்த்தசாரதி சசிதரனைப் போனில் தொடர்பு கொண்டு கெஞ்சினார்.

"தயவு செய்து கோர்ட் வரை போக வேண்டாம். ராகவி ஏற்கெனவே ரொம்ப நொந்து போயிருக்கிறாள். வீட்டை விட்டு வெளியில்கூடச் செல்வதில்லை. நாங்கள் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விடுகிறோம். இந்த விஷயத்தை ட்ராப் பண்ணி விடுங்கள்!"

"பெரிய மனுஷனாயா நீ? செஞ்சது சாதாரணத் தப்பா? எங்களை எல்லாம் ஏமாளின்னு நினைச்சியா? யாரைப் பத்தியும் எனக்குக் கவலையில்லை. எதுவுமே சட்டப்படி நடக்கணும். இல்லேன்னா பிரச்சனைதான். கோர்ட்டுல சந்திப்போம்!" பட்டென்று ரிஸீவரை வைத்து விட்டான்.

பார்த்தசாரதி மகளைப் பரிதாபமாய்ப் பார்த்தார். அவரால் வேறென்ன செய்ய முடியும்? மகளுக்குப் பார்க்காத வைத்தியமில்லை. அவள் மலர்வதற்குச் சாத்தியமேயில்லை. அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம். ஆனால், குழந்தை பெற வாய்ப்பில்லை. ஆனால், அந்த தாம்பத்திய வாழ்க்கையே அற்புதத்தை நிகழ்த்தி ராகவி மலர்வதற்கு ஒரு சதவீதம் வாய்ப்பிருக்கிறது என்றனர் டாக்டர்கள்.

அந்த ஒரு சதவீத நம்பிக்கைதான் மகேஸ்வரிக்கு அசட்டுத் தைரியத்தைக் கொடுத்து இந்தளவு கொண்டு வந்து வைத்திருக்கிறது. பாசம் நிரம்பிய தாய் மனசு பயமறியவில்லை. டைவர்ஸ் விவகாரத்தைப் பத்திரிகைகள் எப்படியோ மோப்பம் பிடித்துவிட, அன்றைய தினசரிகளில் ராகவியைப் பற்றிய செய்திகள்.

'பிரபல பின்னணிப் பாடகி ராகவியை விவாகரத்து செய்கிறார் சசிதரன்!'

'வயசுக்கே வராத பெண்ணை, ஏமாற்றித் தலையில் கட்டி விட்டதாகப் புகார்!'

பத்தி பத்தியாய்ச் செய்திகள்.

ராகவி ஸ்தம்பித்துப் போனாள்.

ரத்தமும் சதையுமாக ஊறி வளர்ந்த உடம்பு உடைந்து நொறுங்குவதுபோல் அவமானத்தில் சிறுத்துப் போனாள்.

மறுநாள்...

அவளின் படுக்கையறையில் ஒரு கடிதம் மட்டும் இருந்தது.

"கடவுள் கொடுத்த அடி போதாதென்று அம்மா.. பொய் சொல்லித் திருமணம் செய்து வைத்து நீயும் ஒரு அடி கொடுத்தாய்.. தெரிந்தோ, தெரியாமலோ இன்னமும் நான் காதலித்துக் கொண்டிருக்கிற சசியும் டைவர்ஸ் நோட்டீஸ் மூலம் ஒரு அடி கொடுத்தார். இப்போது பத்திரிகைகள் வேறு! தாங்க முடியவில்லை. அடிவாங்கத் தெம்பு இல்லை. இது எதுவும் என் கண்ணில் படாத, காதில் விழாத தூரத்திற்குச் செல்கிறேன். என்னைத் தேடவேண்டாம். திரும்ப வருவேனோ,



மாட்டேனோ? எனக்கே தெரியாது. ஆனால் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்! பயம் வேண்டாம்.

இப்படிக்கு

ராகவி."

"ஐயோ.." என்று மயங்கி விழுந்தாள் மகேஸ்வரி.

அன்று கார்த்திக் தன் வீட்டில் சாப்பிட ரம்யாவை அழைத்திருந்தான். விடுமுறை நாள் வேறு!

அவன் வீட்டினுள் நுழையும்போதே புதிய ஆண் குரல் ஒன்று கோபமாய்க் கத்திக் கொண்டிருந்தது.

"இப்படியே எத்தனை காலத்திற்கு கல்யாணம் வேண்டாம்.. வேண்டாம்னு சொல்லிக்கிட்டிருப்பே? வயசாகலே? உங்கம்மா என்னடான்னா... உன்னை நினைச்சு அங்கே அழுதுக்கிட்டிருக்கா.. எவ்வளவு அருமையான வரன்! அழகுல, படிப்பு, பணத்திலே.. எதிலே குறைச்சல்னு வேணாங்கறே? என்னதான் இருக்கு உன் மனசிலே?"

"மாமா..என் கலியாண மேட்டரை எடுத்துக்கிட்டு என்கிட்டே வராதீங்கன்னு எத்தனை முறை சொல்லி இருக்கேன்?" கார்த்திக்கின் குரலும் உஷ்ணமாய் வெளிப்பட...

"ஓஹோ.. அப்ப வெளியே போடா நாயேன்னு சொல்லாம சொல்றியா? நான் என்ன மானங்கெட்டவனா? உங்கம்மா கூடப் பொறந்துட்ட ஒரே காரணத்துக்காகத்தான்.. ஊர்லேர்ந்து வந்தேன்.. நீ எக்கேடோ கெட்டுப் போ! இனி, இந்தப் பக்கம் தலைவச்சும் படுக்க மாட்டேன், வந்தா... ஏன்டா வந்தேன்னு கேளு.!"



"மாமா!"

"சும்மாயிருடா!" அதே கோபத்துடன் வெளியே வந்தவர் வாசலில் ஒரு ஓரமாய் நின்றிருந்த ரம்யாவைக்கூடக் கவனிக்காமல் கடந்து போய் விட்டார்.

காலிங் பெல்லை அலற விட்டாள்.

வந்து பார்த்த கார்த்திக், 'வாங்க ரம்யா!' என்று வரவேற்றான்.

"யார் கார்த்திக் அவர்? பயங்கரமாய்ச் சத்தம் போட்டுட்டுப் போறார்?"

"என்னோட தாய்மாமன்தான்!"

"எல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். ஏன் கல்யாணம் வேணாம்ங்கறீங்க? அவரோட கோபத்துல நியாயமிருக்கில்லையா?"

"பிடிக்கலே ரம்யா!"

"என்ன பிடிக்கலே?"

"எந்தப் பொண்ணையும் பிடிக்கலே!"

"ஏன்?"

கார்த்திக் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"நான் ஒரு பொண்ணை நேசிச்சேன். ஒன்சைட்லவ்! அவளை என்னால மறக்க முடியலே. மறக்கவும் முடியாது. ப்ளீஸ் ரம்யா.. அவ யாரு, என்னன்னு எதுவும் கேட்காதீங்க. வலிக்கும். புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன். உட்காருங்க.. பாதாம் கீர் போட்டுக் கொண்டு வர்றேன்..." என்று சமையலறையினுள் சென்று விட்டான்.



அந்தச் செய்தி அவளுக்குப் புதிதாய் இருந்தது.

காதலில் உதாசீனம் என்பது எப்பேர்ப்பட்ட வலி என்பதை அவள் அறிவாள். அதனால் மேற்கொண்டு அதைப்பற்றிப் பேசி அவனை வேதனைப் படுத்த விரும்பவில்லை.

சின்ன வீடென்றாலும் நேர்த்தியாய் வைத்திருந்தான். அலமாரியில் நிறைய புக்ஸ் அடுக்கி வைத்திருந்தான்.

ஆவலுடன் அதன் அருகில் சென்றவள் ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தாள். அயல்நாட்டு எழுத்தாளர்கள் முதல் நம்ம ஊர் ஜெயகாந்தன், அகிலன், லக்ஷ்மியின் படைப்புகள் வரை இருந்தன. ஒவ்வொன்றையும் எடுத்து மறுபடி வைத்து, மறுபடி எடுத்தபோது கூடவே ஒரு புத்தகம் வந்துகீழே விழுந்தது.

குனிந்து எடுத்தபோதுதான் அது புத்தகமல்ல, டைரி என்று புரிந்தது. அந்த டைரிக்குள்ளிருந்த ஒரு போட்டோ பாதி வரை எட்டிப் பார்க்க... ஆச்சர்யப்பட்டாள்.

"அட..என் போட்டோ..!'

ஃபேன் காற்றில் படபடத்த போட்டோவின் பின்புறத்தில் ஏதோ எழுதியிருப்பதைப் படித்தாள்.

"தண்டவாளத்தில்

தலை சாய்த்துப் பூத்திருக்கும்

ஒற்றைப் பூ

என் காதல்!

நீ நடந்து வருகிறாயா?

ரெயிலில் வருகிறாயா?"

குப்பென வியர்த்தது ரம்யாவிற்கு. எல்லாமே புரிந்தது.

கார்த்திக் வரும் காலடிச் சப்தம் கேட்டுச் சட்டென அதை டைரியில் வைத்து எடுத்த இடத்திலேயே வைத்து விட்டாள்.

'கார்த்திக்! நீங்களும் என்னைக் காதலித்தீர்களா?'

''கார்த்திக்!''

'சொல்லு சசி!''

இருவரும் இருந்த இடம் கடற்கரை.

அன்றைய சம்பவத்திற்குப் பின் ரம்யாவைப் பற்றியோ, திருமண வாழ்க்கையைப் பற்றியோ பேசிக் கொள்வதில்லை. இயல்பாகவே அவர்கள் நட்பில் சிறு விரிசல் விழுந்து விட்டது. அஃபிஷியலாகப் பேசிக் கொள்வதோடு சரி. அதற்குப் பின் வெகுநாட்களுக்குப் பிறகு இப்போதுதான் வெளியிடத்தில் சந்திக்கின்றனர். அதுவும், 'உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் கார்த்திக்,' என்று சசியே அழைத்ததால்.

''ஏதேதோ நடந்திடுச்சி.. உனக்கும் தெரியும்னு நினைக்கிறேன். டைவர்ஸ் வரை!''

''தெரியும்.. எதற்கு அதெல்லாம்? வேதனை தரக் கூடிய விஷயங்களைப் பேசாமல் தவிர்ப்பதே நலம்!''

''யெஸ்! அதையெல்லாம் மறக்கவே விரும்புகிறேன். நான் ரம்யாவிற்குச் செய்த துரோகத்திற்கு நல்ல பலனை அனுபவித்து விட்டேன். நான்.. நான் ரம்யாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்..''

''...?''

''ப்ளீஸ்.. அவளை மீட் பண்ண நீதான் ஏற்பாடு பண்ணனும்!''



''...''

''கார்த்திக்... என்ன அமைதியாயிட்டே?''

''நத்திங்.. நான் ஏற்பாடு பண்றேன்!'' என்றான் சலனமின்றி.

## 17

கார்த்திக்கின் வற்புறுத்தலுக்குப் பணிந்து தான் ரம்யா அவனைச் சந்திக்க வந்தாள்.

வழக்கமாய் அவர்கள் சந்திக்கும் அதே ரெஸ்டாரண்ட்.

சசிதரன் ரம்யாவை விழியகலாது பார்த்தான். அந்தக் கண்களுக்குள் காதலைத் தேடினான்.

ரம்யாவிடம் எந்த சலனமும் இல்லை.

கார்த்திக் நாசுக்காக அங்கிருந்து செல்ல முற்பட்டான்.

ரம்யா தடுத்தாள்.

''உங்களுக்குத் தெரியாத ரகசியம் எதுவுமில்லை. நீங்களும் இங்கே இருங்கள்!''

''ஆ..ஆமாம். கார்த்திக்.. நீயும் இங்கே இரு!''

வேறு வழியின்றித் தயக்கத்துடன் அமர்ந்தான்.

'எப்படியிருக்கே ரம்யா?'

''ரொம்பவே நல்லாயிருக்கேன்.''

''பத்திரிகையிலே உன்னோட கதைகளை விடாம படிச்சிட்டிருக்கேன். அருமையா எழுதறே. பார்க்கவே சந்தோஷமாகவும் இருக்கு. பிரமிப்பாகவும் இருக்கு. குறுகிய காலத்திலே ரொம்ப



ஃபேமஸாயிட்டே! இவ்வளவு திறமையையும் இத்தனை நாளும் எங்கே வச்சிருந்தே?''

பதில் சொல்லாமல் சிரித்தாள்.

''ரம்யா.. உனக்கு என் மேலே கோபமில்லையே!''

''சேச்சே!''

''நான்தான் அவசரப்பட்டுட்டேன்.. உன்னை மிஸ் பண்ணிட்டதுக்காக நான் வருந்தாத நாளே இல்லை. அம்மா என்னைவிட அதிகமா ஃபீல் பண்றாங்க. இப்ப அவங்களே சம்மதம் கொடுத்துட்டாங்க ரம்யா!''

''எதுக்கு?''

''நம்ம கல்யாணத்துக்கு! ஆமா ரம்யா. ராகவியை நான் டைவர்ஸ் பண்ணப் போகிறேன். என்ன காரணத்துக்காகன்னு உனக்குத் தெரிஞ்சிருக்கும். எனக்குக் குழந்தைகள்னா எவ்வளவு ஆசைன்னு உனக்குத் தெரியும். வயசுக்கு வராத பொண்ணை.. ஏமாத்தி என் தலையிலே கட்டிட்டாங்க..''

''ஸோ.. உங்க வம்ச விருத்திக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறீங்க?''

''அது மட்டும் காரணமில்லே ரம்யா.. ஐ லவ் யூ..''

''ப்ளீஸ்.. வேண்டாம்... மறுபடியும் உங்க வாயால இந்த வார்த்தையைச் சொல்லாதீங்க..''

''ர..ம்.. யா..'' என்றான் அதிர்வாய்.

''என் பேரை உச்சரிக்கக் கூட உங்களுக்குத் தகுதி இல்லே மிஸ்டர் சசிதரன்!'' என்றாள் ஆவேசமாய்..

''ர...ம்..யா..''



சசிதரன் மட்டுமல்ல, கார்த்திக்கும் இதை எதிர்பார்க்கவில்லை.

''பொண்ணுங்கன்னா இளப்பமா போய்டுச்சா உங்களுக்கு? வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கறதுக்கு நீங்க வச்சிருக்கிற அளவுகோல் எது? மனுஷனாய்ப் பொறந்த எல்லாருக்குள்ளும் ஒவ்வொரு திறமை ஒளிஞ்சிட்டுதான் இருக்கு. வசதி வாய்ப்புகள் அத்தனை பேருக்கும் கிடைக்கிறதில்லே... வெளிப்படுத்த! கடையிலே போய் வாங்கின சட்டையை மாத்தி வேற வாங்கற மாதிரி... என்னை விட எக்ஸ்ட்ரா ஆர்டினரியா இருந்த ராகவியைக் கல்யாணம் பண்ணிக்க... என் காதலை அம்மாவைக் காரணம் காட்டிக் குப்பையிலே போட்டீங்க.. அப்ப என் இதயம் எப்படி கண்ணீர் வடிச்சிருக்கும்!''

''ரம்யா...!''

''பிறக்கும் போதே யாரும் பேரும் புகழோட பிறந்திடறதில்லே! ராகவிக்கு சாப்பிடறதுக்குப் பணம் வேணுமே, படிக்கிறதுக்குப் பணம் வேணுமேன்னு நாளையப் பத்தி யோசிக்க வேண்டிய அவசியமில்லே. அதனால அவளால எல்லா ஃபீல்டுலேயும் ஷைன் பண்ண முடிஞ்சது. ஆனா, நாங்க ஏழைங்க. சாப்பாட்டைப் பத்திய கவலைதான் எங்களுக்கு. நல்ல மனுஷனா யிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க? கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்குள்ளே புதைஞ்சிருக்கிற திறமைகளைக் கண்டுபிடிச்சு, என்கரேஜ் பண்ணி வளர்த்திருப்பீங்க... என் வெற்றிக்குப் பின்னாடி நின்னிருப்பீங்க.. இப்ப என் பின்னாடி கார்த்திக் நிக்கற மாதிரி..''

''ரம்யா!''

"பொம்பளைங்க என்ன பிள்ளை பெத்துக்கற எந்திரமா? ராகவி குறை உள்ளவங்கதான். ஆனா, உங்க மேலே நேசம் வச்சவங்கதானே! அந்த நேசத்துக்காக உங்க ஆசையைத் தியாகம் பண்ணியிருக்கலாமே! எந்தக் குறையுமில்லாம பிறந்த எத்தனையோ பெண்களுக்கும் குழந்தை பாக்கியம் இல்லாமலிருக்கு. அதை ஒரு காரணமா காட்டி இவ வேண்டவே வேண்டாம்னு ஒதுக்கி வைக்கறது எப்பேர்ப்பட்ட அரக்கத்தனம்? ஏன், எனக்கும் கூட குழந்தை பெத்துக்கற தகுதி இல்லாம இருக்கலாம். அந்தக் குறை உங்ககிட்டே கூட இருக்கலாம். அதைக் காரணம் காட்டி எத்தனை பொண்ணுங்க கோர்ட்டுப் படி ஏறினாங்க?"

'பளார்!' கன்னத்தில் அறை விழுந்தது போலிருந்தது சசிதரனுக்கு.

"உங்க வீட்லே எல்லோரும் சமூக சேவை பண்றவங்கன்னு பெருமையா சொல்லிக்குவீங்களே! வம்ச விருத்திக்குப் பெத்துதான் ஆகணும்னுயில்லை. தத்து எடுத்து வளர்க்கலாமே! ஏன் ஊருக்கு மட்டும்தான் உபதேசமா?"

காறித் துப்பியது போலிருந்தது.

"குறையில்லா மனுஷனேயில்லை! மனச்சாட்சியில்லாம அடிக்கடி இப்படி மத்தவங்க மனசைப் புண்படுத்தற செயல் கூட உங்களுக்கு குறைதான்! உங்க மேலே எனக்கு எந்தக் கோபமும் இல்லேன்னு சொன்னது உங்களை நான் நினைக்கறதே யில்லேங்கற அர்த்தத்திலேதான்! ராகவி உங்களுக்குக் கிடைச்ச பொக்கிஷம். அதைத் தவற விட்றாதீங்க.. இதுவரை நீங்க தெரிஞ்சோ தெரியாமலோ செஞ்ச தப்புகளுக்கு அவங்களை சந்தோஷப்படுத்தறது மூலமா பரிகாரம் தேடிக்குங்க சார்!"



தலை கவிழ்ந்தான் சசிதரன்.

"ஒரு நடைபிணமா வாழ்ந்திட்டிருந்த என்னை ஒரு மனுஷியா உருவாக்கினது கார்த்திக்தான்! ஒரு குழந்தையைத் தேற்றுவது போல்... என்னைச் சோகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மீட்டு, தாயோட அன்பைத் தந்தவர் கார்த்திக்தான்.

எனக்குள்ளே இப்படியொரு திறமை இருக்குங்கறதைக் கண்டுபிடிச்சு வெளிக் கொணர்ந்து, நாலு பேர் என்னை அடையாளம் கண்டுக்கற அளவுக்கு கவுரவத்தைப் பெறக் காரணமாயிருந்தவர் கார்த்திக்தான்! என்னைப் பொறுத்தவரை என் தெய்வம் இவர்தான்!"

"ர..ம்..யா..!" இதை எதிர்பார்க்கவில்லை கார்த்திக்.

"இப்படியொரு அன்பான இதயம்தான் எனக்கு வேணும் கார்த்திக். உங்க இதயத்துல எனக்கொரு இடம் தருவீங்களா?" அதுவரை கணீரென்று வெளிப்பட்டுக் கொண்டிருந்த அவள் குரல் இப்போது நெகிழ்ந்து பிசிறோடு வந்தது.

சசிதரனால் அதற்கு மேல் அங்கிருக்க முடியவில்லை. துளிர்த்த கண்ணீரை மறைக்க.. சரேலென அந்த இடத்திலிருந்து எழுந்து போய் விட்டான்.

கார்த்திக்கால் நம்பவே முடியவில்லை.

பேசுவது ரம்யாதானா?

அவனை நோக்கி வலது கையை நீட்டினாள். தாங்க முடியாத சந்தோஷத்துடன் அந்தக் கையைப் பற்றிக் கொண்டான். அப்படியே உயர்த்தி, தன் கன்னத்தில் பதித்துக் கொண்டு கண்களை மூடி 'ஹா'வென நிம்மதியாய் மூச்சு விட்டான்.

அந்தக் கை சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டது.

"என்னுயிர் ராகவிக்கு!

என் பிழைகளை மன்னித்துவிடு! என்னைத் தேடி வந்துவிடு! உன் வருகைக்காகக் காத்திருக்கிறேன்!

இப்படிக்கு

உன் கணவன் சசிதரன்."

எல்லா நாளிதழ்களிலும் அறிவிப்புக் கொடுத்திருந்தான் சசிதரன்.. ஒவ்வொரு மாதமும்!

ஒரு வருடம்..

இரண்டு வருடம்...

ஐந்து வருடம்..

ராகவி வரவில்லை!

ஆனாலும், நிச்சயம் என்றாவது ஒரு நாள் அவனிடம் வந்து சேருவாள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தான் சசிதரன்.

அற்புதங்கள் சில வேளைகளில் நேரிடத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றிற்காக நாம் அரும் பாடுபட்டு உழைக்க வேண்டும். உழைப்புக்கேற்ற பலனிற்காகக் காத்திருக்க வேண்டும்.

மனசு நிறைய நம்பிக்கையுடன் காத்திருந்தான்.

அந்த நம்பிக்கை வீண் போகாது!

★ ★ ★

# உயிரே... உருகாதே!



## 1

அன்றைய பொழுது விடிந்து பல மணி நேரங்களாகி விட்டிருந்தன!

பொங்கலுக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. வீடு முழுக்க.. புது பெயிண்ட்டில் புத்தம் புதுப் பெண்ணாய் மிளிர்ந்தது..

கதிரவனின் கதிர்கள் மார்கழிப் பனியை விரட்டிக் கொண்டிருந்தது.

அஷ்டலக்ஷ்மி கிச்சனில் பிஸியாய் இருந்தாள். பொங்கலை இறக்கி, நெய்யில் மிளகு, சீரகம், முந்திரி, இஞ்சியை வதக்கித் தாளித்துக் கொட்டியதில் அருமையான பொங்கல் மணம் வீடெங்கும் பரவியது.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெயை ஊற்றிய அஷ்டலக்ஷ்மியின் கண்கள் ஜன்னல் வழியே தெரிந்த தோட்டத்துப் பக்கம் தாவியது.

ஆர்த்தி சாவகாசமாய்ப் பல் விளக்கிக் கொண்டிருந்தாள்.

அந்த வீட்டின் கடைக்குட்டி! இருபத்திரண்டு வயது நிரம்பிய செலுலாய்ட் சிலை. ஒரே பெண் குழந்தை என்பதால் எல்லோருக்கும் செல்லமானவள்.

ஆர்த்திக்குச் செடி கொடிகள் என்றால் உயிர். நேரம் கிடைக்கும் போதெல்லாம்... அவைகளுடன்தான் மல்லுக்கட்டு வாள். களைகளைக் களைந்து, சருகுகளை அள்ளிச் சுத்தம் செய்வாள். காலையில் எழுந்து, குளித்துவிட்டு ஹோட்டலுக்குக் கிளம்பவே நேரம் சரியாய் இருக்கும் என்பதால்... பல் விளக்குகிற சாக்கில் தோட்டத்தில் மேற்பார்வை பார்க்க வந்து விடுவாள்.

அப்பா கோகுல்நாத் ஒரு கிரவுண்ட் நிலம் வாங்கி இந்த வீட்டைக் கட்டும்போது.... தோட்டத்திற்கென்று கொஞ்சம் நிலத்தை விட்டுத்தான் கட்டினார். வீட்டுக் கதவைத் திறக்கும் போதே.. பச்சைப் பசேலென்று பசுமை கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

64805

ஆர்த்திக்குப் பூச்செடிகள் என்றால் கொள்ளைப் பிரியம் ... அதுவும் ரோஜாச் செடிகள் என்றால் உயிரை விடுவாள்...! தோட்டம் முழுக்க விதவிதமாய்ப் பல வண்ணங்களில் பூத்துச் சிரிக்கும் அழகே அழகுதான்! பூக்களைப் பார்த்து ரசிப்பதோடு சரி! அதைப் பறித்துத் தலையில் சூடிக் கொள்ளும் கதையெல்லாம் ஆர்த்தியிடம் நடக்காது. அம்மாவும் அவளிடம் புலம்புவாள்.

"கொள்ளை கொள்ளையாய்ப் பூத்துக்கிடக்கு. பறிச்சு வச்சுக்கிட்டா என்னவாம்? சரி, உனக்குத்தான் சூடிக் கொள்ளப் பிடிக்கலே.. நான் சூடிக்கவும் விடமாட்டேங்கறே! சாமிக்கு



பூஜைக்குப் பயன்படுத்தவும் விட மாட்டேங்கறே! வீணா பூத்து... செடியிலேயே வாடி, காஞ்சு போகுது!" என்று அங்கலாய்ப்பாள்.

"அம்மா.. பூக்களுக்கும் நம்மை மாதிரி உயிர் இருக்கும்மா! மனுஷனுக்கு ஆயுட்காலம் சராசரி அம்பது வயசு மாதிரி பூக்களுக்கு அதிகபட்சம் ஒரு வாரம். பூக்களைப் பறிக்கறது கொலைக்குச் சமம். நம்மோட அலங்காரத்துக்காக அதுகளைக் கொல்லணுமா? பாவமில்லையா? மனுஷங்களைத் துள்ளத் துடிக்க உயிரைப் பறிக்கிற பாவிகளுக்குத் தண்டனை தரச் சட்டமிருக்கிற மாதிரி... பூக்களைக் கொல்றவங்களையும் தண்டிக்கச் சட்டம் கொண்டு வரணும்மா!" என்பாள்.

மகளை ஏற இறங்கப் பார்ப்பாள் அஷ்டலக்ஷ்மி.

"படிப்பு... படிப்பு! கொஞ்சம் அதிகமாப் படிச்சிட்டாலே மூளை இப்படித்தான் கிறுக்குத்தனமா யோசிக்குமாம்!"

"நல்ல விஷயத்தைச் சொல்றவங்களுக்கு இந்த உலகம் பைத்தியக்காரப் பட்டம் கொடுக்கறது புதுசா என்ன?"

"உன்கிட்டே பேசி ஜெயிக்க முடியுமா ஆர்த்தி? சில விஷயங்கள்ல நம்ம சந்தோஷத்துக்காகச் சுயநலமா முடிவெடுக்கவோ, பயன்படுத்திக்கவோ செய்யலாம். அதிலே தப்பில்லே!"

64805

"அது என்னால முடியாதும்மா! தப்புன்னு தெரிஞ்சும் என்னால தப்பு செய்ய முடியாது."

"ஒருபக்கம்... என் பொண்ணு இவ்வளவு நல்லவளா, இரக்க குணம் உள்ளவளா இருக்காளேன்னு சந்தோஷமா இருக்கு! இன்னொரு பக்கம் நீ இவ்வளவு ஏமாளியா இருக்கியேன்னு பயமாயிருக்கு."





ஆர்த்தி வாய்விட்டுச் சிரிப்பாள்.

"உன் பொண்ணு நல்லவளா இருக்காளேன்னு சந்தோஷப் படும்மா. பயப்படாதே... எனக்கு டைமாய்டுச்சி... நீ உன் வேலையைக் கவனி... ஓடு!" என்று விளையாட்டாய் விரட்டியடிப்பாள்.

ஆர்த்தி பிரஷ் பண்ணிக் கொண்டே ஹோஸ் பைப்பைக் கையில் எடுத்தாள். குழாயைத் திருகி விட்டு, செடிகளுக்குத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தாள்.

பூச்செடிகள் மட்டுமின்றி காம்பவுண்ட் சுவரோரமாய்க் கொய்யா, நெல்லி, மாதுளை மரங்களையும் நட்டு வைத்திருந்தனர். மாதுளைச் செடியில் இப்போதுதான் பூ பூக்க ஆரம்பித்திருந்தது. நர்சரியிலிருந்து மாதுளைச் செடியை வாங்கி வந்து நட்டு வைத்து ஒன்னரை வருடம்தான் ஆகிறது. இவ்வளவு சீக்கிரம் பூ பூப்பதைப் பார்த்ததும் ஆர்த்தியின் முகம் சந்தோஷத்தில் விரிந்தது. அந்த மகிழ்ச்சியில் கொஞ்சம் அதிகமாகவே தண்ணீரைப் பீய்ச்சியடித்தாள்.

"ஹாய்.. ஆர்த்தி.. குட் மார்னிங்!"

முகத்தை மட்டும் திருப்பினாள் ஆர்த்தி.

விக்ரம் நின்றிருந்தான். அவளின் சின்ன அண்ணன்.

"குத் மார்னிங்!" குழறலாய் வந்தது வார்த்தை.

"சமையல் பாத்திரத்தை விளக்கற மாதிரி பல்லை இந்த தேய் தேய்ச்சா... என்னாகறது? பாவம் பிரஷ்... எடுத்திடு!" என்றான் கிண்டலாய்.

அவனை ஒரு முறை முறைத்து விட்டு, வாயிலிருந்த பிரஷ்ஷை எடுத்து வாயைக் கழுவினாள்.



"என்னைக் கிண்டல் பண்ணலேன்னா உனக்குப் பொழுதே விடியாதே!"

"அக்கறையா சொன்னா, கிண்டலா தெரியுதா? மணிக் கணக்கிலே பல்லைத் தேய்ச்சா... தேய்ஞ்சு... கொட்டிடப் போகுது. பல்லெல்லாம் கொட்டிட்டா.. உனக்கு எங்கே போய் மாப்பிள்ளை தேடறது..?"

"காலையில் வம்பளக்காதே! எதையாவது பேசி மூடை ஸ்பாயில் பண்ணாதே... போய்டு!"

"ஏன் ஆர்த்தி கோபப்படறே?" என்று பேசிக் கொண்டே அழகாய் மலர்ந்திருந்த மஞ்சள் ரோஜாவைப் பறிக்கக் கையை நீட்டினான்.

"ஹேய்.. ஹேய்... என்ன பண்றே?" ஹோஸ் பைப்பைக் கீழே போட்டுவிட்டு அவன் கையைப் பற்றி இழுத்தாள்.

"இந்த ரோஸ் அழகாயிருக்கு... பறிக்கக்கிறேனே.."

'வாட்? ரோஸைப் பறிக்கப் போறியா? என்ன விளையாடறியா?"

"இதிலே விளையாட என்ன இருக்கு? எனக்கு இந்த யெல்லோ ரோஸைப் பிடிச்சிருக்கு. பறிச்சுக்கறேன்."

"பிடிச்சிருந்தா பறிச்சிடுவியா? என்னைப் பத்தி நல்லா தெரிஞ்சிருந்தும்... எவ்வளவு தைரியமா கேக்கறே?" இடுப்பில் கையை வைத்துக் கொண்டு முறைத்தாள்.

"தெரியாமதான் கேக்கறேன். பூக்கள் பறிக்கறதுக்காகத்தான் மலருது. உனக்கேன் இவ்வளவு பிடிவாதம்?"

"இருந்துட்டுப் போகட்டும்! ஒரு பூவையில்லே.. ஒரு இதழைக் கூடப் பறிக்க விடமாட்டேன். இடத்தைக் காலி பண்ணு!" என்றாள் கறாராய்.

"உனக்கு நேருவைப் பிடிக்குமா?"

"பிடிக்கும். ஏன் கேக்கறே?"

"நேருன்னு பேரைச் சொன்னாலே என்ன ஞாபகம் வரும்?"

"ரோஜா!"

"நேருவே ரோஜாவைப் பறிச்சு சட்டையில வச்சுக்கறப்ப... நான் வச்சுக்கிட்டா மட்டும் தப்பா?"

"அவர் சட்டையிலே செருகிக் கிட்டது பிளாஸ்டிக் ரோஜா.. அதை யெல்லாம் வச்சுக்கலாமே... என்ன தப்பு?" அவனை மாதிரியே ராகமாய்ச் சொல்லிவிட்டு, குழாயை மூடிவிட்டு, அந்த இடத்தை விட்டுச் சென்றாள் ஆர்த்தி.

"சரியான அடமண்ட்!" சின்னச் சிரிப்புடன் போகும் தங்கையைப் பார்த்த விதம்... அந்த மஞ்சள் ரோஜாவைத் தொட்டான்.

"என்னை எடுத்துக்கோயேன்!"என்று கூறுவது போலிருந்தது.

'ஆர்த்திக்குத் தெரியாமல் பறிச்சுக்கலாமா?'

தோன்றிய வேகத்திலேயே அந்த எண்ணம் மடிந்தது.

"சே.. வேண்டாம்! பெண் பிள்ளை... அவளே பறிச்சு வச்சுக்கறதில்லே... நான் பறிச்சு என்ன பண்ணப் போகிறேன்?' கையை எடுத்துக் கொண்டான்.

விக்ரம், கோகுல்நாத் - அஷ்டலக்ஷ்மி தம்பதிகளின் இரண்டாவது மகன். வசீகரமான இளைஞன். பி.பி.ஏ. படித்து விட்டு எந்த வேலைக்கும் முயற்சிக்காதவன். "உன் அழகுக்கும், கலருக்கும் சினிமாவுல நடிச்சா, அஜீத், விஜய்



எல்லாம் காணாமப் போய்டுவாங்க!" என்று நண்பர்கள் ஏத்தி விட்டிருந்ததால்... சிறு பொறியாய் இருந்த சினிமா ஆசை என்னும் தீ... இப்போது கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. பெற்றவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். விக்ரம் கேட்பதாயில்லை.

அவனின் கனவு, ஆசை விஸ்தாரமானது.

நடிக்க வேண்டும். பணமும் புகழும் பெருக வேண்டும். நாலைந்து கார்கள், நீச்சல் குளத்துடன் கூடிய ஏழெட்டு மாளிகைகள், உலக அழகியை மிஞ்சக் கூடிய அழகில் மனைவி! இந்தக் கனவு நிறைவேற வேண்டுமானால், அவன் சினிமாவில் நடித்துச் சம்பாதித்தால் மட்டுமே சாத்தியம். அப்பாவும், அம்மாவும் சொல்வது போல் ஏதாவதொரு ஆபீஸில் உட்கார்ந்து சேரைத் தேய்த்தால் மாதம் ஆறோ, ஏழோ சம்பாதிக்கலாம். இருக்கிற விலைவாசியில் அந்தப் பணத்தில் என்னத்தைக் குடும்பத்தை நடத்துவது? அது முடியாத காரியம் என்பதில் உறுதியாய் இருந்தான் விக்ரம்.

தோளில் துவாலையுடன் பாத்ரூம் கதவருகே சென்றாள். மூடியிருந்த கதவைத் தட்டினாள் ஆர்த்தி.

"அப்பா... இன்னும் எவ்வளவு நேரம்தான் குளிச்சிட்டிருக்கப் போறீங்க? நீங்க உள்ளே போய்ச் சரியா ஒரு மணி நேரம் ஆகுது!"

"இதோ.. ரெண்டே நிமிஷம்... வந்துட்டேன்!" உள்ளிருந்து குரல் கொடுத்தார் கோகுல்நாத்.

"லேடீஸ் கெட்டாங்கப்பா உங்ககிட்டே!" சலித்துக் கொண்டாள் ஆர்த்தி.

சொன்னபடி இரண்டு நிமிடத்தில் தலையைத் துவட்டிய வாறு பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டார் கோகுல்நாத்.



அப்பாவை ஏற இறங்கப் பார்த்தாள் ஆர்த்தி.

"ஒரு மணி நேரமா குளிச்சீங்களே... அதனால விசேஷமா ஏதாவது மாற்றம் தெரியுதான்னு பார்க்கிறேன்!"

"விசேஷமான மாற்றம்னா?"

"பத்து வயசு குறைஞ்சிடுச்சான்னுதான்.."

"ஏம்மா.. ஒரு அஞ்சு நிமிஷம் லேட்டாயிடுச்சன்னா.. அப்பாவை இப்படி கலாய்க்கணுமா?"சிரித்தபடி கேட்டார்.

'அஞ்சு நிமிஷமா? சொல்லுவீங்க.. சொல்லுவீங்க... உள்ளே சோப் இருக்கா.. இல்லே அதுவும் கரைஞ்சு போச்சா?"

"போக்கிரி.. ரொம்பதான் கிண்டல் பண்றே!" செல்லமாய் அடிக்கக் கையை ஓங்க... சிரித்தபடி பாத்ரூமிற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள் ஆர்த்தி.

கோகுல்நாத்திற்கு ஐம்பத்தைந்து வயது. மத்திய அரசுப் பணியில் சூபர்வைசராகப் பணிபுரிந்தவர். ஓய்வு பெறும் வயதை எட்டு முன்பே கட்டாய ஓய்வில் பணியிலிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம். பணியிலிருந்தபோது சிவியர் ஹார்ட் அட்டாக்கால் பாதிக்கப்பட்டார். டாக்டர் அவருக்கு முழு ஓய்வு அவசியம் என்பதை உணர்த்த, மனமின்றி, விருப்பமின்றி மனைவி, பிள்ளைகளின் வற்புறுத்தலால் கட்டாய - தன் விருப்ப ஓய்வில் பணியை விட்டு விலகினார். கடந்த ஒரு வருடமாய் வீட்டில்தான் இருக்கிறார்.

காபியோடு கணவரிடம் வந்தாள் அஷ்டலக்ஷ்மி.

"இந்தாங்க!"

வாங்கிப் பருகினார்.



"நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே..நீங்க கொஞ்சம் லேட்டா குளிச்சாதான்என்ன?"


"காலையிலே எந்திரிச்சதும் குளிச்சாகணும் எனக்கு. குளிக்காம காபி கூட சாப்பிட மாட்டேன். உனக்குத் தெரியாதா என்ன?"

"அதுக்கில்லீங்க! ஆர்த்தி பல்லாவரத்துல வேலைக்கு ஓடணும். நீங்க குளிக்கப் போனா லேசுல வெளியே வர்றதில்லே... அதனால, அவளுக்குக் கிளம்ப லேட்டாயிடுது! அதுக்காகச் சொன்னேன்!"

"ஆமா லக்ஷ்மி.. நீ சொல்றது சரிதான்..! ஆனா, என் குழந்தையை வேலைக்கு அனுப்பிட்டு, நான் வெறுமனே வீட்ல உட்கார்ந்திட்டிருக்கிறதை நினைக்கறப்ப ரொம்ப வேதனையா இருக்கு!"

"இப்படியெல்லாம் நினைச்சு வருத்தப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கக் கூடாது. டாக்டர் சொன்னதை மறந்திட்டீங்களா?"

"டாக்டருக்கு என்ன... ஆயிரம் சொல்வார்! அவரவர் கஷ்டம் அவரவருக்கு! ஆமா, விக்னேஷ் எங்கே ஆளையே காணோம்?" என்றார் சுற்றுமுற்றும் பார்த்தபடியே.



2

"அவன் காலையிலேயே வெளியே போய்ட்டானே!"

"எதுக்கு?"

"நாளைக்கு வீட்லே கணபதி ஹோமம் பண்ணப் போறோமில்லையா? அதுக்குத் தேவையான பொருட்களை எல்லாம் வாங்கறதுக்காக... விடியற்காலையிலேயே எந்திரிச்சிப் போய்ட்டான்!"

"இந்த வேலையெல்லாம் அவன் செய்யணுமா? நான் வீட்லே சும்மாதானே இருக்கேன். நான் செய்ய மாட்டேனா? நீ விக்னேஷுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா லக்ஷ்மி?"

"ஏம்ப்பா... இந்த வேலையை நான் செய்யக் கூடாதா, என்ன?" அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்த விக்னேஷ் கேட்டுக் கொண்டே வந்தான்.

"வாப்பா... உனக்கு நூறு ஆயுசு!" என்றவர் தொடர்ந்து, 'இந்த வேலையை நான் செய்ய மாட்டேனா விக்னேஷ்? வீட்லே நான் சும்மாதானே இருக்கேன்?" என்றார்.

"இந்த வயசுல நீங்க சும்மாதாம்பா இருக்கணும். அதுக் காகத்தானே வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கினீங்க?"

"அதுக்காக இந்த வேலையைக் கூட செய்யக் கூடாதா? நீ ஆபீஸ்க்கு கிளம்ப வேண்டாமா? அரக்கப் பரக்க சாப்பிட்டுட்டு ஓடணுமா?"

விக்னேஷ் மென்மையாய்ச் சிரித்தான்.

"ஏம்ப்பா டென்ஷனாகறீங்க? ஆபீஸ் கிளம்ப எனக்குப் போதிய அவகாசமிருக்கு. நீங்க சாப்பிட்டு பேப்பர் படிச்சிக்கிட்டு, ரெஸ்ட் எடுங்க. அது போதும்.. அம்மா.. இந்தப் பையிலே தேவையான அத்தனை பொருட்களும் இருக்கு. விடியற் காலையிலே மூணு மணிக்கெல்லாம் ஐயர் வந்திடு வாரு. அவர் வந்த பிறகு எந்திரிச்சி குளிக்கிற வேலை யெல்லாம் வேண்டாம். எல்லாரும் ரெடியா இருக்கணும். சூரிய உதயத்துக்கு முன்பு பூஜை ஆரம்பிச்சாகணும்!"

"விக்ரம்கிட்டேதான் சொல்லணும். அவன்தான் இந்த வீட்லேயே சோம்பேறி!" என்றாள் அஷ்டலக்ஷ்மி.



"என்ன.. என் பேரை ஏலம் போட்டுக்கிட்டிருக்கீங்க?" விக்ரம் அங்கு வந்தான்.

"நாளைக்காவது கொஞ்சம் சீக்கிரம் எந்திரிக்கணும் விக்ரம்... ஐயர் மூணு மணிக்கெல்லாம் வந்திடுவாராம்."

"எதுக்கு ஐயர் வர்றார்ம்மா?"

"நாளைக்கு நம்ம வீட்ல கணபதிஹோமம் இல்லையா?"

"மைகாட்! வீடு முழுக்கப் புகை வளர்த்து... போச்சுடா... அப்ப.. இன்னைக்கு நைட்டு என் ஃப்ரண்ட் கபிலன் வீட்லேதான் படுத்துக்கணும் போல.."

"என்னடா பேசறே? வீட்லே ஒரு சுபகாரியம் பண்றச்சே... நீ வீட்லே இல்லாம.. ஃப்ரண்ட் வீட்லே படுத்துக்கப் போறியா? இது நல்லாவா இருக்கு?" அப்பா சற்றே கோபமாகக் கேட்டார்.

"அப்பா.. எனக்கு இந்த மாதிரி பூஜை புனஸ்கார விஷயங்களில் நம்பிக்கையில்லை. நம்பிக்கையோ, ஈடுபாடோ இல்லாத விஷயங்களில் நேரத்தையோ, உடல் உழைப்பையோ வீணாக்கறது முட்டாள்தனமில்லையா? தவிர, நாளன்னிக்கு ஒரு டைரக்டரைப் பார்க்கப் போகணும். இன்னைக்கு ப்யூட்டி பார்லர் போகணும். எனக்கு டஸ்ட் அலர்ஜி வேற... புகையெல்லாம் எனக்கு ஒத்து வராது. டைரக்டரைப் பார்க்கப் போறப்ப ஃப்ரெஷ்ஷா போக வேண்டாமா? என்னை விட்ருங்க... நான் இந்த விளையாட்டுக்கே வரலை!" தலைமேல் இரு கைளையும் உயர்த்திக் கூப்பினான்.

பெற்றவர் இருவரும் கவலையுடன் பார்க்க... விக்னேஷ் அவன் செய்கைக்குச் சிரித்தான்.

"சரி, விக்ரம்... உனக்காக இல்லா விட்டாலும், எங்களுக்காக நீ இந்த பூஜையிலே கலந்துக்கலாமில்லையா?"



"ஸாரி விக்னேஷ்... என்னால் நடிக்க முடியாது!"

"வருங்கால சூப்பர் ஹீரோ பேசற பேச்சா இது?" என்றான் கிண்டலாய்.

"தொழில் வேற... வாழ்க்கை வேற.."

"ஏன் லக்ஷ்மி.. இந்தப் பயலை ஹாஸ்பிடல்ல மாத்தி எடுத்துக்கிட்டு வந்துட்டியா என்ன? நம்ம குடும்பத்தோட ஒத்தே வரமாட்டேங்கிறானே? கையில் படிப்பிருக்கு. ஒரு நல்ல வேலையைத் தேடிக்கலாம்ங்கற எண்ணமே இல்லாம.. சினிமா, சினிமான்னு அலையறானே!" கோகுல்நாத் மனைவியிடம் கேலியாய்க் கேட்டாலும், வார்த்தையில் வருத்தமும் மிகுந்திருந்தது.

'எல்லாரும் செய்யறதையே நாமும் செய்யணுமா? சினிமாவுல நடிக்கணுங்கறது என் ஆசையோ, கனவோ மட்டுமல்ல.. லட்சியமும் கூட! பெரிய ஆளா வருவேன். கார், பங்களான்னு வாங்கிக் குவிப்பேன். அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு! அப்ப தெரியும்ப்பா உங்களுக்கு விக்ரம் யாருன்னு!" விக்ரமின் கண்களில் வெற்றி இலக்கை அடையும் வெறி தெரிந்தது.

விக்னேஷ் தம்பியின் தோளில் தட்டிக் கொடுத்தான். "வெரிகுட், விக்ரம். ஒவ்வொருத்தர் வாழ்க்கைக்கும் மிக அவசியமான அம்சம் சுயமரியாதைதான்! மனதை அதன் போக்குக்கு விட்டு விட்டால், அதுக்குப் பத்து யானை பலம் வந்துவிடுமாம்... உனக்குள்ளே நெருப்பு இருக்கு. சாதிக்கணும்ங்கிற வெறி இருக்கு. அந்த வெறிதான் நெருப்பை ஊதிப் பெரிசாக்கி, நீ எதிர்பார்க்கிற வெற்றியைத் தரும். ஒவ்வொருத்தர் வாழ்க்கைக்கும் லட்சியம் அவசியம்.



உன்னோட லட்சியத்துல நீ ஜெயிக்கணும். சினி ஸ்டார் விக்ரம் என் தம்பிதான்னு நான் எல்லார்க்கிட்டேயும் பெருமையா சொல்லிக்கணும். விஷ் யூ ஆல் சக்ஸஸ்.." என்றான் மனப்பூர்வமாய்.

"தாங்க்ஸ் விக்னேஷ்!" புன்னகையுடன் அவன் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் விக்ரம்.

"நீ பண்றது உனக்கே நல்லாயிருக்கா விக்னேஷ்?" சலிப்புடன் கேட்டார் கோகுல்நாத்.

"ஏன்ப்பா அப்புடி கேக்கறீங்க?" என்றான் ஆச்சரியமாய்.

"பின்னே என்னப்பா? அவன் பண்ற தப்பைத் தப்புன்னு எடுத்துச் சொல்லாம.. நீயும் அவனோட சேர்ந்துக்கிட்டு என்கரேஜ் பண்றே?"

"இதிலென்னப்பா தப்பிருக்கு? விக்ரம் சினிமாவுல நடிக்கணும்னு நினைக்கறது தப்பா? அதுவும் ஒரு தொழில்தானே? பல முதலமைச்சர்களை நம்ம நாட்டுக்கு சினிமாதான் கொடுத்திருக்கிறதுங்கறதை நாம மறந்திடக் கூடாது. விக்ரம் கிட்டே ஒரு நடிகனாகறதுக்குரிய அத்தனை தகுதிகளும் இருக்கு. தவிர, டான்ஸ், கராத்தேன்னு நிறைய கத்துக்கறான். அவன் நடிக்க வந்தான்னா.. அது நமக்கும் தானே பெருமை!"

"எல்லாம் சரிதான்! ஆனா, அவன் உன்னை மாதிரி இல்லே விக்னேஷ். தன்னைப் பத்தி மட்டுமே யோசிக்கிற சுயநலக் காரனாயிருக்கான். வெட்டியா சுத்திட்டு வர்றோமே... டான்ஸ் கத்துக்கறதுக்கு கூட அண்ணன் தானே பணம் தர்றான். வீட்டு வேலையைப் பிடுங்கிச் செய்வோம்னு இருக்கா? இந்தப்

பொருளை வாங்கறதுக்கு நீ ஓடணுமா... நான் இல்லையான்னு நாம ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கறோம்.. இதெல்லாம் உங்க ரெண்டு பேருக்கும் வேண்டாத வேலை... நான் எதுக்கு இருக்கேன்? சொன்னா நான் செய்ய மாட்டேனான்னு அவன் சொல்லியிருக்கணும்... நல்ல பிள்ளையா இருந்திருந்தா! அவன் சுயநலக்காரன் விக்னேஷ். சுயநலம்ங்கிற நெருப்பு முதல்ல சுற்றி உள்ளவங்களைப் புசிக்கும். பிறகு தன்னையே புசிக்கும். இது அவனுக்கு எப்பத்தான் புரியுமோ... எனக்கே தெரியலை!" என்றார் அங்கலாய்ப்புடன்.

"சின்ன விஷயத்தை ஊதிப் பெரிசாக்காதீங்க... அவன் காதிலே விழுந்தா வருத்தப்படப் போறான்!" என்றாள் அதுவரை அமைதியாய் இருந்த அஷ்டலக்ஷ்மி.

"அவன் வருத்தப்படப் போறான்னு கவலைப்படறீயே.. நாம வருத்தப்படறோமேன்னு அவனுக்குக் கொஞ்சமாவது கவலையிருக்கா.."

"அப்பா.. ப்ளீஸ்.. நீங்க இப்படி டென்ஷனாகற அளவுக்கு என்னாகிப் போச்சு? விக்ரம் விளையாட்டுப் பிள்ளை. பொறுப்புணர்ச்சி வரும் போது தன்னாலே எல்லா பக்குவமும் வந்திடும். நான் இல்லையா உங்களுக்கு? டென்ஷனாகி உடம்பைக் கெடுத்துக்காதீங்க. அம்மா... எங்களுக்கு டிபன் எடுத்து வைம்மா... ஆர்த்தி எங்கேம்மா?"

'குளிச்சிட்டிருக்கா.."

"பன்னீர் ரோஜாச் செடி கேட்டிருந்தா... வாங்கிட்டு வந்திருக்கேன்.."

"நிஜமாவாண்ணா?' சிகைரத் துடைக்காமல் நைட்டி ஈரத்தில் உடலோடு ஒட்டியிருக்க... அண்ணனிடம் ஓடி வந்தாள் ஆர்த்தி.



"இதிலென்ன பொய்? நீ கேட்டு இல்லேன்னு சொல்லிட முடியுமா?"

"தாங்க்ஸ்ண்ணா!" சந்தோஷத்தில் முகம் அகல... பட்டாம் பூச்சிக் கண்கள் கூடுதலாய் அழகு காட்டிப் படபடக்க... செடியைப் பார்க்க ஓடினாள்.

"முதல்ல தலையைத் துவட்டு ஆர்த்தி! கொஞ்சம் தண்ணீர் சேர்ந்தாலே தலைவலி வந்திடும் உனக்கு!" அக்கறையாய் அறிவுறுத்தினான் விக்னேஷ்.

ஆர்த்தி காதில் போட்டுக் கொண்டால்தானே! காதலனைக் காணும் ஆவலுடன்-காணாமல் போனாள்.

அந்த ஹோண்டா பைக் பல்லாவரம் சாலையில் படுவேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதில் ஆரோகணித்திருந்த ஜீவாவின் முதுகுப் பக்கம் சட்டை காற்றில் பம்மென்று புடைத்துக் கொண்டிருந்தாலும் திண்ணென்றிருந்த தோள்கள்... அதையும் மீறிக் கம்பீரமாய்க் காட்டியது.

அந்த தோள்களே... அவன் எவ்வளவு வசீகரமானவன் என்பதற்கு அத்தாட்சியாய் இருந்தது.

சாலையிலிருந்து இடப்புறமாய்ப் பிரிந்த கிளைச் சாலையின் கடைசியில் பிரம்மாண்டமாய் வீற்றிருந்தது ராயல் ஹோட்டல்!

மேல்வர்க்க மக்கள் மட்டுமே அதனுள் கால் பதிக்க முடியும். ஏனென்றால் அது ஒரு ஸ்டார் ஹோட்டல். அமைதியான சூழ்நிலையில், ஒதுக்குப்புறமான சாலையில் பல ஏக்கர் நிலப் பரப்பில் ஏழு மாடிக் கட்டிடமாய் உயர்ந்திருந்தது. அந்த சாலையில் பயணிப்பவர்கள் ஏக்கப் பெருமூச்சுடன் இரண்டு முறையாவது அந்த ஹோட்டலைத் திரும்பிப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள். அப்படி ஒரு கம்பீரம்... அழகு!



ஜீவா பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான். பேன்ட் பாக்கெட்டிலிருந்த சீப்பை எடுத்து பைக் கண்ணாடியில் பார்த்து காற்றில் சிலும்பியிருந்த தலைமுடியை அழுந்த வாரிக் கொண்டான்.

ஹோட்டலை நோக்கி நடந்தான்.

ராஜ உடையில் வருவோர் போவோர்க்கெல்லாம் சலாம் போட்டுக் கதவைத் திறந்து விட்டுக் கொண்டிருந்த காவலாளி ஜீவாவைப் பார்த்ததும் பரிச்சயமான புன்னகையொன்றை வெளியிட்டான்.

பதிலுக்குப் புன்னகைத்த ஜீவா உள்ளே நுழைந்தான்.

தங்க நிற பல்புகள் குறைந்த வோல்டேஜில் ஒளிவீச... அந்த இடமே மிக ரம்மியமாய்க் கண்களுக்கு விருந்தளித்தது.

ரிசப்ஷனில் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாய் நேரிலும் போனிலும், வாடிக்கையாளர்களிடமும் புன்னகை மாறாமல் பதில் கூறிக் கொண்டிருந்தனர். அதில் ஒருத்தியாய் ஆர்த்தி.

ஜீவா இமைக்காமல் அவளையே பார்த்தபடி நின்றிருந்தான். மடிப்புக் கலையாத காட்டன் சுடிதாரில்... சங்கு கழுத்தில் மெல்லிய தங்க செயின் நெளிய... எளிமையான அலங்காரத்தில் தெய்வீக அழகோடு ஒவ்வொரு இளைஞனின் கற்பனை ஓவியத்திற்கும் ஒத்துப் போகும் தேவதையாக இருந்தாள் ஆர்த்தி.

ஆர்த்திக்கு ஏர்ஹோஸ்டஸாகப் பணிபுரிய வேண்டும் என்று மிகவும் ஆசை. அதற்கு அவளின் அழகும், மென்மையான பேச்சும், அறிவுத் திறனும்.. பெரிதும் கைகொடுத்திருக்கும். பட்டப் படிப்பு முடித்த கையோடு ஏர்ஹோஸ்டஸ் வேலைக்கு



அப்ளை பண்ண விண்ணப்பத்துடன் வீட்டிற்குள் நுழைந்தவளைப் பெற்றவர்களும், விக்னேஷும் தடுத்துவிட்டனர்.

'அழகான, கவுரவமான வேலைதான்! ஆனால் ஆபத்தான வேலை! இப்போதுதான் அடிக்கடி விமானக் கடத்தல், அது இது என்று நடக்கிறதே! அப்படிப்பட்ட வேலையே வேண்டாம்!' என்று திட்டவட்டமாய்க் கூறிவிட, வேறு வழியின்றி... ஆர்த்தி தன் ஆசைக் கனவைக் கலைத்து விட்டாள்.

இந்த நட்சத்திர ஓட்டலில் அவளுக்கு எளிதாக ரிசப்ஷனிஸ்ட் வேலை கிடைத்தது. கை நிறையச் சம்பளம். ஆர்த்திக்குத் திருப்தியே!

ஜீவா ஆர்த்தியை இங்குதான் சந்தித்தான். ஜீவா ஒரு கம்ப்யூட்டர் என்ஜினியர். பிரபலமான கம்ப்யூட்டர் கம்பெனியில் சிஸ்டம் அனலிஸ்ட் ஆகப் பணிபுரிபவன். ஆர்த்தியைப் பார்த்த கணத்திலேயே அவன் இதயம் அவளிடம் இடம் மாறிவிட்டது. இரண்டு வருடமாய் அவளிடம்தான் பத்திரமாக இருக்கிறது. அவளுக்கும் ஜீவா மீது நம்பிக்கையும், காதலும் இருந்ததால்.. தன் இதயத்தை அவனிடம் கொடுத்து வைத்திருந்தாள்.

இந்தக் காதல் விவகாரம் ஆர்த்தி வீட்டிற்குத் தெரியாது. ஆனால், ஜீவாவின் வீட்டிற்குத் தெரிந்து விட்டது. தாம்தூமென்று குதித்து எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தால்... ஆர்த்தியின் அழகைக் கண்டு பெட்டிப் பாம்பாய் அடங்கிச் சம்மதித்துவிட்டனர். 'ஊர் ஊராய்த் தேடினாலும் இப்படிப் பட்ட பெண்ணை மகனுக்குப் பார்க்க முடியாது' என்று.

அதனால் அவளைத் தைரியமாய்க் காதலித்துக் கொண்டிருந்தான்.

யாரிடமோ சின்சியராய் போனில் பதில் சொல்லிக் கொண்டிருந்த ஆர்த்தி யதேச்சையாகக் கண்களை உயர்த்த... அங்கு இவளையே பார்த்தவாறு நின்றிருந்த ஜீவாவைப் பார்த்ததும்... அவளின் அழகிய கண்கள் வியப்போடு விரிந்தது.



3

"எப்ப வந்தே ஜீவா?" ஆர்த்தி அவனருகே வந்து கேட்டாள்.

"அரை மணி நேரமாச்சு."

"அரைமணி நேரமாவா? அவ்வளவு நேரமும் என்ன பண்ணிக்கிட்டிருந்தே?" என்றாள் ஆச்சர்யமாய்.

"என் காதலியின் கடைக்கண் பார்வை என் மேல் விழாதான்னு இங்கே நின்னபடியே தவமிருந்தேன்."

"ஓஹோ..." உதட்டைச் சுழித்துச் சிரித்தபடி சொன்னாள்.

"எப்படியோ ஒரு வழியாய் என் தவம் கலைந்தது!"

"ஓரேயடியாய் ரீல் சுத்திக்கிட்டிருக்காதே! என்ன இன்னைக்கு இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே?"

"உன்னைப் பார்க்காம இருக்க முடியலை. கண்ணே! காபி கூட தொண்டையை விட்டு இறங்க மாட்டேங்குது. ஆர்த்தியப் பார்க்கணும்.. ஆர்த்தியப் பார்க்கணும்னு என் புலன்கள் அத்தனையும்.. ஆவ்.." பேசிக் கொண்டேயிருந்த ஜீவா அலறினான். காரணம் ஆர்த்தியின் க்யூடெக்ஸில் பளபளத்த நகம் அவனின் இடுப்பைப் பதம் பார்த்ததால்.



"ஏன் இப்படி கிள்றே?"

"எல்லாரும் நம்மையே பார்க்கறாங்க... நீ என்னடான்னா.. இங்கே நின்னுக்கிட்டு டயலாக் அடிச்சிட்டிருக்கே.. அதும் சத்தமா!"

"நாம லவ்வர்ஸ்னு எல்லோருக்கும்தான் தெரியுமே!"

"அதுக்காக? சரி, அதை விடு.. கேட்டேனே.. இன்னைக்கென்ன இவ்வளவு சீக்கிரமா?"

"கொலம்பியா பார்ட்டி ஒன்னை ஏர்போர்ட் வரை வழியனுப்பற பொறுப்பு இன்னைக்கு என் தலையிலே விழுந்தாச்சு. அனுப்பி வைச்சுட்டு நேரே இங்கே வந்துட்டேன். பர்மிஷன் போட்டுட்டு கிளம்பு!"

"எங்கே?"

"ஆளவந்தான் படத்துக்கு ரெண்டு டிக்கெட் வாங்கிட்டு வந்தாச்சு. அதிலே நமக்குத் தேவையான நல்ல சீன்கள் நிறைய இருக்காம். கல்யாணத்துக்குப் பிறகு நமக்கு உதவும்... நல்லா பார்த்துக்க... என்ன அப்படிப் பார்க்கிறே? கமலும், ரவீனாவும் ஒரு போர்வைக்குள்ளே.."

"நான் சினிமாவுக்கு வரலை..!"

"ஏன்?" ஜீவாவின் முகம் மாறியது.

"நேத்துதான் குடும்பத்தோட ஆளவந்தான் பார்த்தோம். எல்லா சீனையும் நல்லாவே பார்த்தேன்! நீங்க போய்ப் பார்த்துட்டு வாங்க!" என்றாள் குறும்பாக.

'நீயும், நானும் சேர்ந்து பார்த்தாத்தானே..'

அவனை முழுசாய்ப் பேசவிடாதபடி கைநீட்டித் தடுத்தாள்.





"பரவாயில்லே ஜீவா! அடுத்து பண்ணாரி அம்மனுக்கு ஒரு சாமி படம் வரப் போகுதாம்.. அந்தப் படத்துக்கு ரெண்டு பேரும் சேர்ந்து போகலாம்!"

"எதுக்கு... சாமியாடவா?" என்றான் எரிச்சலுடன்.

அவன் கோபத்தை ரசித்தாள் ஆர்த்தி.

"பர்மிஷன் போட்டுட்டு வர்றேன். ஆனா நிச்சயமா நாம சினிமாவுக்குப் போகலே.. ஓக்கே?"

"வந்து தொலை! வேற என்ன பண்றது?" என்றான் சலித்தபடி ஜீவா.

ஆர்த்தி அவனருகே வந்து கண் சிமிட்டிச் சிரித்தபடி, "ஆளவந்தான் படத்துக்கே போவோம்!" என்றாள்.

"ஹூர்ரே..." என்று கத்த வாயைத் திறந்த ஜீவாவின் வாயைப் பொத்தி மூடினாள் ஆர்த்தி.

பைக்கில் ஆர்த்தி ஏறி அமர்ந்ததும் உசுப்பிக் கிளப்பினான் ஜீவா. காற்றில் அவன் காலையில் பயன்படுத்திய ஆஃப்டர் ஷேவ் லோஷனின் மணம் இன்னமும் மிச்சமிருந்தது. ஆர்த்தியின் நாசியை வருடியது. ஆர்த்தி நாகரீகமான இடைவெளியோடு அவனைத் தொடாமல் அமர்ந்திருந்தாள்.

"ஹலோ மேடம்!" என்றான் கிண்டலாய்.

"என்ன சார்? சொல்லுங்க!" என்றாள் அதே தொனியில்..

"விழுந்துடப் போறே... என்னைப் பிடிச்சுக்க!"

"நோ தாங்க்ஸ்... நான் விழ மாட்டேன்!"

"மழையிலே சென்னை முழுக்க ரோடு பள்ளம் பள்ளமா கோரமாயிடுச்சி! ஒரு பள்ளத்துல ஏறி இறங்கினாலே போதும்... அம்மணி விழுந்திடுவீங்க!"



"என்ன... மிரட்டலா?"

"ரொம்பதான் அலட்டிக்காதே! அறிமுகமேயில்லாத பஸ் ஸ்டாண்டில் நின்னுக்கிட்டிருந்த யாரோ ஒரு பொண்ணு மாதிரியில்லே தொடாம உட்கார்ந்து வர்றே!"

"ஓஹோ.. ஐயா.. அந்த சேவையும் செய்யறீங்களோ?"

"ஐயோ.. இல்லே தாயி! சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். இந்த பைக்லே என் தங்கையைக் கூட ஏத்திக்கிட்டு போனதில்லே.. நம்பு கண்ணே!"

"ரொம்ப கொஞ்சாம பார்த்து ஓட்டுங்க... அப்புறம் சினிமா தியேட்டருக்குப் பதிலா ஆபரேஷன் தியேட்டருக்குப் போக வேண்டியிருக்கும்!"

"சரி. சரி... பிடிச்சுக்கோ!"

"சரியான லொள்ளுப்பா... நீ!" செல்லமாய்ச் சலித்தபடி அவன் இடுப்பை வளைத்துப் பிடித்தாள்.

"ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதே! உடனே பிடுச்சுடுவியே.." என்றான் கிண்டலாய்.

"வாட்.. வாட்.. ராஸ்கல்!" அவன் வயிற்றில் கிள்ளிவிட்டு கையை எடுத்துக் கொண்டாள்.

"ஆவ்...!" என்று கத்தியவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"பிடிச்சுக்க ஆர்த்தி... விழுந்திடப் போறே!" என்றான் மறுபடி.

"என்னது? வாயை மூடிகிட்டு சும்மா வர்றியா...? இல்லே.. நானே உன்னைக் கீழே தள்ளிவிட்டுருவேன்!"

"நீ கீழே விழுந்துடக் கூடாதுன்னுதானே பிடிச்சுக்கச் சொல்றேன்? ப்ளீஸ்டா.. பிடிச்சுக்க!"

"முடியாது!"

'என் செல்லமில்லே!" கொஞ்சலாய்.

அந்த கொஞ்சலில் மனமிரங்கி அவன் தோளில் கை வைத்தாள்.

"எப்படா சொல்லுவான்னு காத்துக்கிட்டிருந்தியா? ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதே. உடனே.. ஐயோ.."

ஆர்த்தி அவன் காதைக் கடித்ததில் கத்தினான் ஜீவா.

"ச்.. போடா... நீ என்னை ரொம்ப மட்டமா நினைச்சிட்டே! வண்டியை நிறுத்து. நான் சினிமாவுக்கு வரலே!"

ஜீவா நிறுத்தாமல் ஓட்டினான்.

"என் ஆர்த்தியை நான் மட்டமா நினைப்பேனா? லவ்வுல இதெல்லாம் சகஜம் டார்லிங்! நான் கிண்டல் பண்ணணும். நீ கோவிச்சுக்கணும். உன்னைச் சமாதானப்படுத்த தியேட்டர்ல வச்சு.. கிஸ்ஸாலயே குளிப்பாட்டி.."

'அட... அப்படி ஒரு எண்ணம் வேற இருக்கா? மரியாதையா என்னை இங்கேயே இறக்கி விடு."

"சரியான தயிர்சாதம்! எனக்குன்னு வந்து வாய்ச்சியே காதலியா! லவ் பண்ண ஆரம்பிச்சு ரெண்டு வருஷமாகுது.. ஒரு முத்தத்துக்கு வழியுண்டா? அதைக் கூட கல்யாணத்துக்குப் பிறகுதான்னு கையை... ஸாரி கட்டிப் போட்டா எப்படி? இப்பவே.. அப்படி இப்படின்னு ட்ரையல் பார்த்தாதானே... ஃபர்ஸ்ட் நைட்லே திருதிருன்னு முழிக்காம... கையைப் பிசையாம காரியத்துல இறங்க முடியும்?" புலம்பினான் ஜீவா.



ஆர்த்தி அவன் புலம்பலுக்கு வாய்விட்டுச் சிரித்தாள். பைக்கில் சென்ற அந்தக் காதல் ஜோடியை இரண்டு கண்கள் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தது.

நவீன பிரம்மாண்டமான பங்களா! பாதுகாப்புக் கருதி மதில் சுவர்கள் உயரமாகக் கட்டப்பட்டிருந்தன. பொச -பொசவென்று ஷாம்பூவில் குளித்த புஷ்டியான நான்கு பொமரேனியன்கள் புல்வெளியில் சுதந்திரமாய் விளையாடிக் கொண்டிருந்தன.

போர்டிகோவில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த இரண்டு வெளிநாட்டுக் கார்களுடன் நான்கு உள்நாட்டுக் கார்களும் இளைப்பாறிக் கொண்டிருந்தன.

விசிட்டர்ஸ் ஹாலில் ஒன்பது பேர் அமர்ந்திருந்தனர். அத்தனை பேரும் காந்திதாசனுக்காகக் காத்திருந்தனர்.

காந்திதாசனைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. தெரியாது என்று சொல்பவர் நிச்சயமாக நம் நாட்டைச் சேர்ந்தவராய் இருக்க முடியாது. காந்திதாசன் மிகப் பிரபலமான டைரக்டர். அவர் படங்கள் பல தேசிய விருதைப் பெற்றவை. அவர் அறிமுகப்படுத்திய எந்த நடிகர் நடிகையுமே சோடை போனதில்லை. தமிழ் மட்டுமல்ல, இந்தி, தெலுங்கு, கன்னடம் என்று எல்லா மொழிகளிலும் காலூன்றி வெற்றிக் கொடி நாட்டியவர். அவர் படத்தில் தலையைக் காட்டிவிட மாட்டோமா என்று ஏக்கத்துடன் வாய் பிளந்து காத்திருப்பவர் ஏராளம்.

விசிட்ர்ஸ் ஹாலில் அமர்ந்திருக்கும் அத்தனை பேரும் தயாரிப்பாளர்கள். கோடி கோடியாய்ப் பணத்தை வைத்துக் கொண்டு தனக்கொரு படமாவது டைரக்ட் பண்ண மாட்டாரா என்று நல்ல நாள் நேரம் பார்த்து வந்திருப்பவர்கள்.



காந்திதாசன் யோசனையுடன் தன்னறையில் அமர்ந்திருந் தார்.

அவர் முன் இருந்த டேபிளின் மேல் ஏகப்பட்ட போட்டோக்கள் குவிந்திருந்தன. அத்தனையும் அழகான இளைஞர்களின் போட்டோக்கள். காந்திதாசன் அடுத்து இயக்கப் போகும் படத்திற்குப் புதுமுகங்களை அறிமுகப் படுத்த உள்ளார் என்று கேள்விப்பட்டு, நடிக்க ஆர்வமிருந்த இளைஞர்கள் அனுப்பி வைத்தவை இவை. அதிலிருந்து நான்கு போட்டோக்களைத் தேர்வு செய்து தனியே வைத்திருந்தார்.

கதாநாயகனைப் போல.. புத்தம் புது கதாநாயகியையும் அறிமுகப்படுத்தும் எண்ணமிருந்தது. எத்தனையோ ஆல்பங்களைப் புரட்டிப் பார்த்து விட்டார். ஒன்றுகூட ஒருவர் கூட அவருக்குத் திருப்தியைத் தரவில்லை. அவர் கற்பனையில் நிழலாடும் நாயகிக்குத் தெய்வீகமான அழகும், அதே சமயம் நாகரீக மங்கைக்குரிய நளினமும் இருக்க வேண்டும். 'எப்போது கிடைப்பாள் என் நாயகி?'

'டாடி..' குதூகலத்துடன் அழைத்தபடி உள்ளே நுழைந்தாள் நர்மதா.

அவருடைய ஒரே செல்ல மகள்! அமெரிக்காவிலிருந்து சென்ற வாரம்தான் இந்தியா வந்தாள்.

"அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா அமெரிக்காவுல தான் பொறக்கணும் டாடி!" என்று மூச்சுக்கு மூச்சு சொல்லிக் கொண்டிருக்கும் நர்மதா இரண்டு வருடமாய் அமெரிக்காவில் தான் இருக்கிறாள்.



அங்கு காந்திதாசனின் அண்ணன் செல்வ சுந்தரம் வசித்து வருகிறார். இருபத்தைந்து வருடத்திற்கு முன்பே அமெரிக்கப் பெண்ணொருத்தியைக் காதலித்து அங்கேயே செட்டிலாகி விட்டவர்.

அவர் மனைவி டோரத்தி பரத நாட்டியக் கலைஞர். சொந்தமாய் நாட்டியப் பள்ளி நடத்தி வருகிறார். குழந்தை பாக்கியம் இல்லாத அவர்களுக்கு நர்மதா தான் செல்ல மகள். நர்மதாவுக்கும் நாட்டியம் என்றால் உயிர். இங்கேயே பல மேடைகளில் அரங்கேற்றம் நடந்தாகி விட்டது. டோரத்தியின் கட்டாய அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்று பள்ளியை உடன் சேர்ந்து நிர்வகித்தாள்.

டோரத்தி சமீப காலமாக உடல்நிலை சரியின்றி இருக்கிறாள். இனி நடனம் ஆட முடியாத சூழ்நிலை. நர்மதாதான் முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அவளுக்கும் இதில் பரிபூரண விருப்பம்தான்.

ஆனால் காந்திதாசனுக்குத்தான் இதில் உடன்பாடில்லை. மனைவி மறைந்த பின் அவரும் சினிமாவும், நர்மதாவும்தான் உலகம். அவளுக்கொரு திருமணத்தைச் செய்து வைத்துத் தாத்தாவாக வேண்டும் என்ற ஆசை!

நர்மதாவோ, "கல்யாணம் வேண்டாம் என்று சொல்ல வில்லையே! நல்ல பையனாய்ப் பாருங்கள். கல்யாணம் பண்ணிக் கொண்டு அமெரிக்கா போய் செட்டிலாகி விடுகிறேன். மாப்பிள்ளைக்குப் பரதநாட்டியம் தெரிந்திருப்பது மிக அவசியம்!" என்று கண்டிஷன் போட்டாள்.

"அதெல்லாம் சரி நர்மி! உன்னை அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு நான் மட்டும் தனியாக இங்கே என்ன செய்வது?" என்பார் காந்திதாசன்.

"உங்களை யார் இங்கே இருக்கச் சொல்றது? நீங்களும் அங்கே வந்திடுங்க! இந்தியாவுக்குப் படம் பண்ணி இங்கே மட்டும் பெயர் வாங்கினால் போதுமா? உலகம் முழுக்கப் புகழ் பரவ வேண்டாமா? கோலிவுட்டை விட்டு ஹாலிவுட்டுக்கு வாங்க!" என்றாள் கிண்டலாக.

காந்திதாசனால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. தன்னை வாழ வைத்த தமிழ்ப் படவுலகை விட்டுச் செல்லவும் முடியாமல், மகளை விட்டுப் பிரியவும் முடியாமல் தவித்தார். எனினும், மகளுக்கேற்ற வரனைத் தேடிக் கொண்டிருந்தார்.

நர்மதா.. எந்தக் குறையும் சொல்ல முடியாத அழகி. சினிமாவில் நடிப்பதற்குரிய அத்தனை தகுதிகளும் அவளிடம் மிகுந்திருந்தாலும் சினிமா துறை என்றாலே எட்டிக்காயாய்க் கசந்தது நர்மதாவுக்கு.

"வாம்மா.. நர்மி!"

"என்ன டாடி.. டல்லாயிருக்கீங்க?"

"ஒவ்வொரு படம் பண்ணி முடிக்கிற வரைக்கும் பிரசவ வேதனைதான். டென்ஷன்தான். இது எனக்குப் புதுசா என்ன?"

"இதென்ன.. இவ்வளவு போட்டோஸ்?" டேபிள் மீதிருந்த போட்டோக்களைப் பார்த்து மலைத்தாள்.

சொன்னார்.

"அப்ப.. இத்தனை பேர்ல இந்த நாலு பேருக்குத்தான் அதிர்ஷ்டமா?" என்றபடியே தனியே வைக்கப்பட்டிருந்த நான்கு புகைப்படங்களை எடுத்துப் பார்த்தாள்.

அதில் ஒரு இளைஞனின் முகம் அவளை வசீகரித்தது. மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டியது.

இண்டர்காம் சிணுங்கியது.



காந்திதாசன் எடுத்து "எஸ்" என்றார்.

"சார்.. விக்ரம்னு ஒருத்தர் வந்திருக்கார். நீங்க வரச் சொன்னதாகச் சொல்றார்!"

"என் ரூமுக்கு அனுப்பு!"

அடுத்த மூன்றாவது நிமிடம் விக்ரம் கதவைத் தட்டிவிட்டு அறைக்குள் நுழைய...

அவனைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாள் நர்மதா



4

ஒருவர் புத்திசாலியாக இருந்தால் இருவர் சந்தோஷமாக இருக்கலாம். அதிலும் பிறரைத் தன்னைப் போல் நேசிப்பவராய் இருந்து விட்டால்... மகிழ்ச்சிக்கு அளவேது?

கோகுல்நாத் தன் குடும்பத்தின் மூளையாக இருந்தார். அஷ்டலக்ஷ்மி செயல்படும் உடலாக இருந்தாள். ஒரு உடலுக்குக் கண்களும், இதயமும் எவ்வளவு அவசியமோ.. அந்தளவிற்குத் தன் குழந்தைகளைப் பொத்திப் பாதுகாத்து வளர்த்தனர்.

கண்களில் தூசு விழுந்தால் கூடத் துடித்துப் போய் விடுவாள் அஷ்டலக்ஷ்மி.

கோகுல்நாத்தும் அப்படித்தான்! வெளிப்பார்வைக்குக் கொஞ்சம் கண்டிப்பானவர் போல் காட்டிக் கொள்வாரே தவிர... உள்ளுக்குள் இளகிவிடும் பனிப்பாறையாகத்தான் இருந்தார்.

கணவர் கேட்ட காபியைக் கொண்டு வந்து கொடுத்த அஷ்டலக்ஷ்மியின் கண்கள் நொடிக்கொரு தரம் வாசலையே பார்த்தன.



கோகுல்நாத் மனைவியைக் கவனித்தார்.

"என்ன லக்ஷ்மி? நம்ம வீட்டுக்கு யாராவது வர்றாங்களா? வாசலையே பார்த்துக்கிட்டிருக்கே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க! யாரோ ஒரு பெரிய டைரக்டர் வரச் சொன்னாங்கன்னு நம்ம விக்ரம் காலையிலே சாப்பிடாமக் கொள்ளாம போனவன்தான். இன்னும் வரலே! பிள்ளை பசி தாங்க மாட்டான். அதான் கவலையா இருக்கு."

கோகுல்நாத் பலமாகச் சிரித்தார். 64805

"விக்ரம் என்ன சின்னக் குழந்தையா? ஒரு வேளை பசியைக் கூடப் பொறுத்துக்க மாட்டானா? அவனுக்கு இருபத்தஞ்சு வயசாயிடுச்சு. அதை ஞாபகம் வச்சுக்க!"

"அவன் பசி தாங்க மாட்டாங்க! அதான் கவலையா இருக்கு?"

"பசிச்சா சாப்பிட்டுக்கத் தெரியும் அவனுக்கு! வீணா கவலைப்பட்டு நீ உன் உடம்பைக் கெடுத்துக்காதே! நைட்டெல்லாம் கால் வலிக்குதுன்னு தூங்காம புரண்டுக்கிட்டிருந்தியே.. இப்ப கால்வலி எப்படியிருக்கு?"

"தென்னமரக்குடி எண்ணெயைச் சூடாக்கித் தேய்ச்சேன். இப்ப கொஞ்சம் தேவலை! விக்ரம் காலைலேர்ந்தே ரொம்ப டென்ஷனாயிருந்தான். காந்திதாசனோ, என்னவோ பேரு சொன்னான். பெரிய டைரக்டராம். அவர் படத்துல மட்டும் நடிக்க சான்ஸ் கிடைச்சா.. பெரிய ஆளாகிடுவேன்னு சொல்லிட்டிருந்தான். என் பிள்ளை கனவு நனவாகணும் ஏழுமலைவாசா!" என்றாள் பெருமூச்சுடன்.

"உன் பிள்ளை நடிகைகளைக் கட்டிப் பிடிச்சி, மரத்தைச் சுத்தி சுத்தி வந்து டூயட் பாடணும்னு ஆசைப்படறியா? படிச்ச



படிப்புக்குக் கவுரவமா ஒரு வேலையைத் தேடிக்கணும்னு தோணலையே அவனுக்கு!"

அவர் கொடுத்த காலி டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

"நடிக்கறது தப்பா? இப்ப இப்படித்தான் பேசுவீங்க! நாளைக்கு தியேட்டர்ல உட்கார்ந்து பெரிய திரையிலே அவன் முகத்தைப் பார்க்கறப்ப.. 'விக்ரம் என் பிள்ளை... என் பிள்ளை!'ன்னு எல்லார்கிட்டேயும் பெருமையடிச்சுக்கறதைப் பார்க்காமலா போகப் போறேன்? லட்சம் லட்சமா சம்பாதிச்சு பெரிய பங்களாவுல நம்மளை உட்கார வைக்கிறப்ப தெரியும் அவனைப் பத்தி! தெருமுனைக்குப் போய் வரக் கூட கார்லதான் போகணும்னு நம்மளைச் செல்லமா அதட்டும் போது... அப்ப புரியும் அவனோட தொழிலைப் பத்தி... வீடு நிறைய வேலையாட்களைப் போட்டு நம்மளை நிம்மதியா உட்கார வச்சு தங்கத் தட்டுல தாங்கப் போறான். அப்ப தெரியும் அவனைப் பத்தி?" 64805

"அடி அசடு! ஒருவேளை அவன் தப்பித் தவறி நடிக்க வந்தால் நீ சொன்ன அத்தனையும் நடக்கலாம். ஆனா, நம்ம பிள்ளை விக்ரம் நமக்குக் கிடைக்க மாட்டான்!"

"என்னங்க சொல்றீங்க?"

"அவனுக்கு நம்மகிட்டே பேசக் கூட நேரம் இருக்காது. அவனைச் சந்திக்க நாமளே அப்பாய்ண்ட்மெண்ட் வாங்க வேண்டியிருக்கும். தவிர, ஊர்ல உலகத்துல உள்ள இளம் பொண்ணுங்க சும்மாயிருப்பாங்களா? உன் பிள்ளையைப் போட்டி போட்டுக்கிட்டு லவ் பண்ணுவாங்க! அவனும் யாரையாவது ஒரு பொண்ணை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்குவான். சினிமா வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம் லட்சுமி!"

அஷ்டலக்ஷ்மியின் முகம் இருண்டது.

''லவ் பண்ணிக் கல்யாணமா? ஐயோ வேணாங்க!''

'இந்த வயசுல எனக்கெதுக்கு அந்தப் பொல்லாப்பு!'' என்றார் மனைவியை ஓரக் கண்ணால் பார்த்தபடி.

''என்ன கிண்டலா? நான் எதை வேணும்னாலும் பொறுத்துக் குவேன். ஆனா, என் குழந்தைகளைப் பிரிஞ்சிருக்க மட்டும் என்னால முடியாதுங்க!''

''என்ன லக்ஷ்மி சொல்றே? அவங்க ஏன் பிரியப் போறாங்க?'' என்றார் வியப்புடன்.

''ஆமாங்க! இந்தக் காலத்துப் பொண்ணுங்க பெத்தவங்க கிட்டேயிருந்து பிள்ளைங்களைப் பிரிச்சி, தனிக்குடித்தனம் போயிடறாங்க! அதுவும் லவ் பண்ணிக் கல்யாணம் பண்றவளாயிருந்தா இன்னும் வம்பு!''

''பெரியவங்களா பார்த்து நடத்தற கல்யாணத்துல மட்டும் இது மாதிரி நடக்காதா என்ன?''

''மத்தவங்களை விடுங்க. நம்ம ரெண்டு பிள்ளைகளுக்கும் நான் சொந்தத்திலேயே அருமையா பொண்ணுங்களைப் பார்த்து வச்சிருக்கேன்... நம்ம பிள்ளைங்க நம்மளை விட்டுப் பிரியக் கூடாதுங்க. பிரியவே கூடாது!'' என்றாள் உணர்ச்சி வசப்பட்டவளாய்.

''டென்ஷனாகாதே லக்ஷ்மி! உனக்கு ஏற்கெனவே பிரஷர் இருக்கு. நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்!'' மனைவியின் கையை இறுகப் பற்றி ஆசுவாசப்படுத்தினார் கோகுல்நாத்!

''நம்ம ஆர்த்தியைக் கூட இதேனால, பக்கத்திலேயே வரன் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்!''



''கண்டிப்பாக.. நீ அந்தக் கவலையை விடு! நான் பார்த்துக்கறேன்!''

அஷ்டலக்ஷ்மிக்கு மட்டுமல்ல... கோகுல்நாத்திற்கும் அந்தக் கவலை இருந்தது. ஒரு கூட்டுக் கிளிகளாய் இந்தக் குடும்பம் எப்போதும் இதேபோல சேர்ந்திருக்க வேண்டும். அவருக்கு அலுவலகத்தில் இரண்டுமூன்று முறை பதவி உயர்வுடன் கூடிய மாற்றல் கிடைத்தும் வேண்டாமென்று மறுத்ததற்குக் காரணமே குழந்தைகள்தான்!

சொந்த வீடு! தவிர, ஊர் ஊராய் மாறிக் கொண்டிருந்தால் பிள்ளைகளின் படிப்புக் கெடும். புதிய ஊர், குடிதண்ணீர் அவர்களுக்கு ஏற்றுக் கொள்ளாவிட்டால் உடல்நிலை பாதிக்கப்படும் என்கிற ஐயம் வேறு! அதனால் நியாயமாய் அவருக்குக் கிடைத்த உயர்வுகளைப் பிள்ளைகளுக்காகவே மறுத்தார். ஆனால், லக்ஷ்மியின் பிள்ளைகள் மீதான அதீத பாசமும், நம்பிக்கையும் பயத்தை விதைத்தது.

'சிறகு முளைத்த எந்தப் பறவையாவது கூட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்க விரும்புமா?'

'எதிர்பார்ப்பு குறைவாக இருக்கும்போது ஏமாற்றம் அதிகமாக இருக்காது. ஆனால், லக்ஷ்மியிடம் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. எல்லாமே நம் விருப்பப்படி நல்ல விதமாக நடக்கவே ஆசைப்படுகிறோம். ஆனால், எதிர்மறையாக நடந்து விட்டால்?' கோகுல்நாத் அதை நினைத்துத்தான் கவலைப்பட்டார்.

விக்ரம் சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தான். அவன் வருகைக்காகவே காத்திருந்த அஷ்டலக்ஷ்மி, ''வாப்பா.. முகம் அலம்பிட்டு வா! சாப்பிடுவே!'' என்றாள்.



''வேண்டாம்... சாப்பிட்டாச்சு!'' என்ற விக்ரம், நிஜமாகவே ஒன்றும் சாப்பிடவில்லை. பசிக்கவில்லை என்பதுதான் உண்மை.

'போன காரியம் என்னாச்சுப்பா?''

''டைரக்டருக்கு என்னைப் பிடிச்சுப் போச்சும்மா.. ரெண்டு நாள்ல மேக்கப் டெஸ்ட் இருக்கு. எனக்காக மிகப் பெரிய அதிர்ஷ்டம் காத்துக்கிட்டிருக்கும்மா!'' என்றவனின் கண் முன் நர்மதா சிரித்தாள்.

அவனால் இமைகளை ஒன்று சேர்க்க முடியவில்லை. தூக்கம் வருவேனா பார் என்றது. கண்ணெதிரே நர்மதா வந்து நின்றாள். சிரித்தாள்.

காலையில் நடந்ததெல்லாம் கனவா, நனவா என்றே புரியாத ஒரு மயக்க நிலையில் ஆட்பட்டிருந்தான் விக்ரம்.

நர்மதா புகைப்படங்களை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது விக்ரமின் புகைப்படம் அவளை ஈர்த்தது. கண்ணகல விடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். புகைப்படத்தின் பின்புறம் அவனைப் பற்றிய குறிப்புகளைப் படித்தாள். பெயர், கல்வித் தகுதி, பொழுதுபோக்கு இவை எல்லாவற்றையும் விட பரத நாட்டியமும் தெரியும் என்று எழுதியிருந்ததுதான், அவளை மிகவும் கவர்ந்தது.

போட்டோவில் பார்த்துக் கொண்டிருந்தபோதே விக்ரம் உள்ளே வருவான் என்று நினைத்தாளா என்ன?

நிழல்.. நிஜமாகி ஆறடி உயரத்தில் நின்றபோது திணறித் தான் போனாள், நர்மதா. நிழலை விட நிஜத்தில் இன்னும் அழகாய், சம்பிரமாய்த் தெரிந்தான். தன்னிடமிருந்து ஏதோ ஒன்று அவனை நோக்கிப் போவதை உணர்ந்தாள்.



காந்திதாசனுக்கும் விக்ரமைப் பிடித்துவிட்டது என்பதை அவர் பேசுவதிலிருந்தே புரிந்து கொண்டாள்.

இரண்டு நாளில் மேக்கப் டெஸ்ட். அதிலும் தேறிவிடுவான். அதன் பிறகு துரிதகதியில் படப்பிடிப்பு ஆரம்பமாகும். விக்ரம் கதாநாயகனாவான். அதன் பிறகு?

அந்த நினைப்பே கசந்தது நர்மதாவிற்கு.

அறையில் அழகுப் பதுமையொன்று தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை விக்ரமும் காணத் தவறவில்லை.

அவள் அமர்ந்திருந்த தோரணையே காந்திதாசனின் சீமந்த புத்திரி என்பதை உணர்த்தியது.

நேர்காணல் முடிந்து விக்ரம் வெளியே வந்தபோது அவனுக்கு முன்பே வெளியே வந்துவிட்ட நர்மதா அவனை எதிர்கொண்டாள்.

''ஹலோ..'' என்றாள்

''ஹலோ..'' பேசுவாள் என்று எதிர்பார்க்காத விக்ரம் திணறிப் போனான்.

''ஐ'ம் நர்மதா! டைரக்டரோட டாட்டர்!''

''ஐ'ம் விக்ரம்!''

''ஐ நோ! நான்.. நான் உங்ககிட்டே பேசணும்.. நாளைக்கு ஹோட்டல் ரெஸிடென்சியிலே வெய்ட் பண்றேன். வர்றீங்களா?''

''என்.. என்கிட்டே பேசணுமா? எ.. எதைப்பத்தி?''

''நாளைக்குப் பேசுவோமே!'' அழகான பல் வரிசை மின்னச் சிரித்தாள்.

வரமாட்டேன் என்று சொல்ல விக்ரமிற்குப் பைத்தியமா என்ன? நர்மதாவின் கண்களில் தெரிந்த ஏக்கம்.. பிசிறடித்த குரலில் தெரிந்த தாபம்... எல்லாமே சொல்லாமல் சொல்லியது... அவளுக்குத் தன் மேல் காதல் என்று.

'தனக்கு இப்படியொரு அதிர்ஷ்டமா?' நினைத்து.. நினைத்து விடியும் வரை உறக்கம் வராமல் தவித்தான்.

ஜீன்ஸ், தொளதொள காட்டன் ஷர்ட்டில் இவனுக்காகக் காத்திருந்தாள் நர்மதா.

ரிசர்வ் செய்யப்பட்டிருந்த டேபிளில் எதிரும் புதிருமாக அமர்ந்தனர். அலங்காரமே இல்லாமல் தேவதை போலிருந்த நர்மதாவைக் காண்கையில் விக்ரமின் ரத்த ஓட்டம் அதிகரித்தது. நர்மதாவின் நிலையும் அதுதான்!

தன்னைப் பற்றி நினைக்கையில் தானே வியந்தாள்.

இந்தியாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, அவளின் காதலுக்காக அலைந்த இளைஞர்கள் ஏராளம். ஆனால் இதுவரை எந்த ஆணுமே அவளை வசியப்படுத்தியதில்லை. விக்ரம்தான் அவளைக் காந்தம் போல் கவர்ந்து விட்டான்.

எப்படிப் பேசத் துவங்குவது என்று புரியாமல் பேசத் துவங்கினாள்.

"உங்களுக்கு சினிமாவிலே நடிக்கிறதென்பது லட்சியமா?"

"உயிர் மூச்சுங்க! பெரிய நடிகனாகி... பேரும், புகழும், பணமும் சம்பாதிக்கணும். நான் கஷ்டப்பட்டதுக்குப் பலனா உங்கப்பாவோட மோதிரக் கையால குட்டுப்படப் போகிறேன். அதை நினைச்சா ரொம்ப சந்தோஷமாயிருக்கு!"

"எனக்கு சந்தோஷமாயில்லே!"



"ஏன்?" என்றான் பெரிதாய் அதிர்ந்து.

"உங்களுக்குப் பரத நாட்டியம் தெரியுமா?"

"தெரியும்!"

"அமெரிக்காவுல எங்க டான்ஸ் ஸ்கூல் ஒண்ணு இருக்கு. அதைக் கவனிச்சுக்க திறமையான ஒரு டான்ஸரை நான் தேடிக்கிட்டிருக்கேன். உங்களைப் பார்த்த பின் நீங்கதான் அந்த வேலைக்கு ஏற்றவர்னு நான் முடிவு பண்ணிட்டேன்!"

"அமெரிக்காவிலேயா?" வாய் பிளந்தான்.

"அப்படி ஒரு வாய்ப்புக் கிடைச்சா ஏத்துக்குவீங்களா?"

"மிஸ் பண்ணினா... என்னை விடப் பெரிய முட்டாள் வேற யாரும் இருக்க முடியாது.."

"தாங்க்ஸ்! அப்புறம்.. இன்னொரு முக்கியமான விஷயம்!"

"சொல்லுங்க!"

"நீங்க யாரையாவது லவ் பண்றீங்களா?"

"இல்லை!" என்றான் அவளையே ஆழமாய்ப் பார்த்தபடி.

"வெரிகுட்! இந்த குவாலிபிகேஷன்தான் எனக்கு முக்கியம்!"

"எதுக்கு?"

நர்மதா நாணத்துடன் தலை கவிழ்ந்தாள்.

"என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

அந்த வார்த்தைக்காகத்தானே விக்ரம் காத்திருந்தான்.

"ரொம்ப!"





"நான் உங்களை இங்கே வரவழைச்சி இவ்வளவு பேசினதும் எதுக்காகன்னு உங்களால புரிஞ்சுக்க முடியுதா?" டேபிளில் தண்ணீர் தொட்டுக் கோலம் போட்டாள்.

"புரிஞ்சாலும்... அதை உங்க வாயால சொல்லணும்னு ஆசைப்படறேன்!" குறுகுறுவென்று பார்த்தபடி சொன்னான்.

"அப்பா எனக்காக மாப்பிள்ளை தேடிக்கிட்டிருக்கார். எனக்குக் கணவராக வரப் போகிறவர் எனக்குப் பிடிச்சவரா, டான்ஸ் தெரிஞ்சவரா, என்னோட சேர்ந்து டான்ஸ் ஸ்கூலை மேனேஜ் பண்ணணும்னு எதிர்பார்த்தேன். உங்களை எனக்குப் பிடிச்சிருக்கிறது!" என்றாள்.

"கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக்கிட்டு கொடுக்கும் கறது இதுதானா? ஒரு தேவதை என் மனைவியா வரப் போகிறாள்னா.. சும்மாவா?"

"பட், என் கணவர் என்னைத் தவிர வேற எந்தப் பொண்ணையும் தொடறதை நான் விரும்ப மாட்டேன். சினிமாவுல அதற்கான வாய்ப்புகள் அதிகம். அதனால..."

சட்டென அவளே எதிர்பார்க்காத தருணத்தில் அவள் கையைப் பற்றினான்.

"சினிமா என் கனவு. உயிர்! ஆனா, இப்ப என் உயிரை உன்கிட்டே ஒப்படைக்கிறேன். இந்த உலகத்திலே உன்னை விட வேற எதுவும் முக்கியமில்லே! என் மனசுல இருந்த சினிமா ஆசையை மறந்தாச்சு. இப்ப உன்னை மட்டும்தான் நினைச்சிட்டிருக்கேன். சந்தோஷம்தானே நர்மதா?"

சந்தோஷ மிகுதியில் அவன் கையில் உதட்டைப் பதித்தாள் நர்மதா.





5

அழகான... சுத்தமான வீடு! பழங்காலத்து வீடென்றாலும், செருப்பைக் கழற்றி விட்டு வீட்டிற்குள் நுழைந்தால் கோவிலுக்குள் நுழைவதைப் போன்ற உணர்வு எழும். வீட்டு முற்றத்தில் துளசி மாடம் இருந்தது. நாள் தவறாமல் அதற்குப் பூஜை பண்ணுவாள் பங்கஜம்.

ராமமூர்த்தி கையில் காய்கறிப் பையும், கக்கத்தில் ஹிண்டு பேப்பருமாய் உள்ளே நுழைந்தார்.

"சுமி.."

அவர் அழைப்பிற்குப் பதினாறு வயது சுமித்ரா ஓடிவந்தாள்.

"என்னப்பா?"

"இதை அம்மாகிட்டே கொடுத்திடு!" காய்கறிப் பையைக் கொடுத்துவிட்டு, ஈஸி சேரில் அமர்ந்து ஹிண்டுவைப் பிரித்தார். ஒரு வரி விடாமல் படித்த பிறகே, அவர் மீண்டும் இவ்வுலகிற்கு வருவார். அதுவரை அவரை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது.

ராமமூர்த்தி ரிடையர்டு போஸ்ட் மாஸ்டர். ஒரு பிள்ளை, மூன்று பெண்கள். பெண்களில் ஒருத்தியைத் திருச்சியிலும், இளையவளைப் பெங்களூரிலும் திருமணம் செய்து கொடுத் தாகி விட்டது. கடைக்குட்டி சுமித்ரா இப்போதான் +2 படிக்கிறாள்.

மூத்தவன்தான் ஜீவா!

முழுக்கைச் சட்டையை ஒரு மடிப்பு மடித்துவிட்டு சரி பண்ணிக் கொண்டே டைனிங் டேபிள் முன் வந்தமர்ந்தான்

ஜீவா. பக்கத்தில் யூனிஃபார்மில் சுமித்ராவும், எதிரே அப்பாவும் அமர்ந்திருந்தனர்.

சுடச் சுட பூரிக் கிழங்கைப் பரிமாறினாள் பங்கஜம். உஸ் உஸ்ஸென்று வாயைத் திறந்து மூச்சு விட்டாள். அவளுக்கு ஆஸ்துமா தொந்தரவு இருந்தது.

"ஏம்மா கஷ்டப்படறே? நேத்திலேர்ந்து அவஸ்தைப் பட்டுக்கிட்டிருக்கே! ஹோட்டல்லேர்ந்து வரவழைச்சு சாப்பிட முடியாதா? ஏன் உடம்பைப் போட்டுப் படுத்திக்கறே? மாத்திரை எடுத்துக்கிட்டியா?" என்றான் கரிசனமாய்.

"ம்.. எடுத்துக்கிட்டேன். இன்னொன்று வைக்கவா?"

இன்னும் இரண்டு பூரியைத் தட்டில் வைத்தாள்.

"போதும்மா! செஞ்ச வேலை வரைக்கும் போதும். ரெண்டு நாள் ரெஸ்ட் எடு! ஹோட்டல்ல பார்த்துக்கலாம்!"

'ஹோட்டல் சாப்பாடு எனக்கும் ஆகாது. உங்கம்மாவுக்கும் ஆகாது. பிறகெப்படி?" என்று கேட்டார் ராமமூர்த்தி.

"வீஸிங் ப்ராப்ளம் இருக்கப்ப, கிச்சன்ல வேலை செஞ்சா அது இன்னும் அதிகமாகும்!"

"புரியுது இல்லே.. சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்க. எல்லாப் பிரச்னையும் தீர்ந்திடும்!"

ஜீவா சட்டென அமைதியானான்.

"ஆர்த்தியை நீ விரும்பறேன்னு தெரிஞ்சதும், அவ குலம், கோத்திரம் எதுன்னு தெரிஞ்சுக்காமலேயே சரின்னு சொன்னோம். எதுக்காக? உன் விருப்பத்துக்கு மதிப்புத் தரணும்னு. தவிர அவளை எங்களுக்கும் ரொம்பவே



பிடிச்சிருக்கு. நல்ல பொண்ணு! நாங்க சரின்னு சொல்லிட்ட பிறகும் எதுக்கு கல்யாணத்தைத் தள்ளிப் போடறே?"

"ஆர்த்தி கூடிய சீக்கிரம் அவங்க வீட்லே இதுபத்தி பேசிடுவாப்பா! கொஞ்சம் வெயிட் பண்ணுங்கன்னு சொன்னா!"

"இதே பதிலைத்தான் ஆறு மாசமா சொல்லிட்டிருக்கே! நானாவது அவ வீட்டுக்குப்போய் பேசிட்டு வரவா? எதுக்காக நாளைத் தள்ளிப் போடணும்? உங்கம்மா மேலே உனக்கு அக்கறையிருந்தா உன் கல்யாணம் சீக்கிரம் நடந்தாகணும்!" என்றார் அழுத்தமாய்.

"இன்னும் ரெண்டு மூன்று நாள்ல ஒரு நல்ல பதிலா சொல்லிடறேன்ப்பா!" என்றான் ஜீவா.

அன்று விக்ரமின் பிறந்த நாள்.

என்றாலும் முகத்தை உம்மென்று வைத்திருந்தான்.

'பிறந்த நாளும் அதுவுமா ஏம்ப்பா முகத்தைத் தூக்கி வச்சிட்டிருக்கே?" கொஞ்சுவது போல் கேட்டாள் அஷ்ட லக்ஷ்மி.

"பின்னே என்னம்மா? எல்லாரும் ஜாலியா ஏதாவதொரு ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு, சினிமாவுக்குப் போய் சந்தோஷமா ஒரு நாளைக் கழிக்கலாம்னு பார்த்தா... அனாதை ஆசிரமம் போகலாம், அழுதுட்டு வரலாம்னு கூப்பிடறீங்க, பர்த்டே அதுவுமா மூட் அவுட் பண்ணணுமா?"

விக்னேஷ் தம்பியின் தோளில் கை வைத்து அழுத்தினான்.

"நம்ம அஞ்சு பேருக்காக ஹோட்டல், சினிமான்னு ஆயிரம் ரூபா செலவு பண்ணி சந்தோஷப்படலாம்தான். ஆனா, அந்த



ஆயிரம் ரூபாயிலே அம்பது பேரோட ஒருவேளை பசியையாவது போக்க முடியும்னா... அதைவிடப் பெரிய சந்தோஷம் வேற என்ன இருக்க முடியும் விக்ரம்?"

"ஆமாம் விக்ரம்! அவங்களோட ஆசீர்வாதமும் உனக்குக் கிடைக்குமில்லையா? என்னைப் பொறுத்தவரை கோவிலுக்குப் போய் அம்பது ரூபாய் செலவழிக்கிறதை விட அந்தப் பணத்திலே ரெண்டு பேருக்குச் சாப்பாடு போட்டா... பெரிய புண்ணியமில்லையா?" என்றாள் ஆர்த்தி.

"ஐயோ... என்ன இது? நீங்க ரெண்டு பேரும் கூட வயசானவங்க மாதிரி பேசறீங்க? வீடு மொத்தமும் ஒண்ணு சேர்ந்து எனக்கெதிரா சதி பண்றீங்க... சரி.. வர்றேன்!" பெரிய மனதுடன் சம்மதித்தான் விக்ரம்.

"ஆட்டோ வந்தாச்சு. எல்லோரும் ரெடியா?" என்றபடி உள்ளே நுழைந்தார் கோகுல்நாத்.

"ஆச்சுங்க.. இதோ வந்திட்டோம்!" பூட்டைத் தேடினாள் அஷ்டலக்ஷ்மி.

"ஆட்டோவிலா போகிறோம்?" முகம் சுழித்தபடி கேட்டான் விக்ரம்.

"நம்மளோட ஃபோர்ட் ஐகானை சர்வீஸுக்கு விட்டிருக் கோம்... மறந்துட்டியா?" கிண்டலாய்க் கேட்டாள் ஆர்த்தி.

'என்ன கிண்டலா? பார்த்துக்கிட்டேயிரு! ஒண்ணு இல்லே.. பத்துக் கார் வாங்கத்தான் போகிறேன்!'

"நல்ல கனவு! பேமஸ் டைரக்டர் காந்திதாசனே உன்னை வேண்டாம்னுட்டார். இனி யாரு உனக்கு சான்ஸ் தரப் போறாங்க!"



"படத்துல நடிச்சுதான் சம்பாதிக்கணும்னு இல்லே..."

"பின்னே?"

"வெயிட் அண்ட் ஸீ!"

"ப்ச்.. ஆர்த்தி! கொஞ்சம் சும்மா இரேன். நீ வேற அவனை வம்புக்கு இழுத்துக்கிட்டு.." விக்னேஷ் தங்கையை அடக்கினான்.

அடுத்த சில நிமிடங்களில் அனைவரும் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினர்.

ஆட்டோ சாரதா.. ஆதரவற்ற முதியோர் இல்லத்தின் வாசலில் நின்றது.

உணவுப் பொட்டலங்களுடன் விக்னேஷ் இறங்கினான்.

ஆண்களும், பெண்களுமாய் ஏகப்பட்ட முதியோர்கள் இருந்தனர்.

அவர்களைப் பார்க்கப் பார்க்க அஷ்டலக்ஷ்மிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டது.

ஒவ்வொரு முதிய இதயத்துக்குள்ளும் பெரிய சோகக்கதை புதைந்திருந்தது.

கிளைக்குப் பாரமென்று வெட்டியெறியப்பட்ட வேர்கள் அவர்கள்.

பெற்ற பிள்ளைகளால், மருமகள்களால், கணவன்மார் களால்... இங்கு அனுப்பப்பட்ட சுமைகள் அவர்கள்.

சிலர் வசதி வாய்ப்பிருந்தும், வீடு வாசல் இருந்தும், அன்பைத் தேடி, ஆறுதலைத் தேடித் தஞ்சமடைந்தவர்களும் உண்டு.

அவர்களுக்கு உணவை வழங்கிவிட்டு, வீடு திரும்பும் போது கண் கலங்கியிருந்தாள் அஷ்டலக்ஷ்மி.

இரவு!

நல்ல உறக்கத்திலிருந்த கோகுல்நாத் வெகு நெருக்கத்தில் விசும்பல் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தார்.

அழுகைச் சப்தம் அஷ்டலக்ஷ்மியிடமிருந்து வருகிறது என்பதை அறிய அவர் பிரயத்தனப்படவில்லை.

ஆச்சர்யமும், அதிர்ச்சியுமாய் மனைவியின் தோளைத் தொட்டார்.

"லக்ஷ்மி... அழறியா என்ன?"

திரும்பிப் பார்த்தவளின் கண்ணீர் காது மடல் வரை கோடு போட்டிருந்தது.

"என்ன லக்ஷ்மி... ஏன் அழறே? கால் வலிக்குதா?"

"மனசு வலிக்குதுங்க...!" விசும்பலுடன் கூறினாள்.

"என்ன சொல்றே நீ?"

"மனசு சரியில்லீங்க!"

"அதான் ஏன்னு கேட்டேன்?"

"இன்னைக்கு சாரதா இல்லத்துக்குப் போய் வந்ததிலேர்ந்து.. மனசு கனமாயிருக்குங்க.."

"..."

"ஒவ்வொருத்தர் கண்கள்லேயும் எவ்வளவு ஏக்கம்! எதிர்பார்ப்பு! அடிபட்ட வலி! மக்களைத் தாங்கும் தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள். தகப்பன் ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தவர். அப்படிப்பட்டவர்களைப் பெற்ற பிள்ளைகள் உதாசீனப்படுத்த எப்படி மனசு வந்தது? கருவை வயிற்றிலே சுமக்கும் போதே.. பிள்ளையை டாக்டராக்கலாமா? டீச்சராக்கலாமா? என்ஜினியராக்கலாமான்னு தாய் எத்தனை மனக்கோட்டை கட்டுகிறாள்! அவனுக்குப் பிடிச்சதெல்லாம் வாங்கிக் கொடுத்து, ஸ்கூல் அட்மிஷனுக்காகவும், காலேஜ் அட்மிஷனுக்காகவும் எம்.எல்.ஏ. கால்லேயும், மந்திரி கால்லேயும் விழுந்து சீட் வாங்கிக் கொடுத்து, பர்த் சர்ட்டிஃபிகேட், கம்யூனிட்டி சர்டிபிகேட்டுக்குன்னு நடையா நடந்த தகப்பனையும், பிள்ளைக்கு இது பிடிக்கும், அதுபிடிக்கும்னு பார்த்துப் பார்த்துச் சமைச்சுப் போட்ட தாயையும் குப்பையை ஒதுக்கி வைக்கற மாதிரி ஒதுக்கி வைக்க இந்தப் பிள்ளைங்களுக்கு எப்படிங்க மனசு வருது?"



"..."

"வீடு, குடும்பம், பிள்ளைகள், மருமகள், பேரக் குழந்தைகள்னு வாழ்ந்து பழகிட்டு... அத்தனை சொந்த பந்தத்தையும் விட்டுட்டு நாலு சுவத்துக்குள்ளே ஒரு கைதி மாதிரி கடைசி வரை காலத்தைக் கடத்தவா பத்து மாதம் சுமந்து மரண வலியைத் தாங்கிக்கிட்டு குழந்தைகளைப் பெத்துக்கறோம்? பெத்தவங்களுக்கு மன வலியைத் தர்றதுதான் பிள்ளைகளோட கடமையா? கடவுளே..!" வாய்விட்டு அழுதாள் அஷ்டலக்ஷ்மி.

கோகுல்நாத் மனைவியின் தலையை அன்புடன் கோதினார்.

"அசடு... இதுக்குப் போயா அழறே? அவங்களோட தலைவிதி! முதியோர் இல்லத்துலே சேர வேண்டிய துர்பாக்கியம். நாட்டிலே அத்தனை அப்பா அம்மாவும் முதியோர் இல்லத்திலேயே இருக்காங்க? நம்மளை மாதிரி எவ்வளவோ பேர் பிள்ளைகளோட சந்தோஷமாயில்லையா'?'



"நமக்கு இதுமாதிரி ஒரு துர்பாக்கியம் வந்துவிடாதுதானே? அப்படி ஒரு நிலைமை வந்தா என்னால தாங்கிக்க முடியாதுங்க. நான் உயிரோடயே இருக்க மாட்டேன்!"

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு லக்ஷ்மி? நமக்கேன் அப்படி ஒரு நிலைமை வரப் போகுது? நம்ம குழந்தைங்க நம்மளைக் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப் பாங்க! தவிர, நீயோ, நானோ கடைசி வரை யாரோட கையையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே! நான் பென்ஷன் வாங்கறேன். ஒருவேளை உனக்கு முன்பே நான் போய்ச் சேர்ந்துட்டாலும், என் பென்ஷன் உன்னைக் காப்பாத்தும்!"

"ஐயோ.." என்றலறியபடி, கணவரின் வாயைப் பொத்தினாள். "என்ன வார்த்தை பேசறீங்க? பூவோடும், பொட்டோடும் சுமங்கலியாய்ப் போய்ச் சேர்ந்திடணும்னு தினமும் கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டிருக்கிறேன். கடவுளே!" தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"பார்த்தியா... நீகூட சுயநலக்காரியாய்ட்டே! நான் உன்னை விட்டுப் போகக் கூடாது. ஆனா, நீ மட்டும் எனக்கு முன்னால போகணும்னு ஆசைப்படறியே! உன்னைப் பிரிஞ்சி என்னால தனியா வாழ்ந்திட முடியுமா லக்ஷ்மி?" என்றார் குரல் கம்ம.

"யார் உயிரும் யார் கையிலேயும் இல்லேங்க. நாம இதைப்பத்தி பேச வேண்டாமே! எனக்குப் பயமா இருக்குங்க!" குரல் நடுங்க.. கணவனின் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

"பயப்படாதே... நான் இருக்கேனில்லே! நீதான் அசட்டுத் தனமா என்னென்னவோ பேசறே?" அவள் முதுகை மெதுவாய்த் தட்டிக் கொடுத்தார்.



விசும்பல் சத்தம் கேட்டுப் பக்கத்து அறையிலிருந்து ஆர்த்தி வாசலருகே வர.. நடந்த சம்பாஷணைகள் அனைத்தும் காதில் விழ... நெக்குருகிப் போனாள்.

இருவரும் ஐஸ்க்ரீமைச் சாப்பிட்டு முடித்தனர்.

"நீ என்ன பண்ணுவியோ.. ஏது பண்ணுவியோ.. எனக்குத் தெரியாது. நம்ம காதலைப் பத்தி நீ உங்க வீட்லே சொல்றே!" கர்ச்சீப்பால் உதட்டை ஒற்றியபடி கூறினான் ஜீவா.

"நீ பாட்டுக்கு ஈஸியா சொல்லிட்டே? இதென்ன புடவை சமாச்சாரமா? அம்மா.. அம்மா.. எனக்கு இந்தப் புடவை பிடிச்சிருந்தது, வாங்கிட்டு வந்துட்டேன்னு சொல்றதுக்கு? லவ்வுப்பா.. லவ்! எப்படிச் சொல்ல முடியும்?"

"அதுசரி! இப்பிடி தொடை நடுங்கியா இருந்தா.. எப்ப கல்யாணமாகி ஃபர்ஸ்ட் நைட் நடந்து.. குழந்தை பிறந்து.. ப்ச்... எனக்கு நம்பிக்கையே விட்டுப் போச்சு. கடைசி வரை நான் கன்னிப் பையனாகவே இருக்க வேண்டியதுதானா?" சலித்துக் கொண்டான்.

"யூ ராஸ்கல்! எப்பப் பார்த்தாலும் உனக்கு அதே நினைப்பு தானா?"

"வயசுக் கோளாறுடி செல்லம்!"

"ரொம்ப கொஞ்சாதே!"

"எங்க வீட்ல கம்பல் பண்றாங்க ஆர்த்தி! தைரியமா சொல்லிடு! என்னைக் கூடப் பிடிக்காம போய்டுமா, உங்க வீட்லே? இதுக்கு மேலேயும் உனக்கு ஹாண்ட்ஸமா ஒரு மாப்பிள்ளை கிடைப்பானா? நீயே சொல்லு!"

"நினைப்புதான் பொழைப்பைக் கெடுக்குது! வீட்லே பர்மிஷன் வாங்கறது பெரிய விஷயமில்லே! பட் எனக்காக அதிக பட்சம் ஒரு வருஷம் பொறுத்துக்க மாட்டியா?"

''ஒரு வருஷமா? எதுக்கு?'' முகம் மாறிப் போனது ஜீவாவிற்கு.

'விக்னேஷ் அண்ணனுக்கு முதல்ல கல்யாணம் நடக்கட்டும். அதுக்குப் பிறகு நமக்கு நடக்கட்டும்னு ஆசைப்படறேன்!''

''முதல்ல நம்ம மேட்டரை உன் வீட்லே சொல்லிடு ஆர்த்தி. இந்த விஷயத்தைப் பெரியவங்க ஒன்னு கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும். நியாயமான கோரிக்கை என்கிறபோது.. மறுப்பெழாது. பெரியவங்களா பேசி முடிவு பண்ணிட்டா.. ஒரு வருஷமென்ன.. ரெண்டு வருஷம் கூட காத்திருப்பேன்!''

''தாங்க்ஸ்டா!'' ஆர்த்தியின் முகத்தில் திருப்தி.

''கொஞ்சம் இறங்கி வந்தா போதுமே.. உடனே மரியாதைய வாபஸ் வாங்கிடுவீங்களே!''

''நமக்குள்ளே எதுக்குடா ஃபார்மாலிட்டீஸ்?'' செல்லமாய் அவன் கன்னத்தைத் தட்டினாள்.

''செம மூட்லே இருக்கே போலிருக்கே? பிக்சர் போகலாமா? அன்னைக்கு மாதிரி..'' கண்ணடித்துச் சிரித்தான்.

''உதைப்பேன் ராஸ்கல்! ஒழுங்கா வீடு போய்ச் சேர்!'' ஒற்றை விரலை உயர்த்தி, செல்லமாய் எச்சரித்தாள் ஆர்த்தி.



6

**வி**க்ரம் - நர்மதாவின் காதல் குறுகிய காலத்தில் கிடுகிடுவென விலைவாசியைப் போல் வளர்ந்திருந்தது. காற்றுக் கூட நுழைந்து பிரித்து விடாதபடி ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு அன்பால் இறுகிப் போயிருந்தனர்.



இவர்களின் காதல் நர்மதாவின் அப்பா காந்திதாசனுக்கும் தெரியவர.. எதிர்க்கவே செய்தார். மகளிடம் தர்க்கம் செய்தார். விக்ரமை இந்த உலகிலேயே இல்லாமல் ஆக்கி விடுவேன் என்று மிரட்டினார். ஆனால் நர்மதாவின் பிடிவாதத்தின் முன் எதுவும் எடுபடவில்லை. 'விக்ரமைத் தவிர, வேறெந்த ஆணும் எனக்குக் கணவனாக வர முடியாது!' என்றாள் முடிவாக.

மகளின் பிடிவாத குணம் அறிந்தவரான காந்திதாசன் அதற்கு மேல் எதிர்க்க முடியாமல் வேறு வழியின்றி அவர்களின் காதலுக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார்.

'எப்படி ஆரம்பிப்பது?' ஆர்த்தி திணறிப் போனாள். ஜீவா முதன் முதலில் தன் காதலைச் சொன்னபோது அவள் இதயம் நொடிக்கு நூறு தடவை துடித்தது. தன் காதல் விஷயத்தைப் பெற்றோரிடம் கூற முயற்சிக்கும் போதே அதைவிட அதிகமாகத் துடிக்கிறது. சொல்லி முடித்தபின் இதயம் மீன் போல் துள்ளி வாய் வழியே வெளியே வந்து விடுமோ என்கிற அச்சமும் எழுந்தது.

அஷ்டலக்ஷ்மி அவளுக்கு மிகவும் பிடித்த காஞ்சிபுரம் இட்லியைச் செய்திருந்தாள். வழக்கமாய் அந்த இட்லி என்றால் நான்கைந்து இட்லி சாப்பிடுபவள் ஒரு இட்லியோடு கையைக் கழுவிய ஆர்த்தியை வியப்பால் பார்த்தாள் அம்மா.

''என்ன ஆர்த்தி எந்திரிச்சிட்டே?''

''போதும்மா... பசிக்கலே!''

''அதுக்காக? சின்னக் குழந்தை மாதிரி ஒரு இட்லியோடவா எந்திரிச்சுக்குவாங்க? உடம்புக்கு ஏதும் சரியில்லையா?'' கவலையுடன் மகளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

கலங்கிப் போனாள் ஆர்த்தி.



'எவ்வளவு அன்பு! அக்கறை! என் காதல் விவகாரம் தெரிந்தால் எப்படிக் கலங்கிப் போவார்கள்!'

''இட்லி பிடிக்கலேன்னா வாய்க்கு ருசியா ரெண்டு தோசை சுட்டுக் கொடு!'' கோகுல்நாத் கரிசனமாய்ச் சொன்னார்.

''தோசை சுட்டுத் தரட்டுமா?''

''இல்லேம்மா... வேண்டாம்!'' அவசரமாய் மறுத்தாள்.

விக்னேஷ் தங்கையை ஏறிட்டுப் பார்த்தான்.

''நம்ம ஆர்த்தி முன்னை விட இப்ப கொஞ்சம் இளைச்சிருக்கிற மாதிரி தெரியலேம்மா?'' என்றான்.

''எங்கேப்பா? ஒழுங்கா சாப்பிட்டாதானே? அவசர அவசரமாய் ரெண்டு வாய் அள்ளி வாய்ல போட்டுக்கிட்டு வேலைக்கு ஓடறா. உடம்பு இளைக்காம என்ன செய்யும்?''

''அப்ப எதுக்கும்மா அவளை வேலைக்கு அனுப்பணும்? இவபாட்டுக்கு சாப்பிடாம கொள்ளாம ஒட்டடைக் குச்சி மாதிரி ஆகிட்டாள்னா... நாளைக்கு இவளைப் பொண்ணு பார்க்க வர்றவங்க.. பொண்ணுக்குச் சாப்பாட்டை கண்லே காட்ட மாட்டீங்களான்னு உன்னைத்தான் கேப்பாங்க! பேசாம அவளை வீட்டோட இருக்கச் சொல்லுங்க..''

ஆர்த்தி அதிர்ந்தாள்.

''அண்ணா... என்ன சொல்றீங்க நீங்க?''

''ஆமா ஆர்த்தி! நீ வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சது போதும்... உனக்கும் கல்யாண வயசு வந்தாச்சு. பெண்களுக்குக் காலா காலத்துல அதது நடக்க வேண்டிய நேரத்துல நடந்தாதான் கவுரவம்.''



''நீ சொல்றதும் சரிதான் விக்னேஷ்! சீக்கிரம் ஆர்த்திக்கு ஒரு நல்ல இடமா பார்த்து கல்யாணம் பண்ணிவச்சிட்டா பெரிய கடமை முடிஞ்சிடும். அவ கல்யாணம் முடிஞ்ச கையோட உனக்கும் பொண்ணு பார்க்க ஆரம்பிச்சிட வேண்டியதுதான்!''

''அட.. என்னை விடுங்கப்பா! முதல்ல ஆர்த்தியோட கல்யாணத்தை நல்லபடி நடத்தி முடிப்போம். நம்ம வீட்டுக்கு ஆர்த்தி ஒரே பொண்ணு. அதனால ஒவ்வொரு விஷயத்திலேயும் கவனமா ஒரு குறையுமில்லாம செய்து முடிக்கணும்!'' அக்கறையுடன் பேசிக் கொண்டிருந்தான் விக்னேஷ்.

ஆர்த்தி செய்வதறியாது திகைத்து நின்றிருந்தாள்.

'இதென்ன வம்பு? அண்ணன் என்னென்னமோ சொல்கிறாரே! என் காதலுக்கு முழுசா வேட்டு வச்சிடுவாரோ..?' பயந்தாள்.

''தரகரை வரச் சொல்லுங்க! இன்னைக்கு நாள் நல்லாயிருக்கு. ஆர்த்தியோட ஜாதகத்தைக் கொடுத்திடலாம்!'' என்றாள் அம்மா.

''நீ சொல்றதும் சரிதான்!'' கோகுல்நாத் ஆமோதித்தார்.

''அதுக்கெல்லாம் அவசியமே இல்லேம்மா! நான் நம்ம ஆர்த்திக்காக சூப்பரா ஒரு மாப்பிள்ளையைப் பார்த்திருக்கேன்!'' தங்கையை ஓரக்கண்ணால் பார்த்தபடி சொன்னான் விக்னேஷ்.

விதிர் விதிர்த்துப் போனாள் ஆர்த்தி.

இதற்கு மேலும் வாய் மூடிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

''அண்ணா.. எனக்கென்ன அவசரம் இப்ப? வீட்டுக்கு மூத்தவங்க நீங்க! உங்களுக்கு முதல்ல கல்யாணம் நடக்கட்டும்.

எனக்குப் பிறகு பார்த்துக்கலாம்!'' படபடப்போடு வந்தன வார்த்தைகள்.

''எனக்கென்னம்மா அவசரம்? ஆம்பளை அம்பது வயசிலே கூட கல்யாணம் பண்ணிக்கலாம். பெண்களுக்கு அப்படியில்லே! குறிப்பிட்ட காலத்துக்கு மேலே பிறந்த வீட்லே வச்சிருக்கிறது பெத்தவங்களுக்கு அழகில்லையே!''

''அதானே? வயசுக்கு வந்த பொண்ணை எவ்வளவு நாள்தான் வீட்லேயே வச்சிட்டிருக்க முடியும்? அவளுக்கு என்ன தெரியும் விக்னேஷ்? நீ சொல்லுப்பா.. யாரோ நல்ல மாப்பிள்ளையா பார்த்து வச்சிருக்கேன்னு சொன்னியே!''

ஆர்த்தியின் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

''சொன்னா ஆர்த்தியே ஆச்சர்யப்படுவா..! அவளுக்கு எல்லா விதத்திலும் பொருத்தமான நபர்!''

''....''

''என்னை மாதிரி அவரும் ஒரு கம்ப்யூட்டர் என்ஜினியர் தான்! ரொம்ப ஹாண்ட்ஸம். எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. ஆச்சாரமான நல்ல குடும்பம். மூணு சிஸ்டர்ஸ். ரெண்டு பேருக்குக் கல்யாணமாகி அனுப்பியாச்சு. கடைக்குட்டி ஒருத்தி இருக்கா! பொறுப்பான பையன். நம்ம ஆர்த்தியைத் தங்கத் தட்டுல வச்சுப் பார்த்துக்குவான்!'' சிரிப்பை உதட்டிற்குள் மென்றபடி சீரியஸாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆர்த்திக்கு நெஞ்சு கனத்துப் போனது. அது நாள்வரை அன்பின் சிகரமாய்த் தெரிந்த அண்ணன் உயிரைப் பறிக்க வந்த எமனாய்த் தெரிந்தான். கொஞ்சம் விட்டால் அழுகை வெடித்துக் கொண்டு வெளியே வரத் தயாராய் இருந்தது. சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



''நீ சொல்றதைப் பார்த்தா ரொம்ப நல்ல இடம் போலத்தான் தெரிகிறது. பையன் எங்கே வேலை பார்க்கிறான்?'' அப்பா ஆர்வமாய்க் கேட்டார்.

''டைடல் பார்க்ல ஒரு பெரிய மென்பொருள் தொழிற்சாலையிலே சிஸ்டம் அனலிஸ்ட்!''

'என் ஜீவாவும் அங்கேதானே வேலை பார்க்கிறார்!'

''பேரு..''

''....''

''பேரு ஜீவா!'' என்றான் தங்கையை நேருக்கு நேர் பார்த்து.

சிலிர்த்து நிமிர்ந்தாள் ஆர்த்தி.

'என்ன சொல்கிறார்? ஜீவாவா? எந்த ஜீவாவைப் பற்றிச் சொல்கிறார்?'

''ஆர்த்தி அவரைப் பார்த்தான்னா... கட்டினா இவரைத்தான் கட்டிக்குவேன், இல்லேன்னா கல்யாணமே வேண்டாம்னு சொல்லுவா! ஏன்னா, ஜீவா நம்ம ஆர்த்திக்காகவே பிறந்தவன்! இப்ப சொல்லு ஆர்த்தி, அண்ணன் உனக்காகப் பார்த்த இந்த அலையன்ஸை வேண்டாம்னு சொல்லுவியா?'' அவளுக்கு மட்டுமே தெரியும்படி குறுஞ் சிரிப்புடன் கண்ணடித்துக் கேட்டான்.

சகலமும் புரிந்து போனது அவளுக்கு.

'மைகாட்! அண்ணனுக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. ஜீவா.. எங்கள் காதல் உட்பட...' உடல் முழுக்க பயம் சூடாகப் பரவியது. சங்கடத்துடன் அண்ணனைப் பார்த்தாள்.

''சார்!'' யாரோ வாசலிலிருந்து குரல் கொடுக்க..





கோகுல்நாத் எழுந்து போக... அஷ்டலக்ஷ்மியும் பின்னாலேயே சென்றாள்.

விடுபட்ட வாக்காளர்களின் பெயரைச் சேர்க்கும் பணிக்காக வந்திருந்தனர். அஷ்டலக்ஷ்மியின் பெயர் விடுபட்டுப் போயிருந்ததால்.. இருவரும் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்க... இங்கே இவர்கள் பேசிக் கொள்ள சந்தர்ப்பம் அமைந்தது.

64805

''என்ன ஆர்த்தி அமைதியாயிருக்கே! நான் பார்த்த அலையன்ஸை மறுக்க மாட்டேன்னு நினைக்கிறேன், சரியா?''

''அ.. அண்ணா... உங்களுக்கு ஜீவாவை..!'' சன்னமாய் அவனுக்கு மட்டுமே கேட்கும்படி கேட்டாள்.

''எனக்கு எல்லாமே தெரியும். உன்னையும், ஜீவாவையும் சேர்த்துப் பல இடங்களில் நானே பார்த்தேன். அதிர்ச்சியாய் இருந்தாலும், உன்னோட செலக்ஷன் தப்பானதாய் இருக்காது என்ற நம்பிக்கை இருந்தது. அதனால ஜீவாவைப் பத்தி விசாரிச்சேன். திருப்தியா இருந்துச்சு. என்னதான் நல்லவனாயிருந்தாலும் நீ அவனைக் காதலிச்சேன்னு தெரிஞ்சா நம்ம அப்பா, அம்மாவுக்கு எதிர்க்கத் தோணும்... பிடிக்காமப் போகலாம். ஒருவேளை வீம்புக்காக இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்காமலே கூடப் போகலாம். ஏன்னா, அந்தக் காலத்து மனுஷங்க... அவங்க கோணத்துல 'காதல்னா.. தீண்டத்தகாத விஷயம் போலத்தான்! என் ஒரே தங்கையோட காதல் தோல்வியடையக் கூடாது. அதனாலதான் நானே பார்த்த அலையன்ஸ் மாதிரி பிளேட்டைத் திருப்பிப் போட்டுட்டேன். ஜீவாகிட்டேயும் சொல்லிவை! அவங்க வீட்லேர்ந்து பொண்ணு பார்க்க வரும்போது உளறிக் கொட்டிடப் போறாங்க!''



விக்னேஷ் சொல்லிக் கொண்டே போக.. தாங்க முடியாத சந்தோஷத்தில் ஆர்த்தியின் கண்கள் கலங்கின.

எப்படிடா தன் காதலைப் போட்டுடைப்பது என்று தவித்துக் கொண்டிருந்தவளுக்கு, தெய்வம் போல் கைகொடுத்த தன் அண்ணனை நன்றியுடன் கைகூப்பினாள்.

''தாங்க்ஸ்.. ரொம்ப தாங்க்ஸ்ண்ணா!''

''சேச்சே... என்ன இது, கை கூப்பிக்கிட்டு! முதல்ல கண்ணைத் துடை...!''

64805

''இந்த விஷயத்தை எப்படிச் சொல்லப் போகிறோம்னு தவிச்சிக்கிட்டிருந்தேன். ஆனா, எனக்கு அந்தச் சிரமம் தராம பெரிய உபகாரம் பண்ணிட்டீங்கண்ணா..''

''என் ஆர்த்தியோட சந்தோஷம் எனக்கு முக்கியம். இன்னொரு வகையில் நான்தான் உனக்கு தாங்க்ஸ் சொல்லணும். உனக்கு ஊர் ஊரா மாப்பிள்ளை தேடற வேலை மிச்சம். நானாத் தேடியிருந்தாக் கூட ஜீவா மாதிரி ஒரு மாப்பிள்ளையைப் பார்த்திக்க முடியுமான்னு சந்தேகம்தான்! எனக்கு ஜீவாவை ரொம்ப பிடிச்சிருக்கு!''

ஆர்த்தியின் மனசு ஹாவென்ற நிம்மதியில் நிறைந்தது.

''ஆர்த்தி.. அம்மாவும், அப்பாவும் வர்றாங்க!'' என்றான் மெல்லிய குரலில்.

அதீத சந்தோஷத்தைச் சட்டென மறைத்துக் கொண்டாள் ஆர்த்தி.

''என்னப்பா... என்ன சொல்றா உன் தங்கச்சி?''

கேட்டபடி அருகே வந்தமர்ந்தார் கோகுல்நாத்.

"ஜீவா பத்தி விளக்கமாய்ச் சொன்னேன். ஆர்த்தி புத்திசாலி. இப்படியொரு மாப்பிள்ளை வேண்டாம்னு சொல்ல அவளுக்கென்ன பைத்தியமா? சந்தோஷமா தலையாட்டிட்டா!"

'முருகா.. என் வயித்திலே பால் வார்த்திட்டேப்பா! பழனிக்கு வந்து உனக்குப் பாலாபிஷேகம் பண்றேன்ப்பா!"

அஷ்டலக்ஷ்மி கண்மூடிக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

"ஏம்மா.. கஷ்டப்பட்டுப் பேசி ஆர்த்தியைச் சம்மதிக்க வச்சது நான்! பாலாபிஷேகம் முருகனுக்கா? ஸ்ட்ராங்கா எனக்கொரு காபி போட்டுக் கொண்டு வாங்க!" என்றான் கிண்டலாய்.

அவன் கிண்டலுக்குக் கோகுல்நாத்தும், ஆர்த்தியும் சிரிக்க-

"உனக்கு எல்லாமே கிண்டல்தான்!" என்றாள் லேசாய் வெட்கப்பட்ட அஷ்டலக்ஷ்மி.

"விக்னேஷ்... நல்ல காரியத்தைத் தள்ளிப் போடக் கூடாது. அவங்களைப் பொண்ணு பார்க்க வரச் சொல்லிடு!"

"சரிப்பா..!"

"அ.. அப்பா!" என்றாள் தயக்கமாய் ஆர்த்தி.

"என்னம்மா?"

"நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டீங்களே!"

"என்ன விஷயம் சொல்லு?"

"அண்ணனுக்கு முதல்ல கல்யாணம் நடக்கட்டுமே!"

"ஏன் ஆர்த்தி? எனக்கென்ன அவசியம்!"



'அவசரம் இல்லேண்ணா.. அவசியம்!"

"அவசியமா? என்ன சொல்றே நீ?"

"எனக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க ஆசைப்படற மாதிரி... உங்களுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க ஆசைப் பட மாட்டேனா?"

"உனக்கு முதல்ல முடியட்டும்! அடுத்து உடனே அவனுக்குப் பண்ணத்தானே போகிறேன்!" என்றார் அப்பா.

"புரியுதுப்பா! ஆனா, அப்படி அண்ணனுக்குக் கல்யாணம் நடக்கறப்ப நான் இன்னொரு வீட்டுக்கு மருமகளா இல்லே இருப்பேன்!"

"ஆமாம்!"

"நா சொல்றது புரியலியாப்பா? என் கூடப் பிறந்தவங்க ரெண்டு பேருமே ஆண்கள். அக்காவோ, தங்கையோ எனக்கில்லை. இந்த வீட்டுக்கு மருமகள் வரணும். எனக்கு அண்ணி வரணும். மத்த நாத்தனார் மாதிரி யில்லாம அவங்களோட சகோதரியா, மகளா, தோழியா நான் பழகணும். அவங்களும் என் மேல் ரொம்ப பாசமா நடத்துக்கணும். அண்ணியோட கொஞ்ச காலமாவது நான் வாழணும்னு ஆசைப்படறேன். எனக்குக் கல்யாணமாய்ட்டா.. இதுக்கு வாய்ப்பே இல்லாமப் போய்டும். ப்ளீஸ்ண்ணா.. என் மனசைப் புரிஞ்சுக்குங்களேன்!" ஆர்த்தி கெஞ்சலாய்க் கூறினாள்.

வார்த்தைகள் வராமல் தங்கையின் தலையைப் பாசமாய்க் கோதி விட்டான் விக்னேஷ்.

கோகுல்நாத் சற்று நேர யோசனைக்குப் பின், 'ஆர்த்தி சொல்றதிலேயும் அர்த்தமிருக்கு. அவளோட ஆசையை நிறைவேற்றினா என்ன?" என்றார்.



"அப்பா! ஆர்த்திதான் புரியாமப் பேசறாள்னா.."

"இல்லே விக்னேஷ்! அவ சொல்றதிலே தப்பியிருக்கிறதா எனக்குத் தெரியலே... லக்ஷ்மி... நீ என்ன சொல்றே?"

"நான் என்னங்க சொல்றது? நீங்க சொன்னா சரிதான். விக்னேஷ் இந்த வீட்டு மூத்த பையன். முறைப்படி அவனுக்கு முதல்ல நடக்கறதுதான் சரி! எப்படியோ, கூடிய சீக்கிரம் நம்ம வீட்லே மேளச் சத்தம் கேட்டால் சரி!" என்றாள் சந்தோஷமாய்.

"நினைச்சதைச் சாதிச்சிட்டியா? இப்ப சந்தோஷம்தானே?" தங்கையின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டினான் விக்னேஷ்.

"ரொம்பவே....!" குதூகலத்துடன் சிரித்தாள் ஆர்த்தி.



7

எதிர்க் காற்றில் சுடிதார் துப்பட்டா தேசியக் கொடி போல் பட்டொளி வீசிப் பறக்க.. ஆள் அரவமற்ற பகல் நேர பீச் ரோடில் பைக் மின்னலெனப் பறக்க... ஜீவாவின் பின்னால் அமர்ந்திருந்தாள் ஆர்த்தி.

சும்மாயிராமல் ஜீவாவின் இடுப்பில் கிச்சு கிச்சு மூட்ட... நெளிந்தான்.

"ஹேய்... சும்மா யிரு... கூசுது... பாலன்ஸை விட்டுட்டேன்னா... ரெண்டு பேருக்கும் ரத்தக் காயம் நிச்சயம்!"

"இருக்கட்டுமே! அதான் காதல்ல ஜெயிச்சிட்டோமே.. எவ்வளவு அடிபட்டாலும் வலிக்காது. நான் இப்ப ரொம்ப சந்தோஷமாயிருக்கேன்!"

"ஏதேது.. நீ இருக்கிற சந்தோஷத்தைப் பார்த்தா என்னையே கடிச்சுத் தின்னுடுவே.. போலிருக்கே!"



"ஆமாம்... என் ஜீவாவை நான் தின்னாம வேற யார் தின்றதாம்?" ஆர்த்தி அவன் காதை வலிக்காமல் கடித்தாள்.

"அட.. முத்தம் கூட கொடுப்பே போலிருக்கே! அதுவும் இறுக்கமாய்க் கட்டியணைச்சு.."

"ஏன் தரமாட்டேன்? எனக்கென்ன பயம்? என் ஜீவாவுக்கு நான் முத்தம் தராமல் வேற யார் தருவதாம்?" அவன் இடுப்பை இரு கைகளால் வளைத்து அணைத்து.. அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

அப்படியே மயங்கி விடுபவனைப் போல் ஹேண்டில் பாரிலிருந்த கைகளை எடுத்து விட்டுப் பின்பக்கமாய்ச் சாய.. பைக் தடுமாறியது.

"ஓ.. ஓ.. ஏய்... ஜீவா.. பைக் மோதப் போகுது!" அலறினாள் ஆர்த்தி.

"நாமதான் காதல்ல ஜெயிச்சுட்டோமே.. அடிபட்டாதான் என்ன?"

"ஏய்... முதல்ல ஹேண்டில்பாரைப் பிடி!"

ஜீவா சிரித்துக் கொண்டே பற்றினான்.

"அப்ப டயலாக் பேசியதெல்லாம் சும்மாவா?"

"நிஜம்தான்! ஆனா யோசிச்சுப் பார்க்கறப்ப உன் நிலைமைதான் சரியில்லாம இருக்கு."

"ஏன்.. எனக்கென்ன?"

"பைக் மோதறப்ப நான் உஷாரா கீழே குதிச்சிடுவேன்னு வச்சிக்க.. லேசான சிராய்ப்போட நான் தப்பிச்சிடுவேன்! ஆனா பைக் போகிற வேகத்துல உனக்கு குதிக்கக் கூட அவகாச

மில்லாம எங்காவது மோதி அதியாயத்துக்கு அடிபடுவது நிச்சயம். அப்புறம் நம்ம ஃபர்ஸ்ட் நைட்டு அன்னைக்கு நீ ஸ்டிக்கை ஊன்றிக்கிட்டு தாங்கித் தாங்கி நடந்து வர்றதைப் பார்க்க நல்லவாயிருக்கும்?"

"எ.. என்னது?" சர்ரக்கென்று பிரேக் போட்டான் ஜீவா.

"எவ்ளோ நல்ல மனசுடி உனக்கு?"

"சே.. சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். கோவிச்சுக் காதே செல்லம்.."

"என்ன நீ... ஒரேயடியா கொஞ்சி என் மூடைக் கெடுக்கறே? இதே ரீதியில் போனா.. நேரே உன் வீட்டுக்குப் போய்.. அடுத்த வாரமே எங்க கல்யாணம் நடந்தாகணும்னு தர்ணா இருப்பேன்!" பைக்கிலிருந்து ஜீவா இறங்க.. ஆர்த்தியும் இறங்கினாள்.

"அவ்வளவு அவசரமா?"

"இருக்காதா பின்னே? லட்டு மாதிரி ஒரு காதலி. ஒரு எதிர்ப்பும் இல்லாம ரெண்டு பேர் வீட்லேயும் பச்சைக்கொடி காட்டியாச்சு. இதுக்கு மேலேயும் பொறுமையா எருமை மாதிரி காத்திருக்கச் சொல்றியே.. நியாயமா?"

ஆர்த்தி கலகலவெனச் சிரித்தபடி, கடலலையில் கால் நனைக்க, மணலில் கால் புதைய நடந்தாள்.

"சிரிச்சு.. சிரிச்சு என்னைக் கொல்றியே!"

அவளுடனேயே நடந்தான்.

"ஆர்த்தி.."

"ம்.."



"இந்த கண்டிஷன் தேவைதானா?"

"எந்த கண்டிஷன்?"

"உங்கண்ணனுக்குக் கல்யாணம் நடந்த பிறகே நமக்குக் கல்யாணம்னு சொல்றியே... அந்த கண்டிஷனைச் சொல்றேன்."

"அதுக்கான காரணத்தைத்தான் விளக்கிச் சொல்லிட்டேனே ஜீவா! இவ்வளவு நாள் காத்திருந்தீங்க.. எனக்காக இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்க மாட்டீங்களா? ம்..!"

"அதுக்கில்லே ஆர்த்தி! இத்தனை நாளும் நம் கல்யாணத்துக்கு உங்க வீட்ல சம்மதிப்பாங்களா, மாட்டாங்களான்னு ஒரு டென்ஷன் இருந்தது. அதுக்காகக் காத்திருந்ததுலே ஒரு இனிய அவஸ்தையும் இருந்தது. ஆனா, எப்படியோ, உங்கண்ணன் உதவியால நமக்கு அந்தப் பக்கமும் க்ரீன் சிக்னல் கிடைச்சாச்சு. அதனால ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு வருஷம் போல மலைப்பா தெரியுது. காத்திருக்கப் பொறுமையில்லே! தவிர எங்கம்மாவுக்கு அடிக்கடி உடம்புக்கு முடியாமப் போயிடுது. தங்கச்சிக்கு வயசும், பக்குவமும் போதாது. வீட்டுப் பொறுப்பை ஒப்படைக்க சீக்கிரம் மருமகள் வந்தாத் தேவலைன்னு நினைக்கிறாங்க."

"எனக்கும் புரியாமலில்லை ஜீவா! பட், என் மனசையும் கொஞ்சம் புரிஞ்சுக்குங்க. புதுசா வரப் போகிற அண்ணியோட கொஞ்ச நாள் சந்தோஷமா வாழ்ந்திட்டு வர்றேனே!" கெஞ்சலாய்க் கூறினாள்.

"புரியுது, ஆர்த்தி! ஆனா, என் உள் மனசு உடனே கல்யாணம் பண்ணிக்க, உடனே கல்யாணம் பண்ணிக்கன்னு சொல்லிக்கிட்டே இருக்கு!" என்றான் சீரியஸாக.



"உன் மனசு நிறைய சினிமா பார்த்துக் கெட்டுப் போயிடுச்சு போல! அதான் பொறுமைய இழந்திடுச்சு."

"பிடிச்சா உடும்புப் பிடிதான்! உன்னை மாத்த முடியுமா?" பெருமூச்சுடன் எங்கோ பார்த்தான்.

"ஏய்.. கோவமா? எனக்கு மட்டும் ஆசையில்லையா ஜீவா? எனக்கும் கனவுகள், கற்பனைகள் உன்னை விட அதிகமாகவே இருக்கு. என் சாயல்ல ஒரு பையனையும், உன் சாயல்ல ஒரு பொண்ணையும் பெத்துக்கணும்னு என்னோட கனவுகளுக்கு இறக்கை கூட முளைச்சாச்சு! நீ என்னடான்னா.. கோவிச்சுக் கறே.."

இருந்த கொஞ்ச நஞ்ச சஞ்சலமும் காணாமல் போக.. அவனை நேருக்கு நேர் நிறுத்திக் குறுகுறுவென அவனையே பார்த்தாள்.

"நிஜமாவா?"

"என்ன நிஜமாவா?"

"உன் சாயல்ல ஒண்ணும், என் சாயல்ல ஒண்ணுமாக ரெண்டு குழந்தைகள் வேணுமா?"

"ம்.."

"ரெண்டு போதுமா?"

"பின்னே?" என்றாள் கண்கள் விரிய.

"இன்னும் ரெண்டு!"

"ஐயோ.. வேணாம்பா.. என்னால முடியாது!"

"ப்ளீஸ்டா... நான் நாலு குழந்தைகளைப் பெத்துக்கணும். பெரிய பெரிய கனவெல்லாம் வளர்த்து வச்சிருக்கேன்.. ப்ளீஸ்... என் கண்ணுல்லே.."



"யாரைக் கேட்டு ஆசைப்பட்டே? ரெண்டே போதும்! அதுங்களை வளர்த்து ஆளாக்கறதுக்கே உன்னைப் பிடி, என்னைப் பிடின்னு ஆகிடும். நீ ஆபீஸ்க்குப் போயிடுவே.. அதுங்ககிட்டே நானில்லே கஷ்டப்படணும்! கிஷோர் பேனாவைச் சமந்தா தூக்கி வச்சிருக்கும்.. சமந்தாவோட புக்கைக் கடைசி வாண்டு கிழி கிழின்னு கிழிச்சிட்டிருக்கும். எல்லாரையும் சண்டை மூள வச்சிட்டு சமர்த்தா உட்கார்ந்திருப்பான் சஞ்சய்! இவங்களைச் சமாளிச்சு, சமதானம் பண்றதுக்குள்ளே எனக்குக் கூன் விழுந்திடும். என்னால முடியாதுப்பா. ரெண்டு குழந்தை பிறந்தவுடனே நான் ஆபரேஷன் பண்ணிக்குவேன்!" ஆர்த்தி சண்டை போடுவது போல் சீரியஸாகப் பேசிக் கொண்டே போக..

ஜீவா அவளை ஆச்சர்யமும், கேலியுமாய்ப் பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறே ஜீவா?"

"இன்னும் கல்யாணமே ஆகலே! அதுக்குள்ளே இத்தனை குழந்தைகளையும் பெத்து, பேர் வச்சு.. அதுங்களோட மல்லுக்கட்டிவிட்டு.. உனக்குள்ளே இவ்வளவு ஆசையா கண்ணம்மா!"

தன்னை மீறி உளறி விட்ட தன்னை நினைத்து வெகுவாய் வெட்கப்பட்ட ஆர்த்தி வாழைப் பூவைப் போல் தலை கவிழ்ந்தாள்.

காதலுடன் அவள் மோவாயை உயர்த்தினான்.

அவன் முகத்தைப் பார்க்க முடியாத நாணத்தோடு எங்கோ பார்வையை வீசினாள்.

வெட்கத்தில் அவள் முகம் பன்னீர் ரோஜாவைப் போலிருந்தது.

அவளையே ஆசையுடன் பார்த்தான் ஜீவா.

ஆர்த்தி உடைத்த கோதுமை நிறம், சற்றே பெரிய கண்கள், நீளமான நாசி, வரிகளில்லாத குவிந்த இதழ்கள். வெல்வெட் சருமம் பிறந்த குழந்தையை நினைவுபடுத்தும். கருமையான சுருள் கூந்தல் வளைந்து நெளிந்து ஏறி இறங்கும். கட்டான உடல். கண்பட்டு விடக் கூடாது என்று நினைத்து, பிரம்மன் கன்னக் கதுப்பில் அழகாய் ஒரு மச்சமும் வைத்திருந்தான்.

''ஆர்த்தி..''

''ம்..''

''என்னால முடியல...''

''.........''

''இப்பவே கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''ச்சீ..!'' வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

வீட்டில் கல்யாணக் களை தன்னாலே வந்தமர்ந்து கொண்டது.

விக்னேஷிற்கும் நல்ல வரன் ஒன்று அமைந்துவிட்டது.

அஷ்டலக்ஷ்மி தன் விருப்பப்படியே மருமகள் அமைந்து விட்டதில் பூரித்துப் போயிருந்தாள். அவளின் பெரியப்பா மகன் அரிராமனின் மூத்த மகள் சாருலதாவைத்தான் விக்னேஷிற்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டாள்.

பி.ஏ. வரை படித்துவிட்டு வீட்டோடு இருக்கும் சாருலதா அழகானவள் மட்டுமல்ல. அடக்கமான பெண்ணும் கூட! அவள் கையில் நளபாகம் வேறு. சமையலில் அசர வைக்கும்



பெண்! அத்தை அஷ்டலக்ஷ்மியை மட்டுமல்ல. அத்தான் விக்னேஷையும் சாருவுக்கு ரொம்பவே பிடிக்கும்.

தன் விருப்பத்தை அஷ்டலக்ஷ்மி சொன்னபோது, ''அம்மா.. என்னைப் பெத்தவங்க நீங்க! வாய்க்கு ருசியா வகை வகையா சமைச்சுப் போட்டு எங்க பசியைத் தீர்க்கற நீங்க வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துத் தர்றதிலே இன்னும் சிரத்தை எடுத்துப்பீங்கன்னு நல்லாவே தெரியும். உங்களுக்கு எந்தப் பெண்ணைப் பிடிக்குதோ... அவ கழுத்துலேதான் தாலி கட்டுவேன். போதுமா?'' என்றான் விக்னேஷ்.

விக்ரம் உடம்பு முழுக்கச் சொறிந்து கொண்டே, ''ஐயோ! தாங்க முடியலையே! விஜய்காந்தும், மனோரமாவும் பேசிக்கிற மாதிரி பேசிக்கிறாங்களே!' என்றலறினான்.

அவன் நக்கலுக்குச் சிரித்தான் விக்னேஷ்.

''கிண்டலா இருக்கா? பார்த்துக்கிட்டேயிரு. உனக்கொரு வேலை கிடைக்கட்டும். சாருலதாவாவது அடக்கமான பெண்! ஆனா, உனக்கு நான் பார்த்து வச்சிருக்கிற கோமதி.. உன்னை அடக்கியாளற பெண்! அப்ப தெரியும் உன் கதை!'' அம்மா விக்ரமின் காதைப் பிடித்து வலிக்காமல் திருகினாள்.

''கோமதியா? பேர்லயே கிராமத்தனம் வீசுதே! அம்மா! வீணா சிரமப்படாதே! என்னோட ரேஞ்சே வேற!'' சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டே நகர்ந்தான்.

''என்ன சொல்லிட்டுப் போறான் இவன்? எனக்கு இவனைப் பத்திதான் கவலையே! சினிமா, சினிமான்னு அலையறவன்.. காதல் கீதல்னு சொல்லி எவளையாவது கூட்டிக்கிட்டு வந்து கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லுவானோன்னு பயமாயிருக்கு!''



''ச்சே.... நம்ம விக்ரம் அப்படி யெல்லாம் பண்ண மாட்டான்ம்மா! அவன் விளையாட்டுப் பிள்ளை. விளையாட்டா எதையாவது பேசுவானே தவிர.. அவன் மனசுல எதுவுமில்லே. அவனுக்குள்ளே பெரிய நடிகனா வரணுங்கற லட்சியம் மட்டும்தான் இருக்கு. ஒரு லட்சியத்தை அடையணும்'கற வெறி உள்ளவங்க மத்த விஷயங்கள்ல கவனத்தைச் சிதற விட மாட்டாங்கம்மா..''

''என்னமோ.. நீ சொல்றே! சரி.. உன் விஷயத்துக்கு வருவோம். உன் ஜாதகமும், சாருலதா ஜாதகமும் அமோகமா பொருந்தியிருக்கு. வர்ற இருபத்தெட்டாம் தேதி நாள் ரொம்ப நல்லாயிருக்காம். அன்னைக்கு கல்யாணத்தை வச்சுக்கலாமான்னு அண்ணன் கேக்கறாரு. உங்கப்பாவும் சரின்னுட்டாரு! நீ என்னப்பா சொல்றே?''

''நான் என்னம்மா சொல்லப் போகிறேன்? எல்லாம் உங்க இஷ்டம்தான்! ஆனா, இருபத்தெட்டாம் தேதிக்கு இன்னும் பத்தொன்பது நாள்தானேம்மா இருக்கு? அதுக்குள்ளே இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடு பண்ண முடியுமா?''

''ஏன் முடியாது? எல்லாத்தையும் உங்க மாமா பார்த்துப்பார். சாருலதாவுக்கு இனிதான் ஒவ்வொண்ணா தேடித் தேடி வாங்கணும்ங்கற அவசியமில்லே. எல்லாமே இருக்கு. முகூர்த்தப் பட்டும், தாலியும் மட்டும்தான் வாங்கணும். இன்விடேஷன் அடிக்கணும். அவ்வளவுதானே! அதுக்கு ரெண்டு, மூணு நாள் போதாதா?''

''சரிம்மா... ஏற்பாடு பண்ணுங்க,'' என்றான் வெட்கச் சிரிப்புடன்.




அதற்கடுத்து வந்த நாட்களில் காரியங்கள் மளமளவென புயல் வேகத்தில் நடந்தன.

நகரில் பெரிய மண்டபத்தை புக் செய்தனர். ரிசப்ஷனுக்கு 'ஜீவராஜா' இன்னிசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர்.

காஞ்சிபுரம் சென்று பட்டுப் புடவைகள் எடுத்து வந்தனர்.

விக்னேஷ் இரவு நேரங்களில் சாருலதாவின் போட்டோவை நெஞ்சில் வைத்தபடி உறங்க முயற்சிப்பான். உறக்கம்தான் வருவதில்லை.

கல்யாண அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு வந்துவிட்டது.



8

விக்ரம் தந்த திருமண அழைப்பிதழை வாங்கிக் கொண்டாள் நர்மதா.

பிரித்துப் படித்து மூடி வைத்தாள்.

''இந்தக் கல்யாணத்துக்கு நான் வரணுமா விக்ரம்?''

''வந்தால் சந்தோஷப்படுவேன்! எங்க வீட்லே நடக்கிற முதல் நல்ல நிகழ்ச்சி இது! நீயும் கலந்துக்க வேண்டாமா?''

''ம்..'' என்று சற்று நேரம் யோசித்தாள் நர்மதா.

''என்ன இதுக்குப் போய் இவ்வளவு யோசிக்கறே?''

''சரி... வர்றேன்!''

''ஓ.. தாங்க்யூ.. தாங்க்யூ... ஸோ மச் டியர்!'' அவள் கன்னத்தில் முத்தமிட முயன்றான்.

''ம்ஹூம்... நாட் நவ்!''

"கிஸ் பண்ணக் கூட விடமாட்டேங்கறிய நர்மி... ஏன்?" ஏக்கத்துடன் கேட்டான்.

"அப்பத்தான்.. என்னை அடையணுங்கற வெறி வரும். எனக்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாராயிருப்பே!"

"உனக்காக உயிரையே தரத் தயாராயிருக்கறப்ப.. என் மேல உனக்கேன் இப்படியொரு டவுட்?"

"நீ.. சாதாரண மிடில் க்ளாஸ்ல பிறந்து வளர்ந்தவன். கட்டுப்பாடு, கண்டிப்புன்னு கட்டத்துக்குள்ளே வளர்த்திருப் பாங்க! நீயெல்லாம் லேசிலே குடும்பத்தை மறக்க மாட்டே! கடைசி நேத்துலே கண்ணீரோட எனக்கு டாட்டா காட்ட மாட்டேன்னு என்ன நிச்சயம்?"

"நர்மி.. என்னைப் பத்தி அவ்வளவு மோசமாகவா எடை போட்டு வச்சிருக்கே! எனக்கு உன்னை விட வேற எதுவும், யாரும் முக்கியமில்லை. சினிமான்னா.. எனக்கு உயிர் தெரியுமா? அதிலே நடிச்சுப் பெரிய ஹீரோவா வரணுங்கறது என் கனவு. அதையே உனக்காக உதறித் தள்ளினவன் நான்! என்னைச் சந்தேகப்படறே!" விக்ரமின் முகம் வேதனையில் கூம்பிப் போனது.

அவனை ஆறுதல் படுத்தும் விதமாக அவன் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டாள்.

"நம்ம காதலைப் பத்தி உங்க வீட்லே எப்ப சொல்லப் போகிறே?"

"அண்ணன் கல்யாணம் முடிஞ்சதும்... பேசிடறேன் நர்மி!"

"இப்பவே சொல்லிடறேன் விக்ரம்! எங்கப்பா எப்பேர்ப் பட்ட ஆளுன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும். அவர் உங்க



வீடு தேடி வந்து பேசணும்னு உங்க வீட்லே எதிர்பார்த் தாங்கன்னா அது நடக்காது. நம்ம காதலை எங்கப்பா ஏத்துக்கிட்டதே பெரிய விஷயம்!"

"எனக்குத் தெரியாதா நர்மி? இதையெல்லாம் நீ எனக்குச் சொல்லணுமா என்ன?"

"புரிஞ்சா சரி!" என்றாள் உதட்டோரம் மெல்லிய புன்னகை இழையோட...

'அப்பாடா... நர்மி புன்னகைத்து விட்டாள். அவளுக்கு என் மீது கோபமில்லை!' நிம்மதியாய் மூச்சுவிட்ட விக்ரமின் செயல் எஜமானியைக் கண்டு வாலாட்டும் பொமரேனியன் போலிருந்தது.

"ஏம்மா... உனக்கும் பட்டுப் புடவை எடுத்திருக்கக் கூடாதா? பட்டுத் துணியிலே சுரிதார் எடுத்துகிட்டியே?" ஆர்த்தியிடம் கேட்டார் அப்பா.

ஹாலில் வாங்கி வந்திருந்த துணிமணிகளைக் கடை பரப்பியிருந்தனர்.

"நானும் இதையேதான் சொன்னேன். கல்யாணமாகப் போற பொண்ணு! பட்டுப் புடவை எடுத்துக்கன்னேன். கேட்டாத் தானே?"

"நம்ம வீட்லே இருக்கறவரைக்கும் என் இஷ்டத்துக்கு ஆடிப்பாட முடியும். உன்ன உடுக்க முடியும். மாமியார் வீட்டுக்குப் போய்ட்டா... கையைக் காலைக் கட்டிக்கிட்டுதான் உக்காரணும். அதுவும் அண்ணன் எனக்காகப் பார்த்திருக்கிற அவையன்லோட அம்மாவும், அப்பாவும் ரொம்ப ஆர்த்தோடக்ஸாம். மாடர்ன் டிரஸ்ஸெல்லாம் போட அனுமதிக்க மாட்டாங்களாம்!" ஆர்த்தி விக்னேஷை





ஓரக்கண்ணால் பார்த்தபடி கூற... 'அப்படியா சங்கதி' என்பது போல் தலையாட்டினான் விக்னேஷ்.

"அப்படியா? இது எனக்குப் புதிய செய்தி! உனக்கு யார் சொன்னது?"

"அ... அண்ணா!"

"அதானே... விக்னேஷுக்கே தெரியாத விஷயம் உனக் கெப்படி தெரிஞ்சது?" அம்மா வியப்புடன் கேட்டாள்.

"அது.. அது வந்து... அண்ணா! காப்பாத்தேன்!" மெல்லிய குரலில் கெஞ்சினாள்.

"உங்களுக்கு விஷயம் தெரியாதில்லே? ஜீவா வீட்லேர்ந்து பொண்ணு பார்த்திட்டுப் போனதிலேர்ந்து மாப்பிள்ளை தினமும் ஆர்த்தியோட போன்ல பேசறார்."

"அப்படியா? ஏம்மா ஆர்த்தி... விக்னேஷ் சொல்றது நிஜமா?"

"அ... ஆமாப்பா!"

"கல்யாணத்துக்கு முன்னால இப்படி பேசிக்கிறதெல் லாம்..." கோகுல்நாத் வார்த்தையை முழுதாய் முடிக்கவே தயங்கினார்.

"அதனாலென்னப்பா? இந்த காலத்துல இதெல்லாம் சகஜம். ஜீவாதான் நம்ம மாப்பிள்ளைன்னு முடிவு பண்ணியாச்சு. ரெண்டு வீட்டுப் பெரியவங்களும் கூடிப் பேசி முடிவு செஞ்ச பிறகு இவங்க ரெண்டு பேரும் காதலிக்கிறாங்க! இது தப்பில்லையே!"

"என்னமோப்பா... ஆர்த்திக்கும் சீக்கிரமா முடிச்சிட்டாதான் மனசுக்கு நிம்மதி!"



"எல்லாம் நல்லபடி நடக்கும். ஏன் டென்ஷனாகறீங்க?"

ஆர்த்தி அண்ணனை நன்றியுடன் பார்த்தாள்.

'எல்லா விஷயத்திலேயும் என்னைக் காப்பாத்தற உங்களுக்கு நன்றிக் கடனா என்ன பண்ணப் போகிறேன்?' என்றெண்ணிக் கொண்டாள்.

விக்ரம் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தான். இவர்களைப் பார்த்ததும் அருகில் வந்தான்.

"என்ன விக்னேஷ்... ஜவுளிக் கடையையே அள்ளிக்கிட்டு வந்திருக்காங்க!"

"உன்னைத்தவிர மத்த எல்லாருக்கும் எடுத்தாச்சு. இந்தா இதிலே அஞ்சாயிரம் ரூபா இருக்கு. உனக்குப் பிடிச்ச டிரஸ்ஸா வாங்கிக்க!" விக்னேஷ் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்துத் தம்பியிடம் கொடுத்தான்.

"தாங்க்ஸ்!" என்றபடி வாங்கித் தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான் விக்ரம்.

"அஞ்சாயிரம் எதுக்கு விக்னேஷ்... ரெண்டாயிரமோ, மூவாயிரமோ கொடுத்தா போதாதா?"

"கொடுக்கறவங்களையும் கெடுக்காதீங்கப்பா... அம்மா! பசிக்குது... டிரஸ் மாத்திக்கிட்டு வர்றேன்... எடுத்து வைங்க!" விக்ரம் தன் அறையை நோக்கி நடந்தான்.

"நீதான் அவனைக் கெடுக்கறே!" என்றார் அப்பா விக்னேஷைப் பார்த்து.

"யாருக்குப்பா தர்றேன்? என் தம்பிக்குதானே! இந்த ஜென்மத்துல அவன் என் தம்பி. மறுபடியும் நானும் அவனும்

ஒரே வயித்துல பொறக்கப் போறோமா என்ன? பிறக்கறதும் ஒருமுறை, இறக்கறதும் ஒருமுறை! இந்த மாதிரி விசேஷங்கள் மனுஷனோட லைஃப்ல ஒருமுறைதான் வரும். எல்லோரும் ஜாலியா என்ஜாய் பண்ணணும்னு ஆசைப்படறேன். விக்ரம் கொஞ்சம் பந்தாவான ஆளு! அவனோட ரேஞ்சுக்கு டிரஸ் வாங்க, ரெண்டாயிரம், மூவாயிரமெல்லாம் காணாதுப்பா!''

''போதும் நிறுத்து விக்னேஷ்! நல்ல விஷயத்தைப் பத்தி பேசும்போது... அபசகுனமா இறப்பைப் பத்தியெல்லாம் பேசிக்கிட்டு?'' என்றாள் அஷ்டலக்ஷ்மி.

அவள் முகம் வெளிறிப் போய் இருந்தது.

''ஏம்மா...'' இப்படிப் பயப்படறே?''

''அவளுக்குப் பயப்படறதை தவிர வேறென்ன தெரியும்?'' என்றார் கோகுல்நாத் கிண்டலாக.

''என்னைக் கிண்டல் பண்ணலேன்னா உங்களுக்குத் தூக்கம் வராதே! விக்னேஷ்... நாளைக்கு நம்ம குலதெய்வத்துக்குப் பொங்கல் வைக்கறதா வேண்டிக்கிட்டிருக்கேன். குடும்பத் தோட கோவிலுக்குப் போகிறோம். நீ பாட்டுக்கு இன்விடேஷன் வைக்கணும்னு ஒடிடப் போறே!''

''ஓடினாலும் திரும்பி வரத்தானே போகிறேன்? நல்ல வேளை ஞாபகப்படுத்தினீங்க! அண்ணா நகர் வரைக்கும் போய்ட்டு வந்திடறேன். அங்கே நாலு பேருக்கு இன்விடேஷன் வைக்கணும்!'' எழுந்து கொண்டான்,

''போய்ட்டு சீக்கிரம் வந்திடுப்பா!''

''சரிம்மா...!''



''விக்னேஷ்! டெய்லர் இன்னைக்கு டிரஸ் கொடுத்திடறேன்னு சொல்லியிருந்தான். கார்டு கொடுத்திட்டுப் போ... நான் வாங்கி வந்திடறேன்.''

''டிராயர்லதாம்பா போட்டு வச்சிருக்கேன். எடுத்துக்குங்க. தையக்கூலி...'' என்றபடி பாக்கெட்டில் கையை விட்டான்.

''என்கிட்டே இருக்குப்பா... நீ கிளம்பு!''

''ஆர்த்தி... குடிக்க ஒரு கிளாஸ் ஐஸ் வாட்டர் எடுத்துட்டு வாயேன்!''

''இதோ...!''

ஃப்ரிட்ஜைத் திறந்துகொண்டு வந்து கொடுத்தாள் ஆர்த்தி.

வாங்கிக் குடித்தவன்... ''வர்றேம்மா... வர்றேன்ப்பா... வர்றேன் ஆர்த்தி!'' செல்லமாய் அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

விக்னேஷின் மனம் நிறைந்திருந்தது. அந்த நிறைவில் பைக் குதிரைப் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருந்து. உதடு குவித்து விசிலடித்தபடி ஓட்டினான்.

'என்ன குறை எனக்கு? அருமையான அம்மா, அப்பா, தம்பி, தங்கை. நல்ல படிப்பு, படிப்புக்கேற்ற வேலை. கை நிறையச் சம்பளம். ஆர்த்திக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது. என் கண்மணிக்கு விமரிசையாகத் திருமணம் நடத்திவிட வேண்டும். ஜீவா நல்லவன். அவள் கண்ணில் தூசு விழாமல் பார்த்துக் கொள்வான். சாருலதா!' அவள் பெயரை நினைக்கும்போதே வானில் பறப்பது போலிருந்தது.

'அழகான பெண்! அருமையான பெண். வீட்டிற்குத் தெரியாமல் அவளை இரண்டு மூன்று முறை கோவிலுக்கு



வரவழைத்துப் பேசியது சுவாரஸ்யமான விஷயம். ஒரு ஆணுக்கு மற்ற எல்லாவற்றையும் விட மனைவியாய் வருபவள் நல்லவளாய், கணவன் மனதைப் புரிந்து நடப்பவளாய் இருக்க வேண்டும். எதிர்மறைக் கருத்துடைய வளாய் இருந்து விட்டால் அவன் வாழ்க்கையே அஸ்தமனம் தான்! சும்மாவா சொன்னார்கள்? மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று! கடவுள் அந்த விஷயத்திலும் எனக்குக் குறை வைக்கவில்லை. சாருலதா என்னைப் போலவே என் குடும்பத்தினர் மீது அக்கறை கொண்டவளாய் இருக்கிறாள். நெருங்கிய உறவுக்காரி என்பதும் ஒரு காரணம். என் சாருவையும் நான் ஒரு குறையும் வைக்காமல் நெஞ்சில் வைத்துத் தாங்குவேன்.

கல்யாணம் முடிந்த கையோடு அப்பாவிற்கென்று தனியே ஒரு கலர் டி.வி. வாங்கித் தர வேண்டும். பாவம்... இரவில் அவருக்குத் தூக்கம் வரமாட்டேன்கிறது. தூக்கம் வரும் வரை ஹாலில் இருக்கும் டி.வி. முன்னாடியே அமர்ந்து விடுகிறார். சில சமயம் ஒரு மணி, இரண்டு மணிகூட ஆகிவிடுகிறது. வயதான காலத்தில் அவருக்கு நல்ல ரெஸ்ட் தேவை. அவர் அறையிலேயே ஒரு டி.வி. இருந்தால் நல்லது.

அன்பான அவன் மனம் வீட்டைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இடது பக்கம் எதிர்ப்புறச் சாலையில் இருந்த கடை ஒன்று அவன் கவனத்தை ஈர்த்தது.

ஆயுர்வேத மருந்துகள் விற்கும் கடை!

அம்மா ரொம்ப நாட்களாக காலில் மசாஜ் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட எண்ணெயைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த



எண்ணெய் குறிப்பாக கேரளாவில் மட்டுமே தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஏற்கெனவே இரண்டு மூன்று கடைகளில் கேட்டுக் கிடைக்கவில்லை. இதுபோன்ற ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும் என்று ஒரு கடைக்காரர் சொன்னது நினைவிற்கு வர... விக்னேஷ் பைக்கை வளைத்து இடது பக்கமாய்த் திருப்பிச் செலுத்த...

எதிர்ப்புறச் சாலையில் மிக வேகமாய் வந்து கொண்டிருந்த கார் ஒன்று இவன் பைக் மீது மோத... விக்னேஷ் பந்து போல் தூக்கியெறியப்பட்டுச் சாலையில் விழவும்... ஒரு லாரி சடன் பிரேக் போட்டும் முடியாமல் அவன் மேல் ஏறி இறங்கவும் சரியாய் இருந்தது.

விக்னேஷ் ரத்த வெள்ளத்தில் துடித்தான். அவனின் இதயம் தன் கடைசித் துடிப்பை நிறுத்துமுன் அவன் கண்களுக்குள் அம்மா, அப்பா, ஆர்த்தி, விக்ரம், சாருலதா வந்து நின்றனர்.

''கடவுளே... என்னைக் காப்பாற்று! என் குடும்பத்திற்கு நான் வேண்டும். என்னைப் பறித்துக் கொள்ளாதே... காப்பாற்றுங் களேன்! என்னை யாராவது காப்பாற்றுங்...'

விக்னேஷின் இறுதித் துடிப்பும் நின்று போனது.

''ரிசப்ஷனுக்காகத் தைக்கக் கொடுத்த கோட், சூட்டை அமர்க்களமா தைச்சிருக்கான் டெய்லர். இதைப் போட்டுக்கிட்டு சாருலதாவோட நிக்கறப்போ சும்மா ராஜா மாதிரி இருக்கப் போகிறான் என் பிள்ளை!'' டிரஸ்ஸைப் பிரித்துப் பார்த்தபடி கூறினார் கோகுல்நாத்.

''அதென்ன உங்க பிள்ளை? நம்ம பிள்ளைன்னு சொல்லுங்க!'' கிரைண்டரிலிருந்த மாவை வழித்துப் போட்டு விட்டுக் கையைக் கழுவித் துடைத்தபடி வந்த அஷ்டலக்ஷ்மி கணவனிடம் செல்லமாய்ச் சண்டை இழுத்தாள்.

"வாய் தவறிச் சொல்லிட்டேன்... மன்னிச்சுடுங்க மேடம்!" என்றார் வாய் பொத்தி.

"இந்த நக்கல்தானே வேண்டாங்கறது!"

"சரி அதை விடு! புது மாப்பிள்ளையை எங்கே காணோம்?"

"நானும் அவனைத் தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். போய் ரொம்ப நேரமாய்டுச்சே!"

"லேட்டானாலே எங்கேர்ந்தாலும் போன் பண்ணிச் சொல்லிடுவானே!"

"ஒருவேளை நம்ம போன்தான் வேலை செய்யலியோ?" சந்தேகத்துடன் ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தாள் அஷ்டலக்ஷ்மி.

அதே சமயம்... காலிங் பெல் அலறியது.

"விக்னேஷ்தான்... போய்க் கதவை திற!"

அஷ்டலக்ஷ்மி வாசலுக்கு விரைந்து கதவைத் திறந்தாள்.

போலீஸ்காரர் ஒருவர்... விக்னேஷின் மரணச் செய்தியோடு நின்றிருந்தார்.

"மிஸ்டர் கோகுல்நாத்ங்கறது..."

"இந்த வீடுதான்!" என்றாள் முகம் வெளிற...



9

பொல்லாத காலம் சொல்லாமல் வரும்!

அப்படித்தான் அந்த வீட்டிற்கும் வந்திருந்தது. புயலில் சிக்கிய பாய் மரக் கப்பலைப் போல்... அந்த வீட்டின் நிம்மதியும், மகிழ்ச்சியும் சின்னா பின்னமாகியிருந்தன.



விக்னேஷ் மறைந்து வாரம் ஒன்றான பிறகும் கொஞ்சம் கூட இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. மழைமேகம் போல் வீடு இருள் சூழ்ந்திருந்தது.

அழுதழுது கண்ணீர் வற்றிப் போயிருந்தது பெற்று வளர்த்தவர்களுக்கு. கண்ணீர் வெளிப்படாத துக்கம். உள்ளே உதிரம் வடிந்து கொண்டிருந்தது.

காற்றில் கதவு அசைந்தால் கூட, "வந்துட்டியா விக்னேஷ்?" என்று வாசலுக்கு ஓடுவாள் அஷ்டலக்ஷ்மி.

வெறுமை தாக்கும்போது ஒவ்வொரு முறையும் இதயம் சிதறினாள்.

அன்னையின் அன்புக்கு வயதே கிடையாதல்லவா? அது எப்போதும் ஒரே மாதிரி சிதிலமடையாமல் தானே இருக்கும்?

அஷ்டலக்ஷ்மி பெண்... வாய்விட்டு அழுது தன் துயரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

ஆனால், கோகுல்நாத்?

ஹார்ட் பேஷண்ட் என்பதற்காக அதிகப்படியான அன்பை அப்பாவிடம் செலுத்திய தலைமகனை அநியாயமாய்ப் பறிகொடுத்து விட்டாரே! அவரை ஒரு சின்ன வேலை செய்தால் கூட கோபித்துக் கொள்வானே? சண்டை போடுவானே?

'இனி அப்படிக் கோபித்து கொள்ள எனக்கு யார் இருக்கா விக்னேஷ்? எனக்குப் பிறகு இந்தக் குடும்பத்தைத் தாங்குவாய் என்றெண்ணி இருந்தேனே! உன்னை இல்லாமல் ஆக்கி விட்டானே இரக்கமில்லாத கடவுள்! எங்கேயிருக்கே விக்னேஷ்?

6485



'எங்களைப் பிரிஞ்சி ஒருநாள் கூட இருக்க மாட்டியே! இத்தனை நாள் எப்படிப்பா இருக்கே?' நினைத்து.. நினைத்து நெஞ்சு கனத்தது. அவ்வப்போது சுருக் சுருக் என்று ஒரு வலியும் தைத்தது.

விக்ரம் மௌனமாய் அமர்ந்தவன் இடிந்து போயிருந்தான். இப்படியொரு துயர் விக்னேஷிற்கு ஏற்படும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

சாருலதா விஷயம் கேள்விப்பட்டதும்... ஜீரணிக்க முடியாத அதிர்ச்சியில் விஷம் குடித்து... ஹாஸ்பிடலில் அனுமதிக்கப் பட்டு... கஷ்டப்பட்டுக் காப்பாற்றி இருக்கிறார்கள்.

இன்னமும் ஹாஸ்பிடலில்தான் இருக்கிறாள். பாவம்... அவளுக்குள் எத்தனை எத்தனை ஆசைகளோ... கனவுகளோ! அத்தனையும் கூழான விக்னேஷின் உடலோடு நசுங்கிப் போய்விட்டதே!

ஆர்த்தியின் கண்ணீர்தான் வற்றாத ஜீவநதியாய் உற்பத்தியாகிக் கொண்டேயிருந்தது.

'அண்ணா... என்னண்ணா இது? உனக்கேன் இப்படியொரு கோர முடிவு! என் வாழ்க்கையில் ஒளியேற்றிவிட்டு நீ அணைந்து விட்டாயே! மண்ணில் விழாத மழைத்துளியாய் உன் அப்பழுக்கற்ற அன்பு இனி எந்த ஜென்மத்தில் கிடைக்கப் போகிறது? என்னால் உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை அண்ணா! வந்துவிடேன்...! உங்களை ஏமாற்றத்தான் இப்படியொரு நாடகமாடினேன் என்று கூறி எங்களைச் சமாதானப்படுத்தேன்! உனக்காக, நமக்காக வாங்கி வந்த புதிய உடைகளைப் பாரேன்...! எப்படிண்ணா அதை உடுத்த முடியும்? அம்மா இறுகிப் போய் விட்டார்கள்.



அவர்களைப் பார்த்தாலே பயமாயிருக்குண்ணா! அப்பாவுக்கு நெஞ்சு வலிக்கிறதாம். உன்னைப் பார்த்தால் போதும் அவர்களுக்கு. வந்து விடுண்ணா! ப்ளீஸ் வந்துவிடு...!' குமுறிக் குமுறி அழுதாள் ஆர்த்தி.

ஜீவா வீட்டிற்குள் நுழைந்தான்.

அந்த வீட்டை அப்படியொரு சூழலில் பார்க்கவே வேதனையாக இருந்தது.

'எப்பேர்ப்பட்ட நல்லவன் விக்னேஷ்! அவனுக்கு இப்படியொரு கொடுமை வர வேண்டுமா?'

அவனாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்படி இவர்களுக்கு ஆறுதல் கூற முடியும்?

கோகுல்நாத்தின் அருகில் சென்றான்.

"மாமா... ப்ளீஸ்... வெறும் ஆறுதல் வார்த்தைகளால் மட்டுமே உங்கள் காயங்களுக்கு மருந்து பூசிட முடியாது என்று தெரியும். இருந்தாலும்... வேறு வழியில்லை. உங்களை நீங்கள்தான் தைரியப்படுத்திக் கொள்ள வேண்டும்."

கோகுல்நாத் அசையவில்லை.

"அத்தை... ஒரு வாரமா ஒண்ணுமே சாப்பிடாம இருக்கீங்க... இப்படி இறுகிப் போய் உட்கார்ந்திருந்தா.. உங்க ஹெல்த் கண்டிஷனுக்குச் சரிப்பட்டு வராது. எதையாவது சாப்பிடுங்க...!"

"அதான்... மலை போலிருந்த என் பிள்ளையை விழுங்கிட்டேனே மாப்பிள்ளை... எப்படி பசிக்கும்?" என்றாள் விசும்பலுடன்.

"விக்ரம்... நீங்கதான் இந்த வீட்டுக்கு ஆலமரம். நீங்களே இப்படி இடிஞ்சி போயிருந்தா எப்படி?"

"அண்ணன்தான் எங்களுக்கு எல்லாமே! இப்படி... இப்படியாகும்னு எதிர்பார்க்கலே... தாங்கிக்க முடியலே... தாங்கிக்க முடியலே...!" கண் மூடி வாயால் மூச்சு விட்டான் விக்ரம்.

அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்த தன்னுயிர் ஆர்த்தியை பார்த்ததும் நெஞ்சைப் பிசைந்தது ஜீவாவிற்கு.

அவளை இழுத்துத் தன் மார்பில் கிடத்தி, தலையை வருடி ஆறுதல் படுத்த உடலும் உள்ளமும் துடித்தது. சுற்றிலும் மனிதர்கள் இருப்பதால் நாகரீகம் கருதித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

64805

"ஆர்த்தி..."

அவன் அழைத்ததும் அவளின் அழுகை இன்னும் அதிகரித்தது.

"ஆர்த்தி...என்னம்மா இது? நீயே இப்படி அழுதியானா... இவங்களை யார் தேற்றுவது? அவங்க வயசானவங்க. இதே ரீதியில் பட்டினி கிடந்தா நிலைமை விபரீதமாகாதா? நீ படிச்சவ. புரிஞ்சுக்குவேன்னு நம்பறேன். மனுஷங்களைப் படைக்கும்போதே கடவுள் துன்பத்தையும் சேர்த்துதான் படைச்சான். தைரியமா ஃபேஸ் பண்ணு ஆர்த்தி. துக்கத்தை உடனடியா துடைச்சு எறிஞ்சிட முடியாதுதான். ஆனா, அதற்கான முயற்சியில ஈடுபடலாம் இல்லையா? இருள்... இருள் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவத்தியைத் தேட முயற்சிக்கலாமே! விக்னேஷ் தந்த அன்பையும் சேர்த்து நீ உன்னைப் பெத்தவங்களுக்குத்



தரலாமே! ப்ளீஸ் ஆர்த்தி... அவங்களுக்கு முதல்ல குடிக்கறதுக்கு ஏதாவது போட்டுக் கொடு!"

மென்மையாய், மயிலிறகால் வருடுவது போல் அவன் குரல் வெளிப்பட்டாலும், ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சில் அழுத்தமாய் இறங்கி ஆர்த்திக்குக் கொஞ்சம் தெளிவை ஏற்படுத்தியதென்னவோ நிஜம்.

ஆர்த்தி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.

பழைய கலகலப்பு மருந்துக்கும் அந்த வீட்டில் இல்லை. முற்றிலும் காணாமல் போயிருந்தது. அந்த வீட்டில் உள்ளோர்... ஒருவரோடொருவர் பேசிக் கொள்வது கூட இல்லை. அந்தளவிற்கு இயக்கப்படும் பொம்மைகளாய் நடமாடினர். அஷ்டலக்ஷ்மி பெயருக்கு எதையோ சமைத்தாள். ஒருநாளைக்கு ஒருவேளை சாப்பிடுவதே அதிசயம். அருமை மகனைச் சுமந்த வயிற்றில் சாப்பாடு இறங்க மறுத்தது. சமைத்தது வீணாகிற்று. அவள் மட்டுமல்ல... மற்றவர்களும் அப்படியே இருந்தனர்.

64 8 05

வீட்டுக்குரிய பொருட்கள் வாங்கப் பையுடன் தெருவில் இறங்கும்போது, உங்களுக்கு எத்தனை முறை சொல்வேன்? இந்த வேலையெல்லாம் செய்யாதீங்கன்னு. நான் ஆபீஸ் விட்டு வரும்போது வாங்கி வந்திடறேன். நீங்க போய் நிம்மதியா பேப்பர் படிங்க!' வழக்கமாய் உரிமையுடன், அன்புடன், செல்லக் கோபத்துடன் வரும் விக்னேஷின் குரலுக்காக, மனம் ஏங்க... ஏக்கத்துடன் வீட்டைத் திரும்பிப் பார்ப்பார் கோகுல்நாத்.

'போச்சு... எல்லாம் போச்சு!' நெஞ்சம் விம்ம... பஸ்சில் போக வேண்டுமே என்பதையும் மறந்து... மகனையே நினைத்தபடி நடந்தே செல்வார்.



விக்ரம் வீட்டில் தங்குவதே இல்லை. அவன் எங்கே போகிறான், என்ன செய்கிறான் என்று கேள்வி கேட்கக் கூட யாருக்கும் தோன்றவில்லை.

ஆர்த்திதான்... பொறுப்புணர்ந்து செயல் பட்டாள். அண்ணனை இழந்ததில் நெஞ்சு முழுக்கத் துக்கம் இருந்தது என்றாலும்... அதைப் பெற்றவர்கள் எதிரில் காட்டிக் கொள்ள வில்லை. நினைவுகள் அதிகமாய் அழுத்தும்போது... பாத்ரூமிற்குள் சென்று அழுது கரைத்துக் கொள்வாள்.

பெற்றவர்கள் கொஞ்சமேனும்... ஒரு கவளமாவது சாப்பிடுகிறார்கள் என்றால்... ஆர்த்தியின் வற்புறுத்தலால்தான்.

"வேண்டாம் ஆர்த்தி! எல்லாம் அனுபவிச்சு, போற வயசிலே எங்களை உக்காரவச்சிட்டு... குடும்பம், குடும்பம்னு நமக்காகவே உழைச்ச என் பிள்ளையை ஒரு சுகமும் அனுபவிக்க விடாம பறிச்சுக்கிட்டானே எமன்? பெத்த வயிறு பத்தி எரியுதே! எனக்குச் சாப்பாடு ஒரு கேடா? எனக்கித்த உயிர் தேவையா?" என்று கதறுவாள்.


"அம்மா... அண்ணன் போனதிலே எனக்கு மட்டும் வருத்த மில்லையா என்ன? அதையே நினைச்சு உடம்பைப் பாழாக்கிக்காதேம்மா! உங்களுக்கு ஏதாவதொன்னு ஆகிப் போச்சன்னா... எனக்கு யாரும்மா இருக்கா? விக்னேஷ் அண்ணா எங்கேயும் போயிடலே. நம்மோடதான் இருக்கார். என் ரூபத்திலே, விக்ரம் ரூபத்திலே வாழ்ந்துகிட்டுதான் இருக்கார். நமக்காகவே வாழ்ந்த அண்ணன் நம்மை விட்டுப் போயிட்டாருன்னு எப்படிம்மா நினைக்கிறே? அண்ணன் சொல்றதாகவே நினைச்சுக்க... சாப்பிடும்மா!"

சிறு பிள்ளையைப் போல் சமாதானப்படுத்த... விசும்பிய படியே சாப்பிடுவாள் அஷ்டலக்ஷ்மி.



ஆனால் பெற்றவர்கள் இருவருமே... அரித்துத் தின்ற கவலையால்... அவர்களே அறியாமல் நோயின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்தனர்.

விக்னேஷ் இறந்து மூன்று மாதம் ஓடிப் போய்விட்டது.



10

நர்மதா அந்தச் செய்தியைச் சொல்லச் சொல்ல... சில நாட்களாய்ச் சிரிப்பைத் தொலைத்திருந்த விக்ரமின் முகம் மகிழ்ச்சியில் விரிந்தது.

"நர்மி... நீ சொல்றது நிஜம்தானா? அமெரிக்காவில் எனக்கு வேலை கிடைச்சிருக்கா?"

"பின்னே... நான் என்ன கதையா சொல்லிக்கிட்டிருக்கேன்? கிட்டத்தட்ட இங்கேயுள்ள கிளார்க் போஸ்ட் மாதிரிதான்! டான்ஸ் ஸ்கூல் முடிச்சிட்டு பார்ட் டைமா இந்த ஜாப் செய்யலாம். பெரியப்பாதான் இந்த ஜாப் ஏற்பாடு பண்ணினார்!"

"தாங்க்ஸ்... தாங்க் யூ ஸோ மச் நர்மி!" உணர்ச்சிபூர்வமாய் வெளிப்பட்டது வார்த்தை.

"அதெல்லாம் இருக்கட்டும். அடுத்த வாரம் விசா வந்திடும். இருபது நாள்ல நாம கிளம்பற மாதிரி இருக்கும். அப்பாவுக்கு நம்ம கல்யாணத்தை இங்கே நடத்தணும்னுதான் ஆசை! பட், பெரியப்பாவும், பெரியம்மாவும் அவங்க கண்ணெதிரே நடக்கணும்னு ஆசைப்படறாங்க. ரெண்டு மாசத்துல கல்யாணம். அதற்கான ஏற்பாட்டை யெல்லாம் அங்கே பெரியப்பா பண்ணிட்டிருக்கார். அப்பா அங்கே வந்து

கலந்துக்குவார்." நர்மதா கையை வீசி வீசி ஏற்பாடுகளைத் தீவிரமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

விக்ரம் திகைத்துப் போனான்.

'என்ன இது? இவன் பாட்டிற்கு அடுக்கிக் கொண்டே போகிறாள்! அண்ணன் இறந்து மூன்று மாதம்தான் ஆகிறது. அதற்குள்... எனக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. அமெரிக்காவில் போய் செட்டிலாகப் போகிறேன் என்றால், என்ன நினைப்பார்கள் வீட்டில். சரி, அதைக்கூட எப்படியோ சரிக்கட்டி விடலாம். அமெரிக்காவில்தான் திருமணம் எனும்போது என் வீட்டினர் யாரும் கலந்துகொள்ள முடியாதே! அம்பத்தூரிலா நடக்கப் போகிறது. காரில் அழைத்துச் செல்ல! அமெரிக்காவில்! தாங்கள் கலந்து கொள்ளாமல் தன் மகனுக்குத் திருமணம் நடப்பதை யாரால் தாங்கிக் கொள்ள முடியும்? அதுவும் முதல் மகனின் திருமணக் கோலத்தைக் காணுமுன்பே பறி கொடுத்து. அந்த ரண வேதனை மாறாத நேரத்தில்?'

விக்ரமிற்குத் தர்ம சங்கடமாய் இருந்தது.

"என்ன விக்ரம்... நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டிருக்கேன். நீ அமைதியாய்ட்டே!"

"நர்மி... நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டியே!" என்றான் தயக்கமாய்.

"என்ன?"

"நம்ம கல்யாணத்தையும்... இந்த ட்ரிப்பையும் கொஞ்ச நாள் தள்ளி வைத்தால் என்ன?"

"ஏன்?"

விக்ரம் மென்று விழுங்கிக் காரணத்தைச் சொன்னான்.



அவ்வளவுதான்! நர்மதாவின் முகமும் கண்களும் சிவந்து போயின.

"வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்? அன்னைக்கு நீதான் எனக்கு எல்லாமே... வேற யாரும் முக்கியமில்லைன்னு டயலாக் விட்டதெல்லாம் பொய்யா? அம்மா, அப்பா சென்டிமென்ட்டா? இதோ பார் விக்ரம்! ஒண்ணைத் தெளிவா சொல்ல விரும்பறேன். ஐ லவ் யூ! பட், அதுக்காக, என்னோட தன்மானம் உட்பட எதையும் விட்டுத் தர மாட்டேன். என்னுடைய கருத்துக்கு, விருப்பத்துக்கு ஒத்துப் போகிறவர் மட்டுமே எனக்குக் கணவரா வர முடியும்? உனக்காகப் பார்த்து வச்சிருக்கிற வேலையும் சரி, இந்த நர்மதாவும் சரி, காத்துக்கிட்டிருப்பாங்கன்னு எதிர்பார்க்காதே!"

"ஐயோ... அவசரப்படாதே நர்மி! உன் மேல நான் எவ்வளவு பைத்தியமா யிருக்கேன்னு உனக்குத் தெரியாது. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அமெரிக்காவிலேயே செட்டிலாகிறதென்பது நான் ஏற்கெனவே எடுத்த முடிவு. அதிலே எந்த மாற்றமும் இல்லே. பட், விக்னேஷ் இறந்து மூன்று மாசம்தான் ஆகுது. இந்த நேரத்திலே நம்ம கல்யாணம் பத்தி பேசறது நல்லாயிருக்காதுன்னு ஃபீல் பண்றேன்!"

"அவங்களைத்தான் நாம கல்யாணத்துக்கு அழைக்கப் போறதில்லையே! ஜஸ்ட் இன்ஃபார்ம் பண்ணப் போகிறே! அவ்வளவுதானே?"

மௌனமா யிருந்தான்.

"ஒக்கே... நீ தயங்கறதைப் பார்த்தா... வேலைக்கு ஆகாதுன்னு புரியுது. நான் வேணுமின்னு நினைச்சா இப்பவே முடிவெடு! இல்லேன்னா மறந்திடு!"





"அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதே நர்மி!" பதறினான்.

"........"

"சரி. பேசறேன்!" என்றான் ஒரு முடிவுக்கு வந்தவனாக.

சாதுர்யமும், சாகசமும் நேர்மையின் முன் காலரைத் தூக்கிவிட்டு நின்றது.

ஏதோ ஒருவிதச் சங்கடம்! சாப்பாடு தொண்டையை விட்டு இறங்க மறுத்தது. பாதிச் சாப்பாட்டிலேயே கையைக் கழுவி விட்டான் விக்ரம்.

அம்மா அவனைக் கவலையோடு ஏறிட்டாள். விக்னேஷின் மரணம் அவள் உடம்பைப் பாதியாய்க் கரைத்து விட்டிருக்க... புதிதாய் இந்த மகனைப் பற்றிய கவலை வேறு.

"விக்ரம்..."

எப்படிச் சொல்வது என்கிற யோசனையில் சூழ்நிலையை விட்டு வெளியேறியிருந்தது அவனின் மனம்.

"விக்ரம்..." தோள் தொட்டாள்.

"ம்... என்னம்மா?" திடுக்கிட்டுக் கலைந்தான்.

"என்னப்பா, ஏன் சரியா சாப்பிடறதில்லே? மூணு நாளாவே நீ அரைகுறையாதான் சாப்டறே? ஏன்ப்பா? உடம்பு சரியில்லையா என்ன?"

"ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா!"

"பின்னே... என்னன்னு சொல்லு! மனசிலே போட்டுப் புழுங்காதே! ஆலமரமாய் இருந்த விக்னேஷ் போய்ட்டான். இப்ப நீதானேப்பா எங்களுக்கு எல்லாமே! நீ இப்படி இருந்தா... நாங்க நிம்மதியா இருக்க முடியுமா?"



ஈஸிசேரில் சாய்ந்து விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த கோகுல்நாத் திரும்பி இவர்களைப் பார்த்துவிட்டு, மறுபடி பழையபடி விட்டத்தை வெறித்தார்.

பதில் கூறாமல் அமைதியாய் இருந்தான்.

'எப்படி ஆரம்பிப்பது?'

"விக்ரம்...!"

"ம்...!"

"நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே!"

"சொல்லு!"

"இனி இந்தக் குடும்பப் பொறுப்புகள் உன்னுது! அண்ணனும் இல்லே! உன்னோட செலவுகளை அவன்தான் பார்த்துக்கிட்டிருந்தான்! இனி எப்படி முடியும்? சினிமா, நடிப்பு. அது இதுன்னு சொல்லி நேரத்தை வீணாக்காம.. சீக்கிரமா ஒரு வேலையத் தேடிக்க விக்ரம்!"

"அந்த முடிவுக்கு நானும் எப்பவோ வந்தாச்சம்மா. அது விஷயமாகத்தான் நான் உங்ககிட்டே பேசணும்னு இருந்தேன்!"

"ரொம்ப நல்லது... என்னப்பா விஷயம்?"

"எனக்கு வேலை கிடைச்சிருக்கும்மா!"

"நிஜம்மாவா?" வெகு நாட்களுக்குப் பிறகு அந்தத் தாயுள்ளம் மகிழ்ந்தது.

"ஆமாம்!"

"என்ன வேலை, விக்ரம்? எதுவாயிருந்தாலும் வீடு பக்கத்திலேயே ஆபீஸ் இருக்கிற மாதிரியாயிருந்தா போ! ஊர்

கெட்டுக் கிடக்கு. கண்ணை மூடிக்கிட்டு வண்டி ஓட்டறானுங்க! அதுக்குத்தான் சொல்றேன்!"

"எ... எனக்கு... வேலை இங்கே இல்லேம்மா!"

"பின்னே?"

"அமெரிக்காவுல...!"

"என்னது...? அமெரிக்காவிலேயா? விளையாடறியா விக்ரம்?"

"இதிலே விளையாட என்னம்மா இருக்கு. எனக்கு அமெரிக்காவுலதான் வேலை கிடைச்சிருக்கு!"

"வேண்டாம்... அப்படிப்பட்ட வேலை உனக்கு வேண்டாம்!"

"வேலை... அதுவும் அமெரிக்காவுல கிடைக்கறது ரொம்ப பெரிய விஷயம். நான் போகத்தான் போகிறேன்."

கோகுல்நாத் எழுந்து வந்தார்.

"விக்ரம்... புரிஞ்சுதான் பேசறியா? இப்போதைக்கு இந்த வீட்டு ஆண் பிள்ளை நீ ஒருத்தன்தான். இங்கே உனக்குன்னு பல பொறுப்புகள், கடமைகள் இருக்கு. உனக்கொரு தங்கையிருக்கா. அவளை நல்லபடி கரையேத்த வேண்டாமா?" என்றார்.

"அப்பா... அதுக்குதான் நீங்களும் அம்மாவும் இருக்கீங்க இல்லே! பொறுப்பு, கடமைன்னு சொல்லி என்னோட எதிர்காலத்தை இருட்டாக்க முயற்சிக்காதீங்க!"

"என்னங்க பேசறான் இவன்?" பதறினாள் அம்மா.



"நீ கொஞ்சம் சும்மாயிரு லக்ஷ்மி! பாருப்பா விக்ரம். முயற்சி பண்ணினா இங்கேயே உனக்கொரு நல்ல வேலை கிடைக்குமே! எங்களை எல்லாம் பிரிஞ்சு நீ மட்டும் தனியா எப்படிப்பா இருப்பே?"

"........"

"தவிர... நாளைக்கு எங்களுக்கு ஏதாவதொன்னு ஆகிப்போச்சுன்னா கொள்ளிபோட நீ பக்கத்திலே இருக்க வேண்டாமா?"

"இதான்... இதுதான் உங்ககிட்டே எனக்குப் பிடிக்காத விஷயம். எனக்குன்னு ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்கிற நேரத்திலே, சாவு, இழவுன்னு அபசகுனமா பேசறீங்க பாருங்க! நல்லபடி போய் வான்னு வாழ்த்தி அனுப்ப மனசு வருதா? உங்க சுயநலத்துக்காக என் வாழ்க்கையைக் கெடுக்க நினைக்காதீங்க!" எரிச்சலோடு வந்தன வார்த்தைகள்.

பெற்றவர்கள் இருவருமே அரண்டு போய் விட்டனர்.

"நான் இன்னொரு விஷயத்தையும் சொல்லிடறேன். எனக்கு இன்னும் ரெண்டு மாசத்துல கல்யாணம். அதுவும் அமெரிக்காவுல..." என்றபடி நர்மதாவுடனான தனது காதலைப் பற்றிக் கூறினான்.

"இன்னும் பதினஞ்சு நாள்ல நான் அமெரிக்கா புறப்படறேன். வீணா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாம, என்னை நல்லபடி வழியனுப்பி வையுங்க!' சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டான்.

உச்ச அதிர்ச்சியின் பிடியில் சிக்கியிருந்தனர் அவனைப் பெற்றவர்கள்.



"அவன் என்னங்க சொல்லிட்டுப் போறான்? என்னென்னமோ சொல்லிட்டுப் போறானே... கடவுளே..." வாய் விட்டு அழுதாள்.

"பைத்தியக்காரி! நீ ஏன்டி அழறே? ரெண்டு பிள்ளைங்களைப் பெத்தோம். ஒன்னை எமனுக்குத் தாரை வார்த்தோம். இன்னொன்னை எவளுக்கோ தாரை வார்க்கிறோம். அவ்வளவுதான்! பாசம் வைக்காதே லக்ஷ்மி... பெத்த பிள்ளைங்களாகவே இருந்தாலும் கூட பாசம் வைக்காதே! வச்சு ஏமாறாதே!" என்றார் கண் கலங்க...

அஷ்டலக்ஷ்மியின் அழுகை இன்னும் அதிகமாயிற்று.

கருவில் சுமந்த பிள்ளையால் அவளுக்குக் கிடைத்தது மனச் சுமைதான்!



11

பட்ட காலிலேயே படும்... கெட்ட குடியே கெடும் என்பது அந்த வீட்டைப் பொறுத்தவரை நிஜமாகிப் போனது.

விக்ரம் தன் முடிவைச் சொன்னபோதே அஷ்டலக்ஷ்மி தாங்க முடியாத மன வேதனையில் படுக்கையில் விழுந்தாள்.

ஆர்த்தி விக்ரமிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். அவன் மசியவில்லை. நர்மதா, அமெரிக்கா இந்த இரண்டு விஷயங்கள் அவனை அடிமைப்படுத்தி விட்டிருந்தது. அதற்காக அவன் எதையும் இழக்கத் தயாராகி விட்டான்.

எப்படியாவது மகன் மனசு மாறிவிட மாட்டானா என்று நசிந்து போன அஷ்டலக்ஷ்மியின் தாயுள்ளம் ஏதோ ஒரு



நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது. ஆனால், அத்தனையையும் பொய்யாக்கி விட்டு விக்ரம் நர்மதாவுடன் அமெரிக்காவிற்குப் பறந்து விட்டான்.

தாய் நாட்டுடனான பந்தத்தை மட்டுமல்ல... தாயின் பந்தத்தைக் கூட சுயநலம் என்ற கோடரி கொண்டு அறுத்தெறிந்து போய்விட்டான்.

மறுபடி அந்த வீடு மயான அமைதியை உள்வாங்கிக் கொண்டது.

ஆர்த்தி எவ்வளவோ கெஞ்சியும் இருவருமே சாப்பிடவில்லை.

மன வேதனையுடன் ஆர்த்தியும் வெறும் தண்ணீரைக் குடித்துப் படுத்து விட்டாள்.

மனசுக்குள் குமுறிக் கொண்டிருந்தார் கோகுல்நாத்! ஆனாலும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மௌனமாகி விட்டார். தான் ஏதோ பேசப் போக... விசிறிவிட்ட நெருப்பாய், அஷ்டலக்ஷ்மியின் துக்கம் அதிகப்பட்டுப் போய்விடுமோ என்கிற பயம்.

அழுதழுது ஓய்ந்து போன அஷ்டலக்ஷ்மிக்குள் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

'கடைசி காலத்தில் கண்களாய் இருந்து நம்மை வழி நடத்தி பாதுகாப்பார்கள் என்றெண்ணியிருந்தேனே... இரண்டு கண்களும் பறிபோய் விட்டதே! நாளை என்ன நடக்கும்? நான் போய்ச் சேர்ந்து விட்டால் அவரைக் கவனித்துக் கொள்ளப் பிள்ளைகளும், மருமகள்களும் இருப்பார்கள் என்று நம்பினேனே... எதுவுமே இல்லாமல் போய்விட்டதே! ஆர்த்தி என்றைக்கிருந்தாலும் அடுத்த வீட்டுக்குச் சொந்தமாகப்

போகிற பெண்! எத்தனை நாளைக்கு எங்களுடன் இருக்க முடியும்? கடைசியில் எதற்காகப் பயந்தேனோ... அதைப் போன்றே நிலைமை வந்துவிடுமோ? முத்தாய் மூன்று குழந்தைகளைப் பெற்று வளர்த்தும் முச்சந்திதானா எங்களுக்கு? நாங்களும் அனாதைகளைப் போல் முதியோர் இல்லம் போக வேண்டியதுதானா? ஐயோ... நான் மாட்டேன்! என்னால் முடியாது. அங்கு போய் ஏங்கி ஏங்கிச் சாவதைவிட... ஒரேயடியாய் விஷம் குடித்து இறந்து போய் விடலாம்!" அஷ்டலக்ஷ்மியின் மனசு இப்படி விபரீதமாய் நினைக்க ஆரம்பித்தது. அந்த எண்ணமே அவளைக் கொஞ்சம் கொஞ்சமாய் அரித்துத் தின்ன... விபரீதம் விளையக் காரணமாயிற்று.

அண்ணா நகர் பூங்கா!

ஆர்த்தி முழங்கால்களில் முகத்தைத் தாங்கி... தூர விளையாடிக் கொண்டிருந்த பள்ளிக் குழந்தைகளை உயிரே அல்லாத பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜீவா அவள் தலையை அன்புடன் கோதி விட்டான்.

"நீ ரொம்ப இளைச்சிட்டே ஆர்த்தி!"

"எனக்கு வீட்டுக்குப் போகவே பிடிக்கலே ஜீவா! ஒரே சூன்யமாயிருக்கு. எந்நேரமும் கலகலப்பாயிருந்த வீடு! அம்மா அப்பாவைப் பார்க்கவே கஷ்டமாயிருக்கு. ஒருத்தரோடு ஒருத்தர் பேசிக்கறது கூட இல்லை. அவங்களை நார்மலுக்குக் கொண்டு வர எவ்வளவோ ட்ரை பண்ணினேன். முடியலே! ரொம்ப அடிபட்டுட்டாங்க ஜீவா!"

"காலம் மிகச் சிறந்த மருந்து ஆர்த்தி! அவங்க காயங்கள் ஆறும். நமக்குக் கல்யாணமாகட்டும்.பேரன் பேத்திகளைப்



பார்க்கட்டும். அடுத்த நிமிஷமே அவங்க எப்படியாகி விடப் போறாங்க பார்!"

ஆர்த்தியின் முகத்தில் மெலிதான புன்னகை யொன்று தெளிந்தது.

"ஜீவா... நீ மட்டும் இல்லேன்னா... நான் ரொம்ப கஷ்டப்பட்டுப் போயிருப்பேன்! உன்னோட அன்புதான் என்னை இந்தளவிற்காவது நடமாட விட்டிருக்கு!" என்றாள் நெகிழ்ச்சியுடன்.

ஜீவா அவள் தோளை இறுக்கி... அந்த அழுத்தத்தில் அன்பை வெளிப்படுத்தினான்.

"நான் உன்னோட ஜீவா! உன் வேதனை என்னையும் பாதிக்காதா? உன்னைப் பாதுகாக்கற பொறுப்பு என்னோடது. நாம சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன? அது உனக்கு, எனக்கு மட்டுமல்ல... உன் பேரெண்ட்ஸுக்கும் நல்லது!"

"இல்லே ஜீவா! இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். அண்ணன் இறந்து முழுசா நாலு மாசம் கூட ஆகாத நிலைமையிலே கல்யாணப் பேச்சை எடுக்கறதுக்கு என் மனச் சாட்சி இடம் கொடுக்கலே! தவிர, நானும் போய்ட்டேன்னா... அவங்க இன்னும் கஷ்டப்படுவாங்க. வெறுமையா ஃபீல் பண்ணுவாங்க. ப்ளீஸ் ஜீவா!" என்றாள் கெஞ்சலாய்.

"எனக்குப் புரியுது! பட், வீட்லே நச்சரிக்கிறாங்க ஆர்த்தி. அம்மா ஏற்கெனவே ஆஸ்துமா பேஷண்ட் உனக்கே தெரியும். இப்ப யூட்ரஸ் ப்ராப்ளம் வேற. டாக்டர்ஸ்... அம்மாவுக்கு யூட்ரஸை ரிமூவ் பண்ணியாகணும்கறாங்க! அம்மா கொஞ்சம் பயப்படற மனுஷி! சின்ன விஷயத்தையும் பெரிசா கற்பனை பண்ணிப்பாங்க! எங்கே... ஆபரேஷன் பண்ணி, திடீர்னு



செத்துப் போய்ட்டா என்னாகறது? அதனால ஜீவாவுக்கு உடனே கல்யாணம் பண்ணியாகணும்னு ஒத்தைக் காலுல நிக்கறாங்க. நான் என்ன பண்ணட்டும், சொல்லு." என்றான் சங்கடத்துடன்.

சிறிது நேரம் மௌனமா யிருந்தாள், பிறகு...

"எனக்கு யோசிக்க கொஞ்சம் அவகாசம் வேணும் ஜீவா!" என்றாள்.

ஆனால் அவளை யோசிக்கக்கூட அவகாசம் தராமல் பேரிடி ஒன்று அவளை எதிர் கொண்டது.

மறுநாள் காலை!

வழக்கம் போலவே விடிந்தது!

கோகுல்நாத் அந்த வித்தியாசத்தைக் கவனித்தார். அவர் மார்க்கெட் சென்று வருவதற்குள் அஷ்டலக்ஷ்மி சமையலறை யில் காலை டிபனைச் செய்து முடித்துவிட்டு இவருக்குத் தயாராகக் காபி போட்டு வைத்திருப்பாள்.

ஆனால் இன்று?

சமையலறை வெறிச்சோடிக் கிடந்தது. ஆர்த்தி தோட்டத்தில் காய்கறிச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தாள்.

'எங்கே லக்ஷ்மி?' வியப்புடன் தேடியவர்... அவள் இன்னமும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை என்று புரியவே... பதட்டத்துடன் அருகே சென்றார்.

"லக்ஷ்மி..."

"......"

"லக்ஷ்மி..."



"ம்..." குரல் மட்டுமே வந்தது.

முதுகைக் காட்டிப் பக்கவாட்டில் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தவளைத் தோள் தொட்டுத் திருப்ப...

அதிர்ந்து போனார்.

லக்ஷ்மியின் வாய் ஒரு பக்கமாய்க் கோணிக் கொண்டிருக்க... எச்சில் ஒழுகிக் கொண்டிருந்தது.

வித்தியாசத்தை உணர்ந்தவர் நடுங்கிப் போனார்.

"அம்மாடி... ஆர்த்தி..." என்றலறினார்.

ஆர்த்தி இடிந்து போய்விட்டாள்.

கடந்து போன இருபது நாட்களாய்ப் பசி, தூக்கம் எல்லாம் மறந்து, மரத்துப் போய்விட்டது.

ஹாஸ்பிடலில் அனுமதிக்கப்பட்டிருந்த அஷ்டலக்ஷ்மியை அன்றுதான் டிஸ்சார்ஜ் செய்திருந்தார்கள். பணம் தண்ணீராய்ச் செலவானது. ஆனாலும் முழுக்க குணமாகவில்லை. அவளுக்கு ப்ராலிசிஸ் அட்டாக் ஆகியிருந்தது. இடதுபக்கம் கையும், காலும் இயங்கவில்லை. முகம் கோணிப் போய்ப் பேச்சற்றுப் போனாள். பேச முயன்றால் குளறுபடியாகச் சப்தம்தான் வந்ததே தவிர வார்த்தைகள் வரவில்லை. ஆனால், பேசுவதைப் புரிந்து கொள்வாள்.

தானொரு ஆண் என்பதையும் மறந்து தனிமையில் கண்ணீர் விட்டார் கோகுல்நாத். அதைப் பார்த்து நெஞ்சில் ரத்தம் கசிந்தது ஆர்த்திக்கு.

"அப்பா... நீங்களா அழறீங்க?"

"முடியலேம்மா... தாங்க முடியலேம்மா! நமக்கேம்மா அடுக்கடுக்கா இத்தனை துயரம்? எனக்கு லக்ஷ்மி... லக்ஷ்மிக்கு

நாங்கற தைரியத்திலே வாழ்ந்தேன். ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசிக்கக்கூட முடியாம இப்படியாய்ட்டாளே!"

"அப்பா... அழாதீங்கப்பா! அம்மா குணமாகிடுவாங்க. எனக்கு நம்பிக்கையிருக்கு. நீங்க இப்படி அழறதைப் பார்த்தா... அம்மா துடிச்சுப் போய்டுவாங்கப்பா! தைரியம் இழந்திடு வாங்க. ப்ளீஸ் அழாதீங்க...!"

கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"இன்னைக்கு ஆபீஸ்க்கு கிளம்பறியாம்மா?"

"இல்லேப்பா... அந்த வேலையை நான் ரிஸைன் பண்ணிட்டேன்! வேற ஆபீஸ்லே வேலை கிடைச்சிருக்கு. முன்னதைவிட ஸாலரி கொஞ்சம் கம்மிதான். அடுத்த வாரம் ஜாய்ன் பண்றேன்."

"என்னம்மா சொல்றே? நல்ல வேலை, சம்பளமும் அதிகம்.அதை ஏன் ரிசைன் பண்ணினே?"

"இப்ப எனக்குக் கடமைகள் அதிகமாயிருக்கு. அதற்காகச் செலவழிக்க நேரம் வேணும். ஹோட்டல் ரொம்ப தூரம். டிராவலிங் டைமே ரெண்டு மணி நேரமாய்டுது. அதனால தான்... பக்கத்திலேயே ஒரு வேலையைத் தேடிக்கிட்டேன். இருபது நாளா ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு அலுத்துப் போயிருப்பீங்க. எனக்குத் தெரிஞ்ச அளவுக்குச் சமைச்சிருக்கேன். சாப்பிடலாம், வாங்க!"

"என்னம்மா நீ? அந்த வேலைய நான் செய்ய மாட்டேனா?"

"அம்மா உங்களைச் சமையலறைப் பக்கம் கூட எட்டிப் பார்க்க விட்டதில்லே. சமையலைப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு? அப்படியே தெரிஞ்சாலும்... நான் உங்களைச் சமையலறைப் பக்கம் விட்ருவேனா? அப்படி விட்டா...



விக்னேஷ் அண்ணனோட ஆத்மா சாந்தியடையுமா?" என்றாள்.

"எத்தனை நாளைக்கு நீ சமைச்சுப் போடுவே? உனக்குக் கல்யாணம் பண்ணி ஜீவா வீட்டுக்கு அனுப்பிட்ட பிறகு ஆட்டோமேட்டிக்கா நான் சமையலறைக்குப் போயாகணும். பாவம் ஜீவா. அவரும் எத்தனை காலம்தான் காத்திருப்பார்? ஹாஸ்பிடலுக்கு எத்தனை முறை வந்தார் தெரியுமா? சீக்கிரமா உன் கல்யாணத்தை முடிக்கணும். அப்பதான் எங்களுக்கு நிம்மதி!"

"இப்ப என்னப்பா அவசரம்? அம்மா குணமாகட்டும். அதுக்குப் பிறகுதான் கல்யாணம். அவர் வந்தார்னா எடுத்துச் சொல்லுங்க... புரிஞ்சுப்பார்..!"

"அப்படி பேசக்கூடாது ஆர்த்தி! நம்ம கஷ்டத்தை அவங்க மேல திணிக்கக் கூடாது. யதார்த்தமா யோசி! அவரைப் பெத்தவங்க ஒப்புக்குவாங்களா? உங்கம்மாவுக்கு நான் இருக்கேன். அப்புறமென்ன?"

"யதார்த்தமா யோசிச்சா சுயநலம்தான் மிஞ்சும். என்னால மனச்சாட்சியை மீறி முடிவெடுக்க முடியலேப்பா. ஜீவா ரொம்ப நல்லவர். சொன்னா புரிஞ்சுப்பார் காத்திருப்பார்!" என்றாள் நம்பிக்கையுடன்.



12

வழக்கமாய் அவர்கள் சந்திக்கும் இடத்தில் வெகு நேரமாய்க் காத்திருக்கிறான் ஜீவா!

"அவசரமாய்ச் சந்திக்க வேண்டும். முக்கியமான விஷயம் பேச வேண்டும். வந்துவிடு ஆர்த்தி!" என்றழைத்தான் போனில்.



"நாளை பார்க்கலாமே! எனக்கு முக்கியமான வேறு வேலை இருக்கிறது." என்றாள்.

"அவசியமாய்ச் சந்தித்தே ஆக வேண்டும்!" என்றான் பிடிவாதமாய்.

"சரி... வருகிறேன்." என்றுதான் கூறினாள்.

இன்னும் வரவில்லை. புதிதாய் வேலைக்குச் சேர்ந்திருந்த அலுவலகத்தில் தொடர்பு கொண்டு கேட்டபோது. அவள் ஐந்து மணிக்கே போய்விட்டதாகக் கூறினார்கள்.

'எங்கே போயிருப்பாள்? அட்லீஸ்ட் என் செல்ஃபோனி லாவது தொடர்பு கொள்ளலாம் அல்லவா? வரவர ஆர்த்தி நடந்து கொள்வதே சரியில்லை. எவ்வளவு பெரிய சந்தோஷமான செய்தியை... யாருக்கும் சொல்லாமல் முதலில் ஆர்த்திக்குதான் சொல்ல வேண்டும் என்று காத்திருக்கிறேன்? சே... அவளுக்கு என்மேல் அக்கறையே இல்லை!' பொறுமை யிழந்து. கோபம் ஏற... விர்ரென்று பைக்கைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான் ஜீவா.

ஜீவா ரொம்ப நாட்களாய் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுடன் கூடிய மாற்றல் வந்திருந்தது. இரு மடங்கு சம்பளம். கார், வீடு என்று சகல வசதிகளுடன் இன்னும் ஒரு மாதத்திற்குள் கல்கத்தா போயாக வேண்டும்.

வீட்டினர் சந்தோஷப்பட்டனர்.

"வெரிகுட், வெரிகுட் ஜீவா... கங்கிராஜுலேஷன்ஸ்!" என்று மகனின் கையைப் பற்றிக் குலுக்கினார் ராமமூர்த்தி.

"தாங்க்ஸ்ப்பா!"

"பகவான் கிருபையால எல்லாம் நல்லபடி நடக்குது. ஒரு மாசத்துக்குள்ளே கல்கத்தா போய் செட்டிலாகணும்னா



எப்படிங்க? சுமித்ரா படிப்பு முடியணும். ஜீவா கல்யாணம் நடந்தாகணும். ரெண்டு மாசத்துக்குள்ளே... அதிகபட்சம் மூணு மாசத்துக்குள்ளே ஆபரேஷன் பண்ணியாகணும்னு டாக்டர் கெடு வச்சிட்டார். ஜீவா கல்யாணம் நடக்காம என் ஆபரேஷன் நடக்காது. அதிலே எந்த மாற்றமும் இல்லே!" என்றாள் உறுதியாக - பங்கஜம்.

ராமமூர்த்தி சில கணங்கள் யோசித்தார். பிறகு.

"சுமித்ராவுக்குப் படிப்பு முடிய அஞ்சு மாசம் ஆகும். அதுவரைக்கும் ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கட்டும். காலேஜ் படிப்பைக் கல்கத்தாவுல பார்த்துக்கலாம். பங்கஜம் சொல்ற மாதிரி உன் கல்யாணத்தை ஒரு மாசத்துக்குள்ளே நடத்திட்டா நல்லாயிருக்கும். ஆர்த்திகிட்டே பேசிட்டியா?"

"இல்லேப்பா... அடுத்தடுத்து அவங்க வீட்லே பல சோக சம்பவங்கள். அவளோட அம்மாவும் படுக்கையிலே! அவங்க குணமாகற வரைக்கும் கொஞ்சம் வெயிட் பண்ணுங்கன்னு சொல்றா!"

"அதெப்படிப்பா முடியும்? அந்தம்மா குணமாகி நடமாடணும்னுதான் நாமளும் ஆசைப்படறோம். ஆனா, கடைசி வரை குணமாகாமலேயே இருந்துட்டா? காத்திருக்க முடியுமா? உங்கம்மாவுக்கும் உடம்பு முடியலியே! நாம என்ன வரதட்சிணை, சீர், செனத்தின்னு எதிர்பார்க்கிறோமா என்ன? நல்ல குடும்பம், நல்ல பொண்ணு... அதனால எந்தவித முட்டுக்கட்டையும் போடாம மருமகளாக மட்டும் வந்தா போதும்னுதானே சொல்றோம்?"

அப்பாவின் கூற்றில் நியாயம் இருப்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''ஆர்த்திகிட்டே இதுபத்தி பேசி ஒரு முடிவைச் சொல்லிடறேன்ப்பா!'' என்றான்.

ஆர்த்தி குழம்பிப் போனாள்.

ஜீவாவுக்குப் பலமுறை போன் செய்தும் அவள் இவள் குரலைக் கேட்டதும் கட் பண்ணினான். செல்ஃபோனையும் ஆஃப் பண்ணியிருந்தான்.

ஆர்த்திக்குக் கண்கள் துளிர்த்தது.

'ஜீவா ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? இன்றைய நிலையில் அவன்தானே எனக்குப் பெரும் ஆறுதல்! அவனே என் மேல் கோபப்பட்டால் என்ன செய்வேன்?'

தாங்கிக் கொள்ள முடியவில்லை அவளால். அவனின் அலுவலகத்திற்கே சென்றாள். அலுவலகம் முடிந்து வெளியில் வந்த ஜீவா, தன் பைக் அருகே நின்றிருந்த ஆர்த்தியைப் பார்த்ததும் உருகிப்போனான்.

அவளைக் கண்ட ஆர்த்தியின் விழிகள் இன்ஸ்ட்டன்டாய் கண்ணீரை உற்பத்தி செய்தன.

''ஜீ... வா!''

''என்ன இங்கே நின்னுட்டிருக்கே?''

''என் மேல கோபமா?''

''எல்லாரும் பார்க்கிறாங்க. இங்கே நின்னு எதையும் பேச வேண்டாம். ஏறு!'' என்றபடி பைக்கை ஸ்டார்ட் பண்ண...

ஏறி அமர்ந்தாள் ஆர்த்தி.

அடுத்த பத்தாவது நிமிடம் ஒரு ரெஸ்டாரன்டில் அமர்ந்திருந்தனர்.



''இப்ப சொல்லு ஜீவா! நான் போன் பண்ணும் போதெல்லாம் ஏன் கட் பண்றே?''

''நேத்து நான் உனக்காக எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரியுமா? வர முடியலேன்னா என் செல்போனுக்காவது பேசி தெரியப்படுத்தியிருக்கலாம் இல்லையா?''

''மைகாட்!'' கையால் நெற்றியில் பட்டென்று அடித்துக் கொண்டாள்.

''ஸாரி... ஸாரி ஜீவா! ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு கூப்பிட்டே இல்லே? ரியலி ஸாரி டியர். டோட்டலா மறந்துட்டேன். அம்மாவுக்கு மெடிஸின்ஸ் வாங்கணும்னு திருவான்மியூர் போயிருந்தேன். அங்கேதான் கிடைக்கும்னு சொன்னாங்க. அதை வாங்கிட்டு வீட்டுக்குப் போய்ட்டேன். சுத்தமா ஞாபகமில்லே... ஸாரிப்பா!''

''ஒரு நாளைக்கு உன்னை நீயே மறந்திடப் போறே!''

''என்னை நினைக்கத்தான் நீ இருக்கியே...'' என்றாள்.

ஜீவா பாசத்துடன் அவள் கையை வருடிக் கொடுத்தான்.

''சரி... ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு சொன்னியே... சொல்லு, என்ன விஷயம்?''

''எனக்கு ப்ரமோஷன் கிடைச்சிருக்கு ஆர்த்தி!''

''வாவ்... கங்க்ராட்ஸ்...''

அவன் கையைப் பற்றிக் குலுக்கி, புறங்கையில் முத்தமிட்டாள்.

''ப்ரமோஷன் வித் ட்ரான்ஸ்ஃபர்!''

''என்னது?''





''ஆமா ஆர்த்தி. கல்கத்தாவுல போட்டிருக்காங்க!''

திக்கென அதிர்ந்தாள்.

''ஆர்த்தி... இன்னொரு முக்கியமான விஷயம்... அப்பா உன்கிட்டே பேசச் சொன்னார்...'' என்றபடி அவர்கள் திருமண விஷயமாய் ராமமூர்த்தி சொன்ன தகவல்களைச் சொன்னான்.

ஆர்த்திக்கு அந்த தகவல்கள் மேலும் அதிர்ச்சியைத் தந்தன.

''சொல்லு ஆர்த்தி... மௌனமாயிருந்தா என்ன அர்த்தம்?''

''ஜீவா... சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதே!'' என்றாள் தயங்கியபடி.

''என்ன சொல்லு?''

''விக்ரம் இங்கே இருந்திருந்தாக்கூட நான் சட்டுனு ஒரு முடிவெடுத்திடுவேன்!''

''அவன் சுயநலக்காரன். போய்ட்டான். அவனைப் பற்றி ஏன் பேசறே?''

''வீட்டுக்கு ஆதாரம் பெண்தானே ஜீவா! அதனால்தானே உங்க வீட்லே சீக்கிரம் மருமகள் வரணும்னு உங்க கல்யாணத்துக்கு அவசரப்படுத்தறாங்க? எங்க வீட்டுக்கு அம்மாதான் எல்லாமே! அப்படிப்பட்ட அம்மா அசைய முடியாம படுக்கையிலே. எங்க வீட்லே மட்டும் உலகம் இயக்கத்தை நிறுத்திடுச்சோன்னு இருக்கு. அப்பாவும் ஹார்ட் பேஷண்ட்! அவங்க ரெண்டு பேரையும் பார்த்துக்கற பொறுப்பு என்னோடதுதானே?''

''அதுக்காக?''

''இப்ப நான் கல்யாணத்தைப் பத்தி நினைச்சுப் பார்க்க முடியுமா ஜீவா! அம்மா குணமாகணும். எந்திரிச்சு



நடமாடணும். அதுக்குப் பிறகுதான் நான் முடிவெடுக்க முடியும்? உனக்கோ, எனக்கோ வயசாயிடலை. ஒரு ரெண்டு வருஷம் நம்ம கல்யாணத்தைத் தள்ளிப் போட்டா என்ன ஜீவா? அம்மாவோட ஹெல்த் கண்டிஷன்ல இம்ப்ருவ்மென்ட் தெரியுது. தொடர்ந்து பிஸியோதெரபி கொடுத்தா சீக்கிரம் நடக்கத் தொடங்கிடுவாங்க. ப்ளீஸ் ஜீவா... எனக்காக ரெண்டு வருஷம் வெய்ட் பண்ணமாட்டியா?'' என்றாள் பரிதாபமாக.

ஜீவா பெருமூச்சு விட்டான்.

''ஆர்த்தி! உன் நிலைமை எனக்குப் புரியாமலில்லே. ஆனா, என்னையும் கொஞ்சம் புரிஞ்சுக்க முயற்சி செய். நான் உனக்காகவே ரெண்டு வருஷமென்ன... பத்து வருஷம் கூட காத்திருக்கத் தயார்! ஆனா, என் வீட்லே பொறுமை இழந்துட்டாங்க. அம்மாவுக்கு ஆபரேஷன் சீக்கிரமே பண்ணியாகணும். அதுக்கு முன்னாலே நம்ம கல்யாணம் நடந்தாகணும்னு பிடிவாதமாயிருக்காங்க. ஒருவேளை ஆபரேஷன்ல தான் செத்துப் போய்டுவோமோங்கற பயம். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கலே. நான் என்ன பண்ணட்டும் ஆர்த்தி?''

அவளால் பதில் கூற முடியவில்லை.

''எல்லாப் பொறுப்பையும் சுமக்க வேண்டிய விக்ரமே தன் எதிர்காலத்தை முன்னிறுத்தி அமெரிக்கா போய்ட்டான். நீயும் கொஞ்சம் உன் எதிர்காலத்தை யோசிச்சுப்பாரு. உங்கப்பா கிட்டே பேசு. இல்லேன்னா நான் வந்து பேசறேன். நேரமாச்சு. போகலாமா?'' என்று எழுந்து கொண்டான்.

அவன் பின்னே பொம்மையைப் போல் நடந்தாள் ஆர்த்தி.

'ஜீவாவை நேசிக்கிறேன். என்னை விட அதிகமாய் நேசிக்கிறேன். அவன் நினைவுகளைத்தான் சுவாசிக்கிறேன்.

அவளில்லாத வாழ்க்கை ஒன்றைக் கற்பனை செய்யக் கூட முடியாது. ஆனால், வயதான காலத்தில் அன்பிற்கும், ஆதரவிற்கும் ஏங்கும் என்னைப் பெற்றவர்களை 'எக்கேடும் கெட்டுப் போங்கள்' என்று நிர்க்கதியாய் இங்கே விட்டுவிட்டு நான் ஜீவாவுடன் சந்தோஷமாய் கல்கத்தாவில் வாழ முடியுமா? அம்மா எல்லாவற்றிற்கும் பிறர் உதவியை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருப்பவள். அவளைத் தினமும் டவல் பாத் எடுத்து உடை மாற்றுவது நான்தானே! சங்கோஜப் பேர்வழியான அம்மா... இந்த வேலையை அப்பா செய்ய விடமாட்டாளே! என்ன செய்வது? என்ன முடிவெடுப்பது?'

ஆர்த்தி பஸ்சில் ஜன்னலோரம் அமர்ந்தபடி யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் வீடு போய்ச் சேர்ந்தபோது...

64805



13

வீட்டில் அசாதாரண அமைதியும், ஒரு வித வீச்சமும் ஆர்த்தியை வரவேற்றது.

நடையில் விளக்கு எரியாமல் இருட்டைப் போர்த்தி யிருக்க... வியப்புடன் வாசலில் செருப்பை கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

'ஏன் லைட்டைப் போடவில்லை? அப்பா எங்கே போனார்? அம்மாவைத் தனியே விட்டுவிட்டு...!'

ஆர்த்தி அம்மா இருந்த அறைக்குள் சென்றாள். கெட்ட நெடி மூக்கைத் தாக்க... படுக்கையில் நெளிந்தபடி படுத்துக் கிடந்த அஷ்டலக்ஷ்மி மகளைப் பார்த்ததும் ''ம்... ம்...'' என்று அரற்றியபடி கண்ணீர் விட்டாள். அந்தக் கண்ணீரில் வெட்கமும், கையாலாகாத்தனமும் கலந்திருந்தது.

புரிந்து கொண்டாள்.



அம்மா படுக்கையிலேயே மலம் போய் விட்டிருக்கிறாள். இரண்டு நாட்களாய் வயிறு வலிக்கிறது என்று ஜாடை மாடையாய்த் தெரியப்படுத்தினாள்.

வழக்கமாய்த் தினமும் காலையில் அம்மாவை இதுபோன்ற விஷயங்களில் உதவி, மாற்றுடை அணிவித்து, மதியத்திற்கும் சமைத்து வைத்த பின்பே அலுவலகம் கிளம்புவாள். கோகுல்நாத் அவ்வப்போது ஹார்லிக்ஸ் கலக்கிப் புகட்டுவதும், உணவை ஊட்டுவதுமாய் முகம் சுழிக்காமல் பார்த்துக் கொள்வார். தவிர, அஷ்டலக்ஷ்மிக்குப் பிடித்த மகளிர் பத்திரிகைகளை புத்தகத்தைப் பக்கம் விடாமல் வாசித்துக் காட்டி அவளுக்கு மனதளவில் எந்தவிதத் தாழ்வு மனப்பான்மையும் வந்துவிடக்கூடாது என்று கவனத்தோடு பார்த்துக் கொள்வார்.

''என்னம்மா... என்ன ஆச்சு?'' அவசர அவசரமாய் அவளைச் சுத்தம் செய்து, படுக்கையையும், அவள் உடையையும் மாற்றினாள்.

அஷ்டலக்ஷ்மி கண்ணீர் விட்டாள். 64805

''ப்ச்... என்னம்மா இது? அழக் கூடாது. அப்பா எங்கே போய்ட்டார்? கொஞ்சம் இரு... ஹார்லிக்ஸ் எடுத்து வர்றேன்!' கிச்சனுக்குள் நுழைந்தவளின் கண்கள் விரிந்தன.

பால் அப்படியே இருந்தது. இருவருக்கும் சமைத்து வைத்து விட்டுப்போன உணவும் அப்படியே இருந்தது.

அப்படியானால் இருவரும் எதுவுமே சாப்பிடவில்லையா? காலையிலிருந்து அம்மாவுக்குக் குடிக்கக் கூட எதுவும் தரவில்லையா? ஏன்?

அப்பா என்றும் இப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதில்லையே! யோசனையுடன் அவசர அவசரமாக ஹார்லிக்ஸ் கலந்து அம்மாவிற்குக் கொடுத்தாள்.



''காலையிலேர்ந்து நீ எதுவுமே சாப்பிடலையாம்மா?''

மெல்லத் தலையாட்டினாள் அம்மா.

இதயம் வலித்தது ஆர்த்திக்கு. அம்மாவின் கன்னத்தைத் துடைத்து முத்தமிட்டு, ''நானிருக்கேம்மா... கவலைப்படாதே!'' என்றாள் ஆறுதலாய்.

''சரிம்மா... நான் குளிச்சிட்டு சமைச்சிட்டு வந்திடறேன்,'' என்றவள் தன்னறைக்குச் சென்றாள்.

அங்கு கட்டிலில் படுத்துக் கிடந்த அப்பாவைப் பார்த்துத் துணுக்குற்றாள்.

''அப்பா... அப்பா...''

''ம்...ம்...'' என்று முனகினாரே தவிர, கண்களைத் திறக்கவில்லை. உடலெல்லாம் அனலாய்க் கொதித்தது.

''அப்பா... அப்பா... கடவுளே... என்ன செய்வேன்?'' பதறியபடி ஒரே ஓட்டமாய் வெளியே ஓடி வந்தாள்- ஆட்டோவை அழைக்க!

கோகுல்நாத்தை சிவியர் ஹார்ட் அட்டாக் தாக்கி இருந்தது. போதாததற்கு நல்ல காய்ச்சல் வேறு. பலமணி நேரமாய்க் கவனிக்கப்படாமல் இருந்திருந்திருக்கிறார். இன்னும் இரண்டு மணி நேரம் தாமதமாகி இருந்தால் அவர் உயிர் அவருக்குச் சொந்தமில்லை.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆர்த்தி அல்லாடிப் போனாள். அலுவலகத்திற்கு லீவு போட்டு விட்டு வீடும், ஹாஸ்பிடலுமாக ஓடிக் கொண்டிருந்தாள். அம்மாவிற்கு உணவை ஊட்டிவிட்டு, ஹாஸ்பிடலுக்குப் போய் அப்பாவைப் பார்த்துக் கொள்வாள். ஜீவாவும் அவரை ஹாஸ்பிடலுக்கு வந்து பார்த்துவிட்டுச் சென்றான்.



ஒரு வாரத்திற்குப் பிறகு கோகுல்நாத் டிஸ்சார்ஜ் செய்யப் பட்டார்.

'நான் மட்டும் இல்லை யென்றால் என்னாகியிருக்கும்? நினைக்கவே பயமாய் இருக்கிறதே! மூன்று பிள்ளைகளைப் பெற்றும் அனாதைகளைப் போலல்லவா போய் சேர்ந்திருப் பார்கள்? மை காட்!'

பகலில் தெரியாத நட்சத்திரங்கள் இரவில் இருட்டில் தெரிகின்றன. மன இருளில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளும் இப்படித்தான் தனிமையில் வெளிப்படுகின்றன.

ஆர்த்தி எல்லாவற்றையும் யோசித்தாள். ஒன்றை மட்டும் முடிவு செய்தாள்.

'அம்மாவிற்குக் குணமாகாமல் தனக்குத் திருமணம் வேண்டாம்' என்று.

கோகுல்நாத் குணமாகி விட்டாலும்... அடுத்த முறை அட்டாக் வந்தால் பிழைப்பது கடினம் என்று டாக்டர் எச்சரித்து இருந்ததால்... அவரைச் சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட அனுமதிக்கவில்லை ஆர்த்தி.

சொந்த வீடு. ஆர்த்தியின் திருமணத்திற்கு வங்கியில் போட்டு வைத்திருந்த பணம் என்று எதிர்காலத்திற்குத் தேவையான அளவு சேமித்து வைத்திருந்தாலும், அஷ்டலக்ஷ்மியின் வைத்தியச் செலவு, கோகுல்நாத்தின் வைத்தியச் செலவு என்று வங்கிச் சேமிப்பில் பாதிக்கு மேல் கரைந்துவிட்டது. ஆர்த்தியின் சம்பளப் பணத்தை அவள் பெயரில் தனி சேமிப்பாய்ப் போட்டு வந்தாள். தனியே... ஒரு ஆளாய் இருவரையும் கவனித்து, சமைத்து, அலுவலகம் ஓடுவது சிரமமாய் இருந்தது.

இதற்கென்று ஒரு ஆளைப் போடலாம்தான். ஆனால் மருந்து மாத்திரைச் செலவே பெரும் தொகையை விழுங்கி

விடுவதால்... ஆர்த்தியின் சம்பளப் பணமும் இதற்கென்றே செலவானதால் சிக்கன நடவடிக்கைக்காக ஆளை வேலைக்கு வைத்துக் கொள்ளவில்லை.

அன்று அலுவலகம் முடிந்து திரும்பியவள், அப்பா சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டு அருகில் வந்தாள்.

"அப்பா... என்ன பண்ணிட்டிருக்கீங்க இங்கே?"

"சமையல்தான்! சாதம் வச்சுட்டேன். ரசம் தாளிச்சுக் கொட்டிட்டேன். பொரியல்தான் பாக்கி!"

"உங்களை யாரு இதையெல்லாம் செய்யச் சொன்னது? ஏன்ப்பா இப்படியெல்லாம் பண்றீங்க?" லேசாய்க் கோபம் எட்டிப் பார்த்தது.

"இப்பவே இதையெல்லாம் பழகிக்கிட்டாதானே எனக்கு நல்லது!"

"என்னப்பா சொல்றீங்க?" என்றாள் புரியாமல்.

"ஆமாம்மா... நீ கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிட்டா இதெல்லாம் நான்தானே பண்ணியாகணும்?"

"நான் இப்ப கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு சொன்னேனா?"

"அதை நீ சொல்லித்தான் செய்யணுமா ஆர்த்தி? எங்களோட கடமையில்லையா இது?"

"அம்மாவுக்குக் குணமாகாம நான் பண்ணிக்க மாட்டேன்ப்பா!"

"இதென்னம்மா பிடிவாதம்? அம்மாவைப் பார்த்துக்க நான் இருக்கேனே! பாவம்மா ஜீவா! அவரோட நிலைமையையும் நாம யோசிச்சுப் பார்க்க வேணாமா?"



நெற்றிப் புருவம் முடிச்சிட அப்பாவைப் பார்த்தாள்.

"ஜீவா இங்கே வந்திருந்தாரா?"

"ஆமாம்! உன்கிட்டே பேசி எந்த பிரயோஜனமும் இல்லைன்னு என்கிட்டேயே பேச வந்துட்டார். ஜீவா மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்கறது ரொம்ப கஷ்டம் ஆர்த்தி. உங்கண்ணன் உனக்குத் தேடிப் பிடிச்சு பார்த்து வச்சுட்டுப் போன அற்புதமான பையன். அவர் சொல்றதும் நியாயம் தானேம்மா... எவ்வளவு நாள்தான் காத்திருப்பாங்க? எல்லாத்துக்கும் ஒரு அளவிருக்கேம்மா!"

"இல்லேப்பா... உங்க உடம்பும் முன்னே மாதிரி இல்லே! என் கல்யாண விஷயத்திலே என்னால சுயநலமா முடிவெடுக்க முடியாது. உங்க ரெண்டு பேரையும் இந்த நிலைமையிலே விட்டுட்டு என்னால எப்படிப்பா சந்தோஷமா வாழ முடியும்? அவரை நான் தப்பா சொல்லலே! பெத்தவங்க மேலே அவர் வச்சிருக்கிற அன்பும், மரியாதையும்தான், இன்னைக்கு உங்ககிட்டே வந்து புகார் சொல்கிற அளவுக்கு வந்திருக்கிறார். அதே அன்பை என்னைப் பெத்தவங்க மேலே நான் வைக்கறது தப்பா? இப்ப எனக்குக் கல்யாணம் வேண்டாம். அம்மா குணமாகட்டும். அதுக்குப் பிறகுதான்! அட்லீஸ்ட் அதுக்கு ரெண்டு வருஷமாவது ஆகலாம்!"

"இப்படி சொன்னா எப்படி ஆர்த்தி?" என்றார் அதிர்வாய் கோகுல்நாத்.

"எனக்கும் கடமைகள் இருக்குப்பா! நீங்க உங்க பொண்ணு மேல வச்சிருக்கிற அன்பும், அக்கறையும், உங்க பொண்ணுக்கும் பெத்தவங்க மேலே இருக்குப்பா!" என்றவளுக்கு, கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டது. அதை மறைக்க அந்த இடத்தை விட்டு அகன்றாள்.



செய்வறியாது திகைத்து நின்றார் கோகுல்நாத்.

"இதுதான் உன் முடிவா?" வேதனையின் சாயல் முகம் முழுக்க விரவிக் கிடக்க கேட்டான் ஜீவா.

ஆர்த்தி அவன் முகத்தைப் பார்த்துப் பேசும் திராணியற்றுத் தரை நோக்கிச் சிரம் தாழ்த்திக் கொண்டாள்.

"என் சூழ்நிலை!" என்றாள்.

"என்னைக் கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா ஆர்த்தி?" ஆதங்கத்துடன் கேட்டான்.

"எல்லாரையும் நினைச்சுப் பார்த்துதான் இந்த முடிவை எடுத்தேன். என்னை மன்னிச்சிடுங்க!"

"எங்க வீட்லே காத்திருக்க மாட்டாங்க ஆர்த்தி. உடனடியா பொண்ணைப் பார்த்து..."

"கல்யாணம் பண்ணிக்குங்க!" என்றாள், இடைமறித்து.

"ஏய்... என்ன நினைச்சிட்டிருக்க மனசிலே? ரெண்டு மூணு வருஷமா உயிருக்குயிரா காதலிச்சோமே... அதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"உங்களை நேசிச்சது பொய்யில்லே ஜீவா அதே சமயம் எங்கம்மா அப்பாவையும் நேசிக்கிறேன்."

"உன் வாழ்க்கையைப் பத்தி நினைச்சுப் பார்க்க மாட்டியா?"

"ஜீவா... உங்கம்மா அப்பா டார்ச்சர் பண்றாங்கன்றதுக்கு தான் இப்ப நான் இந்த முடிவை எடுக்கவேண்டிய கட்டாயம். உங்களை விட க்ரிட்டிக்கலான நிலைமையிலே நானிருக்கேன். உங்களுக்குள்ள கடமை, எனக்கும் இருக்கு. காதலை விட, பெத்தவங்க எனக்கு முக்கியமாப்படுது!"

"என் மேல் கோபமா ஆர்த்தி?" பரிதாபமாய்க் கேட்டான்.



"சேச்சே... இந்த மாதிரி ஒரு ஆண் பிள்ளை என் பேரெண்ட்ஸுக்குப் பிறக்கலையேன்னு வருத்தப்படறேன். வீ ஆர் குட் ஃப்ரண்ட்ஸ்... எப்பவுமே! வீட்லே காத்துக்கிட்டிருப்பாங்க. நான் போகிறேன், ஜீவா. நேரமாயிடுச்சு. மறக்காம மேரேஜ் இன்விடேஷன் அனுப்புங்க!" சிரிக்க முயன்று தோற்று... அவனைத் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

அவளை நெஞ்சில் சுமந்திருந்த ஜீவா... மனம் கனக்க முதன் முறையாய்க் கண் கலங்கினான்.



14

தனிமையில் வாய் விட்டழுதாள் ஆர்த்தி.

'ஸாரி ஜீவா... என்னை மன்னிச்சிடு! எனக்கு வேற வழி தெரியலே! உன்மேல் எனக்கு அளவு கடந்த காதல் இருக்கிறது. உன்னைக் காதலித்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். உன்மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. பொண்ணான என்னை விட ஒரு படி அதிகமாகவே பொறுப்புகள் உண்டு. அதனால், உன்னுடைய அவசரக் கல்யாணம் நியாயமானது தான்!

எங்களை வளர்க்க இவர்கள் எவ்வளவு சிரமப் பட்டிருப்பார்கள்? எங்களுக்காகவே தங்களின் ஆசாபாசங்களைக் குறைத்துக் கொண்டு ஒவ்வொரு நிமிடமும் எங்களுக்காகவே வாழ்ந்தவர்கள். முதுமைப் பருவம் என்பது இன்னொரு குழந்தைப் பருவம் போன்றது. அந்தக் குழந்தைகளைப் பாதுகாத்து அரவணைப்பது என் கடமை! என் காதல் தோல்வியின் காயம் பெரியதுதான். பிள்ளைகளை இழந்த என் பெற்றோரின் காயம் அதைவிட பெரியது. என்னை மன்னிச்சிடு ஜீவா! மன்னிச்சிடு!' அழுதழுது தன் மனச் சுமையைக் குறைத்தாள்.

நள்ளிரவு!

அப்பாவின் பேச்சுக் குரல் கேட்டுக் கண் விழித்தாள். அறையை விட்டு வெளியே வந்தாள்.

அடுத்த அறைதான் அம்மாவோடது. திறந்திருந்த கதவின் வழியே அவர் தன் மனைவியிடம் பேசிக் கொண்டிருந்தது தெளிவாய்க் காதில் விழுந்தது.

அவர் பேசுவதைக் கேட்டு வெலவெலத்துப் போனாள்.

"லக்ஷ்மி... நாம மூணு பிள்ளைகளைப் பெத்தோம். ஒன்னு அநியாயமா பறிபோய்டுச்சு. இன்னொன்னு சுயநலமே பெரிசா நினைச்சு நம்மளைப் பரிதவிக்க விட்டுட்டுப் போய்டுச்சு. ஆசை ஆசையா பெத்து வளர்த்த ஆர்த்திதான் இன்னைக்கு நம்மோட கஷ்டங்களில் பங்கெடுத்துக்கறா! அவளுக்காக நாம பார்த்து வச்சிருந்த ஜீவாவை இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறா. நாம உயிரோட இருக்கும்போதே அவளுக்குக் கல்யாணம் நடத்தி வச்சிடணு மில்லையா?"

'ஆமாம்,' எனத் தலையாட்டினாள் அஷ்டலக்ஷ்மி.

"நமக்காக அவ தன்னோட கல்யாணத்தைத் தள்ளிப் போடறா! உனக்குக் குணமாகணுமாம். அதுக்குப் பிறகுதான் பண்ணிப்பாளாம். இதெல்லாம் சரி வருமா? வீடு தேடி வர்ற நல்ல வாழ்க்கையை வேண்டாம்னு உதறித் தள்ளறா. நம்ம குழந்தையோட வாழ்க்கைக்கு நாமளே முட்டுக்கட்டையாய் இருக்கலாமா?"

'கூடாது' என்று கையை அசைத்தாள்.

"நான் சொல்றதைக் கேப்பியா லக்ஷ்மி?"

'சரி' எனத் தலையாட்டுகிறாள்.



"முதியோர் இல்லம்ங்கறது... பாவப்பட்ட இடமில்லை. நம்ம ஆர்த்தி நாம இங்கேயிருக்கிற வரைக்கும் தன்னைப்பத்தி கவலைப்படப் போறதில்லை. நாம ரெண்டு பேரும் அங்கே போய்டலாமா லக்ஷ்மி?"

அஷ்டலக்ஷ்மியின் முகத்தில் அதிர்ச்சி.

"தப்பா நினைக்காதே லக்ஷ்மி! உனக்கு அதெல்லாம் பிடிக்காதுன்னு தெரிஞ்சும்... கூப்பிடறேனேன்னு பார்க்கறியா? வேற வழியில்லேம்மா! நாமெல்லாம் வாழ்ந்து முடிச்சாச்சு. ஆர்த்தி இளங்குருத்து. அவ வாழ்க்கைக்கு நாமளே தடையா இருக்கலாமா? முதியோர் இல்லத்திலே இருக்கிறவங்க அத்தனை பேரும் பெத்த பிள்ளைகளால் விரட்டப்பட்டவங்களா இருக்க முடியாது. நம்மளை மாதிரி... குழந்தை நல்லாயிருக்கணும்னு வழிவிட்டு விலகி வந்தவங்களும் இருப்பாங்க இல்லையா? அதான் எப்பவும் நான் உன்கூடவே இருக்கேனே! ஒருவேளை உனக்கு முன்னே நான் போய்ச் சேர்ந்துட்டா நீயும் என்கூட வந்துடு. நீ முதல்ல போய்ட்டா... நானும் உன்கூட வந்திடுவேன்! என்ன சொல்றே லக்ஷ்மி?" என்றார் தழுதழுப்புடன்.

கண்ணீர் காதோரம் வழிய மெல்லத் தலையசைத்துச் சம்மதித்தாள் அஷ்டலக்ஷ்மி.

"சபாஷ்..." என்று கை தட்டினாள் ஆர்த்தி.

திடுக்கிட்டுத் திரும்பினார் கோகுல்நாத்.

"நல்ல அருமையான முடிவுப்பா!"

"ஆ...ர்...த்...தி!"

"நமக்கு இப்படியொரு துர்பாக்கியம் வரக்கூடாது. வந்தா... என்னால தாங்கிக்க முடியாது... உயிரோடயே இருக்க மாட்டேன்னு கலங்கினவங்க அம்மா! அவங்க உயிரைப்



பறிக்கறதுக்காகத்தான் முதியோர் இல்லத்துக்குப் போகப் போறீங்களாப்பா?"

"ஆர்த்தி...!"

"நமக்கேன் அப்படியொரு நிலைமை வரப்போகுது? நம்ம குழந்தைங்க நம்மைக் கண்ணுக்குள் வச்சுப் பார்த்துப்பாங்கன்னு சொன்ன நீங்களா... இன்னைக்கு நம்பிக்கை இழந்திட்டீங்க?"

"ஆர்த்தி!"

"உங்க பொண்ணு மேலே நம்பிக்கை இல்லாமப் போய்டுச்சாப்பா?"

"ஆர்த்தி! புரியாமப் பேசாதே! எங்களுக்கு உன் வாழ்க்கை முக்கியம்!"

"எனக்கும் நீங்கதாம்பா முக்கியம்!"

"இது தவறான முடிவும்மா! ஒரு பொண்ணுக்குக் காலா காலத்துல அதது நடந்தாகணும். அதை நல்லபடி செய்து முடிக்க வேண்டியது எங்க கடமை."

"கல்யாணம் ஒரு பெண்ணுக்குத் தேவைதான்! இல்லேங்கலே! ஆனா, சில அவசியமான கடமைகளுக்காக அதை ஒத்திப் போடுவதில் என்ன தப்பு?"

"விக்ரம் ஏத்துக்க வேண்டிய பொறுப்பை நீ ஏத்துக்கறதால உன்னோட இழப்புகள் ஏகப்பட்டதுன்னு புரியுதா உனக்கு?"

"அம்மாதானே எங்க மூணு பேரையும் சுமந்து பெத்தாங்க! மத்த ரெண்டு ஆண் பிள்ளைகளுக்கு உள்ள கடமை பெண்ணுக்கு இல்லையா? அப்பா... என்னை விக்ரமா நினைக்க வேண்டாம். விக்னேஷ் அண்ணனா, ஒரு ஆணா நினைச்சுக்



குங்க. உங்களை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். அது என்னால முடியாது!" என்றாள் ஆணித்தரமாக.

"பிடிவாதம் பிடிக்காதே, ஆர்த்திம்மா! உங்கம்மாவுக்கு நான் இருக்கேனே... பார்த்துக்க மாட்டேனா?" என்றார் கெஞ்சலாய்.

"உங்களுக்கு யாருப்பா இருக்கா?"

"ஆர்த்தி...!"

"உங்க உடம்போட பலவீனம் எனக்குத்தாம்பா தெரியும்! திடீர்னு நீங்க படுத்துட்டா, ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்கக்கூட அம்மாவால முடியாதேப்பா? நீங்க படுத்துட்டா... அம்மாவை யார் கவனிச்சுக்கறது?"

"அங்கே பார்த்துப்பாங்க..."

"சின்னக் குழந்தை மாதிரி பேசாதீங்க! சொந்த வீடு, மகள் இருக்கறப்ப... நீங்க எதுக்கு அனாதை மாதிரி முதியோர் இல்லம் போகணும்? இந்த வயதான காலத்தில்தான் உங்களுக்குப் பாதுகாப்பும், அன்பும் தேவை. எனக்கு இதைத் தவிர வாழ்க்கையில் பெரிய சந்தோஷம் இல்லை. வாழ்க்கையில் வாழ்வதைக் காட்டிலும் செயல்தான் அவசியம். உங்களைக் கடைசி வரை பாதுகாக்க எனக்கொரு சந்தர்ப்பம் கொடுங்க... ப்ளீஸ்!"

"ஆர்த்தி..." நெகிழ்ச்சியுடன் மகளின் கையைப் பற்றிக் கொண்டார்.

"ப்ளீஸ்ப்பா...!"

"அப்ப உன்னோட கல்யாணம்?"

"இப்போதைக்கு வேண்டாம்னுதான் சொன்னேன். எப்பவும் வேண்டாம்னு சொல்லலே! சில வருஷங்கள்

போகட்டும். என் பெற்றோரைத் தன் பெற்றோராய் ஏற்றுக் கொள்ளும் நல்ல மனசுள்ள ஆண் கிடைக்கட்டும்... அப்ப பார்த்துக்கலாம்,'' என்றவளுக்குத் தொண்டையடைத்துக் கொண்டது.

ஜீவா வாழ்ந்த நெஞ்சில் இன்னொருவரா? முடியுமா? அவளுக்கே நம்பிக்கை யில்லை. என்றாலும் காலம் அவளுக்கொரு நல்ல முடிவையே தர வேண்டும்.

''உனக்கொரு நல்ல காரியம் நடக்கணும். சீக்கிரமே நடக்கணும். கடவுள் அதற்காகவாவது உங்கம்மாவை நடமாட விடணும். சீக்கிரமே குணப்படுத்தணும். நடக்கும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு!'' என்றார் மனைவியின் தலையைக் கோதி விட்டபடி. அஷ்டலக்ஷ்மியின் கண்களிலும் ஒரு ஒளி பிறந்தது.

64805

''எனக்கும் இருக்குப்பா! நிம்மதியா தூங்குங்க!'' என்றபடி தன்னறைக்குச் சென்றாள்.

ஆர்த்தியின் மனசு இப்போது கொஞ்சம் லேசானது போல் இருந்தது.

பெண் ஒரு போராளி. ஒவ்வொரு விஷயத்திற்காகவும் அவள் போராடித்தான் பெற வேண்டியிருக்கிறது. போராட்டத்தில் முயற்சியில் கஷ்டப்படுவதில்தான் ஆனந்தம் இருக்கிறது. வெற்றியில் அல்ல. எனினும் ஆர்த்தி வெற்றி பெறுவாள். அந்த முதிய குழந்தைகளின் எண்ணப்படி அந்த தங்க மகளுக்கு நல்ல வாழ்க்கை அமையும்!

64805